விலை ரூபா 30 பக்கங்கள் 52

# உதயன்

சுடர் 31 கதிர் 045 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 25, ஞாயிற்றுக்கிழமை 10.01.2016

மகாராஜா பொதிகள் சேவை
இலங்கையில் அனைத்து நகரங்கள், மாவட்டங்களிற்கான உள்நாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவைகளுக்கு இன்றே நாடுங்கள்.
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 - 4930200

முச்சந்தி முரளி



அதுக்குத் தான் ஐயா இவ்வளவு பயப்பிடுகிறார் பாருங்கோ...

# சமஷ்டியால் தெற்கிலே அச்சம் ஒற்றையாட்சியால் வடக்கில் பீதி

## அழகிய குழந்தையாகப் புதிய அரசமைப்பை பிரசவிப்போம் என்கிறார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஜனவரி 10
1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசமைப்பை மாற்றிய மைப்பது தொடர்பான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், சமஷ்டி என்றதும் தெற்கிலுள்ள அடிப்படைவாதிகள் அச்சமடை கின்றனர். அதேபோல் ஒற்றை யாட்சி என்றதும்வடக்கிலுள்ளஅடிப் படைவாதிகள் பீதியடைகின்றனர் என்று சுட்டிக்காட் டியுள்ளார் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன.

ஆகவே, நாட்டை நாசமாக்கும் குட்டிச்சாத்தானாக அல்லாது இலங்கையைக் காக்கக்கூடிய வகையில் புதிய அரசமைப்பை ஓர் அழகிய குழந்தையாகப் பிரச விப்பதற்கே அரசு எதிர்பார்க்கிறது என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தை அரசமைப் புப் பேரவையாக மாற்றும் பிரே ரணை நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதமரின் விளக்க உரையின் பின்னர் உரையாற்றுகையி லேயே ஜனாதிபதி இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-
நாட்டு மக்களின் விருப்பு வெறுப் புகள் உள்வாங்கப் பட்ட மற்றும் பக். 49

## சிப்பாயின் சடலத்தை தேடிய ராணுவம்



கிளிநொச்சி, ஜன. 10
இராணுவச் சிப்பாயின் சடலம் புதைக்கப்பட்டிருக் கலாம் எனச் சந்தேகித்து விசுவமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கை பய னேதுமின்றி நிறுத்தப் பட்டது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குறித்த பகுதியில் உள்ள இரா ணுவ முகாமிலிருந்த இராணுவச் சிப்பாய் காணாமற்போயிருந் தார். அன்று முதல் பல தடவைகள் அவரது உறவினர்கள் பல இடங்களில் முறையிட் டும் தேடியும் வந்துள்ள னர். ஆனால் கண்டு பிடிக்கவில்லை.
இந்த நிலையில் பக். 49

# ஹிருணிகா நேற்று கைதாகிப் பிணை




கொழும்பு, ஜன. 10
இளைஞர் ஒருவரைக் கடத்திய சம்பவத்துடன் தொடர்புடையதாகக் குற் றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பி னர் ஹிருணிகா பிரேமச் சந்திர, சட்டமா அதிபர் வழங் கிய ஆலோசனைக்கு அமைய நேற்றுக்காலை கைது செய்யப்பட்டு 5 மணிநேரத்தினுள்ளேயே பிணையில் விடுவிக்கப் பட்டார்.

தெமட்டகொட பிரதேசத் தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பக். 49

## அரசமைப்புப் பேரவைப் பிரேரணை செவ்வாயன்று வாக்கெடுப்புக்கு

கொழும்பு, ஜன.10
நாடாளுமன்றத்தை அரசமைப்புப் பேரவையாக மாற்றும் பிரேரணையை நிறைவேற்றும் நடவடிக்கை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள் ளது.
நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு பக். 49

## போர்க்குற்ற விசாரணைக்கு விசேட நீதிமன்று அவசியம்

சிவில் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜன.10
போர்க்குற்ற விசாரணையின் போது, வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப் புடனான விசேட நீதிமன்றம் அவசிய மானது என கொழும்பை மையமா கக்கொண்டுசெயற்படும் சிவில் அமைப்புக் பக். 49

## என் மீதான விசாரணை அரசியல் பழிவாங்கல்

கொழும்பு, ஜன. 10
மோசடிகள் தொடர்பில் ஆணைக் குழுவினர் என்னிடம் எந்தக் கேள்வியை யும் எழுப்பவில்லை.



மாறாக அரசியல் பழிவாங்கலுக் காகவே என்னை இவ்வாறு அலைக் கழிக்கின்றனர். இவ் வாறு பாதுகாப்பு பக். 48

## காணாமற்போனோரைக் கண்டறியும் விடயத்தில் உறவினர்கள் விடாப்பிடி

### இறப்புச் சான்றிதழ்களைப் பெறப் பின்னடிப்பு

அச்சுவேலி, ஜன. 10
காணாமற் போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்து அதற்கான நஷ்ட ஈடு மற்றும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அரச தரப்பிலி ருந்து ஊக்கப்படுத்தியபோதிலும் கடந்த வருடம் 48 காணாமற் போனோரின் இறப்பு மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.
காணமற்போனோ ரின் இறப்பு தொடர் பக். 49

## யாழ். வருகிறார் சுஸ்மா சுவராஜ்



கொழும்பு, ஜன. 10
இந்திய- இலங்கைக் கூட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க அடுத்த மாதம் கொழும்புக் குப் பயணம் பக். 49

## பிரதேச ஒருங்கிணைப்பு தலைவர்களாக வடக்கில் சு.க. எம்.பிக்கள் மட்டும்

யாழ்ப்பாணம், ஜன. 10
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங் களுக்கு இணைத் தலைவர்களாகச் சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நியமிக்கப் பட்டுள்ளபோதும், வடக்கிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு பிரதேச ஒருங்கிணைப் புக் குழுத் தலைவர்களாக சிறிலங்கா சுதந் திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

மைத்திரிபால தலைமையிலான புதிய அரசு அமைந்த பின்னர் தற்போதுதான், ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான இணைத் தலைவர்கள் நியமனம் வழங்கப் பட்டு வருகின்றது. கடந்த புதன் கிழமை, மாவட்ட ஒருங்கிணைப் பக். 49

## படை அதிகாரிகள் இருவர் விரைவில் கைதாவர்

எக்னெலிகொட கடத்தல் தொடர்பில்

கொழும்பு, ஜன. 10
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப் பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டது தொடர்பாக மேலும் இரண்டு இராணுவ அதிகாரிகள் குற்றப்புல னாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்படவுள்ள னர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப் பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய் யப்பட்டுத் பக். 49

## இலங்கையைச் சர்வதேசம் உன்னிப்பாக அவதானிப்பு

### ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10
மைத்திரி அரசிடமிருந்து இன்னமும் அதிகமாக எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ள ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபைனே நண்டி, சர்வதேச சமூகம் இலங்கையை அவதானித்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.



மேலும், நீண்ட காலம் நிலைத் திருக்கக்கூடிய அரசியல் தீர்வு காணும் முயற்சிகள், மீள் குடியேற்றம் மற்றும் காணி கள் விடுவிப்பு போன்ற அர சின் முயற்சிகளுக்கு முழு மையான ஒத் துழைப்பை பக். 49

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட மேடையை யாழ். செயலகம் புதிதாக அமைக்கும் நிலை

### இணைத் தலைவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால்

யாழ்ப்பாணம், ஜன. 10
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வின் இணைத் தலைவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், கூட்டம் நடத்துவதற்கான மேடையைப் புதிதாக அமைக்க வேண்டிய நிலை யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்துக்குக் கடந்த காலங்களில் இருவர் மாத்திரமே ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக இருந் தனர். இவர்களுடன் ஒருங்கிணைப் புக் குழுவின் செயலாளர் என்ற அடிப் படையில், மாவட்ட அரச அதிபரும் இணைத் தலைவர் களுடன் அமர்ந்திருப்பார். இவ் வாறு மூன்று பேர் அமர்வதற்கு ஏற்றதாகவே, யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட் போர் கூடத்தின் பக். 49



வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மன்னார் மறை மாவட்ட ஆயரை நேற்று மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்தார். ஆயரின் உடல் நிலை தொடர்பாக அவர் நலன் விசாரித்தார். (ற-ஜ)

# பாதீனியத்தின் பெருக்கம் வலி.கிழக்கில் அதிகரிப்பு

*அண்மையில் பெய்த மழையை அடுத்து*

யாழ்ப்பாணம்,ஜன.10

அண்மையில்பெய்தமழையை அடுத்துவலி.கிழக்கில் பாதீனியச்செடிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இந்தப் பாதீனியங்கள் விவசாய தோட்டங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளை முற்றுகையிட்டுப் பெருகி வளர்ந்து காணப்படுகின்றன.

கோப்பாய், நீர்வேலி, மாசிவன், உரும்பிராய், புத்தூர், சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் இந்தப்பாதீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது



நீர்வேலி மேற்கு மற்றும் வடக்கு, தெற்குப் பகுதிகளிலும் மற்றும் கோப்பாய் இராச வீதி போன்ற இடங்களில் இந்தப் பாதீனியச் செடிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

வருடா வருடம் இந்தப் பாதீனியச் செடிகள் பிடுங்கி அழிக்கப்பட்டாலும் அவை மாரிகாலங்களில் மீண்டும் முளைத்துப் பெருகி விடுகின்றன என்று விவசாயிகள் கூறுகின்றனர். பாதீனியப் பெருக்கத்தால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தற்போது பெருகிக் காணப்படும் இந்தப் பாதீனியக் களைகளை விரைவாக அழிப்பதற்கும் வடக்கு மாகாண விவசாய அமைச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (ற-ஜ-17)

# இராச வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச்சீர்கேடு

*பொதுமக்கள் விசனம்*

யாழ்ப்பாணம், ஜன.10

கோப்பாய் இராச வீதியில் கிருஷ்ணன் கோயில் சந்திக்கு அருகில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ள பொதுமக்கள், குறித்த வீதியால் பயணிக்க முடியாதுள்ளது என்றும் விசனம் தெரிவித்துள்ளனர்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலர், குறித்த பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

குடியிருப்பாளர்கள் தமது வீட்டுக் கழிவுகளைக்கெட்டுவதோடு, உணவகங்களும் தமது உணவகங்களில் சேகரிக்கப்படும் கழிவுகளையும் இந்தப் பகுதியில் கொட்டி வருகின்றன. இந்தப்பகுதியில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களை வலி.கிழக்குப்பிரதேச சபை அகற்றி வருவது வழக்கம்.

வீதியோரம் கொட்டப்படும் இந்தக் கழிவுகளைப் பறவைகள் மற்றும் விலங்குகள் இழுத்துச் செல்கின்றன. அவை நாலாபக்கமும் சிதறிக் காணப்படுவதால் அதில் இருந்து துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர் கேடுகளும் ஏற்பட்டுள்ளன.

பிரதான வீதியோரம் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த உரிய தரப்பினர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்எனமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இங்கேகொட்டப்படும் கழிவுகளை உடன் அகற்றவும் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளரைக்கேட்டபோது:

குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தெரிவித்தார். அத்துடன் அந்தப் பகுதியில் குப்பைகள் கொட்டுவதைத் தடுப்பதற்காகக்காவலாளி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ற-ஜ-17)

# சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பக நடத்துநருக்கு 28 ஆயிரம் அபராதம்

*உணவு மற்றும் மருந்துப் பரிசோதகரின் திடீர் சோதனையில் சிக்கினார்*

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்.பிரதான வீதியில் சுகாதாரச்சீர்கேட்டுடன் இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்றின் நடத்து நருக்கு யாழ்.நீதிமன்று 28 ஆயிரம் ரூபா அபராதம் விதித் துள்ளது.

குறித்த வெதுப்பகம் முன்னரும் சுகாதாரச்சீர்கேட்டுடன் இயங்கி வந்தது என்றும், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. இது குறித்து உணவு மற்றும் மருந்துப்பரி சோதகருக்குக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அவர் திடீர் சோதனையை மேற்கொண்டுள்ளார். அதன்போது குறித்த வெதுப்பகம் சுகாதாரச்சீர்கேட்டுடன் இயங்கிவருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அங்கு சுகாதாரச்சீர்கேடு தொடர்பில் 14 குற்றச்சாட்டுக்களுக்குத்தண்டிக்கப்பட வேண்டிய நிலைகாணப்பட்டுள்ளது. அதனால் குறித்த உற்பத்தி நிறுவன நடத்துநருக்கு எதிராக உணவு மற்றும் மருந்துப்பரிசோதகரால் 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையின்போது குறித்த குற்றச்சாட்டுக்களை நடத்துநர் ஏற்றுக்கொண்டுள்ளார். அத னால் ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

இத்தகைய விடயங்களில் பொதுவாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனையிட்டு வழக்குத் தாக்கல் செய்வது வழமை. குறித்த உற்பத்தி நிலையத்தில் நிலவிய சுகாதாரச்சீர்கேடு தொடர்பில் பல தடவைகள் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இந்த நிலை யில் உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் சென்று பார்வை யிட்டு வழக்குத் தொடுத்துள்ளார். (ற-4)

# இறால் பிடித்தவர் மயங்கிச் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 10

கடலில் இறால் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் திடீரென மயங்கியதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

பொன்னாலைக் கடலில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த சின்னப்பு ஆனந்தராசா (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கரையிலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் நின்று இறால் பிடித்துக்கொண்டிருந்துள்ளார். அதன் போது அவருக்கு மயக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் அருகில் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்குக் கை மூலமாகச் சைகை காட்டியுள்ளார். படகு அவரை நோக்கிச் சென்று அவரைப் படகில் ஏற்றியதும் அவர் மயங்கி விட்டார்.

மயங்கியவரை வலந்தலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-4)

# பெண் தனித்திருந்த வீட்டுக்குள் புகுந்த சிப்பாய் மடக்கிப் பிடிப்பு

*மின்கம்பத்தில் கட்டி வைத்தனர் மக்கள்*

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவு கேப்பாப்புலவு கிராமத்தில்பெண் தனித்திருந்த வீடு ஒன்றுக்குள் நுழைந்த இராணுவச்சிப்பாய் பொதுமக்களால் மின்கம்பத்தில் கட்டப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

கணவர் வெளியே சென்ற சமயம்தனித்திருந்தபெண்ணின் வீட்டுக்குள் வேலியைப் பிரித்து இராணுவச் சிப்பாய் உள்ளே புகுந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டார். அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் இராணுவம் மற்றும் பொலிஸாருக்குத்தகவல் வழங்கப்பட்டது. அதையடுத்து இடத்துக்கு வந்த இராணுவத்தினர் குறித்த இராணுவச் சிப்பாயை மீட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இராணுவச் சிப்பாய் கடற்கரை வீதியில் வீதிப் பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் 59 பிரிகேட் படையணியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-101)

# யாழ். மாநகரப் பகுதியில் மீண்டும் டெங்கு தொற்று

யாழ். மாநகரப் பகுதியில் டெங்குத் தொற்று மீண்டும் அதிகரித்துள்ளது.

குருநகர்ப் பகுதியில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளமை இனங் காணப்பட்டதை அடுத்து அங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சுகாதார வெளிக்களஉத்தியோகத்தர்களும் வர வழைக்கப்பட்டு இங்குள்ள சுகாதாரப் பணியாளர்களுடன் இணைந்து டெங்குக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் மற்றும் டெங்கு பரவுவதற்கான சூழல் போன்றவற்றின் ஆய்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

நுளம்பு கூடுதலாகக்காணப்படும் இடங்கள், டெங்குத் தொற்று அதிகரிக்கும் இடங்கள் போன்றவற்றை உள்ளடக்கிப்புகை அடிக்கும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதனைவிட மக்கள் மத்தியிலும், கிராம மட்டத்திலும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக்குருநகர்ப் பிரதேசத்தில் இந்தச் செயற்பாடுகள் தீவிரப் படுத்தப்படும் என்று மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-ஜ-17)

# மீன்பிடி அமைச்சர் குடாநாட்டுக்கு இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.10

மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர குடாநாட்டுக்கு இன்று வரவுள்ளார்.

இதன் போது யாழ். மாவட்ட மீனவர் ஒன்றியத்தினரையும், மாவட்ட மீனவர்களின் கூட்டுறவுத்தொழிற் சங்கத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் குருநகர் பகுதியில் இந்திய மீனவர்களின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களைப் பார்வையிடவுள்ளதுடன், நயினாதீவுத்துறை முகப்பகுதியையும், மீன்பிடிவலைத்தொழிற்சாலை மற்றும் ஐஸ் உற்பத்தி நிலையத்தையும் பார்வையிடவுள்ளார். (ற-ஜ-ரி5)




**பிரித்தானிய**
**உயர் தேசிய டிப்ளோமா**
**மற்றும் பட்டப்படிப்புகள்**



UGC RECOGNIZED

- **BM** — Business Management
- **CSD** — Computing & Systems Development
- **CE** — Civil Engineering
- **QS** — Quantity Surveying
- **BMS** — Biomedical Science
- **LLB** — Law

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

UGC இனால் அங்கீகரிக்கப்பட்டது

# MBA

## 12 months British MBA

- Expert British Lecturers*
- Convenient Study Mode
- Easy payment plan
- Highly Reputed & Affordable

தற்போது யாழ்ப்பாணத்தில்

## February 2016 INTAKE NOW ON

Introductory Rs. 30,000/- Discount
REGISTER BEFORE 10th January 2016

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

16, Point Pedro Road,
Jaffna, Sri Lanka.
Tel : 021 221 9910

For Details 077 710 2131

16 YEARS

Ranked as **No.1 Higher Education Provider** (Private Sector)
- Survey by LMD

COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

**காணி விற்பனைக்கு** 011 236 5192

பருத்தித்துறை, யாழ்.பிரதான வீதியில் கிராமக்கோட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (சி/28349) (11,15,18)

**கிணறு, வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு**

கைதடி நுணாவில் இறை, A9 பாதையில் அறவொளி முன் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியுடன் கிணறு, வீடு என்பவற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 272 0093

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 077 256 3849

யாழ் மருதடி றோட் கை ஒழுங்கையில் 2 பரப்பு வெற்றுக்காணி பனை மரங்களுடன் விற்பனைக்குண்டு.

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

இல.67, மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

077 072 4666
00479 951 5207

**விற்பனைக்குண்டு**

பெறுமதியான மரத்தினாலான கட்டில்கள், மேசைகள், மெத்தையுடன் விற்பனைக்குள்ளன.
பார்வையிட்டு விலை மதிப்பீடு செய்து பெற்றுக் கொள்ளலாம்.
(67514) (14,15)

5/6, கருணப்புலம் வீதி, மருத்துவமனை முன்ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**கார், வான் விற்பனைக்கு**

NP KT- xxxx இலக்கமுடைய, Toyota Prius (Hybrid) கார். NP PX- xxxx .இலக்கமுடைய Mahindra Maxximo வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 604 8646

**காணி விற்பனைக்கு**

இல.351, கண்டிவீதி, யாழ்ப்பாணம் (கச்சேரியில் இருந்து ஒரு Km) 6 பரப்பு, ஒரு குழி விஸ்தீரணம் கொண்ட இரண்டுபக்க மதிலுடன் கூடிய வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. விலை 72 இலட்சம் ரூபா. (விலை பேசித்தீர்மானிக்கப்படும்.)

077 055 7663, 077 599 7865 (67489) (11,15,16)

**வீடு விற்பனைக்கு** தொடர்பு: 071 683 3629

யாழ். நகர் கொட்டடிச் சந்திக்கு அருகில் ஆஸ்பத்திரி வீதிக்கு மிகச் சமீபமாக சுமார் 3 பரப்பில் அமைந்த வீடு (சுமார் 2700 ச.அடி) நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.(No BROKERS)

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 077 993 2110

15 ஆம் கட்டை, உடுப்பிட்டி, சமுர்த்திவங்கி, உடுப்பிட்டி கிளை அமைந்துள்ள ஒழுங்கையில் 5 1/4 பரப்பு நாவலடி வண்ணான் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
(67410) (14,16)

**புதிய நெல் பாக் விற்பனைக்கு**

எம்மிடம் புதிய நெல் பாக்குகள் (பைகள்) மற்றும் சாக்குகள், படங்குகள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு: எஸ். மில்டன்
077 336 7534 ,
024 222 2049

**வீடு, காணி விற்பனைக்கு** 076 530 4380, 077 100 1390

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியில் 7 பரப்புக்காணியில் 6 அறைகளுடன் கூடிய விசாலமான வீடு விற்பனைக்கு உண்டு. பிரதான வீதியில் மின்சாரம், கிணறு மற்றும் தொலைபேசி வசதிகளும் உண்டு. மகாஜனக் கல்லூரியில் இருந்து 1½ km தூரம் கொண்டது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் மாலை 7 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்.

## தேவை

**வீடு வாடகைக்கு தேவை** தொடர்பு: 077 188 2518

யாழ்நகர்/ அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**வேலையாள் தேவை** தொடர்பு: 076 752 8957

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இரும்புக்கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
(கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. ) (67015) (14,15)

**பணிப் பெண் தேவை**

85 வயது வயோதிப தாய் ஒருவரை தங்கியிருந்து பராமரிக்க ஆள் தேவை

தொடர்பு: 077 6146 735
077 613 5632

**புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை**

- முகாமையாளர்
- காசாளர்
- சிட்டை எழுதுநர்
- சப்ளையர்
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- ரீமேக்கர்

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 077 078 2375
(6.00மணிக்கு பின் தொடர்பு: 021 205 3845)

**மருந்தாளர் தேவை** தொடர்பு: 077 406 3447

வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள மருந்தகம் ஒன்றிற்கு SLMC REG இலக்கம் உள்ள மருந்தாளர் உடன் தேவை.

**பெண் உதவியாளர் தேவை**

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

தொடர்பு: 077 7112 074

**ஆங்கில ஆசிரியர் தேவை**

உரும்பிராயில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமும், பிள்ளைகளுடன் நட்புறவாக பழகி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தேர்ச்சியுமுடைய ஆங்கில ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 5084
மே/பா உதயன்பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 493 1111, 021492 7415
advt@uthayan.com

## வாடகைக்கு

**வாடகைக்கு** தொடர்பு: 077 564 2271, 077 284 9658

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் 3 படுக்கை அறைகளுடன் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.

**வீடு வாடகைக்கு**

இராஜபாதை வீதியில் U.N.H.R. ஸ்ரோர்ஸ்க்கு அண்மையில் 4¼ பரப்பில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.

077 123 7063
077 729 9031

இல. 146 கம்பஸ் ஜங்சன் பரமேஸ்வராசந்தி பலாலிறோட்டில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 0777 112 741 | 0771 484 528

**வீடு வாடகைக்கு** தொடர்பு: 078 535 7950

மானிப்பாய் மருதடி விநாயகர் கோயிலுக்கு அருகில் 5 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு காணி வருமானத்துடன் உண்டு.

## ஏனையவை

**சேவை** 076 897 0707

உங்களது அன்புக்குரிய முதியோரை எங்களது முதியோர் இல்லத்தில் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வைத்திய தாதியர் சேவையுடனும் பராமரிக்கத் தயாராக உள்ளோம். (சி/28350)(11,15,18)

**பொருளியல்** தொடர்பு: 077 443 7947

**Personal & Group Classes**

**G.C.E(A/L) (EDEXEL)**

Maths, Chemistry, Biology, Physics வகுப்புகள் நடைபெறுகின்றன.

**Beefort International School**
*136, Navalar Road, Jaffna.*

**வேலைவாய்ப்பு** 077 296 0787

எமது நிறுவனத்துக்கு வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் பணியாற்றக் கூடியதும் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் பூரண கணினி அறிவுடையதும் விற்பனை அனுபவமுடைய விற்பனை மேற்பார்வையாளர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு: ஜி.எச்.எ.டி.சில்வா கம்பனி
இல.64, பசார்வீதி, வவுனியா. (66667) (11,15,18)

**O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கு!**

*12 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator , Adobe Indesign)
*குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
ஆசிரியர்: KRC TP:0779672038

**வேலைவாய்ப்பு**

எமது காரியாலய கிளைகளுக்கான வெற்றிட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

- மேற்பார்வையாளர்
- அலுவலக உதவியாளர்.

போன்ற பதவி வெற்றிடங்களுக்கான வேலையாள்கள் உடன் தேவைப்படுகின்றனர். (c 28631) (14,15)

தொடர்பு: 077 903 6035,075 258 2174

**வேலை வாய்ப்பு**

அரிய சந்தர்ப்பம் FR கொம்பனியில் புதிதாக திறக்கப்படவுள்ள கிளைகளில் வேலைவாய்ப்பிற்காக வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகைமைகள் A/L, O/L மற்றும் O/L இல்லாதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 208 3140, 076 843 3804

**பிரத்தியேக வகுப்பு**

வணிகக் கல்வி (12- 13) ,வரலாறு- (06- 11) வீட்டில் வந்து கற்பிக்கப்படும். யாழ் நகர் மட்டும்.

தொடர்பு: 077 656 9911

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால ஆங்கிலக் கற்கை நெறி.

**SPOKEN ENGLISH**

Before ~~7500/=~~ Now 2700/= Duration 1 1/2 Month

| Courses | Duration | Fee Before | Fee Now |
|---|---|---|---|
| Dip.in.English | 3 Months | 15,000/= | 9,000/= |
| IELTS | 3 Months | 30,000/= | 18,000/= |
| IELTS-Life Skills | 2 Months | 20,000/= | 12,000/= |
| Spoken Sinhala | Monthly | 2000/= | 1,200/= |

No Admission Fee On or Before - 15th - Jan - 2016

CIL Cambridge Institute of London
No : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
Tel : 021 2217774, 0777382108

**ஆங்கிலம் கற்பிக்கப்படும்** 077 514 7949, 021 227 0702

ஓய்வுபெற்ற தனியார்துறை (கொழும்பு) உயர் உத்தியோகத்தர் அ.கிருஷ்ணகுமார் ஆசிரியரால் 4ஆம் வகுப்பு தொடக்கம் O/L, A/L மற்றும் தொழில் புரிவோர், ஏனைய மாணவர்கள் அனைவருக்கும் கற்பிக்கப்படும்.
20/1 சங்கத்தானை, 2ஆம் ஒழுங்கை, டச்சுவீதி, சாவகச்சேரி.

**ஜாதகம் பார்க்கப்படும்** 075 256 4335, 021 227 0702

ஜாதகக் குறிப்பு, திருமணப் பொருத்தம்.
(சாஸ்த்திரி மார்கண்டுவின் மகள்)
திருமதி கி.நிர்மலதேவியினால் பார்த்துக் கொடுக்கப்படும்.
20/1, சங்கத்தானை, 2ஆம் ஒழுங்கை, டச்சுவீதி, சாவகச்சேரி.

**Service**

உங்களது வீடு/ காரியாலயம் மாபிள்பதிக்க வேண்டுமா? அப்படியாயின் அனுபவம் வாய்ந்த வேலையாள்களால் செய்து கொள்ள எங்களை தொடர்பு கொள்ளுங்கள்
எங்களது சேவைகள் Floor tile பதித்தல் (சதுரஅடி ரூ 38-55 வரை) Water Proofing கறையான் அரிப்பை தடுத்தல் (Termite Control) மிகவும் மலிவான விலையில் செய்து தரப்படும்.
Hemantha- 076 758 3483
Sampath- 077 758 3483
அனுபவம்/ அனுபவமற்ற வேலையாள்கள் உடனே சேர்த்துக் கொள்ளப்படுவர். அழைக்கவும்.

AMM Consulations
No-6 Railwaylane, Chundikuly, Jaffna
No- 114, 2nd mile Post, Malkaduwwa, Kurunegala
021 4927 626, 021 5688 666, 011 725 2003


INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT
ICBT CAMPUS JAFFNA
ஜனவரி 2016
கல்வியாண்டுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
HND in
● Business & Management
● Business & Human Resources
Entry Criteria
- G.C.E. A/L or Equivalent
- G.C.E. O/L
- Any Diploma
Duration : 2 Years
edexcel
BA (Hons) in
● Business & Management Studies
Entry Criteria
- HND or Equivalent
Cardiff Metropolitan University
MBA in
● General
● Finance
● Marketing
● Project Management
● Human Resource Management
Cardiff Metropolitan University
Register on / before 25th of January 2016
580 Hospital Road, Jaffna, Sri Lanka.
Tel: 021-4 777 888
For more inquiries:
076 928 9810, 076 928 978 4
யாழ். மண்ணில் இல:580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

## திருவாசகம் ஓதுதல்

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை உதயப் பூசையைத் தொடர்ந்து அதிகாலை 6 மணி முதல் திருவாசகம் முற்றும் ஓதுதல் நடைபெறவுள்ளது.திருவாசக நூல்கள் யாவும் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு முற்றும் ஓதுதல் நிறைவுபெறும். (த-ஐ-28)

**Rent a Car**

நாள், மாதாந்த அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.
T.P: 075 2040061

**விற்பனைக்கு** தொடர்பு: 077 650 3140

27.சுதுமலை வீதி, மானிப்பாயில் குரும்பவத்தையும் பெரிய வளவும் நி.ப 4 சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

**நர்த்தனஷேத்திரா**
**Narthanashethra (School of Dance)**

மார்கழி மகா உற்சவம்
ஆடலரங்கம் - 04

இடம் :
கலைத்தூது கலையரங்கம் திருமறைக்கலாமன்றம்
யாழ்ப்பாணம்.
காலம் :
இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சர்வதேச மொழிகள் கற்கை நிலையம்**

திருமணத்தின் மூலம் வெளிநாடு செல்ல காத்திருப்பவர் களுக்கு மேற்படி மொழிப் பரீட்சைகள் தடையாக உள்ளனவா?
கவலை வேண்டாம்! எம்மிடம் வாருங்கள்!!

ஜேர்மன் Deutsch, நெதர்லாந்து Dutch, London (ஆங்கிலம்), French, Italian வகுப்புக்கள்

தூதரக தேவைகளுக்கான சான்றிதழ்கள் இலகுவாக பெற்றுத்தரப் படும்.

**விவேகானந்தா அக்கடமி,**
221/1, மின் சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 4842464

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016
திங்கள் காலை 9.30 மணி

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)







மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

# பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

## மன்னாரில் கூறினார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 10
இந்த நிகழ்வுக்கு என்னை வராமல் தடுக் கச் சிலர் ஈடுபட்டிருக்கின்றார்கள். பணங் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என் பதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) சிலர் என்னை வராது தடுக்கச் சிலர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்பதை அவர்கள் அறியாமல் விட்டது மனவருத்தமாக இருக்கின்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரயிஸின் அழைப்பை ஏற்று வந்துள்ளேன்.

எமது மார்க்கங்கள் வேறுபட்டிருக்க முடியும். ஆனால் தமிழர்கள் என்ற ரீதியில் நாம் அனை வரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை களாகவே வாழ்கின் றோம். எனக்குச் சகல மக்க ளும் ஒன்றே. இந்து, முஸ்லிம், கிறிஸ்த வர்கள் என்று எனக் குப் பாகுபாடில்லை. இறைவன் படைப் பிலே யாவரும் சமமே.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் மிகவும் அமைதியாகவும் அந்நியோன்னியமாகவும் இலங்கையின் எப்பாகத்திலும் எந் நேரத்திலும் கடமையாற்றக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்ததை நினைவு கூர்கின்றேன். அப்போது மக்களிடையே போட்டித் தன்மை மிகக் குறைவு. இன்று அந்த நிலை காணப்படவில்லை.

நல்ல பல பழக்க வழக்கங்களைத் தொலைத்துவிட்டு வஞ்சகம், பொறாமை, சூது என்று எந்த மார்க்கமும் போதிக்காத பல தீய பழக்க வழக்கங்களை எம்மிடத்தே சேர்த்துக் கொண்டு எந்த நேரமும் ஏனையோர்க்கு இடைஞ்சலாக இருத்தல் அல்லது ஏனையோரின் சொத்துச் சுகங்களை நாம் அபகரித்துவிட வேண்டும் என்ற மிகக் கீழ்த்தரமான எண்ணங்களைக் கொண்டவர்களாக மாறியுள்ளோம்.

இந்த அவசர உலகத்தில் அனைவரும் திடீர் பணக்காரர்களாக வருவதற்கே விரும்புகின்றார்கள். சீரிய வாழ்க்கை முறை, ஒழுக்கம், வர்த்தகத்தின் உண்மைத் தன்மை, மார்க்கத்தின் வழிமுறை அனைத்தையும் தொலைத்துவிட்டு என்ன இழிதொழில் செய்தாவது திடீர் பணக்காரர்களாக மாறிவிட வேண்டும் என்ற துடிப்பில் பலர் இருக்கின்றார்கள்.

தமது பிள்ளைகளையே இழந்துவிடக் கூடிய போதைப் பொருள் கடத்தல், மது பாவனை போன்ற தொழில்களை சிலர் மேற்கொள்வதன் மூலம் நாம் பெரும் பின்னடைவுகளையும் பயங்கர பின் விளைவுகளையும் விரைவாக எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதுவரை காலமும் மிகச் சிறப்பாக வாழ்ந்து வந்த எமது மக்கள் மத்தியில் கஞ்சாப் பாவனை எவ்வாறு பரவியது? இதற்கான காரணம் யாது? எங்கிருந்து இவை எடுத்து வரப்படுகின்றன? என்ற பல கேள்விகள் எம்முன் எழுகின்றன.

தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தீர்களாயின் மாதகலில் நூறு கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது. மன்னாரில் கஞ்சா களஞ்சியம் கண்டுபிடிப்பு என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இவை எமது மனத்திற்கு மிகுந்த வேதனையைத் தருகின்றன. மாதகலிலும் மன்னாரிலும் உள்ள மக்கள் என்ன கஞ்சா செடியா பயிரிடுகின்றார்கள்? யாரோ அவற்றை இங்கெல்லாம் அறிமுகப்படுத்துகின்றார்கள் என்பது தான் உண்மை.

இந்நிலை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நாம் அனைவரும் எமது வருங்கால சந்ததியினரைத் தொலைத்தவர்களாக மாறிவிடுவோம்.

மாணவர்களே உங்களுக்குப் பழக்கமில்லாதவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டாம். அவர்கள் தருகின்ற தின்பண்டங்களையோ அல்லது இனிப்புக்களையோ வாங்க வேண்டாம். வாங்கினாலும் உட்கொள்ள வேண்டாம். ஏனெனில் போதைப் பொருள் பழக்க வழக்கங்களுக்கு உங்களை ஆளாக்குவதற்குப் பலவழிகளிலும் சூத்திரதாரிகள் முயன்று வருகின்றார்கள். நாம் விழிப்பாக இருந் தால் எம்மை எவரும் மாற்றிவிட முடியாது என்ற செய்தியை உங்களுக்குத் தெரிவித்து வைக்கின்றேன் - என்றார். (த-5)

## சர்வதேச இலக்கியத் திருவிழா 23 ஆம் திகதி யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.10
காலிநகரில் நடத்தப்பட்டு வந்த சர்வதேச இலக்கியத் திருவிழா இந்த முறை யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஃபெயர்வே நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த விழா எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் 23ஆம் திகதி முதல்நாள் நிகழ்வுகளாக, காலை "வடிவங்களினூடாக தமிழ் இலக்கியம்" எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் ஐ.சாந்தன், க.சிறிகணேசன், சி.காயத்திரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தத்தம் ஆக்க இலக்கியச் செயற்பாடுகள் பற்றியும் போர்க்கால மற்றும் தற்போதைய சூழல்களில் அமைந்த தங்கள் எழுத்து முயற்சிகள் பற்றியும் கலந்துரையாடப் படவுள்ளது.

தொடர்ந்து எழுத்தாளர்களான கெனன் மாலிக், பத்மா விஸ்வநாதன், ஒவிடியா யு ஆகியோரின் உரையரங்குகளும் நடைபெறவுள்ளன. முதல் நாள் விழாவின் நிறைவில் நிறைவாக "இணைய வன்முறை" எனும் ஆற்றுகை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாளான 24 ஆம் திகதி காலை ஈழப் போரின் முடிவில் தப்பிப் பிழைத்த மூவரின் கதையைக் கூறும் "பிரச்சினையின் பருவங்கள்" எனும் நூலின் ஆசிரியரான தென்னிந்தியப் பத்திரிகையாளர் ரோகினி மோகனின் உரையரங்கு நடைபெறவுள்ளது.தொடர்ந்து நாவலாசிரியர் செபஸ்ரியன் ஃபோக்ஸின் "புனை கதை" பற்றிய உரையரங்கும் எழுத் தாளர் ரா.கீதா, ஜோன் ஸ்நோ ஆகியோரின் உரையரங்குகளும் கருத்துப் பகிர்வும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் மும்மொழிகளில் நடத்திய தேசிய இலக்கிய விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

## யோகாக் கருத்துரையும் பயிற்சியும்

யாழ். யோகா அரங்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் யோகாக் கருத்துரையும் பயிற்சியும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் யோகா ஆசான் எஸ் உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யோகேந்திரன் பிரசாத் தியான நுட்பங்கள் எனும் விடயம் தொடர்பாகவும், நா.தவராஜ் வாழ்வியலில் யோகா எனும் தொனிப் பொருளிலும் கருத்துரைகளையும், பயிற்சியையும் வழங்கவுள்ளனர்.

மேலும், யோகா மாணவர்கள் பயனடையும் வகையில் இந்த நிகழ்வு நடத்தப்படுவதோடு புதிய யோகா பயிற்சிகளுக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் என யாழ் யோகா அரங்கப் பணிப்பாளர் எஸ்.உமாசுதன் தெரிவித்துள்ளார். (த-ஐ)

## தவறவிட்ட பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில், தவறவிடப்பட் மூன்று பொருள்கள் வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள்களைக் தவறவிட்டவர்கள் அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளருடன் நேரில் தொடர்பு கொண்டு அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-11)

## விண்ணப்பம் கோரல்

யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் புதிய பாடத் திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கை நெறிக்கு புதியமாணவர் களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை நேரடியாகவும், தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ)

# இந்திய மீனவர் அத்துமீறலை கட்டுப்படுத்த நடவடிக்கை

## முல்லை. அரச அதிபர் ஏற்பாடு

முல்லைத்தீவு,ஜன.10
இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த 24 மணி நேரமும் செயற்படும் கடற்படையினரின் தொலைபேசி இலக்கங்களை மீனவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதியின் பிரதிநிதி, முல்லைத்தீவுக் கடற்படைத் தளபதி, இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அதன்போது இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் எவ்வாறு கூட்டிணைந்து செயற்படுவது, அதனை முழுமையாக கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், அத்துமீறல்களால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன தொடர்பில் ஆராயப்பட்டன.

> இந்திய மீனவர்களின் படகை அவதானிக்கும் மீனவர்கள் உடனடியாக நேரடியாகவே கடற்படையினருக்குத் தகவல் வழங்க கூடிய வகையிலான ஒழுங்குகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியதன் பிரகாரம், மீனவர்களும், கடற்படையினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்திய மீனவர்களின் படகை அவதானிக்கும் மீனவர்கள் உடனடியாக நேரடியாகவே கடற்படையினருக்குத் தகவல் வழங்க கூடிய வகையிலான ஒழுங்குகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

இவ்வாறு செய்யப்பட்ட ஒழுங்குகளின் முன்னேற்றம் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. (ற-ஜ-101)

# விபத்தில் காயமடைந்த பெண்ணுக்கு நட்டஈடு

யாழ்ப்பாணம், ஜன.10
விபத்தின் மூலம் பெருங் காயம் ஏற்படுத்திய குற்றச் சாட்டில் கைதான கெருடாவில் தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த நபருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மல்லாகம் நீதிமன்று.

அத்துடன் பாதிக்கப்பட்ட அச்சுவேலி மேற்கைச் சேர்ந்த நபருக்கு 35 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி, அச்சுவேலி நகரப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், பெண் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பெண் கடந்த வியாழக்கிழமை நீதிமன் றில் முன்னிலையாகியிருந்தார். அத்துடன் விபத்தை ஏற்படுத்திய சாரதியும் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது சந்தேக நபரான சாரதிக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. விபத்தின் மூலம் காயம் ஏற்படுத்தியமை, விபத்தைத் தடுக்கத் தவறியமை, ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமை, நிற்றல் கோட்டில் நிற்காமல் சென்றமை, கைத்தடுப்பு இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

விசாரணைகளை அடுத்து நீதிமன்று மேற்குறித்த தண்டனையை வழங்கியது. (ற-ஜ-107)

## சமுத்திர பல்கலை கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.10
இலங்கை சமுத்திரப் பல்கலைக் கழகத்தில் 2016 ஆம் ஆண்டுக்கான கற்கைநெறி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

டிப்ளோமா டெக் உதவி அலுவலகர், கரையோர வளங்களின் முகாமைத்துவம், மீன்வளர்ப்பு மற்றும் மீன் முகாமைத்துவம், சுழியோடிப் பயிற்சி, படகு உற்பத்தி செய்தலும் திருத்துதலும், மீன்பிடி தொழில் நுட்பம், வெளி இணைப்பு இயந்திர தொழிநுட்பம், கடலக ஒட்டுனர், கடலக மாலுமி, வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி, கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும், ஜி.சி.ஈ. சாதாரண தரம் மற்றும் ஜி.சி.ஈ. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் தமக் கான விண்ணப்பப் படிவங்களை, குருநகர் 2 ஆம் குறுக்குத் தெரு வில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ் சமுத்திரப் பல்கலைக் கழக உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி5)

# விடுவிக்கப்பட்ட அரசியல் கைதி செந்தூரனின் படத்துக்கு அஞ்சலி

கொழும்பு, ஜன.10
பொது மன்னிப்பு அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுதலை செய்யப்பட்ட சிவராசா ஜெனிவன், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி உயிரிழந்த மாணவன் செந்தூரனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்திய பின்னரே வீடு சென்றார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில், கடந்த பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சிவராசா ஜெனிவன் நல்லாட்சி அரசின் ஓர் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் யாழ். அச்சுவேலியில் உள்ள சொந்த ஊருக்கு நேற்றுத் திரும்பிய நிலையில் தனது இல்லத்துக்குச் செல்வதற்கு முன்பாக, கோண்டாவில் பகுதியில் ரயில் முன்பாக பாய்ந்து உயிர் நீத்த பாடசாலை மாணவன் செந்தூரனின் வீட்டுக்குச் சென்று அவரது திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்திய பின்னரே தனது இல்லம் சென்றார்.

அவர் செந்தூரனின் பெற்றோருடன் கலந்துரையாடினார். செந்தூரனின் 45 ஆம் நாள் நினைவு தினம் இன்று நடைபெறவுள்ளது. (ற-ஜ-101)

# 3,60,000 நோயாளருக்கு கடந்த ஆண்டு சிகிச்சை

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,ஜன.10
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் மூன்று லட்சத்து 60 ஆயிரத்து 600 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இதில் கூடுதலாக வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் அதிகமான மக்கள் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்தப்புள்ளிவிவரங்களின் படி வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கி ஒரு லட்சத்து 36 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அதனைவிட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சகல நோய் களுக்குமாக இரண்டு லட்சத்து 24 ஆயிரத்து 600 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

அதில் கூடுதலான மக்கள் காய்ச்சல், தடிமன், தலைவலி, சளி உட்பட மற்றும் பல நோய்த்தாக்கத்துக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-17)

# விதிமீறிய சாரதிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.10
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து விதிமுறையை மீறி வாகனங்கள் செலுத்திய எட்டுப் பேருக்கு 33 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார் மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிபதி ரி.கருணாகரன்.

அச்சுவேலிப் போக்குவரத்து பொலிஸார் தாக்கல் செய்த எட்டு வழக்குகள் தனித்தனியாக நேற்று முன்தினம் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. அத்துடன் சாரதி அனு மதிப்பத்திரம் இன்றி, மது போதையில் பக்கம் மாறி மோட்டார் சைக்கிள் செலுத்திய புத்தூர் மேற்கு கலைமதிப் பகுதியைச் சேர்ந்த நபருக்கு 8 ஆயிரம் ரூபாவும், மதுபோதை யில் வாகனம் செலுத்திய துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக் கப்பட்டது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய கதிரிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஓட்டுநருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் செல்லுபடியற்ற சாரதி அனுமதிபத்திரத்தைப் பாவித்து மோட்டார் சைக்கிள் செலுத்திய இருபாலைக் கிழக்கு கோப்பாய் பகுதியைச் சேர்ந்தவருக்கு இதன் போது 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஜ-107)

# பார்வையற்ற வயோதிபருக்கான பராமரிப்பு நிலையம் குடாநாட்டில்

யாழ்ப்பாணம்,ஜன.10
யாழ்.குடாநாட்டில் பார்வையற்ற வயோதிபர்களை வைத்துப் பராமரிப்பதற்காக தனியான பராமரிப்புச் சேவை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவரும், இலங்கையின் பார்வையற்ற தமிழ் பேசும் முதலாவது சட்டத்தரணியுமான ஏ.எச்.அற்புதராஜ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விழிப்புலனற்றோர் சங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான திட் டத்தில் முதலாவதாக எமது பிரதேசத்தில் பார்வையற்ற வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு வயோதிபர் பராமரிப்பு நிலையம் ஒன்றை அவசரமாக அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வயோதிபர் இல்லத்தை சாவகச்சேரியில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான கட்டடம் அமைப்பதற்கு கொடையாளிஒருவர்காணியை அன்பளிப்பாகத் தந்து உதவியுள்ளார்.

இதனை அடுத்து பார்வையற்ற வயோதிபர்களை வைத்துப் பராமரிப்பதற்கான பராமரிப்பு நிலையத்தை விரைவாக அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் தைப்பூச தினத்தன்று இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நட்டு வைக்கப்படும்.

அத்துடன் கைதடியில் உள்ள பார்வையற்றோர்களுக்கான தொழிற் பூங்காவில் மூன்று மாடிகளைக் கொண்ட விடுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்த விடுதியில் பார்வையற்றோர் தங்கி தொழிற்பூங்காவில் பணிபுரியவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.- என்றார். (ற-ஜ-17)

# நடைபாதை வியாபாரம் வேறிடத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.10
யாழ்.முனீஸ்வரன் வீதியை முழுமையாக மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் விதத்தில் அந்தப் பகுதியில் உள்ள நடைபாதை வியாபாரம் வேறு இடத்துக்கு மாற்றப்படும் என மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது, முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதை வியாபாரத்தால் இந்தவீதியூடாகப்போக்குவரத்துச்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் தற்போது நகரில் மக்களின் நெரிசல் மற்றும் போக்குவரத்து நெருக்கடி போன்றவற்றைத் தவிர்க்கும் முகமாக முனீஸ்வரன் வீதி முழுமையாக மக்கள் போக்குவரத்துக்கு பயன் படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதன் காரணத்தால் முனீஸ் வரன் வீதியில் உள்ள நடை பாதை வியாபார நிலையங்களை, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மின்சார சபையின் சேவையாளர் நிலையத்துக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.- என்றார். (ற-ஜ-17)




## ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க வேண்டும்

### வடக்கு கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.10

ஆரம்பத்திலேயே மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க வேண்டும். இதற்காகவே சிறு சிறு பாடசாலைகள், பல இடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. - இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா தெரிவித்தார்.

சகலருக்கும் சம கல்வி வாய்ப்பை வழங்கும் கல்விக் கொள்கைக்கு அமைவாகமாகாணகுறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியுதவியுடன், துணுக்காய் வலயத்தில் புதிதாகத் தீர்மானிக்கப்பட்ட நான்கு பாடசாலைகள் நேற்றுமுன்தினம் கல்விச் செயற்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டன.

துணுக்காய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சிறாட்டிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சின்னச்சாளம்பன் ஈஸ்வரன் வித்தியாலயம் மற்றும்முத்துவிநாயர்தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அந்த நிகழ்வுகளில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான சிறுசிறு பாடசாலைகளைப் பல இடங்களில் ஆரம்பித்து வைத்திருக்கிறோம். ஆரம்பத்திலேயே அவர்களுக்குத் தரமான கல்வியைவழங்குவதன்மூலம் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக மாறுவார்கள் என்பதற்காகவே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டுக்கு உகந்தவர்களாக இவர்களை வளர்க்கவேண்டும் என்பதற்காக இவ்வாறான பாடசாலையில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம்.- என்றார்.

இந்த நிகழ்வுகளில்மாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. ரவீந்திரன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றன், மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், வடக்கு மாகாண சபைஉறுப்பினர் சிவநேசன், அயல் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொன்டனர்.

நிகழ்வின் இறுதியில் குறித்த பாடசாலை வளாகங்களில்மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ற-ஐ-ரி7)

# 2 ஆயிரத்துக்கும் அதிக மாற்றுத் திறனாளிகள் முல்லை மாவட்டத்தில்

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 151 மாற்றுத் திறனாளிகள் தற்போது உள்ளனர். அவற்றில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவானவர்கள் வசிக்கின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே குறித்த தொகையினர் வசிக்கின்றனர். இவர்கள் போர் மற்றும் இயற்கை விபத்துக்களால் உடல் அவயவங்களை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "போர் மற்றும் இயற்கை விபத்துக்களால் உடல் அவயவங்களை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது."

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 480 மாற்றுத் திறனாளிகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 764 மாற்றுத் திறனாளிகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 377 மாற்றுத் திறனாளிகளும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 188 மாற்றுத் திறனாளிகளும், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் 267 மாற்றுத் திறனாளிகளும், வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவில் 75 மாற்றுத் திறனாளிகளும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடல் அவயவங்களை இழந்த பலர் குடும்பத் தலைவர்களாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-21,ரி7)

## இனத்தின் பெருமைகளைப் பேணும் சிறுவர்களை உருவாக்க வேண்டும்

### சாந்தி சிறீஸ்காந்தராசா எம்.பி. தெரிவிப்பு

புதுக்குடியிருப்பு, ஜன.10

எதிர்காலத்தில் எமது இனத்தின் பெருமைகளைப் பேணக்கூடிய வகையில் சிறுவர்களைச் சிறப்பாக வளர்க்க வேண்டியது பெற்றோர் அனைவரதும் கடமையாகும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்காந்தராசா தெரிவித்தார்.



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மருத்துவர் எஸ்.சிவதாஸ் எழுதிய "சிறுவர்களுடன்" என்ற சிறுவர் உளநலம் தொடர்பான நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர் காலத்தில் எமது இனத்தின் பெருமைகளைப் பேணக்கூடிய வகையில் சிறுவர்களைச் சிறப்பாக வளர்க்க வேண்டியது பெற்றோர் அனைவரதும் பொறுப்பு. சிறுவர்களை ஒழுக்கம் மிக்க சமூதாயமாக கட்டியெழுப்ப வேண்டியதும் பெற்றோரின் கடமையாகும். எமது தமிழினம் திட்டமிடப்பட்டு சகல வழிகளிலும் கலாசார ரீதியாகவும் அழிக்கப்பட்டு வருகின்றது. எனவே அதனை உணர்ந்து பெற்றோர், சிறுவர்களை வளர்ப்பதில் கூடிய அக்கறையெடுத்து செயற்பட வேண்டும். -என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறீஸ்காந்தராசா, வட. மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், யாழ்.பல்கலைக்கழக உளவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கஜ விந்தன் மற்றும் துணுக்காய் ஆிரதேச செயலர் குணபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஒளிரும் வாழ்வு அமைப்பினரால் மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. (ற-ஐ-ரி7,21)

## இரவு நேரப் பணியாளர்களின் கடமை தொடர்பில் சோதனை

கிளிநொச்சி,ஜன.10

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலக இரவு நேரப் பணியாளர்களின் கடமை தொடர்பில் மாவட்ட அரச அதிபர் திடீர்ச் சோதனையில் ஈடுபட்டார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஆளுகைக்கு உட்பட்ட அலுவலகங்களில் இரவுக் காவலாளிகள் மற்றும் பணியாளர்கள் கடமை நேரத்தில் ஒப்பமிட்ட பின்பு வெளிச் செல்லல் மற்றும் பணி நேரத்தில் தூங்குதல் தொடர்பில் ஆய்வு செய்யும் நோக்கில் மாவட்ட அரச அதிபர் திடீர் சோதனையில் ஈடுபட்டார்.

இவ்வாறு மாவட்ட அரச அதிபர் திடீர்ச் சோதனை மேற்கொண்ட போது, பல உத்தியோகத்தர்கள் அகப்பட்டனர். இவ்வாறு அகப்பட்ட உத்தியோகத்தர்களை அழைத்த மாவட்ட அரச அதிபர் இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடரும். இது முதல் முறை என்பதனால் அறிவுறுத்தல் மட்டும் வழங்கப்படுகின்றது எனத் தெரிவித்தார். (ஐ-101)



கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகமும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் முதியோர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தின. அதில் 69க்கும் அதிகமான முதியோர்கள் கலந்து பயன்பெற்றனர். அதே வேளை எதிர்வரும் 22ஆம் திகதி பளை இத்தாவில் கிராமத்தில் மருத்துவப் பரிசோதனை முகாம் நடத்தப் படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# செயற்கைக் கை பொருத்தும் நடவடிக்கை கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜன.10

கைகளை இழந்தவர்களுக்குச் செயற்கைக் கைகளைப் பொருத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நடவடிக்கை ஊடாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தேவையுள்ளோர் உடன் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று சர்வதேச றோட்டறிக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட றோட்டறிக் கழகத்தின் கிளை அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியா றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

செயற்கைக் கை தேவைப்படுவோர் தத்தமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தமது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, செயற்கைக் கை (வலது புறமா இடது புறமா) ஆகிய விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 021 321 5529 இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விவரங்களை அறியமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## கல்வி சாரா அலுவலர்கள் தென்மராட்சியில் நியமனம்

சாவகச்சேரி, ஜன.10

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட கல்வி சார அலுவலர்கள்பதவிகளுக்கு மாகாண கல்வி அமைச்சின்செயலாளரால்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலயக் கல்வி அலுவலகத்தில் நிர்வாகப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வே.பாலசுப்பிரமணியம் ஓய்வுபெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நிர்வாகப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளராகக்கடமையாற்றிய த.கிருபாகரனும், வலய கல்விமுகாமைத்துவம்பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளராகக்கடமையாற்றிய சு.சுந்தரசிவம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக்கடமையாற்றிய த்.கந்தராசாவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வலய அழகியல்பாடப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகக்கடமையாற்றிய கோ.கைலாசநாதன் ஓய்வு பெறுவதையடுத்து அவரின் இடத்துக்கு வலய அழகியல்பிரிவுஆசிரியஆலோசகராகக் கடமையாற்றிய திருமதி விஜிதா சுனில் அரியரத்ன நியமிக்கபட்டுள்ளார்.

வலயத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் பாட ஆசிரிய ஆலோசகராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் வே.உதயகுமாரும், கணித பாட ஆசிரிய ஆலோசகராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் க.ஸ்ரீகணேசனும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனால் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஜ-9)

## அரச உத்தியோகத்தருக்கு யாழில் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜன.10

வடமாகாணம்,கிழக்குமாகாணம் மற்றும் வடமத்திய மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு சீர்செய்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை மாவட்டச் செயலகத்தில்நேற்றுமுன்தினம்நடைபெற்றது.

வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் அரச உத்தியோகத்தர்களின் கடன் செயற்பாடுகள்தொடர்பாக ஆராயப்பட்டதுடன், மாகாணங்களுக்கும் –மத்திக்கும் இடையிலான கணக்கு பரிமாற்றம்தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளன.

இந்த முற்பணக்கொடுப்பனவு சீர்செய்தல்நடைமுறையூடாக, மாகாணத் திணைக்களங்கள், மத்திய திணைக்களங்கள் இடையில்நிகழ்த்தப்பட்ட இடமாற்றங்கள், ஒத்துமாறல்களால்கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் என்பவற்றில் பணிபுரிந்தவர்கள் மத்தியிலும், மத்தியில் பணிபுரிந்தவர்கள் கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம், வடமத்திய மாகாணத்திலும் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய கடன் மிகுதியை மாகாணங்கள் மத்திய திணைக்களத்துக்கும்மத்தியதிணைக்களங்கள் மாகாணத்துக்கும் வழங்க வேண்டிய செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

நீண்டகாலமாக முடிக்கப்படாமல் காணப்பட்ட, அரச உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட கடன் தொகைகளை சேகரித்து, மத்திய, மாகாண திணைக்களங்களுக்கு இடையில் பரிமாறிக் கொள்வதற்காகவே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை திணைக்களங்கள்ஒருஇடத்தில் கூட்டாகச் செயற்படுவதனுடாகவே சீர் செய்ய முடியும்என்பதால், இந்தக் கணக்காளர்களுக்கு இடையிலான பயிற்சிப்பட் ட்றை ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் மத்திய சுகாதார அமைச்சின் சகல கணக்காளர்களும், விடய உத்தியோகத்தர்களும், மாகாண சுகாதார திணைக்களத்தின் கணக்காளர்களும், உத்தியோகத்தர்களும் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-ரி5)

# கூட்டமைப்பை உடைப்பது எதிர்மறை விளைவைத் தரும்

### வடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

தமிழ் மக்கள் பேரவையினர் கூட்டமைப்பை உடைத்துத் தம்மடைய செயற்பாடுகளால் கட்சிக்குள் இருந்து பிரிந்து செல்வதால் தமிழ் மக்களின் வாழ்வில் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும். தனி அமைப்பாக உருவாகியுள்ளதமிழ்மக்கள்பேரவை ஏன் கூட்டமைப்பில் இருந்தவாறே இதனை முன்னெடுக்க முடியாது?.- இவ்வாறு வடமாகாண சபையின் போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

குருநகரில்அமைந்துள்ளவடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பேரவையினர் கூட்டமைப்பை உடைத்துத் தம்மடைய செயற்பாடுகளால் கட்சிக்குள் இருந்து பிரிந்து செல்வதால் தமிழ் மக்களின் வாழ்வில் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும். அதாவது எம்முடைய நீண்டகால எதிர்பார்ப்பான இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நீண்டு கொண்டே செல்வதற்கு வழிவகை செய்வதாக அமையும்.

> “அனைவரும் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்காது போனால், தென்னிலங்கை வாசிகள் எத்தகைய நிலைப்பாடு ஒன்றை எதிர்பார்த்து காத்திருக்கின்றனரோ, அதனைப் பேரவையின் போக்கு உருவாக்கி விடாமல் இருத்தல் வேண்டும்.”

அனைவரும் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்காது போனால், தென்னிலங்கை வாசிகள் எத்தகைய நிலைப்பாடு ஒன்றை எதிர்பார்த்து காத்திருக்கின்றனரோ, அதனைப் பேரவையின் போக்கு உருவாக்கி விடாமல் இருத்தல் வேண்டும்.

இப்போது தன்னிச்சையாக செயற்படும் பேரவையின் இந்த செயற்பாட்டைப் போன்று, எதிர்காலத்தில் இவர்களுக்கு உள்ளாக ஏற்படும் முரண்பாடுகள் தொடர்ச்சியாக பிரிவினைகளை ஏற்படுத்துவதாகவே அமையும்.

அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு பிரிவுக் கட்சிகளின் தோற்றத்துக்கும் வழி செய்யக்கூடும். தற்போது தாம் அரசியல் சார்ந்தவர்கள் அல்ல என்று கூறும் தமிழ்மக்கள் பேரவையினரின் போக்கு எதிர்காலத்தில் கட்சி சார்ந்து மாற்றமடையக்கூடும்.

தீர்வுகளுக்கான முடிவை எட்டுவதற்கு தாம் தனித்துள்ளதாக கூறும் பேரவையினர் ஏன் கூட்டமைப்புடன் இணைந்திருந்த காலத்திலும், பேரவையை விடுத்து தொடர்ந்து இணைந்திருப்பது ஊடாகவும் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒன்றாக இருப்பதே தமிழ் மக்களுடைய பலம். இதனை எவரும் பாதிக்காத வகையில் கூட்டமைப்பினராகட்டும் சிவில் அமைப்புகளாகட்டும் அனை வரும் இணைந்து செயற்பட்டு காட்ட வேண்டும். தமிழ் மக்கள் பேரவை யினர் ஒற்றுமையாகவும் தூர நோக்குடன் செயற்பட்டால் இந்த அமைப்பினுடாக ஏதேனும் நன்மைகளை பெறமுடியும் –என்றார். (ற-ஜ-ரி5)

## ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள்

### அரசியல் கைதிகளின் உறவினர்கள் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.10



பொங்கல் விழாவுக்கு யாழ்ப்பாணம் வரவுள்ள ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றுஅரசியல் கைதிகளின் உறவுகள் வடமாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தைப்பொங்கல் விழாவுக்காக எதிர்வரும் 15 ஆம் திகதி யாழுக்கு வரும் ஜனாதிபதியைச் சந்தித்து எமது கோரிக்கைகளையும் முன் வைப்பதற்கு ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தர வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் காணாமற் போனோரின் உறவுகள் பலர் கலந்து கொண்ட போதிலும் செய்தியாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இதனை அடுத்து முதலமைச்சரின் சந்திப்பை முடித்து வெளியேறிய உறவுகளிடம் இது தொடர்பில் கேட்டபோது:-

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்ட எமது உறவுகள் விடுதலை உள்ளிட்ட எமது பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என நம்பியே நல்லாட்சி எனக் கூறப்படும் அரசுக்கு வாக்களித்தோம். ஆனால் இந்த அரசின் காலத்திலும் நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதோடு, இதன் காரணமாக நாம் மனவிரக்தியும் அடைந்துள்ளோம். இது தொடர்பில் எமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்காக தைப்பொங்கலுக்கு யாழ். வரும் ஜனாதிபதியை நாமும் சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு முதலமைச்சரைக் கோரினோம். ஏற்பாடுகளைச் செய்வதாக முதலமைச்சர் பதிலளித்தார் - என்றனர். (ற-ஜ-101)

## போதையில் அட்டகாசம் சீர்திருத்த உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.10

பொது இடத்தில் மதுபாணம் அருந்தி அநாகரிகமான நடந்து கொண்ட அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த ஒருவரை 100 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறு மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிவான் ரீ.கருணாகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் மாதம் அச்சுவேலிநகரப்பகுதியில் மதுபானம் அருந்தி வீதியால்செல்வோருக்கு அருவருப்பைஏற்படுத்தும்வண்ணம் நடந்து கொண்ட குற்றச்சாட்டில் குறித்த நபர்பொலிஸாரால்கைது செய்யப்பட்டிருந்தார்.

அச்சுவேலி பொலிஸார் தாக்கல் செய்த குறித்த வழக்குமீதானவிசாரணைகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போதே நீதிவான் இவ்வாறு தீர்ப்பளித்தார். (ற-ஜ-107)

## கணித, விஞ்ஞானத் துறையை தேர்ந்தெடுப்போர் குறைகிறது

### வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் கவலை

காரைநகர், ஜன.10

மாணவர்கள் உயர்தரக் கல்வியைக் கற்பதற்காக கணித, விஞ்ஞானத் துறைகளைத் தேர்ந்தெடுப்பது மிகவும் குறைந்து வருகின்றது. - இவ் வாறு வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைமற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் தெரிவித்தார்.

காரைநகர் இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ள காரைநகர் கலாநிதி ஆதியாகராசா ம.ம. வித்தியாலயப்பெயர்பலகைத்திரை நீக்க விழா கடந்த திங்கட்கிழமை கல்லூரிவளாகத்தில்நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது உயர்தரக் கல்வியைத் தொடரும் இருபது வீதமான மாணவர்களே கணித, விஞ்ஞானத் துறைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எனினும் கணித, விஞ்ஞானத்துறைகளிலேயே அதிகவேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இந்தத்துறையில்தான் ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. எனவே மாணவர்கள் இந்தத்துறைகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் இலகுவாக வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதுடன் ஆசிரியத் தொழிலில் இணைந்து நல்ல சமுதாயத்தையும் உருவாக்கமுடியும்.

இருபது வீதமாகக் காணப்படும் கணித, விஞ்ஞானத் துறையைக் கற்கும் மாணவர்களை நாற்பது வீதமாக உயர்த்துவதுடன் கலைத் துறையை இருபத்தைந்து வீதமாகவும் வர்த்தகத் துறையை முப்பத்தைந்து வீதமாகவும் மட்டுப்படுத்த வேண்டும்-என்றார். (ற-ஜ-250)



சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு நேற்று முன் தினம் 7 வருடங்கள் கடந்துவிட்டன, அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள பொரளை பொது மயானத்தில் அவரது உறவினர், சக ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்களால் நேற்று முன் தினம் காலை மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (த-5)

# சு.கவிலிருந்து என்னை வெளியேபோட முயற்சி

## பதறுகிறார் மகிந்த

கொழும்பு, ஜன. 10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தன்னை வெளியேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது என்றும், ஓய்வுபெறுமாறு சிலர் வலியுறுத்துகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ச மத வழிபாட்டில் ஈடுபடுவதற்காக கடந்த வியாழக்கிழமை கண்டி தலதா மாளிகைக்குச் சென்றிருந் தார்.

வழிபாடு முடிவடைந்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



சமையல் அறையிலுள்ள இலத்திரனியல் உபகரணம் தொடர்பில் விசாரிக்கின்றனர். மலசலக் கூடத்திலுள்ள இலத்திரனியல் உபகரணங்கள் பற்றியும் கேள்வி எழுப்புகின்றனர். 2005 ஆம் ஆண்டிலிருந்து உட்கொண்ட உணவு சம்பந்தமாகவும் விசாரணை நடத்துகின்றனர். இது தான் நல்லாட்சியா? நல்லாட்சி தொடர்பில் திருப்திகொள்ள முடியாது.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு நான் வெளியே சென்றவன் அல்லன். என்னை வெளியேற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். அரசியலில் இருந்து ஓய்வுபெறுமாறும் கூறுகின்றனர். இந்த நிலைமை தொடருமானால் புதிய கட்சியொன்று உதயமாவதை தவிர்க்க முடியாது. நாட்டில் பலமானதொரு எதிர்க் கட்சி தற்போது இல்லை என்றும் மகிந்த கூறியுள்ளார். (த)

# விட்டுச் சென்ற பொருள்களை தேடும் காணி உரிமையாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு, மற்றும் வலி.கிழக்குப் பகுதிகளைப் பார்வையிடச் சென்ற காணி உரிமையாளர்கள் விட்டுச்சென்றதமது பொருள்களை எடுத்துச் செல்வதனை அவதானிக்க முடிந்தது.

1990 ஆம் ஆண்டு இந்தப் பகுதிகளை விட்டுவெளியேறிய பூர்வீக மக்கள், தற்போது வெளிமாவட்டங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகை தந்து தமது காணிகளைப் பார்வையிட்டு வருவதுடன், துப்பரவுப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சிறு வயதில் இந்தப் பகுதியை விட்டுச் சென்ற தாம் தற்போது திருமணமாகித் தமது குழந்தைகளுடன் இந்தப் பகுதிக்கு வருவது மகிழ்ச்சியைத் தருவதாகப் பூர்வீகக் குடியிருப்பாளர்களின் சந்ததிகள் கூறுகின்றனர். சிறு வயதில் அணிந்த உடுப்புக்களைக் கூட இடி பாடுகளுக்குக்கிடையில் இருந்து மீட்டெடுத்துப் பார்க்கும் இவர்கள் அதனை தமது ஞாபகச் சின்னமாக எடுத்து செல்கின்றனர்.

மேலும் 25 வருடத்துக்கு முன் விட்டுச் சென்ற மண்சட்டி பாத்திரங்கள் தற்போதும் நல்ல நிலையில் உள்ளதாகக் கூறுகின்றனர்.

தற்போது இலத்திரனியல் சாதனங்களின் பாவனை சமையல் அறையை ஆக்கிரமித்தாலும், முன்னர் பாவித்த திருகணை, அம்மிக் கல் என்பவற்றை வீட்டுக்கு எடுத்துசெல்லதாம் ஆசைப்படுவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி பலாலி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்துபொதுமக்களின் 701.5 ஏக்கர்காணி விடுவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிப் பூர்வீக மக்கள் காணிகளைப் பார்வையிட்டு வருவதுடன், தமக்கு கிடைக்கும் மாலை நேரங்களில் துப்பரவுப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். (த-ஜ-107)

# அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் கருத்துக்களை முன்வைக்கலாம்

## அச்சம் வேண்டாம் என்கிறது அரசமைப்பு பற்றி கருத்தறியும் குழு

கொழும்பு, ஜன. 10

புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் நாட்டு மக்கள் இன, மத, குலபேதமின்றி சுதந்திரமான முறையில் கருத்துக்களை முன்வைக்கலாம் என்றும், அதிகாரப் பரவலாக்கல்தான் அவசியம் என்றால் அதையும் எவ்வித அச்சமுமின்றி வெளிப்படுத்த முடியும் என்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

அரசமைப்பு மறுசீரமைப்பது தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறிவதற்காக 24 பேரடங்கிய குழுவொன்றை அரசு அண்மையில் நியமித்தது. இதில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டு மக்களின் கருத்துக்களை அறிந்து மார்ச் 31ஆம் திகதிக்குள் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதே குழுவின் பிரதான பணியாகும்.

இந்த நிலையில், மேற்படி குழுவின் செயற்பாடு எப்போது ஆரம்பமாகும்?, அதன் நிகழ்ச்சி நிரல் என்ன? என்பது தொடர்பில் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்கவிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர் கூறியவை வருமாறு:-

எமது குழு கடந்த 4ஆம் திகதி முதற் தடவையாகக் கூடியது. மீண்டும் எதிர்வரும் 11ஆம் திகதி கூடவுள்ளோம். இதன்போது திட்ட நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். அத்துடன், திங்கள் முதல் ஊடகங்களில் விளம்பரங்கள் வெளியிடப்படும். எவ்வாறு எமக்குத் தகவல்களை வழங்கலாம் என்றும் அறிவிக்கப்படும். அவற்றைப் பார்வையிட்ட பின்னர் மின்னஞ்சல் மூலமாகக் கூட எமக்கு கருத்துகளைத் தெரிவிக்க முடியும். தேவையேற்படும் பட்சத்தில் நாமே அழைத்து கருத்து அறிவோம்.

அதேவேளை, 13ஆம். திகதி கொழும்பில் மக்களிடம் கருத்துப் பெறப்படும். அதன் பின்னர் பெப்ரவரி இறுதிக்குள் வடக்கு-கிழக்கு உட்பட ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்துக்கு ஒருதடவையேனும் பயணம் மேற்கொள்வோம்.

புத்திஜீவிகளிடமிருந்து மட்டுமல்ல, கீழ்மட்டத்திலிருந்தும் நாம் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். விவசாயிகள் உட்பட சாதாரண மக்களும் சுதந்திரமாக தமதுகருத்துக்களை முன்வைக்க முடியும். குறிப்பாக அதிகாரப் பரவலாக்கலை ஆதரிப்பவர்கள் ஆதரவு என்றும், எதிர்ப்பவர்கள் எதிர்ப்பு என்றும் கூட குறிப்பிடலாம். இன, மத, மொழி, குல பேதமின்றி கருத்துக்களை முன்வைக்கலாம் - என்றார். (த-சி)

# அரச உத்தியோகத்தர்களுக்கான சத்தியப்பிரமாணத்தில் வேறுபாடு

யாழ்ப்பாணம், ஜன, 10

நடப்பாண்டின் ஆரம்ப தினத்தன்று சகல அரச உத்தி யோகத்தர்களாலும் மேற்கொள்ளப்பட்ட சத்தியப் பிரமாணங்கள் இருவகையில் மேற்கொள்ளப்பட்டதாகத் தமிழ் அரச உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் பிரகாரம் ஒரு தரப்பினர் ஒரே நாட்டின் ,ஒரே இனத்தின் , ஒரே கொடியின் நிழலில் ஐக்கியமாகவும் ஒரே மனப்பான்மையுடன் சேவையாற்றுவோம் என அச்சிட்டு வழங்கப்பட்ட தாளில் இருந்ததை அவ்வாறே ஒப்புவித்தனர்.

இருப்பினும் பல செயலக அதிகாரிகள் இதில் உள்ள ஒரே இனத்தின் என்ற சொல்லில் உள்ள பாதிப்பைச் சுட்டிக் காட்டியதை அடுத்து அந்தச் சொல்லை மட்டும் மாற்றி அமைத்து ஒரே நாட்டின் , ஒரே கொடியின் கீழ் பல் இனமும் ஐக்கியமாக ஒரே மனப்பான்மையுடன் சேவையாற்றுவோம் என உறுதி எடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு தவறான வாக்கியத்துடன் வெளிவந்த உறுதியுரை தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெறவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (த-ஜ-101)



# After A/Level's UK DEGREE



## Higher Education for a Lowest Investment

PEARSON BTEC

# HND

Offered at JAFFNA CAMPUS 077 309 308

## IT/Software Engineering

Computing & System Development

- BEng (Hons) in Software Engineering
- BEng (Hons) in Computer Networking
- BSc (Hons) in Computing

## Business Management

- BA (Hons) in Business Administration
- BA (Hons) in Human Resource Management

## Engineering

- BSc (Hons) in Civil Engineering
- BEng (Hons) in Mechanical Engineering
- BEng (Hons) inElectronic & Communication Engineering

Investment **Rs.200,000**

### Why Choose ESOFT?

- Direct UK Degrees With Full Credit Transfers
- University Approved Lecturer Panel
- UGC Recognised
- Loans & Special Payment Plans Including HSBC 0% Interest offer
- Merit Based Scholarships
- State-of-the-art Facilities



ESOFT is proud to be recognized as a **GOLD PARTNER**

PEARSON edexcel

March Intake

# MBA

Master in Business Administration

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY

# ESOFT

*Shaping Lives, Creating Futures.*

**ESOFT METRO CAMPUS**
**No.137, K.KS, Road, Jaffna**
**021 222 4142**

LONDON METROPOLITAN UNIVERSITY · PEARSON · DCS Registered Course Provider · Microsoft IT Academy Program Member · ORACLE ACADEMY · intel

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்.
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் 6 மாத கற்கைநெறி

*(Trainer Training (teacher Training programme)* (யாழில் முதல் முறையாக)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.01.2016)** சனி (weekend batch)
**9.am (18.01.2016)** திங்கள் (Week day batch)

பதிவுகளுக்கு முந்துங்கள்

English Language Adventure School
Nothing is impossible to us
ELAS

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040



## தென்னிந்திய திருத்தல யாத்திரை
### தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி, கேரளா ஊடான யாத்திரை

நாள்கள் 16, ஆரம்பம். 27.01.2016. யாத்திரிகர்கள். 10.

தரிசிக்கும் ஆலயங்கள் சுருக்கமாக திருச்சி, உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, 9 நவக்கிரக ஆலயங்கள், ஆறுபடைவீடுகள், குருவாயூர், கன்னியாக்குமரி, திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 5 பொற் கோயில், இராமேஸ்வரம், பிரம்மாகோயில், திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சவடி, ஆஞ்சினேயர், மைசூர், சாமுண்டீஸ்வரி, மணக்குள விநாயகர், பத்மநாதசுவாமி, திரு விடைமருதூர், திருவையாறு உட்பட 60இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன், மைசூர், பிருந்தாவனம், பாலஸ், மரீனாபீச், பாண்டிச்சேரி பீச்சும் காணலாம். (ஆலயங்கள் அனைத்திலும் பூசை நேரத்தில் தவறாது தரிசிக்கலாம்)

பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை

இருவழி விமானரிக்கட், மூன்றுவேளை சுத்தமான உயர்தர சைவ உணவு, 2 லீற்றர் குடிநீர், கொழும்பில் இருந்து விமானநிலையம் செல்லவும் திரும்பவும் வாகனவசதி. யாத்திரை முழுவதும் ஏசி. வாகன வசதி. இரண்டுபேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள். ஆலய தரிசன கட்டணங்கள் அடங்கலாக.

விருப்பமுடையவர்கள் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும். ஆலயங்களில் குறூப்பாக எடுக்கும் 50 புகைப்படங்கள் நாடு திரும்பியபின் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.(அன்பளிப்பாக)

விவரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
59, 8/6 செட்டியார்தெரு, கொழும்பு 11
077 768 0102, 077 736 2154



## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



# Spoken English
Veta Fluency Diploma

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon, Wed, Fri 9.30 a.m. Mon, Fri 3.30 a.m. | Tue, Thu 11.30 a.m. Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 8.00 a.m. Tue, Thu 3..30 a.m | Mon, Wed, Fri 1.30 p.m. | Sat, Sun 8.00 a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION

IELTS | IELTS Life Skills (A1,B1) திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சாமல் தோஸல் அருகாமை) | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.111,A9 வீதி, |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |



## Yarl Beauty Academy
### அழகுக்கலை பயிற்சிகள்

YARL BEAUTY ACADEMY

தைபொங்கலினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்



- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை) 4800/= மட்டுமே.
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)
- Tailoring Classes (தையல் பயிற்சி)

2016 தை 17ம், 18ம், 19ம், 20ம் திகதிகளில் முற்பகல் 10மணி முதல் ஆரம்பம்

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு Bouquet Making Free (பூச்செண்டு தயாரித்தல் பயிற்சி இலவசம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)



## B.B.C யின் புதிய கிளைகள் ஆரம்பம்

British BUSINESS COLLEGE
Where Students Come First

K.K.S. வீதியில், சுன்னாகத்திலும்,
பருத்தித்துறை வீதியில்,
நீர்வேலியிலும்...



## தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

BBC 14 வது வருடத்தில்

| பாலர் பாடசாலை பிரிவுகள் | | | |
|---|---|---|---|
| பிரிவு | Play Group | Montessori | Pre School |
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

கற்பித்தல் மொழி
ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet * English Day Concert
* முத்தமிழ் விழா * Art & Craft Exhibition
* Carols * Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்

NEW SYLLABUS
* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System

எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்

* கடந்த 13 ஆண்டுகளாக எமது 12 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
* யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
* யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
* எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்

*Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக) | பருத்தித்துறை வீதி நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை | பருத்தித்துறை வீதி, புத்தூர் |

British BUSINESS COLLEGE
Where Students Come First

BRITISH BUSINESS COLLEGE 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060



Prepared under
Hygienic method Specially for physicians and domestic purposes

750 ml

IMPROVED FORMULA PURITY GUARANTEED

# V.S.P
## SPECIAL LUNCH OIL



Special V.S.P Gingelly Oil

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135/9165

சுகாதார முறையில் உணவிற்கும், வைத்தியத்திற்கும், விஷேடமாகத் தயாரிக்கப்பட்டது

R.No 11505

உரிமையாளர் : திரு.பொ.பாஸ்கரன்
சுத்தமான வி.எஸ்.பி நல்லெண்ணெய்

Olialakan Studio British College of Beauty Studies உடன் Alaris Private Limited Lanka இணைந்து நடாத்தும் 2016 இற்கான

**OliAlakan Award**

சிறந்த அழகிகளுக்கான தேர்வு
மணப்பெண் அலங்காரத்துக்கான தேர்வு
மணகன் அலங்காரத்துக்கான தேர்வு
ஆடை வடிவமைப்பாளர்களுக்கான தேர்வு
கைவினைப் பொருட்களிற்கான தேர்வு
சிறந்த Hair Styles க்கான தேர்வு
New Design Bokays, சடைநாகத்திற்க்கான தேர்வு
Icing Cake வித்தியாசமன உணவு வகைகளுக்கான தேர்வு
சிறந்த முறையில் Facial Cleanup செய்பவர்களுக்கான தேர்வு
சிறந்த Reception makeup க்கான தேர்வு

**பங்கு கொள்ளும் தகமைகள்**

- 5000 ரூபாவை செலுத்தி Stall Booking செய்தல் வேண்டும்
- இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் பங்கு கொள்ள முடியும்
- வயதெல்லை கிடையாது
- இருபாலரும் பங்கு கொள்ளமுடியும்

**பங்கு கொள்பவருக்கான நன்மை**

- நாடளாவிய ரீதியில் தெரிவாகிய பிரிவையும் தங்கள் தகவலையும் புகைப்படத்துடன் அறிமுப்படுத்துவோம்
- நிகழ்வு நடைபெறும் அன்று Colour விளம்பரங்கள் அடங்கிய புத்தகங்கள் German, Swiss, London, Norway, France, Canada போன்ற நாடுகளுக்கு இலங்கைவாழ் தமிழர்களிடம் விநியோகிக்கப்படும்
- 15,000/= பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

Certificates, Olialakan Award, Alaris Private Limited Lanka வின்பரிசில்களும் வழங்கப்படும்.
தொடர்ந்து அழகுகலை நிபுணர்களுக்கும் புகைப்படத்துறை சார்ந்தவர்களுக்கான கௌரவிப்பு விழாவிலும் பங்குகொள்ள முடியும்
Dinner, DJ Musical Show, Dances, Funny Games போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.
**British College of Beauty Studies இன் Diploma**
அழகுக்கலை பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது.
**திங்கள் 10-12 வகுப்பு ஆரம்பம் 076 7011645**

**Olialakan** 021 2215565, 0767963784
**Adiyapatham Road, Thirunelvely-Jaffna**

British
Thirunelvely Junction Thirunelvely Jaffna 0767011645

IIS இல் இணைந்து உங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள்

# கணனிக்கற்கை நெறிகள்

- Microsoft Office
- Multimedia
- Web Designing
- DeskTop Publishing
- Hardware Technology
- Java Programming
- Computerized Accounting
- Eng. Drawing & AutoCAD
- Visual Programming (C# /.NET)
- Android Apps
- Ethical Hacking
- Networking

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள், க.பொ.த உயர்தரப் பெறுபேறு கிடைக்கப்பெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற / தவறவிட்ட மாணவர்கள் உயர் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களே! உங்களுக்காகவே விஷேட பிரிவுகள் ஆரம்பம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
பிரிவு I : 10.01.2016 பிரிவு II : 23.01.2016

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கற்கை நெறி
**ROBOTICS & INTELLIGENT SYSTEMS**
(உங்கள் கட்டுப்பாட்டில் இயந்திர மனிதன்)

மேலதிக விபரங்களுக்கு
**071 777 4555**


கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS இல் இணைவதன் மூலம் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
இல 209 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555

CIMA Chartered Institute of Management Accountants
**WISDOM JAFFNA** THE PLACE FOR CIMA

உங்களது உயர் கல்வி,.. உயர்ந்த நோக்குடன்... உங்களை நாடி...

*Create Your Own Success Story...*




Commencement Dates:
**18th January 2016**
(Weekday Batch)
REGISTRATIONS NOW ON..!

## After O/Level or A/Level Start CIMA Certificate Level @ Wisdom...

**Fast Track your Future to become a Chartered Global Management Accountant (CGMA)**
with the new generation professional business qualification, CIMA and a BSc Degree...

**Call us to guide you better**
**076 777 0747**
www.wisdombusiness.com

**உங்களுக்கான விசேட சலுகை..!**

நீங்கள் 2015 ஆகஸ்ட் க.பொ.த உயர்தரப் பரீட்சை முடித்தவராயின்

| | |
|---|---|
| 3A சித்திகள் கொண்டிருப்பின் கற்கை கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும் | அகில இலங்கை மட்டம் 100 றகுள் கற்கை கட்டணத்தில் 50% கழிவு வழங்கப்படும் |

நீங்கள் 2015 டிசம்பர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடித்தவராயின் கற்கைக் கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும்

இச்சலுகை 2016 ஜனவரி 18 ஆம் திகதி வரை மட்டுமே!

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154A/1, Navalar Road, Jaffna.
E : Jaffna@wisdombusiness.com
021 222 07 27
021 720 0777
ROBERT GORDON UNIVERSITY ABERDEEN
CIMA

*March 19th of 2016* இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்



March 19 th இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 வரை நடைபெறும்.

இப்போது வகுப்புகள் நடைபெறுகின்றன

THIS IS NOT CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

# IELTS

**IELTS** பாடங்களை படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.

இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Course Schedule

Mon, Tues, Wed, Thur
10 Week
8.30 - 10.30, 5.00 - 7.00

Saturday & Sunday
Duration 10 Week
Time 8.30 - 11.00

# IELTS

LIFE SKILLS A1

"IELTS Registration Center for British Council"

## British College of English

No.192, Navalar Road Jaffna. (பெருமாள் கோவிலுக்கு சமீபமாக)
Tel: 021 222 0384, 0778803887

---



## உங்கள் மழலைச் செல்வங்களின் சௌகரியத்திற்கு எம்மிடம்பல Baby Wipes

- Cute Baby, Tiny Dots, Tender Baby, Baby Joy, New Baby,Cool Baby- With Vitamin E & Alcohol Free Rs. 155.00இருந்து 285.00 வரை இருப்பில் உண்டு.
- இத்துடன் பல வகையான Baby Diapers, மிகத்தரமான அதே சமயம் மிக மலிவான விலையில் உண்டு.
- நோயுற்றிருக்கும் உங்கள் வயோதிப உறவுகளுக்குத் தேவையான ADULT DIAPERS தரமானதும் அதே சமயம் நியாய- விலையிலும் எம்மிடம் கிடைக்கிறது.

நாங்கள் என்றும் உங்களுடன்

### வனிக்கா சேஜிக்கல்ஸ்

203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 0077, Fax: 222 2445
Office Mob: 077 44 22 367 Email vanisurgi@sltnet.lk

---

## LAKELAND INTER - AMERICAN SCHOOL

### ADMISSION FOR MONTESSORI



முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எமது பாடசாலை செயற்பாடுகளாவன:-

- Dr.Maria Montessori இன் எண்ணக் கருவில் பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிக்கேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் (AMI) முறை மூலமான கற்றல் செயற்பாடுகள்.
- இலகு முறையிலான உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தல் முறையில் கற்பித்தல்.
- மழலைகள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுத்திறன்களையும் பழக்க வழக்கங்களையும் வேலைகளையும் சுதந்திரமாக வெளிக்கொணர்தல்.
- பாலர் முன்பள்ளியில் கல்விபயிலும் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் தமது ஆற்றல்களை பெருக்குவதற்கும் சிறந்த களமாக அமைத்து அறிவை பெருக்குதல்.
- பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு, சுகாதாரம், பொறுப்புணர்வு, கடமையுணர்வு ஆகியவற்றை எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் மகிழ்ச்சியான சூழ்நிலையில் புகட்டுதல்.

உங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் உங்களின் தெரிவு எமதாகட்டும்.

உங்கள் நம்பிக்கைக்கான தெரிவு Lakeland Inter-American School. விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு. வயதெல்லை 2½ - 5½.

விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு

பதிவு கட்டணங்களுக்கு 50% கழிவு

~~20000/=~~ Now 10000/=

இச்சலுகை ஜனவரி 31 வரை மட்டுமே
(மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் மாத்திரம்)

தொடர்புகளுக்கு:
No-154, Brown Road, Jaffna.
T.P No : 021 222 6242 acrolankajaf@gmail.com

---

## புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### External Degree

**GAQ, BA Part I, BA Part II**

### aat (Srilanka)

Foundation, Intermediate, Final AA1, AA2, AA3
Qualification : G.C.E O/L 6 PASSES
உடன் பதிவுகளைமேற்கொள்ளவும்
MEDIUM - TAMIL & ENGLISH

### Chartered

Medium: English & Tamil
Executive Level, Business Level
Qualification: A/L 3 Pass

Further Details

**JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept
464, Hospital Road,Jaffna.
021 222 3382 / 021 222 9149

---

## A/L பெறுபேற்றின் பின்னர் உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன ?

- வேலைக்கு செல்வதா ?
- உயர் கல்வியினைத் தொடர்வதா ?
- வெளிநாடு செல்வதா ?

உங்கள் எதிர்காலத்திட்டம் எதுவாயினும் எம்முடன் ஐந்து நிமிடம் செலவிட்டு உங்கள் ஐம்பது வருடத்திற்கான மகிழ்ச்சியான வாழ்வினை எம்மூலம் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

நாம் உங்களுக்கான சரியான ஆலோசனையை வழங்கத் தயார் !

(c 20682) (14,15) **" Plan your future with us "**

**WINSTAR**
No.106,Post box junction,
Palaly Road, Thirunelveli.
**021 320 2789**

---

## பதவி உயர்வுக்கும் சம்பள உயர்வுக்குமான கல்வி அமைச்சின் அனுமதியுடனான UGC அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள்

| Courses | Entry Qualification | Duration |
|---|---|---|
| B.Ed | A/L or Trained/Dip. Teachers | 3 Years |
| P.G.D. Ed | Any Degree | 1 Year |
| M.Ed [கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற] | P.G.D. Ed / B.Ed | 1 Year |
| M.Ed Management | P.G.D. Ed / B.Ed | 1 Year |

**North Lanka IIT**
Peoples Bank Building, Top Floor, Stanly Road, Jaffna.
Contact: 0777592666 , 0769440075

---

**ICT AL2016, 17,18 OL16**
**ICT Grade 1 to 10**
**Maths Eng Sci Grade 1 to 9**
**Chess, Scrabble,**

தனிப்பட்ட கவனிப்பு. மாதாந்த பரீட்சைகள்
சிறந்த பெறுபேற்றுக்கான உத்தவாதம்.
அரச NVQ , மற்றும் சர்வதேச CIsco, Oracle, Microsoft நிறுவனங்களின் சான்றிதழ்கள்.

### புலமைப்பரிசிலிற்கான வினா?

ஒரு கிலோ பைற்(byte) எத்தனை பிற்(bit)?
a. 1000 b.1024 <Name>Ans<DOB><Grade>
0772395895 ற்கு sms செய்து கற்கைநெறிக்கான பதிவுக்கட்டணத்தை வெல்லுங்கள்

## MCS IT CAMPUS

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்


பரம்பரை பரம்பரையாக அசைக்கமுடியாத நம்பிக்கையின் இருப்பிடம்
றைனோ
கிறிஸோடைல் கண்ணாடிஇழை சீமெந்து கூரைத்தகடுகள்
நாளுக்கு நாள்... வருடத்திற்கு வருடம்... காலம் நகர்கின்றது ஆனால்,
ஒன்றுமட்டும் பரம்பரை பரம்பரையாக காலத்தால் அழியாத
நம்பிக்கையின் இருப்பிடமாக திகழ்கின்றது.
அதுதான் றைனோ
எதிர்காலத்திலும் இந்த நம்பிக்கை தொடரும்
அதுமட்டுமல்ல அனுபவமுடைய தச்சுத்தொழிலாளர்களின்
தெரிவும் என்றுமே றைனோதான்
புதிய
Colorup
MARKETED BY RHINO
ரூபிங் மற்றும் சீலிங் தகடுகள்
உடன் தொடர்புகளுக்கு
011 5748728/5748738
ரூ. 1,285/= க்கு மேல்
/ RhinoRoofinglk
RHINO
றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9, இலங்கை.
ஈ-மெயில்: telemarketing@rhino.lk வெப்: www.rhino.lk
நாம் கிறிஸோடைலின் "பாதுகாப்பான பாவனைக்கான" நம்பத்தகுந்த நிறுவனம்


உயர்தரத்தில்
சித்தியடைந்த
மாணவர்களுக்கு
அபான்ஸிடமிருந்தான
ALL - IN - ONE
பிரிண்டர் ஒன்று இலவசம்
இலங்கையின் 1 தர கணினி வழங்குனர்
நாடளாவிய சேவை வழங்குனர்
4 வருட உத்தரவாதம்
0% வட்டியின்றிய கொடுப்பனவு
DONGLE +2GB DATA FREE
Print | Copy | Scan
அபான்ஸின் பெருமதியான பரிசு
உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களே..! அபான்ஸிடமிருந்து நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மடிக்கணினிகளுடனும் பிரின்டர் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.
இச்சலுகை ஜனவரி 1ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் மட்டுமே
LENOVO G 50 i5
• i5 5200 5th Generation
• 4GB RAM
• 1TB Hard Disk
• 15.6" Display
• DOS
• 1 Year Warranty
விசேட விலை ரூ.84,900
மாதாந்தம் ரூ.7,117
LENOVO G 50 i5 VGA
• i5 5200U 5th Generation
• 4GB RAM
• 1TB Hard Disk
• DOS
• 2GB Dedicated VGA
• 1 Year Warranty
விசேட விலை ரூ.92,900
மாதாந்தம் ரூ.7,784
LENOVO IP 100 i3
• i3 5th Generation
• 4GB RAM
• 500GB Hard Disk
• 15.6" Display
• DOS
• 1 Year Warranty
விசேட விலை ரூ.68,500
மாதாந்தம் 5,750 ரூபாவிலிருந்து
LENOVO IP 100 i3 VGA
• i3 5th Generation
• 4GB RAM
• 500GB Hard Disk
• DOS
• 2GB Dedicated VGA
• 1 Year Warranty
விசேட விலை ரூ.72,900
மாதாந்தம் ரூ.6,117
Lenovo
HP 15 AC i5
• i5 5th Generation
• 4GB RAM
• 1TB Hard Disk
• 15.6" Display
• DOS
ரூ.91,900
மாதாந்தம் 7,700 ரூபாவிலிருந்து
4 வருட கால இலவச உத்தரவாதம்
HP 15 AC i5 Win
• i5 5th Generation
• 4GB RAM
• 1TB Hard Disk
• 15.6" Display
• Windows 10
ரூ.96,900
மாதாந்தம் 8,083 ரூபாவிலிருந்து
4 வருட கால இலவச உத்தரவாதம்
us at www.facebook.com/abansit
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் காட்சியறைகளில் பெறலாம்.
Abans

## ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

ஊடகவியலாளர்களுக்குச் சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட உள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், ஆயிரத்து 800 ஊடகவியலாளர்களுக்குச் சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

பெப்பரவரி மாதமளவில் இந்த மோட்டார் சைக்கிள்களை ஊடகவியலாளாகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய 2.5 லட்சம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது. இந்த கடனுக்கு 9 வீத வட்டியை மக்கள் வங்கிக்குச் செலுத்தவேண்டும் என்பதே நடைமுறை. எனினும், இந்த வட்டியின் 7 வீதத்ததை அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும். ஊடகவியலாளர்கள் இந்தக் கடன் தொகைக்காக வெறுமனே இரண்டு வீத வட்டியை மட்டுமே செலுத்த நேரிடும்–என்றார். (த–10)

# 40 குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரம்

## கிளிநொச்சியில் வழங்கப்பட்டன

நல்லாட்சி அரசின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு கிளிநொச்சியில் நடந்த நிகழ்வில் 40 குடும்பங்களுக்குக் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பள்ளிக்குடா பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நல்லாட்சி அரசின்ஒருவருடபூர்த்திவிழாவிலேயே இந்த உறுதிப்பத்திரங்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் செட்டியார் தரை பள்ளிக்குடாவைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்குக் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் 50 பேருக்கு வாழ்வாதாரக் கடன் உதவிகளும் வழங்கப்பட்டன. அத்தோடு 3 பேருக்கு வாழ்வின் எழுச்சித் திட்டத்தால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மரம் நடுகை இடம்பெற்றது. 100 வரையான மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் 177 பேருக்கு பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் எஸ். சத்தியசீலன், திணைக்களத் தலைவர்கள், துறைசார் ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த–ரி3)




## திருவாசகம் ஓதுதல்

சுழிபுரம்.ஜன.10

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை உதயப்பூசையைத் தொடர்ந்து அதிகாலை 6 மணி முதல் திருவாசகம் முற்றும் ஓதுதல் நடைபெறவுள்ளது.

திருவாசக நூல்கள் யாவும் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு முற்றும் ஓதுதல் நிறைவு பெறும். (த–ஐ–28)

## மாதாந்த இசையரங்கம்

யாழ்ப்பாணம், ஜன.10

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் மாதாந்த இசையரங்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற வுள்ளது. (த–ஐ)

## யோகாக் கருத்துரையும் பயிற்சியும்

யாழ்ப்பாணம்.ஜன.10

யாழ். யோக அரங்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் யோகாக் கருத்துரையும் பயிற்சியும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூசை மடத்தில் யோகா ஆசான் எஸ். உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யோகேந்திரன் பிரசாத் தியான நுட்பங்கள் எனும் விடயம் தொடர்பாகவும், நா.தவராஜ் வாழ்வியலில் யோகா எனும் தொனிப் பொருளிலும் கருத்துரைகளையும், பயிற்சியையும் வழங்கவுள்ளனர்.

மேலும், யோகா மாணவர்கள் பயனடையும் வகையில் இந்த நிகழ்வு நடத்தப்படுவதோடு புதிய யோகா பயிற்சிகளுக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் என யாழ். யோகா அரங்கப் பணிப்பாளர் எஸ்.உமாசுதன் தெரிவித்துள்ளார். (த–ஐ)

## விண்ணப்பங்கோரல்

யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் புதிய பாடத் திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவும், தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (த–ஐ)

## தவறவிட்ட பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்

அச்சுவேலி, ஜன.10

அச்சுவேலி இலங்கை வங்கி கிளையில், தீவறவிடப்பட் மூன்று பொருள்கள் வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தப்பொருள்களைத் தவற விட்டவர்கள் அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளருடன் நேரில் தொடர்பு கொண்டு அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(த–ஐ–11)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜன.10

தெல்லிப்பழை பன்னாலை மயிலையம் பதி சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ. ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (த–ஐ)

# மஸ்கெலியாவில் தீ விபத்து 16 வீடுகள் எரிந்து சாம்பல்





ஹற்றன், ஜன.10

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்தத் தீவிபத்தால்லயன் தொகுதியில் அமைந்திருந்த 16 வீடுகள் சேதமடைந்ததுடன், இந்த வீடுகளில் குடியிருந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 80 இற்கும் மேற்பட்டவர்கள் தற்காலிகமாக ஆலய மண்டபங்களில்தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தீஏற்பட்டபோது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

எனினும் சில வீடுகளில் இருந்த சில பொருள்களைமாத்திரம் அவர்களால் தீக்கிரையாகாமல் வெளியில் கொண்டு வர முடிந்துள்ளது. இந்த விபத்தில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், சிறிது சிறிதாகச் சேகரித்த தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள்மற்றும்பாடப்புத்தகங்கள் என பெருமளவிலான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன. எனினும் இதன் போது உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ஜ)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சூழலை சுத்தமாக வைத்திருக்க மனம் கொள்வது எப்போது...?

சுத்தம் சுகம் தரும். எமது வீட்டின் சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்குக் காட்டும் கரிசனையை, அதனை அண்டிய பகுதிகளை மாசு அடையாமல் பேணுவதிலும் செலுத்த வேண்டும்.

ஆனால் எம்மில் மிகப்பலர் அதில் அக்கறை காட்டுவதில்லை. கல்லுண்டாய் வெளியில் பயணம் செய்யும்போது, சென்று வரும்போது, சுற்றுச் சூழலைப் பேணுவதில் எமது மக்கள் எத்துணை பின்னடைவாக உள்ளார்கள் என்பதைக் காண இயலும்.

குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் சுற்றுச் சூழலைப் பேணி, சுகாதாரத்தை நல்ல நிலையில் வைத்துக் கொள்வதில் போதிய அக்கறையும் செயற்பாடுகளும் மிகுந்த மந்த நிலையிலேயே உள்ளன.

குப்பை கூளங்களைக் கையாள்வது, உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகிகளின் பொறுப்பு, கடமை என்ற பொடுபோக்குத் தனமே உயர்ந்து நிற்கிறது.

தமது வீட்டையும் அதனை அண்டிய வளவுகள், நிலங்களையும் சுத்தமாக வைத்திருந்தால் மட்டும் போதாது, அண்டிய பகுதிகளையும் மாசடையாது பேண வேண்டும் என்பதையும் எங்களில் எழுபத்தைந்து சதவீதமானவர்கள் அக்கறை கொள்வதில்லை. வசதியாக மறந்து விடுகிறோம்; எமக்கு ஏன் வீண் 'சோலி' என்று மடையர்களாக மாறி விடுகிறோம்!

வீதிகள், குச்சொழுங்கைகள் தோறும் கும்பல் கும்பலாகக் குவிந்து போய்க்கிடக்கும் ஓலைகள், மட்டைகள், குப்பை கூளங்கள் வீதிகளை நிறைத்துள்ளமை பெரும் சாபக்கேடாகி வருகிறது.

அவற்றை அகற்றுவது உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பு என நினைத்து ஒதுங்கிக் கொள்ளும் பொதுமக்கள்-நாமே-எங்கள் சுகாதார வாழ்வில் தீயை மூட்டுகிறோம் என்று உணர்வதில்லை!

ஒவ்வொரு பிரசையும், மகனும், தம்மை குப்பை கூளங்களை முகாமைத்துவம் செய்யும் பங்காளனாக இணைத்துக் கொள்ள மனம் கொள்ள வேண்டும். அதனூடாகவே சுத்தமான சுகாதாரமான சூழலை இலகுவாகத் தோற்றுவிக்க இயலும்.


பொதுவீதிகளிலும், அடுத்தவர்களின் குடியிருப்புக்களுக்கு முன்னாலும், தமது வீட்டுக் குப்பை கூளங்களைக் கொட்டி, சுகாதாரத்தைக் கெடுத்து, நோய் நொடிகளைப் பெருக்கும் மக்களை, எம்மவரை சுதந்திரத்துக்கு உரியவர்கள்-லாயக்கானவர்கள்-என்று எந்த முகத்தோடு பார்ப்பது...?

ஜப்பானின் கமிகட்சுப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், 'சீரோ வேஸ்ற்' (Zero waste) சமூகம் என்ற சிறப்புக்குரிய நிலையை எய்தி உள்ளனர் என்பது, உலகளாவிய ரீதியில் பிந்திய தலைப்புச் செய்தியாகி உள்ளது.

அவர்கள் குப்பைகளை மிக நேர்த்தியாகக் கையாண்டு, தண்ணீர் கொண்டு சுத்தம் செய்கிறார்கள். காகிதம், அலுமினியம், பிளாஸ்ரிக், கண்ணாடி, இறப்பர், மக்கிப் போன காகிதக் குப்பை என்று பிரித்து-

அவற்றை வீட்டுத் தோட்டத்துக்கும், மற்றவற்றை சுழற்சி மையத்துக்கு அனுப்பிப் பணமும் தேடுகின்றனர்.

ஜப்பானியர்களின் முன்னுதாரணத்தை நாம் எப்போது மனங்கொள்வது? ஏனைய கருமங்களில் கண்ட பாவனையில் கொண்டை முடியும் எம்மவர், ஜப்பானிய மக்களின் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் நல்ல வழியில் நடப்பது எப்போது...?



# அண்டை நாடுகளை அச்சுறுத்தும் வடகொரியாவின் நீர்வாயுக் குண்டு

**அந்த நாடு மீதான ஐ.நா.தடைகள் மேலும் இறுக்கமடைய வாய்ப்பு**

உலகநடப்பு
ரெங்கன்

வடகொரியாவை உலக நாடுகள் குறிப்பாக அதன் அண்டை நாடுகள் திருத்தமுடியாத ஒரு குழந்தையாகத்தான் பார்க்கிறார்கள். ஆங்கிலத்தில் இன் கொறிஜிபல் சைல்ட் என்பார்கள். குழந்தைகள் குறும்பு செய்யும்போது அது மற்றவர்களை மட்டுமில்லை தன்னையும் ஆபத்துக்குள்ளாக்கிவிடும் என்பது அவர்களுக்கு தெரிவதில்லை. அவ்வாறுதான் அந்த நாடு இப்போது அணுஆயுத உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். அணு ஆயுத உற்பத்தி என்பது இலகுவான காரியமல்ல. அதற்கான செலவுகள், விஞ்ஞான நுணுக்கங்கள் ஒருபுறமிருக்க அவைக்கான மூல வளங்களைத்தேடிக்கொள்வதும் மிகக் கடுமையான வேலை.

> "வடகொரியாவைப் பொறுத்தவரை இந்த அணுஆயுத முயற்சியானது தனது தற்காப்புக்கான தாகவே நியாயப்படுத்திக் கொண்டு வருகின்றது."

### அணு ஆயுத முயற்சி தற்காப்புக்கானது

வடகொரியாவைப் பொறுத்தவரை இந்த அணுஆயுத முயற்சியானது தனது தற்காப்புக்கானதாகவே நியாயப்படுத்திக் கொண்டு வருகின்றது.

அண்டை நாடுகளுடன் உறவுகளை ஏற்கனவே சீர்குலைத்துக் கொண்டுள்ள அந்தநாடு உள்நாட்டில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக அறிக்கைகள் மூலம் வெளியிட்டால் அன்றி வெளியில் தெரிய விடுவதில்லை. அங்கே இருந்து தப்பி வருபவர்களும், வெளிநாட்டு புலனாய்வாளர்களும் அவ்வப்போது அந்த நாட்டு இரகசியங்களை வெளியிடுகிறார்கள். பொதுவில் அந்த நாட்டில் இராணுவத்துக்கும் அதன் மேம்பாட்டுக்கும் மட்டுமே அதிக முதலைச் செலவிடுவதில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும் பொதுமக்கள் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவ்வப்போது செய்திகள் கசிந்துள்ளன. எதுவானாலும்அண்டைநாடுகளுடன் குறிப்பாக ஜப்பான், தென்கொரியாவுடன் பகைமையை வளர்த்துக் கொண்டுள்ள வடகொரியா தனது இராணுவ பலத்தை அதிகரித்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துகின்றது. பக்கத்தில் சீனக் குடியரசுடன் மாத்திரமே வடகொரியா நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றது. ஜப்பான் மற்றும் தென்கொரியாவிடம் அணு ஆயுதம் இல்லாது போனாலும் அந்த நாடுகளுக்கு அமெரிக்கா பக்கபலமாக இருந்து வருகின்றது. எனவே வடகொரியா எவ்வாறோ அணு மூலவளங்களைத் தேடிக் கொண்டு அணுகுண்டையும் தயாரித்து விட்டதாக அறிவித்திருந்தது. தென்கொரியாவுடன் எல்லைப்பகுதியில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்றுவரும் நிலையில், அந்த நாட்டுக்கு அமெரிக்கா போர்ப் பயிற்சிகளை நடத்தி ஊக்குவித்து வருவது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளது. பகை நாடுகளின் முக்கிய இடங்களைக்குறிவைத்துத் தாக்கும் நிலையில் தமது இராணுவப்பலம் அதிகரித்திருப்பதாகவும் அந்த நாடு அண்மையில் அறிவித்திருந்தது.

### வடகொரியாவுக்கு எதிரான தடைகள்

வடகொரியா அணுஆயுதத் தயாரிப்பில் இறங்கியதை அடுத்து ஐ.நாவும் அந்த நாட்டுக்கு எதிராகத் தடைகளை விதித்தது. அதற்குப் பிறகும் தொலைதூரம் சென்று தாக்கும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தியிருந்த நிலையில்இப்போதுஅணுகுண்டை விட சக்தி வாய்ந்த நீர் வாயு (ஐதரசன்) குண்டைச்சோதித்திருப்பதாக அறிவித்திருப்பது உலக நாடுகளைத்திகிலடையச்செய்துள்ளது. குறிப்பாக அமெரிக்காவை அது அதிகஆத்திரம்கொள்ளச்செய்துள்ளது. இந்தக் குண்டை சோதித்திருப்பதாக வடகொரியா அறிவித்த

(19ஆம் பக்கம் பார்க்க)



அதே காலகட்டத்தில் அந்தப் பிரதேசத்தில் பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டமைக்கு அந்த நாட்டின் அணுகுண்டுப் பரிசோதனையே காரணம் என்று பல நாடுகள் குற்றஞ்சாட்டியிருந்தன.
அதிக சக்தி வாய்ந்த நீர்வாயுக் குண்டொன்றை (Hydrogen Bomb) வெற்றிகரமாக வெடிக்க வைத்துப் பரிசோதித்திருப்பதாக கடந்த புதன்கிழமை வடகொரியா அறிவித்தது. இது உறுதிப்படுத்தப்படுமானால் வடகொரியாவின் அணு ஆயுத கையிருப்பை அதிகரித்துக் கொள்ளும் திட்டம் தொடர்பில் மாபெரும் முன்னேற்றம் என்று கூறப்படுகின்றது.
தொலைக்காட்சிச் செய்தியொன்றில் வெளியான பெரிதும் பரிந்துரை ரீதியிலான ஓர் அறிவித்தலில் வடகொரியா சிறிய நுண்ணிய வகையிலான நீர்வாயுக் குண்டைச் சோதித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் அந்த நாட்டின் அணு சக்தியின் தரத்தை அடுத்தகட்ட தரத்துக்கு உயர்த்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இது வடகொரியாவை அமெரிக்காவிடமிருந்தும் ஏனைய எதிரி நாடுகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வழி அமைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. சோதனை முழுமையான வெற்றி என்றும் அறிவிக்கப்பட்டது.

### அமெரிக்கா கொண்டுள்ள சந்தேகம்

அதே சமயம் வொஷிங்டன் அதிகாரிகளும், வேறு விஞ்ஞானிகளும் கருத்து வெளியிடுகையில், நீர்வாயுக் குண்டானது அணுகுண்டை விட மிக சக்தி வாய்ந்தது. தயாரிப்பதும் மிகக்கடினமாகும் என்பதால் வடகொரியா அறிவித்தல் குறித்து அவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இருந்தாலும் உறுதி செய்யப்படுமானால் பெரிதும் கவலையளிப்பதாகும். அதனால் ஐ.நாவில் வடகொரியாவின் மீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகளுக்கு அழுத்தங்கள் கொண்டு வரப்படும் என்றும் கருதப்படுகின்றது. அத்துடன் அண்டை நாடுகளுடனான வடகொரிய உறவுகள் மேலும் சீர்குலையும் என்றும் கருதப்படுகின்றது.எல்லாவற்றையும்விட வடகொரியாவால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு அணுகுண்டு சோதனையும் அந்த நாட்டு விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் வெகுதூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளில் பொருத்தக்கூடிய மிகச்சிறிய அணுகுண்டு ஒன்றைக் கண்டுபிடிப்பதை நோக்கி வேகமாக விரைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுடன் அந்த ஏவுகணை அமெரிக்காவின் பெருநிலப் பகுதி நோக்கி செலுத்தக் கூடியதாகவும் அமைந்து விடக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

### தென்கொரியாவின் எதிர் நடவடிக்கை

வடகொரியாவின் ஆத்திரமூட்டும் செயல்களுக்கு எதிராக தக்கபதில் அளிப்பது தொடர்பாக தென்கொரிய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அந்த நாட்டு அதிபர் பார்க் கெவுன்னஹ கூறியுள்ளார். ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளஅந்தநாடுகடைசியாகநடத்தியுள்ளஅணுகுண்டுச் சோதனைக்கான விலையைச் செலுத்தியே ஆக வேண்டும். அதற்காக சர்வதேச நாடுகளுடன் இணைந்து அதனை நாம் உறுதி செய்வோம் என்று கூறினார்.

# சந்தேகத்தின் களமாக மாறியுள்ள வலி.வடக்குப் பிரதேசம்

**சேரலாதன்**

காரணம் எதுவுமில்லாது கைது செய்வதும், சித்திரவதை செய்த பின்னர் கொலை செய்வதும் இந்த நாட்டின் வழக்கம். அரசின் ஆசீர்வாதமும் இதற்குக் கிடைத்ததால் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதுமில்லை, தண்டிக்கப்படுவதுமில்லை.
பல ஆண்டுகளாக பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள வீமன்காமத்தில் வதை முகாம் இயங்கியது போன்ற தடயங்களைத் தமது வீடுகளைப் பார்வையிட்ட சிலர் அவதானித்தனர். இது தொடர்பாக பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்தன. தற்போது அந்தத் தடயங்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் பகுதி விடுவிக்கப்பட்ட அன்றைய தினமே அங்கு சென்ற பத்திரிகையாளர்கள் வித்தியாசமான முறையில் காணப்பட்ட தடயங்கள் அனைத்தையும் பதிவு செய்து கொண்டனர். அவற்றைப் பத்திரிகைகளிலும் வெளிக்கொணர்ந்தனர்.
இந்தத் தடயங்கள் யாவும் இரவோடு இரவாக அழிக்கப்பட்டுள்ளதைத் தற்போது அவதானிக்க முடிகின்றது. இது அங்கு நிலை கொண்டிருப்பவர்களின் வேலைதான் என்பதை எவருமே இலகுவில் புரிந்து கொள்வார்கள். 25 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பகுதி இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்ததுடன் பொதுமக்கள் தமது வீடுகளை எட்டிப் பார்க்க முடியாததொரு நிலையும் காணப்பட்டது. தற்போது சுமார் 468 ஏக்கர் நிலப்பரப்பு மீள் குடியமர்வுக்கென விடுவிக்கப்பட்டுள்ளது. வீமன்காமம் வடக்குப் பகுதியில் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்த பெரியதொரு படைமுகாமும் அகற்றப்பட்டுள்ளது. இந்தப் படைமுகாம் அமைந்திருந்த பகுதியிலேயே குறித்த வதை முகாமுக்கான தடயங்கள் காணப்பட்டுள்ளன.ஏற்கனவே இதுபோன்ற இரகசிய வதை முகாம்கள் இருந்தமை வெளியாகியுள்ளன. ஒரு நாட்டில் ஆள்கள் கடத்தப்படுவதும், காணாமற்போகச் செய்யப்படுவதும் இடம்பெறுமாயின் அந்த நாடு தனது ஜனநாயகத்தை இழந்துள்ளது என்பதே பொருள். இலங்கை அதை எப்போதோ இழந்து விட்டது. நாட்டில் நல்லாட்சி ஒன்று மலர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. மகிந்த காலத்து தீய ஆட்சியைத்துணிவுடன்எதிர்த்து இல்லாதொழித்து விட்டுத்தான் இந்த நல்லாட்சி மலர்ந்தது. இந்த நல்லாட் சிக்கு இத்தகைய இரகசிய வதை முகாம்கள் பற்றியவிடயங்களைவிசாரித்துவெளிப்படுத்த வேண்டிய கடமை உண்டு.

> மகிந்த ஆட்சியில் இந்த நாடு வரலாறு காணாத சீரழிவை எதிர்கொண்டது.அதிகாரத்தில் இருந்தவர்கள் தாம் நினைத்தவாறு நடந்து கொண்டனர்.

மகிந்த ஆட்சியில் இந்த நாடு வரலாறு காணாத சீரழிவை எதிர்கொண்டது. அதிகாரத் தில் இருந்தவர்கள் தாம் நினைத்த வாறு நடந்து கொண்டனர். தமக்குப் பிடிக்காதவர்களை ஒழித்து விடுவதற் கும் அவர்கள் தயங்கவில்லை. போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தமை இவர்களது இழி செயல்கள் அனைத்துக்கும் வாய்ப்பாக அமைந்து விட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலைக் கான திட்டங்கள் கடற்படை முகாமொன்றில் வைத்துவகுக்கப்பட்டதாகஇந்தக்கொலையுடன் தொடர்பு டையவராகக் கருதப்பட்ட ஒருவர் நீதிமன்றில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள் ளமை முக்கியமான தொன்றாகும். கடற்படையினருக்கு உத்தரவு பிறப் பித்த அந்தப் பெரிய மனிதர் யார்? என்ற வினாவும் இங்கு தானாகவே எழுகின்றது. தமக்கு மேலே உள்ளவர்களின் உத்தரவோ அல்லது அறிவுறுத்தலோ இல்லாமல் கடற்படையினர் இந்தக் கொலை தொடர்பான திட்டத்தைத் தீட்டியிருக்கமாட்டார்கள். ஆகவே உரிய விசாரணைகளை மேற்கொள்வதன் மூலமாக கொலையின் சூத்திரதாரிகளைக் கைது செய்து நீதியின் முன்னால் நிறுத்த முடியும்.
ரவிராஜ் போன்றே குமார் பொன்னம்பலம், லசந்த, பிரகீத் எக்னலிகொட, நிர்மலராஜன், திருமலை மாணவர்கள் ஐந்துபேர் மற்றும் ஏனைய படுகொலைகள் தொடர்பான உண்மைகளும் வெளிக்கொணரப்படல் வேண்டும். இவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.
இனவாதிகள் தாம் தண்டிக்கப்படுவதை ஒருபோதுமே விரும்பமாட் டார்கள். புதிய புதிய குழப்பங்களை ஏற்படுத்தித் தாம் தப்புவதற்கே முயற்சி செய்வார்கள். ஆனால் நல்லாட்சி அரசுதான் விழிப்புடன் செயற்பட வேண்டும். தீய ஆட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான செயற்பாடுகளும் இடம்பெற வேண்டும்.
வலிகாமம் வடக்கில் வதை முகாம் இயங்கியதற்கான தடயங்கள் காணப்பட்டமை கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போன தமிழர்களின் நிலை விசாரணைகளுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடும். சர்வாதிகாரி ஹிட்லரும் வதைமுகாம்களை நிறுவி 60 லட்சம் யூதர்களைக் கொன்றதாக சரித்திரம் கூறுகின்றது. எனவே நல்லாட்சி அரசு இவை குறித்து தீவிரமாக விசாரிக்க வேண்டும்.
குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலை தொடர்வது நாட்டுக்கும்–அரசுக்கும் நல்லதல்ல. கடந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட களங்கம் முற்றாகத் துடைத்தெறியப்படும் போதுதான் நாடு தலைநிமிர்ந்து நிற்க முடியும்.

## 2016இல் சபதமெடுப்போம்!

இன்றைய காலகட்டத்தில் நடக்கின்ற வைபவங்கள் யாவற்றிலும் வெடி தவறாது கொளுத்தப்படுகிறது. இந்த ஆரவாரத்தைப் பார்க்கும்போது மிக வேதனையாக உள்ளது. சாவு ஊர்வலத்தில் சந்திகள் தோறும் வெடி கொளுத்துகிறார்கள். ஆங்கிலப் புதுவருடம் பிறக்கும் முதல்நாள் தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடம், தீபாவளி, திருமணம், நத்தார் போன்ற வைபவங்களுக்குக்கூட மத வேறுபாடின்றி வெடி கொளுத்துகின்றனர். சைவாலயங்கள் சிலவற்றில் தேர் உற்சவநாளன்றும் வேறு நிகழ்வுகளிலும்கூட வெடி கொளுத்துகின்றனர்.
வலிகாமம் வடக்கில் கூடுதலாக கிறிஸ்தவர்கள் வாழும் கிராமத்தில் லட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்து வெடி கொளுத்தியதாக சனசமூக நிலையம் ஒன்றில் கூடியிருந்து பேசும்போதுதான் அந்தப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவரே கூறி மிகக் கவலைப்பட்டார்.
வெடி கொளுத்தி ஆரவாரம் செய்வதை நிறுத்தி 'சிக்கணம் பேணி' அந்தப் பணத்தை மிச்சம் பிடித்து வசதியற்றுக் கல்வி கற்கக்கூடப் பணமில்லை என்ற நிலையிலும் ஆர்வத்தோடு இருப்பவர்களுக்குக் கொடுக்கலாம். அல்லது குடும்பத்தை வழிநடத்தத் தொழிலை மேற்கொள்ள உதவி செய்யுங்கள் என கோருபவர்களுக்குக் கொடுக்கலாம்.
அதுமட்டுமல்ல, வீதிகள் தோறும் சாராயப் போத்தல்கள். சிலவேளைகளில் குடித்து விட்டு வீதியோரமுள்ள வீடுகளுக்குள்கூட எறிந்துவிட்டுச் செல்கின்றார்கள். சில ஆலய வீதிகளில்கூட சாராயப் போத்தல்கள் காணப்படுகின்றன. மதுப்பாவனையால் எமது மக்களின் பணம் விரயமாக்கப்படுகிது.
குடும்பத் தலைவன் மதுவை நாடுவதால் வீட்டில் பட்டினி. பிள்ளைகள் மத்தியில் குழப்பம். இவைகள் தொடராமல் இருக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இந்துக்கள் 2016 தைப் பொங்கல் திருநாளில் இருந்து வெடி கொளுத்துவதைக் குறைத்தோ அல்லது நிறுத்தியோ சிக்கனத்தைப் பேணி வசதியற்ற மக்களுக்கு உதவ வேண்டும்.
இந்த ஆண்டில் சைவாலயங்களும் ஆடம்பரங்களைக் குறைத்து ஆலய எல்லைக்குள் தங்கள் செயற்பாடுகளை சிக்கனமாகச்செய்து இளம் மாணவர்களை நற்பிரசைகளாக ஆக்குகின்ற ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடவேண்டும். அதற்கும் மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.
பாடசாலைகளில் சமயபாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் மதவேறுபாடின்றி தத்தமது மதம் சார்ந்த கல்வியை மாணவர்களுக்குப் போதித்து நற்பிரசைகளை உருவாக்க வேண்டும்.

க.சிவசங்கரநாதன்,
சமாதான நீதிவான்

## கஸ்தூரியார் வீதியில் போக்குவரத்து ஒழுங்குகள் சீராக்கப்படவேண்டும்

யாழ். நகரில் உள்ள கஸ்தூரியார் வீதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது. இந்த வீதியின் இரண்டு புறமும் கடைத்தொகுதிகள் அமைந்துள்ளதால் மக்கள் அவற்றை நாடிச் செல்கின்றனர். அத்துடன் நகரில் இருந்து வெளியே செல்லும் வாகனங்களும் இந்த வீதியூடாகவே செல்கின்றன.
இந்த நிலையில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் வாகனங்கள் செல்லும்போது அந்த வீதியூடாகப் பயணிக்கின்ற பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
மேலும் இந்த வீதி ஒருவழிப் பாதையாக உள்ளபோதிலும் சிலவேளைகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் சிலர் எதிர்த்திசையில் பயணிப்பதால் வாகனங்கள் விலத்திச் செல்வதில் சிரமங்கள் உண்டாகின்றன. பொதுமக்களும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.
முன்னர் போக்குவரத்துப் பொலிஸார் இந்த வீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் தற்போது அவர்களைக் காணவில்லை.
ஆகவே மீண்டும் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுவதோடு போக்குவரத்து ஒழுங்குகளையும் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ந.சுபத்திரா, சுண்டுக்குழி

## யார் கவனிப்பார் இந்தச் சீர்கேட்டை?

கோப்பாய்–கைதடி பிரதான வீதியில் கோப்பாய் சந்தியில் அமைந்துள்ள மதுபான நிலையம் கழிந்த இடத்தில் இருந்து இருபக்கமும் ஒரே குப்பைகள், கழிவுகள், இறந்த கோழிச் செட்டைகள், நாய்கள், மாடுகளின் தோல்கள் கொட்டப்படுகின்றன. இதனால் எழும் மணம் வீதியால் செல்ல முடியாத அளவுக்குச் சகிக்க முடியாததாக உள்ளது. வலி.கிழக்குப் பிரதேச சபையோ கோப்பாய் சுகாதார சேவைப் பிரிவினரோ இதுபற்றிக் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.
மக்களும் கழிவுகளைத் தூர இடத்தில் கொட்டினால் பயணிகளுக்கு இடைஞ்சல் இருக்கமாட்டாது? யார் சிந்திப்பது?

கசி, சரசாலை

# சமரச அரசியலின் மூலம் தமிழருக்கு பயன் கிட்டுமா?

இனவிடுதலைக்காகப் போராடிய எந்தவொருஅமைப்பும் ஒரு போதும் சரணாகதி அரசியலை ஏற்றுக்கொள்வதில்லை. அவை தமது இலக்குகளை எட்டுவதற்கான பாதையில் தடைகளைச் சந்திக்கும் போது சமரச அரசியலைக் கைக்கொள்ள முற்படு கின்றன.

சமரச அரசியல் என்கிறபோது எதிரியிடம் சமரசம் செய்வதல்ல. அது எதிரியின் எதிரியுட ன சமரசம் செய்துகொள்வதாகும். இதற்கு உதா ரணமாக 1. களில் இந்திய அமைதிப்படையின் போர் முன் னெடுப்பின்போது விடுதலைப் புலிகள் பிரேமதாஸவுடன் சமரசம் செய்துகொண்டதைக் குறிப்பிடலாம்.

எமது கடந்தகாலப் போராட்ட வரலாறுகள் ஊடாக எமது இன்றைய நிலையைப் பார்க்கும்போது உய்த்தறிச் சிந்தனையில் நகர்ந்து செல்லவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கச்சிதமாகச் செய்துவருகின்றதென்பது பொது நோக்கர்களின் கருத்தாக இருக்கிறது. இதனைக் குழப்பும் விதத்தில் எத்தகைய காரண காரியங்கள் முன்னேடுக்கப்பட்டாலும் அவை மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக இருக்கமாட்டாது என்பதே நிதர்சனம்.

இந்த சமரச அரசியல் சூழலில் தற்போது, நம்மையாளும் அரசு ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ளது. இந்தத் தருணத்தில் இதுவரையில் எவ்வாறான மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டன? என்னென்ன விட யங்கள் நடந்தேறியுள்ளன? மக்களின் எதிர்பார்ப்புகள், தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? என்பன அடுக்கடுக்கான கேள்விகளாக இருப்பினும், சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய யப்பட்டுள்ளனவா? அவர்களது பிரச்சினைகள் தீர வழி ஏற்பட்டுள் ளனவா? என்பனவே பிரதான கேள்விகளாக உள்ளன.

இதற்கான பதில் முழுத் திருப்தி தரவில்லை என்பதாகவே இருக்கும். எனினும், சில அம்சங்கள் நம்பிக்கை தருவனவாக அமைந்துள்ளதை யும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக, வடக்கு-கிழக்கில் அதிகாரத் தரப் பிலிருந்த இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஆளுநர்கள் நீக்கப்பட்டு, சிவில் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டமை, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இராணுவம் கையகப்படுத்தி வைத்திருந்த அவர்களது காணிகள் மீளவும் கையளிக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட் டமை, ஜெனிவா தீர்மானத்தின் பின்னரான அரசின் ஒப்புதல்களை வழி நடத்தும் விதத்தில் உள்ளகக் கட்டமைப்புப் பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த முன்வந்தமை போன்றன இருக்கின்றன.

எனினும், மக்களின் எதிர்பார்ப்பு அதிகமானதாகவும் அவசரமான தாகவும் இருக்கிறது. இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுதல், முன்னைய மனித உரிமை மீறல்கள் விவகாரங்கள் குறித்து பாரபட்ச மற்ற விசாரணைகளை முன்னெடுத்தல், தேர்தல் முறைமையை மாற் றியமைத்தல், இதனூடாக சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதி நிதித்துவங்களுக்குப் பாதகம் ஏற்படாதவகையில் எல்லை நிர்ணயங் களை மேற்கொள்ளுதல், வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் பின் தங்கியிருந்த சகலதுறைகளையும் துரிதகதியில் அபிவிருத்திசெய்தல், மலையக மக்களின் வீடு மற்றும் கொடுப்பனவு விடயங்களுக்கு நிரந் தரத் தீர்வு காணுதல் போன்றன இவற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தகைய தருணத்தில் எதிர்ப்பு அரசியலை முதன்மைப்படுத்துவதி லிருந்து விலகி, சமரச அரசியலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடைப்பிடித்து வருவது சர்வதேச மட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதற்கான பிரதான காரணியாக இருப்பது, தமிழ் மக் களுக்கு ஏதேனும் நன்மைகள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும், இனவாதிகளும் மதவாதிகளும் அடிப்படைவாதி களும் தமக்குள் ஒன்றுசேர்ந்துகொண்டு அவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்பி அவற்றை இல்லாமல் செய்துவிடும் நடைமுறையைத் தொடர்ந்து நடத்திவந்துள்ளமையாகும். இதற்குக் கடந்த காலங்களில் தமிழ் அரசியல் தரப்புகளின் எதிர்ப்பரசியல் அவர்களுக்குச் சாதக மாக இருந்ததுள்ளமையாகும். இந்த நிலை மாறியிருப்பதே இந்த வரவேற்புக்குக் காரணமாகும்.

இப்போது புதிய அர சமைப்பை உரு வாக்கும் ஏற்பாடுகள் முன்னேடுக் கப்பட்டு வருகின்றன. இதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றும் பிரேரணை நேற்று நாடாளுமன் றத்தில் முன்வைக் கப்பட் டுள்ளது.

இதனூடாகத் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக் குத் தீர் வைத் தரும் சபை யாக நாடாளுமன் றம் அமைய வுள்ள தோடு, தமிழ் மக் களுக்கு தீர்வைத் தரும் ஆண்டாக இவ்வருடம் அமைய வேண்டு மென எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.




வெறும் சுலோகங்களை மட்டும் வைத்துக்கொண்டும் தமிழ் மக்களுக் கான அரசியல் தீர்வையோ அல்லது அவர்களின் வாழ்வில் முன்னேற் றங்களையோ ஏற்படுத்திவிட முடியாது. ஓர் உயர்ந்த கோரிக்கையை முன்வைக்கின்ற அதேவேளை, ஒரு சில சாதகமான விடயங்கள் கைகூடி வருமானால் அதனையும் தட்டிவிடாத வகையில்தான் தமிழ்ச் சூழலிலுள்ள அமைப்புகள் சிந்திக்கவேண்டும்.

தமிழ் மக்கள் இன்று எந்த நிலையில் இருக்கின்றனர் என்பதை துல்லிய மாக உணராது முன்வைக்கப்படும் சுலோகங்கள் நிச்சயமாக தமிழ மக்களுக்கு நன்மையளிக்கப் போவதில்லை. எனவே, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக்கூடிய இந்த சமரச அரசியல் தருணத்தில் அதனைப் பயன்படுத்தி தமிழ்மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

# இலட்சியச் சுடர்

(நேற்றைய தொடர்ச்சி)

பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுது வதையோ, அறிக் கைகள் வெளியிடுவ தையோ அரசியல்வாதி களுடன் பேச்சு நடத்து வதையோ, நூல் நூற்பதையோ நிறுத்தவில்லை. அதற்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் அதைச் செய்யும்பொழுது அதற்குக் குறை வாகக் கிடையாது வாழ்வில் குழப்பம் என்பதும் ஏது? நேரம் பற்றவில் லையே என்ற முணக்கம் ஏது? மலை போன்ற வேலைகளினூடே அவர் மொழிகளைக் கற்பதற்கென நேரத்தை ஒதுக்கிதமிழ் உட்பட ஆறுமொழிகளையும் கற்றுக்கொண்டது உனக்கு ஆச்சரியத்தை ஏற் படுத்தவில்லையா?

வெற்றி எப்போது கிட்டும் என்று பொறுமை



யாக வேலை செய்து கொண்டே போவது எவ்வளவு முக்கியமானதோ, அதேஅளவு வெற்றியின் சமீபத்தை விழிப்புணர்ச் சியோடு புரிந்து கொண்டு அதைப் பயன் படுத்திக் கொள்வதும் முக்கியமானது. உலகமகா கவிகளுள் ஒருவனாகிய ஜேர்மனியக் கவி கதே ஓரிடத்தில் சொன் னான், நான் யார்? நான் செய்துள்ள பணி என்ன? நான் கண்டது கேட்டது உற் றுக் கவனித்தது அனைத்தையும் திரட்டிப் பயன்படுத்தியுள்ளேன். மூடர்கள், அறி ஞர்கள், உணர்ச்சிப் பெருக்குள்ள நபர்கள் உணர்ச்சி மங்கிக் கிடக்கின்றவர்கள் என்று எண்ணற்ற வெவ்வேறான நபர்கள் என் படைப்புக்களுக்கு ஊக்கமளித் துள்ளனர். குழந்தைகள், அனுபவ சாலிகள், முதியோர் என எல்லோரும் தத்தம் ஆற்றல்களையும், நம்பிக்கை களையும், கருத்துக்களையும் எனக்கு வழங்கி உள்ளனர். மற்றவர்கள் விதைத் ததைத்தான் அடிக்கடி நான் அறுவடை செய்தேன். என் படைப்பை உருவாக்கிய ஒருகூட்டு மனிதனே கதே என்கிற பேரைத் தாங்கி நின்றான். குறிக்கோள் அல்லது இலட்சியம் என்பது எம்மனத்தில் ஒரு சங்கிலித் தொடரான எண்ணங்களை ஏற்படுத்துகின்றது. மனத்தின் ஆக்க சக்தி களை வெளியே வரச்செய்து அவற்றுக்கு வேலை கொடுக்கிறது. இலட்சியம் மனத் தில் வலுப்பெற மனதின் ஆக்கசக்தி செயலாக மாறுகிறது.

மனம் ஒரு சிறுகுழந்தையைப்போல. அதை நாம் எப்படி வேண்டுமானாலும் வளர்க்கலாம். குழந்தைக்கு நாம் உற் சாகம் ஊட்டி வளர்ப்பதுபோல, நம் மனத் துக்கு நாம் அடிக்கடி உற்சாகம் ஊட்ட வேண்டும். ஊக்கம் தரவேண்டும். மன தின் ஆரம்ப நிலைகளில் மிகப்பெரிய இலட்சியங்களைசாதிக்க முடியாத ஆசை களைமனத்தில் கொள்ளக்கூடாது. ஏனெ னில் பெரிய சாதனைகளைச் சாதிக்க முடியாதபோது ஏமாற்றம் ஏற்படுகிறது. இந்தக் காரியத்தில் நான் இந்த முறை

**“குழந்தைகள், அனுபவ சாலிகள், முதியோர் என எல்லோரும் தத்தம் ஆற்றல் களையும், நம்பிக்கைகளை யும், கருத்துக்களையும் எனக்கு வழங்கி உள்ளனர். மற்றவர்கள் விதைத் ததைத் தான் அடிக்கடி நான் அறுவடை செய்தேன்.”**

தவறிவிட்டேன் என்று சொல்வதற்குப் பதில், நான் எடுக்கும் காரியம் எப்போதும் நடப்பதில்லை, என் அதிர்ஷ்டம் அப்படி; நான் ஒரு தோல்வியாளன். தோல்வியை அனுபவிக்கப் பிறந்தவன் என்று புலம்பு கின்றான். நாம் ஓரிருமுறை தோற்று விட்டால் அதற்காக நாமே ஒரு தோல்வி என்றுஎண்ணக்கூடாது. மாறாக, நம் இலட்சியத் துக்கு இலட்சியப் பாதைக்கு நாம் ஒளி காட்டவேண்டும். அடுத்த முறை வெற்றி பெறு வேன் என்றுநம்பிக்கை தரவேண்டும்.

உன்னுடைய வேலை எதுவாக இருந்த போதி லும் சரி, அதில் நீ உன்னதம் பெற விரும் பினால் வரையறுக் கப்பட்ட தெளிவான திட் டத்துடன் நீ செயலாற்ற வேண்டும். ஒன்றுக் கொன்று முரணான காரி யங்களை மேற் கொண்டு உன்னுடைய முந்தைய செயலை உன்னுடைய பிந்தைய செயலே முறியடித்துவிடக்கூடாது. உனக்கு வேண்டியதெல்லாம் ஒழுங்கான திட்டமும் அதைச் சரிவர நிறைவேற்று வதற்கான நிர்வாகத் திறமையும்தான். அந்த இரண்டையும் பெற்றிருப்பின் நீ வெற்றி பெறுவது சர்வ நிச்சயம். அதில் சந்தேகமே இல்லை.

திட்டமிட்டுச் செய்கின்றவன், நடுத்தர திற மையுடையவனாயிருந்த போதிலும் திட்ட மிட்டு செயலாற்றாத அதிக திறமை சாலியைவிட அதிகமான காரியங்களைச் செய்து பெரு வெற்றி அடைந்துவிடுவான் என்பதுதான். வாழ்வில் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லாவற்றையும் முன்கூட்டியே ஆழ்ந்து சிந்தித்துத் திட்டம் தீட்டி விடுவதன் காரணமாகப் பிரளயம் ஏற்பட்டபோதும் ஆடாது, அசையாது, அமைதி குலையாது வீற்றிருக்கின்றனர். ஒழுங்காகத் திட்டம் தீட்டி வேலை வாங்கு கிறவர்கள், திட்டமின்றி வேலை வாங்கு கிறவர்களைவிட நாலைந்து மடங்கான வேலையைத் தங்களுடைய ஊழியர் களிடமிருந்து பெற்று விடுகின்றனர். தன் திட்டத்தைப் பிறர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்து, அவர்கள் அதனைத்திறமையுடன் செயலாற்றுமாறு யார் செய்கின்றானோ, யார் சிதறிக் கிடக்கும் பல சக்திகளை ஒன்று திரட்டி ஒழுங்காகச் செயலாற்றுகின் றானோ, அவனே உண்மையான தலைவன். எனவேதான் நாடோடிப் பழமொழி ஒன்று கூறுகிறது, வேலை செய்கிறவனுக்கு ஐந்து ரூபாய் சம்பளம்; வேலை வாங்குகிறவனுக்கு ஐம்பது ரூபாய் சம்பளம் என்று.

ஒழுங்கே அண்டகோளங்களையும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய உடலின் உறுப்புக்களும் ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டுத்தான் வேலை செய்கின்றன. அவ்விதமானால் நாமும் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிப்பின் உன்னத பதவி அடை வதற்கு என்ன தடை?

சூரியகாந்தி




# தக்காளிச் சட்னியை ஞாபகப்படுத்திய சிங்க லே!

■ ஸூடோ ஸ்வர்மி

சும்மா கிடக்கின்ற சங்குகளை ஊதுவதற்கு ஆண்டிகள் தேவை என்று விளம்பரம் செய்யத் தேவையில்லை. ஆண்டிகள் தாமாகவே சங்குகளை கண்டுபிடித்து அதற்குரிய காரியகருமங்களை ஒப்பேற்றி விடுவார்கள். குருதி என்கிற விசயமும் இப்படித்தான். யாரும் கேட்பாரற்று தேடுவாரற்று இருந்தது. ஆனால் இந்த தென்னிந்திய திரைத்துறை நகைச்சுவை நடிகர் வைகைப்புயல் வடிவேலு அதனை தக்காளி சட்னி என்கிற உபஉணவு வகையுடன் ஒப்பிட்டு, “உங்களுக்கு வந்தா இரத்தம், எங்களுக்கு வந்தா தக்காளி சட்னியா?” என்று பேசிய பின்புதான் தக்காளிச் சட்னிக்கு பின்னால் இருக்கக்கூடிய ஒப்பீட்டு அரசியல் தத்துவம் வெளி உலகிற்கு தெரிய ஆரம்பித்திருந்தது: அம்பலத்துக்கு வந்தது. தக்காளிச் சட்னிக்கு வேறு மவுசு எகிற தொடங்கியது. வடிவேலு கண்டுபிடித்த கண்டுபிடிப்பினை நிகழ்த்த முயற்சி ஒன்றினை தென்னிலங்கையிலும் ஒரு குழுவினர் அல்லது அமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் கண்டறிந்த அல்லது குருதி பற்றிய சிந்தனையில் குட்டையைக் குழப்பத் தேர்வு செய்தது தக்காளிச் சட்னியை அல்ல: சிங்க இரத்தத்தை அதுவும் சிங்க இரத்தம் என்கிற வசனத்தை !

சிங்கத்தின் குருதி என்று பொருள் கொள்ளத்தக்க வகையில் சிங்க லே என்னும் வாளேந்திய சிங்க உருவத்தையும் அதனோடிணைந்ததாக சிங்கள மொழியிலமைந்த சிங்க லே என்னும் வசனத்தையும் கொண்டமைந்த சின்னங்களை வரைவதிலும் பரப்புவதிலும் விற்பதிலும் ஒரு அமைப்பினர் தீவிர ஆர்வம் காட்டி வருவகின்றனர்.

தனிச்சிங்களச் சட்டம் மற்றும் வாகன இலக்கங்களில் சிங்கள ஸ்ரீ என்கிற கசப்பான காலப்பகுதிகளையும் ஞாபகப்பகுதிகளையும் தாண்டி வந்த பலருக்கு அத்தகைய சிந்தனையை மீண்டும் தோண்டிப் பார்க்க வைக்கும் சில ஒற்றுமைகளையும் இந்த புதிய பதிப்பான சிங்கத்தின் குருதி விவகாரம் கொண்டிருக்கிறது. இன முறுகலைத் தோற்றுவிப்பதற்கான ஏது நிலைகளை இந்த சிங்கக் குருதி பிரசார முன்னெடுப்பு கொண்டிருப்பதாக அஞ்சப்படுகிறது. அதனை உறுதி செய்வது போல நுகேகொட பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் சிலருக்கு சொந்தமான வீட்டு வாயில் கதவு மற்றும் சுவர்களில் சிங்க லே என்பது வரையப்பட்டிருக்கிறது.

### ஒற்றுமைக்கு வேட்டு

இன ஒற்றுமைக்கு வேட்டு வைக்கக்கூடிய ஆபத்து இந்த விவகாரத்திற்குப் பின்னால் இருப்பதாக கருத்து வெளியிட்டிருக்கிறார் பிரதி வெளவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா. இன முரண்பாடுகளுக்கு வித்திடக்கூடிய சூழ்நிலை தோன்றலாம் என்கிற வகையில் அமைச்சரவையில் தெரிவித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

தேசியகீதம் தொடர்பிலும் உருமாற்றம் செய்யப்படுகின்ற தேசியக் கொடி தொடர்பிலும் சிற்சில சலசலப்புகள் தணலில் மறைந்திருக்கும் நெருப்பை ஒத்த உறங்குநிலையில் காணப்படுகின்ற நிலையிலேயே இந்த சிங்க லே விவகாரம் சந்திக்கு வந்திருக்கிறது.

பொறுப்புக்கூறல்களுக்கான தயார்படுத்தல்களைப் பற்றியும் இனப்பிரச்சினைக்கான வேர்களைக் கண்டறிந்து களைவதற்கான தேவைகள் பற்றியும் ஆராய வேண்டிய அத்தியாவசிய தேவை இருப்பது ஒரு வருடத்திற்கு முன்பு பதவிக்கு வந்த அரசிற்கு நன்கு விளங்கியிருந்தது. அண்மையில் அரச நத்தார் விழாவினைச் சிறப்பிக்க யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையில் அதனை நினைவுகூர்ந்துமிருந்தார்.

மீண்டுமொரு போரினைத் தவிர்ப்பதற்கு தேசிய பாதுகாப்பினை பலப்படுத்துவதிலும் தக்கவைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கருதும் தரப்பினர் போர் தோன்றியதற்கான காரணங்களை கண்டறிவதில் அசிரத்தையாக இருந்து விடுகின்றனர். இத்தகைய முரண்பாட்டினை தோற்றுவிக்கக்கூடிய எத்தனிப்புக்களை முளையிலே கிள்ளுவதில் ஆர்வம் காண்பிப்பதில்லை. சிங்கத்தின் குருதி என்கிற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் பிரசாரம் இனமுரண்பாடுகளுக்கு பிள்ளையார் சுழியாகிவிடும் என்பது தொடர்பில்

அமைச்சர்கள் மட்டத்தில் அபாய எச்சரிக்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க, இதுவரை இந்த பிரசாரம் தொடர்பில் ஒரு முறைப்பாடுதன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார் காவல்துறை ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர. ஆளணி வளங்களை தயார்படுத்தி விட்டு, விசாரணை மேற்கொள்வதற்கு ஒரு முறைப்பாடேனும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அவருடைய கவலை.

### போதிமாதவனின் போதனை!

கௌதம புத்தர் ஒருநாள் காட்டுவழியாகச் சென்று கொண்டிருந்தபோது மயக்கம் அடைந்து விட்டார். அந்த இடத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் இதைக் கவனித்துவிட்டு, அவருக்கு நிழல் வழங்க அவரைச்சுற்றி மரக்கிளைகளை நட்டு, ஆட்டின் மடிக்காம்பினை கறந்து பாற்துளிகள் அவருடைய வாயில் நேரடியாக விழச்செய்தான். கௌதம புத்தர் கண்விழித்து தனது திருவோட்டில் கொஞ்சம் பாலை கறந்து தரும்படி வேண்டினார். தீண்டாமை காரணமாக சிறுவன் மறுத்தான்.

அந்தச் சிறுவனிடம் புத்தர் பின்வருமாறு கூறுவதாக ஆசிய ஜோதியில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை குறிப்பிடுவார்.

ஓடும் உதிரத்தில் வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பாரத்தாலும் சாதி
தெரிவதுண்டோ அப்பா !

எவர் உடம்பினிலும் சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழி நீர்க்கும் உவரப்பே
இயற்கை குணமப்பா!

புத்தரின் போதனைக்கு முற்றிலும் மாறான கோசத்தை முன்னெடுக்கும் இந்தத் தரப்பினர் மீது ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.

2014ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தின் பேச்சாளர் ருவான் வணிகசூரிய, வடக்கில் பல்வேறு குருதிக்கொடை நடவடிக்கைகள் மூலமாகப் படையினர் 13,200 பைந்து குருதியை வழங்கியிருந்தனர் என ஊடகச் சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். வடபகுதியில் எமது சகோதர தமிழ் மக்களின் உடல்களில் எமது இராணுவத்தினரின் குருதி ஓடுவது பெருமைக்குரிய விடயமாகும் என்றும் கூறியிருந்தார். சிங்க லே என்கிற இந்த பயங்கரமான முயற்சிக்கு நிகரான முயற்சி ஒன்று வடக்கில் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும். ஆனால், தெற்கில் சிங்க லே பிரசாரம்தானாகத் தணியும் வரை காத்திருக்கிறார்கள் போலும் ஆட்சியாளரகள்!



சிறுகதை

# நியதிக்குள் பிறக்கும் திகதிகள்

கே.எஸ்.சிவஞானராஜா

"அம்மா! எனக்குச் சாப்பாடு வேண்டாம். பள்ளிக் கூடத்திலை தாற சாப்பாடு போதும். தம்பிக்கும் தங்கச்சிக்கும் பாணை வாங்கிக் குடுங்கோ. போட்டுவாறன்." விடைபெற்றாள் தனாஸ்ரீ.

"கவனமாய்ப் போட்டு வா பிள்ளை." அனுப்பிவைத்து தவியாய் தவித்தாள் சகானா. தாயல்லவா !

தனாஸ்ரீ, கலாமணி, உமாபதி மூன்று பிள்ளைகளையும் எப்படிச் சமாளிக்கப்போறேனென்று அவள் தினம் தினம் சொரிந்த கண்ணீர்தான் முற்றத்திலிருந்த துளசிக்கு மழையாகிற்று. "கணவன் கிடைக்க வேண்டுமென்று" நம்பிக் கையோடு கும்பிடும் அவளுக்கு தேர்தல் காலத்தில் ஒவ்வொருத்தராய் வீட்டுக்கு வந்து கும்பிட்டதெல்லாம் வெறும் புலுடாவாக நடித்து விட்டார்களே என்ற ஆதங்கம் வாட்டியது . அரசியலை ஒரு போதும் நம்பி ஏமாறவே கூடாது என்ற முடிவுக்குள் சகானா வந்து விட்டாள். அரசியல்வாதிகளும், ஆன்மிகவாதிகளும் நிர்க்கதியான பெண்களுக்கும் குடும்பங்களுக்கும் ஏதாவது ஒரு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று தூரநோக்கோடு சிந்தித்து நம்பால் கவனமெடுக்கவில்லையே என எண்ணித் தன்னைத் தொலைத்துவிட எண்ணிய போதும், குஞ்சுகள் மூன்றின் முகம் பார்த்துப் பசியாறினாள். ஒரு நேரச் சாப்பாட்டுக்கே வழி தெரியாதபோது, சின்னச் சின்ன வீட்டு வேலைகள் செய்து பிள்ளைகளின் பசியை ஒருவாறு தேற்றினாள்.

ஓலைக்கொட்டில் என்றாலும் சேலைதான் உடுப்பாள். அவளது உடை நடை பாவனை எல்லாம் தெய்வீகமானவை. அப்படி இப்படி என்று அரைகுறை ஒன்றும் இல்லை. நாகரிகம் சகானாவிடம் பலமுறை தோற்றதுண்டு. நல்ல மனிதர்கூட இவளிடத்தில் எண்ணத்தைச் சொல்ல நாட்டம் கொண்டதும் உண்டு. ஆட்டம் கண்டதுமுண்டு. வீட்டிலே கூட லட்சுமிகரமாகவே ஓடியாடி வேலை செய்வதால் வேலியை உயரமாகவே அடைத்து விட்டாள். வில்லங்கமாய் இவள் வீட்டுக்கு உதவி செய்ய பலர் முன்வந்து கொண்டிருந்த போதும் சகானாவால் அங்கீகரிக்கமுடியவில்லை.

குறிப்பிட்ட ஐந்து வீடுகளுக்கு மட்டும் சென்று வேலை செய்து ஊதியமாய் மூன்று வேளை சாப்பாட்டுக்காக உழைத்தாள். கடின வேலை செய்யச் செய்ய அவளது தேகமோ ஒடிந்த பாடில்லை.

"அம்மா! நூறு ரூபா பரீட்சைக்குக் கட்ட வேணும்."

"அம்மா! எனக்கு காசு வேணும்."

"அம்மா! எனக்கு புத்தகம் வாங்க வேணும்."

மூன்று பிள்ளைகளுக்கும் இல்லையெனாது தாள் தாளாகக் காசு எடுத்துக் கொடுத்தாள். ஒரு துண்டு பாண், ஒரு துண்டு ரொட்டி வாயிலே கடிப்பதும் ஓடுவதுமாய் வேலை செய்தாள்.

சகதி என்பது பூமியையும் குறிக்கும். சேறையும் குறிக்கும். பொல்லாத நிலத்தையும் குறிக்கும். சகானா பூமியானாள். இதனால் அவள் தொட்டதெல்லாம் பயிராகிற்று. வர வர அவளது பிள்ளைகளது சின்னச் சின்ன ஆசைகள் எல்லாம் நிறைவேற்ற முடிந்தது

"அம்மா! எனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தாறியளா?"

தனாஸ்ரீ ஆசையைத் தாளித்தாள். சும்மாவா 12 ஆயிரம் ரூபாவுக்கு என்ன செய்வது? யாரிடம் கேட்பது? வயதுக்கு வந்த பிள்ளை ஆயிற்றே!

"அப்பாவை எப்படியும் தேடிக்கண்டு பிடிக்கும் வரை கொஞ்சம் நடந்து போய் வந்தால் என்னம்மா ?" அவளது ஒரு கேள்விக்குப் பதிலாகப் பிள்ளை பல கேள்விகளைக் கேட்டாள்.

"அப்பா எப்ப அம்மா வருவார் ?"

"ஏனம்மா அப்பாவை பிடிச்சு வைச்சிருக்கினம்?"

"எனக்கு அப்பாவை தெரியவே தெரியாதம்மா ?"

ஒவ்வொரு பிள்ளையும் தாயை வாட்டி எடுத்தனர் .

பிள்ளைகள் வளர வளர சகானாவால் சில கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. தான் வேலை செய்யும் இடங்களில் மனச் சுமைகளைக்கொட்டித் தீர்க்கவும் முடியவில்லை. தீர்க்காமலிருக்கவும் முடியவில்லை.

> நாகரிகம் சகானாவிடம் பலமுறை தோற்றதுண்டு. நல்ல மனிதர்கூட இவளிடத்தில் எண்ணத்தைச் சொல்ல நாட்டம் கொண்டதும் உண்டு. ஆட்டம் கண்டதுமுண்டு. வீட்டிலே கூட லட்சுமிகரமாகவே ஓடியாடி வேலை செய்வதால் வேலியை உயரமாகவே அடைத்து விட்டாள்.

அவள் ஒழுங்காக வேலை செய்யும் வீடு. அடேயப்பா ! மிக நல்லதோர் குடும்பம். பல்கலைக்கழகமாய் பெயர் பெற்ற குடும்பம் அது. பிள்ளைகள் வெளியில் வேலை செய்கின்ற பணக்காரக்குடும்பம். வீடு சொல்லுந்தரமன்று. பளிங்கு மாடம் அறைகளோ எக்கச் செக்கம், ஏசி வேறு, பூங்காவனம் வேறு, அருவிகள், மீன் தொட்டிகள், ஊஞ்சல்கள் வேறு, மறைவிடங்கள், குருவிகளின் வதிவிடங்கள் வேறு, சுரங்க அறை வேறு. இத்தனை இடங்களையும் துப்புரவு செய்து முடிக்கவும், வீட்டுக்கு போகவும், பிள்ளைகள் வீட்டுக்கு வரவும் நேரம் சரியாக இருக்கும்.

"பிள்ளை ! என்ரை மகன் நாளைக்கு வெளிநாட்டிலிருந்து வாறார் பாருங்கோ. ஒவ்வொரு நாளும் வீட்டில் வேலை இருக்கும் பாருங்கோ. எங்களுக்கும் வயது அப்படி இப்படி முடியாது. ஆறேழு நாள் இங்கை தங்கிப்போவர். எல்லோரும் வந்து இஞ்கை இருந்தாலென்ன. பிள்ளையளும் இங்கை வந்து நிக்கட்டும். என்ரை மகனுக்குத் தங்கமான மனசு. நல்லா உதவி செய்யக் கூடியவர். நீங்கள் இப்படி கஷ்டப்படுகிற செய்தி தெரிஞ்சால் சும்மா விடமாட்டான். சரியே பிள்ளை!"

அம்பலவாணரின் செய்தியும், மகனின் வரவும் சகானாவின் ஊதியத்திற்குக் கடவுள் நேரிலே வந்து காட்சி தந்தது போல சகானாவுக்கு இருந்தது.

ஆம் என்றும் இல்லை. இல்லை என்றும் இல்லை. மெல்லிய ஒரு சிரிப்பால் சம்மதம் சொன்னாள்.

சகானாவின் சிரிப்பு. மகன் ஐந்து நாளுக்கும் வீட்டில் சந்தோசமாய் நின்று விட்டுப் போனமாதிரி அம்பலவாணருக்கு இருந்தது.

அவசரப்பட்டு வீட்டுக்குப் போய் மூன்று பிள்ளைகளோடு சந்தோசப்பட்டு முத்தம் கொடுத்தாள்.

"ஏனம்மா! இண்டைக்குச் சந்தோசமா இருக்கிறியள்?" முதலாவது மகளின் நியாயமானது.

"ஏனம்மா! அப்பா வரப் போறாரா?" இரண்டாவது மகனின் சரியான கேள்வி! "அம்மா அம்மா! வீடு மாறப் போறேமே?" மூன்றாவது மகளின் ஜாதகக் கேள்வி!

மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்லத் தெரியாமல் மூன்று பிள்ளைகளையும் அணைத்துக் கொண்டாள். திகதி கள் விதிகளாயின.

நாளைக்கு எல்லோரும் புதுவீட்டுக்குப் போகப் போகிறோம். சந்தோசம்தானே!

"புது வீடா! எங்கையம்மா? மழைக்கு ஒழுகுமா? லைற் இருக்கா? பைப்பிலை குளிக்கலாமா? மேசை இருக்கா? கதிரை இருக்கா? ரொயிலற் இருக்காம்மா? குக்கர் இருக்காம்மா? கட்டில் இருக்காம்மா?"

பிள்ளைகளின் எல்லா கேள்விகளுக்கும் சம்மதம் சொன்னாள். மூன்று பிள்ளைகளும் மூன்று உலகமாயின. சகானா அந்த உலகத்தில் பயணமானாள். நல்ல மனுசன் எங்களையெல்லாம் வாழவைக்கப் போகிறார். ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். பிள்ளைக்கு ஒரு சைக்கிள் வாங்க வேண்டும். மூன்று பிள்ளைகளையும் யாழ்ப்பாணம் கூட்டிக் கொண்டு போய் புதுச்சட்டை வாங்க வேண்டும். மூன்று பிள்ளைகளுக்கும் காசில்லாமலே வண்ண வண்ணச் சட்டைபோட்டு அழகு பார்த்தாள். தன்னை மறந்தாள். தன்னாமங் கெட்டாள். மீண்டும் தன் வீட்டுக்கே வந்து விட்டாள். மேலே பார்த்தாள் கணவனின் படம் சிரித்த முகத்துடன் நானும் வருகின்றேன் என்றது. வீட்டு முகட்டில் இருந்து மழையும் நீரைப் பனுக்கிற்று. அடுப்புப் புகை வீட்டை நிரப்பிற்று வாசலில் கார்.....

"பிள்ளை! வெள்ளெனப்போக வேணும். எல்லோரும் காரிலே போகலாம் பிள்ளையளும் ஒரேதா வரட்டும்." அம்பலவாணரின் தலை காருக்குள் இருந்து சொல்லிற்று.

சகானாவுக்கு தலையே சுற்றிற்று. கள்ளன்கூடக் களவெடுக்க ஒன்றுமே இல்லாத வீடு. மண் சட்டி பானையை யார்தான் எடுக்கப் போகிறார்கள்? துணிமணியளை ஒரு உரைப்பையினுள் போட்டுத் திணித்தாள். கதவுகளை ஒரு கயிற்றினால் இறுக்கக் கட்டினாள். எல்லோருமாகக் காரில் ஏறினார்கள். கார் புறப்பட்டது.

"பாரனடி! உவளுக்குக் கிடைச்ச அதிருஷ்டம் சும்மா இருந்தவளுக்குச் சொர்க்கம் கிடைச்சால் எப்படி இருக்குமென்று பாரன். ஒரு வார்த்தை சொன்னாளே. அக்கம் பக்கம் சனம் இருக்கென்று யோசிச்சவளே சரிசரி பார்ப்பம்." பக்கத்து வீட்டு பவளம் ஏதோ கீதாவுக்கு முணுமுணுத்தாள்.

அம்பலவாணரின் கார் பிருந்தாவனப் பூங்காவனத்துள் புகுந்தது. மனைவி இராசம்மா வாங்கோபிள்ளை, வாங்கோ பிள்ளையள் என்று அன்பு சொரிய அரவணைத்து. அவர்களுக்கான ஒரு ஒதுக்குப்புற சின்ன அழகான வீட்டைக் காட்டினாள். "இந்த வீட்டில தான் நான் பிறந்தது" என்று சொல்லி அறிமுகம் செய்து வைத்தாள். அது இது என்று எல்லா வசதியும் அந்தச்சின்ன வீட்டில் குடியிருந்தன. அதே வீட்டில் சகானாவும், பிள்ளைகளும் குடிபுகுந்தார்கள். ஆகா! பிறகென்ன? சகானாவும் ஒரு மகளானாள். அம்மா என்று அழைத்தாள். மகளே என்றாள் இராசம்மா.

சகானாவின் கடமை தொடங்கிற்று. அந்தச் சின்ன வீடு ஒளிபெற்றது. பிள்ளைகளை பொன்குஞ்சுகளாக மாற்றிவிட்டாள். தானும் எளிமையானாள். சேலை கட்டி விட்டாள். அலைமகளானாள். சின்ன வீடு கோவிலானது. முப்பது வயது என்று சகானாவைச் சொல்ல முடியவில்லை. இருபதுக்கு வந்துவிட்டாள். இளைமைக்கு விலைபேச முடியவில்லை.

"ஹலோ! அப்பா வந்து கொண்டிருக்கிறேன். இன்னும் ஒரு மணித்தியாலத்தில் வருவேன். அப்பா! அம்மாவுக்கு எப்படியப்பா காய்ச்சல்? சுகமா?" ரமேஷ் சொல்லி முடிப்பதற்குள், "உனக்கு ஒரு தங்கை வந்திருக்கிறாள். மூன்று பிள்ளைகள். அவள் அம்மாவைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுறாள். பிறகென்ன?" "சரி அப்பா! அதுவே எனக்கு பொறுப்பு குறைந்த மாதிரி! எதுக்கும் இன்னும் அரை மணித்தியாலத்தில் வந்துவிடுவேன் அப்பா! ஓகே!"

பிருந்தாவன இல்லத்தின் வாசல் கதவுகள் திறக்கப்படவும், கார்உள்ளே வரவும், பெற்றோரைக் கட்டி அணைக்கவும், சகானாவைக் கண்டு விடுபடவும், ரமேஷ் கை கூப்பவும் இயற்கை மழையை கொட்டியது. தாய் தந்தையரின் கண்ணீரால் ரமேஷ் நனைந்தான். திகதிகள் வாரமாகின. வாரங்கள் பயணத்தை நெருங்கின. சகானாவைக் கண்ட ரமேஷ் இரங்கினான். இறங்கினான். அம்மாவிடம் யாவற்றையும் கேட்டறிந்தான்.

எது எது வேண்டுமோ அது அது அவற்றையெல்லாம் வாங்கிக்கொடுப்பதற்காக அம்மா அப்பா சகானா குடும்பத்தையும் சேர்த்து அழைத்துச் சென்றான். சைக்கிள், சட்டை, துணி, சேலை, புத்தகங்கள், சப்பாத்துக்கள், பென்சில் பேனா, கொப்பிகள் என சின்ன வீட்டுக்கென கலைமகள் நிறைத்தாள். சகானாவால் கதைக்கவே முடியாமல் போய் விட்டது. கதைக்காமல் இருப்பதே மெத்த நல்லது என்று முடிவு செய்தாள்.

கார் பிருந்தாவனத்துள் நுழைந்தது. சின்ன வீடு பெரிய வீடாயிற்று. சகானா பிருந்தாவனத்திற்குச் சொத்தாகிவிட்டாள். ரமேஸ் மீண்டும் பயணத்திற்கு ஆரம்பமானான். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நல்லதோர் துணை கிடைத்ததை எண்ணி ரமேஸ் இறைவனுக்கு ஆயிரம் நன்றி கூறினான். திகதிகள் கதிகளாயின. கதிகளோ விதிகளாகின. விதிகள் ஆலயத்தில் திதிகளாயின. அம்பலவாணரும் இராசம்மாவும் கோயிலுக்குச் சென்று விட்டனர். பிள்ளைகள் நேரத்தோடு கல்லூரிக்குச் சென்றுவிட்டனர். கோப்பி கொடுக்கச் சென்றவள் ரமேஷிடம் நீட்டினாள் கோப்பியை . "நீங்கள் தெய்வம்" என்றாள் அதற்கு மேல் பேசவில்லை மௌனித்து நின்றாள். நான் ஒரு சாதாரண மனிதன் என்றான் பணிவோடு ரமேஷ். கணவனை எப்படியாவது மீட்டுத்தருவேன் என்று சகானாவின் கைகளில் சத்தியம் செய்தான். ரமேஷினது கைகள் கண்ணீரால் நனைந்தன. சகானா மீள முடியவில்லை. அவள் கோப்பியானாள். "அம்மா!....அம்மா!!" கனவு!

சந்திரசேகர ஆசாத்



# மாறிவிட்ட அரசாங்கமும் மாறிவிடாத அரசும்

அரசு என்பது ஒரு வர்க்கம் ஏனைய வர்க்கங்களை அடக்கி ஒடுக்கும் ஒரு பலாத்காரக் கருவி. உழைக்கும் வர்க்கம் அரசாங்கத்தை மாற்றுவதால் மட்டும் எமது அரசியல் அதிகாரத்தை நிறுவிவிட முடியாது. ஏற்கனவே வலுவான முறையில் கட்டமைக்கப்பட்ட முதலாளித்துவ அரசு இயந்திரத்தை உடைத்து நொறுக்கி அதற்குப் பதிலாக உழைக்கும் மக்களின் அரசு இயந்திரத்தை நிறுவுவதன் மூலமே உண்மையான உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட முடியும். இது உலகிலேயே முதன் முதலாக சோவியத் நாட்டில் உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி மூலம் நிறுவிய மாமேதை லெனின் தனது 'அரசும் புரட்சியும்' என்ற ஒப்பற்ற நூலில் வெளியிட்ட கருத்தாகும்.

அண்மையில் இலங்கைச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கரப்பிட்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வெளியிட்ட சில கருத்துக்கள் மீண்டும் ஒருமுறை லெனினின் கூற்றை நினைவுகூர வைக்கின்றன.

அவர் இலங்கையில் அரசாங்கம் மாறிவிட்ட போதும், அரசு மாறவில்லை எனத் தெரிவித்தார். மேலும் ஒருவர் ஒரு கட்டுத் துவக்கை வைத்திருந்தால் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தும் பொலிஸார் 3,000 துப்பாக்கிகளை சட்ட விரோதமாக மறைத்து வைத்திருப்பவர்களைக் கைது செய்ய சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற வுள்ளனர் என்று கூறி சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொலிஸாரினதும், சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் பாரபட்சமான நடவடிக்கைகள் இப்போதுதான் முதற் தடவையாக இடம்பெறுகின்றன எனக்கூறி விடமுடியாது. ஆனால் அரசாங்கம் மாறிவிட்ட போதி லும் அரசு இயந்திரம் கடந்த அரசாங்க காலத்தைப் போன்றே செயற்பட்டு வருகின்றதை எவரும் மறுத்து விட முடியாது. குறிப்பாக சட்டமா அதிபர் திணைக் களம், பொலிஸ் திணைக்களம், ஆயுதப் படையினர் போன்றவை தன்னிச்சையான, பாரபட்சமான நடை முறைகள் இன்னும் வலுவாகவே நிலை பெற் றுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பாக பொதுமக்களைப் போலவே அமைச்சர் ராஜித சேனாரத்ன கொதிப்படைவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு.

கடந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சியில் லஞ்சம், ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன கட்டற்ற முறையில் தலைவிரித்தாடின. பொலிஸாரும், ஆயுதப் படையினரும் ஒரு சில மேல் மட்டத்தினரின் விருப்பப்படி சட்டவிரோதச் செயற்பாட்டாளர்களாகவும் அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் செயற்படுபவர்களாகவும் செயற்பட்டனர். பல உயரதிகாரிகள் மோசடிகளுக்குத் துணை செய்பவர்களாகவும் தாமே சுயமாக மோசடிகளிலும், அதிகார முறைகேடுகளிலும் ஈடுபடுபவர்களாகவும் இருந்தனர். போதைப்பொருள் வியா பாரம், சூதாட்டம் என்பனவும் அவை தொடர்பான கொலைகளும் பகிரங்கமாகவே இடம்பெற்றன. இன, மத, வன்முறைகளில் ஈடுபடும் கடும்போக்கு வாதிகளுக்கு மறைமுகமாகவும், சில சமயம் பகிரங் கமாகவும் ஆதரவு வழங்கப்பட்டது. நீதி கூட நிறை வேற்று அதிகாரத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் ஒரு மாற்றத்துக்கான தேவை என்பது இலங்கையில் ஒவ்வொரு பிரசைக்கும் உருவாகி யது.

எனவே, ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி சகோதர சர்வாதிகார ஆட்சியை முறியடிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. சகல முனை களிலும் தங்கள் வலுவான அதிகாரத்தை நிலை நிறுத்தியிருந்த மகிந்த ராஜபக்ச குழுவினரின் சர் வாதிகாரத்தின் முன் அது அவ்வளவு இலகுவான விடயமாக இருக்கவில்லை. எனவே, இந்த முயற்சிகள் மிகவும் இரகசியமாகவும், அவதானத்துடனும் முன்னெடுக்கப்படவேண்டி இருந்தன.

இந்த விடயத்தில் முன்னின்று செயற்பட்டவர்களில் அமரர் மாதுளுவாவே சோபித தேரர், அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோர் மிகமுக்கியமானவர் கள். சந்திரிகா விஜயகுமாரணதுங்கவையும், ரணில் விக்கிரம சிங்கவையும் ஒன்றிணைப்பதிலும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவர்களுக்கும் இடையே தொடர்புகளை இரகசியமான முறையில் பேணுவதிலும் இவர்கள் காத்திரமான பங்கை வகித்தனர். அதே போன்று தமிழ், முஸ்லிம் தலைமைகளின் ஆதர வைப் பெறுவதிலும் இவர்கள் கடுமையாக உழைத் தனர்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏற்கனவே மகிந்த வுடன் முரண்பட்டவர் என்ற முறையில் கடும் உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் ஆட்சி மாற்றத்தில் துணிச்சலுடன் செயற்பட்டார்.

இப்படிப்பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் நோக்கங்களை முறியடிக்கும் விதத்தில் அரச இயந்திரம் செயற்படும்போது அவரால் எப்படி அதைத் தாங்கிக் கொள்ளமுடியும்?

குறிப்பாக ஊடகவியலாளர் லசந்த விக்கிரம துங்க, றகர் விளையாட்டு வீரர் தாஜுதீன் ஆகியோரின் கொலைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு பெற்ற நிலையிலும் சம்பந்தப்பட்டவர்கள் ஆதாரபூர்வமாக இனங்காணப்பட்ட போதிலும், எவரும் கைது செய்யப்படவுமில்லை. அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை. இதேபோன்று அவன்ட் கார்ட் நிறுவனம் தொடர்பான விசாரணைகளும் ஏறக்குறைய முடிவுறும்தறுவாயைஎட்டிவிட்டன. இலங்கையின் பாதுகாப்புப் படைக்குப் புறம்பாக ஓர் ஆயுத அமைப்பு முன்னாள் இராணுவ உயர் அதிகாரியின் தலைமையில், முன்னாள் படை வீரர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு முன்னாள் பாதுகாப்புச் செயலரின் அனுசரணையுடன் செயற்பட்டு வந்தமையும் அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு நிதி தனிநபர்களால் சுருட்டப்பட்டமையும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. துறைமுகத்தில் இருந்து 3000 சட்டவிரோத ஆயுதங்கள் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை ஓர் இராணுவ சதிப்புரட்சியை மேற்கொள்ளும் வகையிலான முற்தயாரிப்பு நடவடிக்கைகளாக இருக்குமா என்றசந்தேகம்கூட சிலதரப்பினரால் தெரிவிக்கப்பட்டன. இப்படியான பாரதூரமான விடயங்கள் தெரியவந்துள்ள நிலையிலும் இன்று வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

மேற்படி கொலைகள், அவன்ட் கார்ட் விவகாரம் என்பவற்றில் முன்னைய ஆட்சியில் அதியுயர் அதிகாரத்தில் இருந்தவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவே கருதப்படுகிறது. ஏற்கனவே அவர்களின் அதிகாரத்தில் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட அரச இயந்திரமே இன்னும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே ஊழல், மோசடி, படுகொலைகள் போன்றவற்றுக்கு எதிரான புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் 'சிவப்பு நாடா' முறை மூலம் இலாவகமாக மேற்கொள்ளப்பட்டு முறியடிக்கப்படும் முயற்சிகள் கையாளப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு எதிரான இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கும் அளவுக்கு புதிய அரசாங்கம் இன்னும் தன்னைத்தானே வலுப்படுத்திக் கொள்ளவில்லை என்பதும் உண்மை. அதாவது கடந்த ஆட்சியின்போது வடிவமைக்கப்பட்ட அரச இயந்திரக் கட்டமைப்பை உடைத்து நொறுக்கி புதிய அரசு இயந்திரத்தைக் கட்டியமைக்கும் அளவுக்கு இந்த அரசு வலிமையுடன் செயற்பட ஆரம்பித்து விட்டது என்று சொல்லிவிட முடியாது.

இப்படியான ஓர் இக்கட்டான, விரும்பத்தகாத ஒரு நிலையில்தான் ஆட்சி மாற்றத்துக்கு கடுமையாக உழைத்த அமைச்சர் ராஜித சேனாரத்ன பெரும் ஏமாற்றத்துடன் அரசாங்கம் மாறினாலும் ஆட்சி மாறவில்லை எனத் தனது ஆதங்கத்தைத் வெளியிட்டுள்ளார்.

மேற்படி விவகாரங்களில் மட்டுமன்றி பல முனைகளிலும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் வழங்கும் வாக்குறுதிகளையும், எடுக்கும் முடிவுகளையும் நிறைவேற்றாமல் இழுத்தடிப்புச் செய்வதிலும், திசை திருப்பிக் குழப்பியடிப்பதிலும் அக்கறையுடன் அரசு இயந் திரம் செயற்பட்டு வருகின்றது. இதில் தமிழ் மக்கள் சம்பந் தப்பட்ட பிரச்சினைகள் மிகவும் முக்கியமானவை ஆகும்.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியபோது, ஒரு பகுதியினரை பிணையில் விடுவிக்கவும், ஏனையோரைப் படிப்படியாக விடுவிக்கவும் இணக்கம் காணப்பட்டது. ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் வாக்களிக்கப்பட்ட தொகையினரைவிட மிகமிக குறைந்த தொகையினரையே பிணையில் விடுவித்தது.

பிணைத் தொகையாக ஒரு கைதிக்கு 5 லட்சம் பெறுமதி கொண்ட இரு பிணைகள் கோரப்பட்டன.

ஜனாதிபதியின் வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில், கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் சிலரைப் பிணையில் விடுவார்கள் எனவும் சிலரை புனர்வாழ்வுக்கு அனுப்புவார்கள் எனவும் உடன்பாடு காணப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை.

ஒரு பகுதி கைதிகள் நீதிமன்றம் கொண்டுவரப்பட்டபோதும் அவர்களை விடுவிக்க சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து எந்த அறிவித்தலும் வராத நிலையில், மீண்டும் விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டனர். அடுத்து புனர்வாழ்வுக்கு அனுப்பப்படும் முகமாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேறு 16 கைதிகளும் சட்டமா அதிபரின் அறிவித்தல் வராமையால் மீண்டும் தடுப்புக்கு அனுப்பப்பட்டனர். இன்னொரு கைதியின் ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்படவிருந்த நிலையில் திடீரென வழக்கு விசேட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதாவது சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதியின் வாக்குறுதி, பிரதமர் தலைமையில் எடுக்கப்பட்ட முடிவு என்பவற்றைச் செல்லாக் காசாக்கும் வகையில் தனது 'சிவப்பு நாடா' நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இன்னமும் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் மகிந்த ராஜபக்சவின் கொள்கைகளே நிறை வேற்றப்படுகின்றன என்பதையே இந்த விவகாரங்கள் பிரதிபலிக்கின்றன. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர்கூட எதுவுமே செய்ய முடியாது மௌனம் காக்கின்றனர்.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதிலும், இதே கதை தொடர்கிறது. வலி. வடக்கு 700 ஏக்கர் பொதுமக்களின் காணிகளை ஜனாதிபதி விடுவிக்க, மறுபுறத்தில் வட்டுவாகலில் கடற்படையினர் 626 ஏக்கர் காணிகளை நிரந்தர முகாம் அமைக்க, கையகப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். இதில் 350 ஏக்கர் பொதுமக்களின் காணிகள். 2016இல் பொதுமக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் என ஜனாதிபதியும் அலரி மாளிகையில் இடம்பெற்ற புதுவருட உரையில் பிரதமரும் தெரிவித்த நிலையில், படையினர் மேலும் மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

அதாவது அரசு யந்திரத்தின் முக்கிய பகுதிகளான சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் பிரிவின் சில மேலாதிக்கப் பிரிவுகள், படைத்தரப்பு என்பன இன்னும் தன்னிச்சையாகச் செயற்படும் நிலையே நிலவுகிறது. இத்தகைய கட்டமைப்புக்கள் ஏற்கனவே மோசடி, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், சட்ட விரோதச் செயற்பாடுகள், இனவாதம் என்பவற்றில் ஊறிப்போனவை. இவை நொறுக்கப்பட்டு புதிய அரசு யந்திரக் கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை அரசு சரியான வழித்தடத்தில் செல்வது சாத்தியமாக இருக்கப்போவதில்லை.



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 13



## பத்திரிகையில் என்ன இருக்கிறது?

செய்திப் பத்திரிகையில் பல விடயங்கள் இருக்கின்றன. செய்திகள், செய்தி விமர்சனக் கட்டுரைகள், செய்திப் படங்கள், கேலிச் சித்திரங்கள், சமய விடயங்கள், சமயக் கட்டுரைகள், சிறுவர்கள், மாணவர்கள், பெண்கள், முதியோர்கள் மற்றும் நோயாளிகள் என்று சமூகத்தில் எல்லாத் தரப்பினருக்கும் தேவையான ஏதாவது ஒரு விடயத்தை அவை மக்களுக்கு வழங்க முற்படுவதைப் பார்க்கின்றோம். இதில் குறிப்பாக விளம்பரங்களை மறந்து விடமுடியாது.

ஆக ஒரு வாசகர் பத்திரிகை ஒன்றை வாங்கும் போது அந்தப் பத்திரிகையில் தமக்கு இசைவான, அல்லது தமது ஆர்வத்தைத் தூண்டும் ஒரு விடயம் இருப்பதை உணரும்படி செய்வதில் பத்திரிகைகள் கவனம் செலுத்துகின்றன. உண்மையில் இதன் பின்னணியில் மறைந்து கிடப்பது பத்திரிகையின் விற்பனைதான். அதற்காக அவை பலவாறான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாட்டில் சேகுவேரா கிளர்ச்சி ஏற்பட்டு செய்தித் தணிக்கை தீவிரமான நிலையில் கொழும்பிலிருந்து பத்திரிகைகள் வந்து சேர்வதிலும் பல சங்கடங்கள் தோன்றியிருந்த காலத்தில் ஈழநாடு பத்திரிகையின் அச்சு எழுத்துக்கள் தேய்ந்து விடயங்கள் தெளிவில்லாமல் போய்விட்டன. கொழும்பிலிருந்துதான் எழுத்துக்கள் கொண்டுவரப்பட வேண்டிய நிலைமையிலிருந்தமையால் தேய்ந்த எழுத்துக்களைக் கொண்டே அச்சடிக்கப்பட்ட பிரதிகள் விநியோகத்துக்கு விடப்பட்டன. விற்பனை குறைந்தாலும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையானதாக அறிய முடிந்தது.

அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று அந்தப் பத்திரிகை மீது அப்போது மக்கள் வைத்திருந்த அபிமானமாகும். ஓர் அன்பர் கூறினார், "அந்தப் பத்திரிகையை பெரும்பாலும் வாசிக்க முடியாமல் இருந்தாலும் அதில் வரும் விடயங்களை கிரகித்துக் கொள்ள முடிகின்றது. அத்துடன் எழுத்துக்கள் மங்கியிருந்தாலும் இலக்கங்கள் தேயாமல் தெளிவாகக் காணப்படு கின்றன. முக்கியமாக தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் வெற்றி இலக்கங்களைத் தவறாமல் பிரசுரிக்கிறார்கள். அதற்காகவே அந்தப் பேப்பரை பலர் வாங்குகிறார்கள்" என்று.

**பத்திரிகை நிறுவனங்கள் தமது பத்திரிகைகளை விடியற் காலை எவ்வளவு நேரத்துக்கு முடியுமோ அவ்வளவு நேரத்துடன் விநியோகித்துவிட விரும்புவார்கள். ஏனென்றால் விடியற்காலையிலேயே தேநீர் குடித்தவுடன் அன்றைய பத்திரிகையைத் தட்டிப்பார்த்துவிட குடும்பஸ்தவர்கள் விரும்புவார்கள்.**

### ஈர்ப்பவை

இனி நாம் முதலில் பத்திரிகையில் என்ன இருக்கிறது என்ற கேள்விக்கான பதிலை இன்னும் சற்று விரிவாகப் பார்ப்போம். ஒரு முக்கிய தேசியப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு அதன் முதல் பக்கத்தைப் பார்த்தால் நம் கண்களை முதலில் ஈர்ப்பது அந்தப் பக்கத்தில் வெளியாகியுள்ள பெரிய எழுத்துக்களிலான பிரதான செய்தியாகும். அது கண்களை ஈர்க்காது போனாலும் பத்திரிகை படிக்கும் பழக்கமுள்ளவர்கள் பெரும்பாலும் முதல்பக்க பிரதான தலைப்புச் செய்தி என்ன என்பதைத்தான் பார்ப்பார்கள். அது ஒரு கொட்டை எழுத்து அறிமுகத்துடன்- அதாவது உள்ளே இருக்கும் விடயம் என்ன என்பதை அதன் சாராம்சத்தை கூறிக்கொண்டு தொடர்ந்து படிக்கும்படி செய்வதாக அமைந்திருக்கும்.

சிலசமயம் செய்தியின் உள்ளே இருப்பதன் மிக முக்கிய ஓர் அம்சம் பெரிய எழுத்தில் மேற்கோள்களுடன் செய்தி அமைப்பின் நடுவில் அல்லது முதலிலேயே தரப்பட்டிருக்கும். பெரும்பாலும் இந்தத் தலைப்பு செய்தியானது அந்தப் பத்திரிகையில் ஒரு நிருபரால் தரப்பட்டதாக இருந்த போதிலும் அதனை, மெருகு படுத்தியும் விடுபட்ட அம்சங்களைச் சேர்த்தும், சில சமயம் செய்திக்குரிய பின்புலத்தை விளக்கியும் எழுதுபவர் அங்கு கடமையில் உள்ள ஓர் அனுபவம் மிக்க உதவி ஆசிரியர் அல்லது செய்தி ஆசிரியராகவே இருப்பர்.

அந்தச்




செய்திக்கு வாசகனை வாசிக்கச் செய்யவும் அவர் கண்களை ஈர்க்கவுமென தலைப்பு எழுதுபவர் ஒரு முதுநிலை பத்திரிகை யாளராகவே இருப்பர்.

இவ்வாறு வாகசர் கவனத்தை அன்றைய பத்திரிகையை வாங்கிப் படிக்க செய்வதற்காக பல்வேறு யுக்திகள் கையாளப்படுகின்றன.

இவ்வாறான தலைப்பானது ஒரு கட்டுரைக்கு-அல்லது கதைக்கு போடப்படும் தலைப்புப் போல் இருக்காது. பாடசாலை மாணவர்களுக்கு தலைப்பைக் கொடுத்து கட்டுரை, கதைகளை எழுதச் சொல்வது போலன்று இது. செய்தியின் உள்ளே இருக்கும் விடயத்தை மேலே தலைப்பாகப் போட்டு விடுவது என்று சிலர் கருது வது போலுமில்லை. அதனை கைதேர்ந்த பத்திரிகை யாளர்கள் தந்தி மொழியில் வழங்குவார்கள். இந்தக் காலத்தில் கைபேசி யில் குறுந்தகவல் அனுப்பு வது போல என்றும் கூறலாம்.

தலைப்பை வைத்துக் கொண்டு செய்தியை எழுது வதில்லை. செய்தியை எழுதியதன் பின்னரே பெரும்பாலும் தலைப்புப் போடப்படும். செய்தியின் புதிய தன்மைக்கேற்பவே அதற்கு முக்கியத்துவம் கொடுக் கப்படும். உதாரணம்-விண்வெளிக்கு முதன் முதலில் செய்மதி அனுப்பப்பட்ட போது அது உலகின் மிகப் பெரிய அதிசயமாக-மனித குலத்தின் சாதனையாகப் பார்க்கப்பட்டது. அந்த வகையில்தான் அந்த செய்திக்கு முதன்மை வழங்கப்பட்டது. ஆனால் விண்வெளிக்கு செய்தி அனுப்புவதென்பது இன்று சர்வசாதாரணமாகி விட்டது.

இலங்கையும்கூட ராஜபக்ச ஆட்சியின்போது சீன ஏவுகணை மூலம் ஒரு செய்மதியை அனுப்பியதாக செய்தியுண்டு. இப்பாழுது விண்வெளிக்கு மனிதர்களே விண்கலங்கள் மூலம் செல்வதும், விண்வெளியில் உள்ள ஆய்வுகூடத்தில் தங்கி ஆராய்ச்சிகள் செய்வதும் சாதாரணமாகிவிட்டது. நிலவில் மனிதன் இறங்கி ஆய்வுகள் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறான். இப்பொழுது செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று இறங்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. அது நிகழும் போது நிச்சயம் அதுவும் மனிதனின் ஓர் உலக மகா சாதனையாகவும் செய்தியாகவும் இருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

செய்தியின் ஆரம்பத்தில் சில சமயம் அந்த செய்தியை வழங்கிய செய்தியாளரின் பெயர் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டிருக்கும். அதேசமயம் அந்தச் செய்தி எந்த நகரத்தில் இருந்து வழங்கப்படுகின்றது என்பதைக் குறிக்கும் வகையில் சில சமயம் அந்த ஊரின் பெயரும் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பிரதான தலைப்புச் செய்தி போக, வேறுபல செய்திகளும் அந்தப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும். அவைகளும் முக்கியமானவை என்பதால்தான் முதல் பக்கத்தில் இடம்பெறச் செய்யப்படுகின்றன. குறைந்தது ஒரு செய்திப் படமாவது தேசிய பத்திரிகைகளின் முன்பக்கத்தில் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கலாம்.

இவ்வாறு ஒரு செய்திப் பத்திரிகையானது ஒன்றல்ல, பல பணிகளைச் செய்கின்றமை புலனாகும். செய்தியை வழங்குவது மட்டுமல்ல. வாசகனின் கவனத்தை ஈர்த்து அதை வாசிக்கச் செய்வதும் பத்திரிகையின் பணியாக இருக்கின்றது.

எதுவானாலும் பத்திரிகையும்கூட விற்பனைக்காகத் தயாரிக்கப்படும் ஒரு பொருள்தான். எனவே அதனை விற்பனை செய்தாக வேண்டும். இலங்கையில் தலைநகரிலேயே ஏராளமான பத்திரிகைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. அவைகளில் சிங்களப் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் விற்பனையும் அதிகம். சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருப்பதும் அதற்கான காரணங்களில் ஒன்று. ஆங்கிலப் பத்திரிகைகளும் அதிகமாகவே விற்பனையாகின்றன. அவை நாடு முழுவதும் விநியோகமாகின்றன. தமிழ் பத்திரிகைகள் கொழும்பில் ஒரு சிலவே என்றாலும் அவை நாடு முழுவதும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் விநியோகமாகின்றன.

பிராந்தியப் பத்திரிகைகள் என்று சொன்னால் யாழ்ப்பாணத்தில் வெளியாகும் தமிழ் பத்திரிகைகளைத்தான் குறிப்பிட வேண்டும். வேறு மகாணங்களில் கொழும்பைத் தவிர தினசரிகள் வெளியாவதாகத் தெரியவில்லை.

பத்திரிகைத் தொழிலும் ஒரு வர்த்தகமே என்பதால் இவைகளுக்கிடையில் பெரும் போட்டிகள் நிலவவே செய்கின்றன. அனேகமானவர்கள் இந்தப் பத்திரிகைகளை மாத சந்தாக்களைச் செலுத்துவதன் மூலம் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்கிறார்கள். இன்னும் அனேகர் நாளுக்கு நாள் பத்திரிகை வாங்குபவர்கள் உள்ளனர். இப்படியானவர்கள் அவ்வப்போது தமது பத்திரிகைகளை மாற்றி வாங்கிக் கொள்வதுண்டு.


பத்திரிகை நிறுவனங்கள் தமது பத்திரிகைகளை விடியற்காலை எவ்வளவு நேரத்துக்கு முடியுமோ அவ்வளவு நேரத்துடன் விநியோகித்துவிட விரும்புவார்கள். ஏனென்றால் விடியற்காலையிலேயே தேநீர் குடித்தவுடன் அன்றைய பத்திரிகையைத் தட்டிப் பார்த்துவிட குடும்பத்தவர்கள் விரும்புவார்கள். வேலைகளுக்குச் செல்பவர்கள் அவ்வாறு போகும் முன்னரே பத்திரிகையைப் பார்த்துவிட விரும்புவது ஒருபுறம். போகும் வழியிலேயே பத்திரிகையையும் வாங்கிக் கொண்டு போகிறவர்களும் உண்டு. சிலர் அன்றைய பத்திரிகையில் காணப்படும் தினப்பலனைப் பார்த்துவிட்டே தமது அன்றைய தொழிலை ஆரம்பிப்பவர்களும் உண்டு. எனவேதான் தமது பத்திரிகையில் அன்றைய தினத்துக்குரிய புதிய மிகப் பிந்திய செய்திகளுடன் ஏனைய பத்திரிகைக்கு முன்னதாக அதனை வெளியிடுவதற்கு பத்திரிகை நிறுவனங்கள் முயல்கின்றன. இதில் அவைகளுக்கிடையில் பலத்த போட்டி நிலவுவது ஆச்சரியமில்லை.




த.தேனுஜா,
யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.



பு.சந்தோஸ்,
தரம் - 2,
மல்லாகம் விசாலாட்சி வித்தி.



த.தனுஜா,
தரம் - 3II
யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.



சு.எப்ரோன்
தரம் - 2C
யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தி.

## கார்

சாலையிலே போகுது கார்
சற்றே வந்து பாரு!
பெற்றோலிலே ஓடுது கார்!
இல்லாட்டி ஓடுமா கூறு?

நீயும் நானும் ஏறலாம்
நினைத்த இடம் சேரலாம்
ஊரும் உறவும் பார்க்கலாம்
நிறைந்த இன்பம் காணலாம்.

நாலு சக்கர வாகனம்
நமக்க ஏற்ற வாகனம்
ஊர் முழுக்கச் சுற்றலாம்
உனக்குச் சொன்னேன் நம்பலாம்!



## வரலாற்றில் இன்றைய தினம்

1994 - பூநகரிப் படுதோல்விக்கு வடபகுதி இராணுவக் கட்டளைப் பீடமே முழுக் காரணம் என இராணுவ நீதிமன்றம் குற்றச் சாட்டு
1994 - எம்பிலிப்பிட்டிய சம்பவம் அரசுமீது மனித உரிமை இயக்கம் கண்டனம்.
2008 - போர் நிறுத்தம் கடைப் பிடிக்கத் தயார் எனப் புலிகள் அறிவிப்பு, நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரவும் வலியுறுத்து.
2008 - மக்களிடம் குடும்பப்படம் கோருவதற்கு மன்னாரில் நீதிமன்றம் தடை விளக்க அறிக்கை சமர்ப்பிக்கவும் பொலிஸாருக்கு உத்தரவு.
2004 - தமிழாராய்ச்சி மாநாட்டின்போது சாவடைந்தவர்களுக்கு இரண்டு தனித் தனி அஞ்சலி நிகழ்வுகள்.
1863 - முதலாவது நிலக்கீழ் ரயில்பாதை லண்டனில் திறந்து வைக்கப்பட்டது.
1878 - பெண்களுக்கான வாக்குரிமைத் தீர்மானத்தை அமெரிக்க செனட் கொண்டுவந்தது.
1901 - அமெரிக்காவின் டெக்ஸாஸில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது.
1911 - அமெரிக்காவில் முதன்முதலாக விமானத்திலிருந்து போட்டோ எடுக்கப்பட்டது.
1928 - லியோன் ட்ரொஸ்கியை நாட்டிலிருந்து வெளியேற சோவியத் ஒன்றியம் பணித்தது.
1951 - முதலாவது பயணிகள் 'ஜெற் விமானப் பயணம் இடம்பெற்றது.
1951 - நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகம் திறந்து வைக்கப்பட்டது.
1962 - பெரு நாட்டில் பனிமலைச் சரிவில் 4,000 பேர் சாவு.
1962 - கவுஸ்காரன் எரிமலை சீற்றத்தில் பெரு நாட்டில் 7 கிராமத்தைச் சேர்ந்த 3,500 பேர் சாவு.
1964 - கல்கத்தாவில் இந்து முஸ்லிம் மோதல்.
1966 - இந்தியாவும் பாகிஸ்தானும் டாஸ்கன்ற் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்து.
1969 - வட வியட்நாமை அங்கீகரித்த முதலாவது மேற்கத்தைய நாடாகியது சுவீடன்.
1984 - 117 ஆண்டுகளின் பின்னர் அமெரிக்கா முழு அளவிலான ராஜரீதி உறவை வத்திக்கானும் மேற்கொண்டது.

# வழி தவறிய செம்மறி ஆடு

ஆட்டுப் பண்ணை ஒன்றில் இருந்த செம்மறி ஆடுகளுக்கு மத்தியில் ஒரு கொழுத்த செம்மறி ஆடும் இருந்தது.

மிகக் கொழுத்த செம்மறி ஆடு அது. நல்ல உயரம். க ரு . . . கரு... வென்று அடர்த்தியான ரோமம். சுற்றி வளைந்த திடமான கொம்புகள்.

பார்த்தால் மிகவும் முரட்டுத்தனம் கொண்டதாகத் தோன்றியது. ஒரு சிங்கத்தைக்கூட அது ஒரே அடியில் வீழ்த்திவிடுமோ என்று எண்ணும் அளவுக்கு அதன் தோற்றம் மிகப் பிரமாண்டமாய் இருந்தது.

அதற்கு இடையனின் கட்டுப்பாட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அசுத்தம் நிறைந்த கொட்டடியில் கயிறால் கட்டிப்போடுவான். காய்ந்து போன ஒரு கொத்துப் புற்களை போனால் போகிற தென்று போட்டுவிட்டுப் போவான்.

"இந்த நாற்றத்தைக் கூட சகித்துக் கொள்ளலாம். நல்ல புற்கள் எல்லாப் பக்கமும் இருக்கையில் காய்ந்து போன புற்களையும் இலை தழைகளையும் சாப்பிட்டுக் கொண்டு உயிர் வாழவேண்டும் என்பது தலை யெழுத்தா என்ன" என்று நினைத்தது அந்தச் செம்மறி ஆடு.



இந்தக் கொட்டடியை விட்டுவிட்டு மிகவும் உல்லாசமாக காட்டுக்குள் சுற்றித் திரிய வேண்டும். நீர்ச்சத்து நிறைந்த இலை தழைகளையும் புற்பூண்டுகளையும் உண்ண வேண்டும். அங்கும் இங்கும் ஓடியாடி விளையாட வேண்டும் என்பதே அதன் விரும்பபமாக இருந்தது.

ஒரு நாள் அங்கு இருந்த அத்தனை செம்மறி ஆடுகளையும் மேய்ச்சலுக்காக காட்டுக்கு ஓட்டிச் சென்றான் இடையன்.

பகல் வேளையில் இடையன் சற்று கண் அயர்ந்த வேளையில் அந்த கொழுத்த செம்மறி ஆடு கம்பி நீட்டிவிட்டது. ஓர் இடம் அதற்கு மிகவும் பிடித்திருந்தது.

அடர்ந்த ஏராளமான மரங்கள். நீர்ச்சத்து நிறைந்த பசுமையான இலைதழைகள். முறுக்கு போல் நொறுக்.... நொறுக்... என்று சாப்பிட பசுமையான காட்டுக் கொடிகள் அருகில் பளிங்கு போல் சலசலத்து ஓடும் நீரோடை. எப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருக்கும் ரம்மியமான சூழ்நிலை.

இந்த இடம் சொர்க்கம். இந்த இடம் எனக்கே சொந்தம்' என்று மகிழ்ச்சியுடன் இருக்கும் அங்கும் தாவிக் குதித்தது.

பிறகு தனக்குப் பிடித்தமான இலைதழைகளை உண்ண ஆரம்பித்தது. வயிறு நிரம்பியதும் அதற்கு ஏதோ ராஜகம்பீரம் வந்து விட்ட உணர்வு.

திருமிருடன் அங்கும் இங்கும் மெல்ல அலைந்தது.

இதை புதர் மறைவில் நின்றிருந்த ஒரு புலி பார்த்துவிட்டது.

'அட! இது என்ன மிருகம்? கொழு கொழுவென்று கொழுத்த உடல். அடர்த்தியான ரோமம். முரட்டுத் தனமான நடை. சுற்றி வளைந்த திடமான கொம்புகள்.. இதுபோன்ற மிருகத்தை நான் பார்த்ததே இல்லையே.. வாவ் என்ன ஸ்டைல்!

கொம்புகளால் ஒரு குத்துக்குத்தினால் குடல் எல்லாம் எகிறிவிடுமே. பார்த்தலே குலை நடுங்குகிறது. ஓசைப் படாமல் இடத்தைக் காலி செய்து விடுவோம். சற்று சலனம் கேட்டாலும் நம்மை அடித்துக்கொன்டு தின்றுவிடும். மெல்ல நழுவி விடுவோம்!" என்று நினைத்துப் பயந்த அந்தப் புலி ஓசைப் படாமல் அந்த இடத்தை விட்டு நழுவிச் சென்றது.

மறுநாள்...

அந்தப் புலி மீண்டும் அந்த செம்மறி ஆட்டை ஒரு இடத்தில் பார்க்க நேர்ந்தது.

அப்பொழுது அந்த ஆடு இலைதழைகளை மேய்ந்து கொண்டிருந்தது.

அதைக் கவனித்த புலி திகைத்தது.

"இதென்ன. இத்தனை முரட்டுத் தனமாக இருக்கும் இந்த மிருகம் வெறும் இலைதழைகளைத் தின்கிறதே? இலை தழைகளை உண்ணும் மிருகங்கள், நம் போன்றவர்களுக்கு உணவாகுவதற்கென்றே படைக்கப்பட்டது அல்லவா.

"அப்படியானால் இந்த மிருகத்தைப் பற்றி நம் கணிப்பு தவறு. இதன் தோற்றத்தைப் பார்த்து பயந்து போய்விட்டோமே அது பலமே இல்லாத மிகவும் சாதாரணமான மிருகம்தான். அதன் மாமிசம் மிகவும் சுவையுள்ளதாய் இருக்கும். என் எமப்பசிக்கு சரியான இரை. பார்த்து விடுவோம் ஒருகை. என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்ட புலி சுற்றும்முற்றும்ஒருமுறை பார்த்துக் கொண்டது. பிறகு மெல்ல மெல்ல செம்மறி ஆட்டை நோக்கி முன்னேறியது.

வரம்போகும் ஆபத்தை உணராத செம்மறி ஆடு இலை தழைகளை ருசித்துத் தின்பதிலேயே கவனமாக இருந்தது. அதன் பின்னே ஓசைப்படாமல் வந்து நின்ற புலி இமைக்கும் நேரத்தில் அதன் மேல் பாய்ந்தது. பிறகு ஒரே அடியில் அதைக் கீழே வீழ்த்தியது.

மரண தறுவாயில் ஆடு நினைத்தது.."எனது தகுதிக்கு மீறிய ஆசைக்கு எனக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது. உயிருக்கும் உணவுக்கும் உத்தரவாதமுள்ள கொட்டடி எங்கே.. உணவிருந்தும் உயிருக்கும் உத்தரவாதமில்லாத இந்தக் காடு எங்கே... எனக்கு இந்தத் தண்டனை தேவைதான்!அடுத்த வினாடி.. ஆட்டின் உயிரைப் பறித்த புலி அதன் உடலை ருசித்துச் சாப்பிடத் தொடங்கியது.

## விடுகதைகளும் விடைகளும்

1. நோயின்றி நாளும் மெலிவாள், கோள் சொல்லி நாளும் கழிவாள் - அவள் யார்?
- நாள்காட்டியின் தாள்
2. மழைக்காலம் வந்தாலே மகராசி சங்கீதம் தான் - அவள் யார்?
- தவளை
3. அரைசாண் மனிதனுக்கு வயிறு நிறைய முட்டை - அவன் யார்?
- வெண்டிக்காய்
4. சிவப்பு பைக்குள் சில்லறைகள் - அது என்ன?
- மிளகாய்
5. உலகமெங்கும் சுற்றும் அவனை ஒருவரும் கண்டதில்லை - அவன் யார்?
- காற்று
6. அக்கா தங்கை உறவுண்டு, அருகருகே வீடு உண்டு. கிட்டக்கிட்ட வந்தாலும் தொட்டுக் கொள்ள மாட் டார்கள் - அவர்கள் யார்?
- கண்கள்
7. வந்தால் கொடுக்கும், வராவிட்டால் கெடுக்கும் - அது என்ன?
-மழை
8. வயிறு முட்ட சாப்பிட்டால்தான் நிமிர்ந்து நிற்பான் அவன் யார்?
- பலூன்
9. உழைக்க உழைக்க உடலெல்லாம் தோன்றும் அது என்ன?
- வியர்வை
10. வாலிலே எண்ணெய், தலையிலே கொள்ளி அது என்ன?
- விளக்குத் திரி
11. பந்தலைச் சுற்றி பாம்பு தொங்குது அது என்ன?
- புடலங்காய்
12. ஊளையிட்டுக் கொண்டே ஊரைச் சுமக்கும் அது என்ன?
- புகைவண்டி
13. கடல் நீரில் மறைந்திருக்கும் கல் அது என்ன கல்?
- உப்புக்கல்
14. காலையில்உறவாடிவருவான், மாலையில் பறந்தோடிப் போவான் அவன் யார்?
- சூரியன்

# பெண்களின் வாழ்க்கை

# முடிவற்ற போராட்டம்



“ ஒரு திறமைசாலியான பெண் என்பவள் ஆலமரமாக வளர்ந்து அனைத்து பெண்களுக்கும் நிழலை கொடுக்க முடியும்

பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெருமைப்படுகிறோம். சுனிதா வில்லியம்ஸ் என்ற பெண்மணி பூமியில் மட்டுமல்லாமல் விண்வெளியில் மாதக் கணக்கில் நடமாடினாள் என்ற பெருமை அனைவரையும் வியக்க வைத்தது. பெண்கள் அரச துறையில் பெரிய பதவிகள் வகிக்கிறார்கள். எந்தத் துறையையும் பெண்கள் விட்டு வைக்கவில்லை. அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இப்படிப் பெண்களின் திறமைகளை அடுக்கடுக்காக அடுக்கிக் கொண்டே போகலாம்.

கிராமங்களில் விவசாயத்துக்கு வழியில்லாமல், ஆண்கள் வேலை வெட்டியில்லாமல் பொழுதைக் கழிக்கிறார்கள். அங்குள்ள பெண்கள் தான் அதிகபட்சமாக வேலை செய்து குடும்ப பாரத்தைச் சுமக்கிறார்கள். கிராமப் புறங்களில் பெண்களின் நிலை இதுவரையில் உயரவில்லை, முன்னேற்றமடையவில்லை.

பெண்கள் அதிகாரப் பதவியிலிருந்தும் அநீதிகளும் கொடுமைகளும் பெண்களுக்கு நடந்து கொண்டு தான் இருக்கின்றன. பெண்களின் வாழ்க்கையில் இந்தப் போராட்டம் சளைக்காமல் நிகழ்ந்து வருகின்றன.

இதற்கு முடிவே இல்லையா அல்லது முடிவு இருந்தும் அதனைச் சரிவரப் பயன்படுத்த இயல வில்லையா? பெண்கள் முதலில் வீட்டில் நிகழும் வன்முறைகளை எதிர்க்கக் கூடிய திறமையையும் மன உறுதியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வீட்டிலிருந்து தொடங்கிய இந்தப் புயல் நாட்டிலுள்ள பெண்களையும் ஒன்று திரட்டி நடக்கும் அநீதிகளையும், வன்முறைகளையும் எதிர்த்து போராடி வெற்றியடைய வேண்டும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெண்களே பெண்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். ஒரு திறமைசாலியான பெண் என்பவள் ஆலமரமாக வளர்ந்து அனைத்துப் பெண்களுக்கும் நிழலைக் கொடுக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. பெண்மையைப் போற்றுவோம், பெண் சக்தியை உருவாக்குவோம், பெண்களை மதிப்போம்.

- சுதர்சனா



# பெண்களின் தனித்திறமை



ஆண், பெண் என்ற பிரிவெல்லாம் இப்போது போயே போச்சு! ஆணுக்குரிய அனைத்து வேலைகளையும் பெண்கள் செய்கின்றனர். ஆனால் பெண்ணுக்குரிய அனைத்து குணங்களையும் ஆண்கள் பெற்றிருக்கின்றனரா?. எந்த இடத்திலும், எந்தச் சூழ்நிலையையும் தனக்கு ஏற்றாற்போல் மாற்றிவிடும் பக்குவமும், திறமையும் பெண்களுக்கு மட்டுமே உண்டு. எவரையும் பார்த்த மாத்திரத்தில் அவர்களின் குணங்களை ஓரளவு புரிந்து விடும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் வசீகரமும் பெண்களிடம் இருந்தால் இன்னும் சிறப்பு. அழகும், அறிவும், அடுத்தவர்களைப் புரிந்து கொள்ளும் குணங்களும், நல்ல பழக்க வழக்கங்களும் உள்ள பெண்களுக்கு எப்போதுமே முன்னேற்றம் என்பது தொட்டு விடும் தூரம் தான்.

நிர்வாகத் திறன் என்பது பெண்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. குடும்ப நிர்வாகம், அலுவலக நிர்வாகம் மற்றும் தொழில் நிர்வாகம்என்பதுபொறுமை குணத்துடன் செயற்படும் பெண்களுக்குக் கடவுள் கொடுத்த வரம் என்றும் கூறலாம்.

தலைமைப் பண்புக்குரிய குணங்களான பணிவு, துணிவு, கனிவு என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்துள்ளதால் பெண்கள் தலைமையை பெரும்பாலான நிறுவனங்கள் ஏற்றுக் கொள்கின்றன. அனைத்து விடயங்களையும் திறந்த மனதுடன் பேசுகிறேன் எனக் கூறிக் கொண்டு, தேவையில்லாத நபரிடம், தேவையில்லாமல் பேசும் பலவீனம் பெண்களுக்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக புகை, மது, சூது போன்ற கெட்ட விடயங்களிலும் பெண்களுக்கு நாட்டமில்லாததால் இவர்களுடைய முன்னேற்றத்துக்கு எந்தத் தடையும் இல்லை. இப்படி கல்வி, விளையாட்டு, தொழில் மற்றும் வேலை என எந்தத் துறையாக இருந்தாலும் அதில் தனி முத்திரை பதித்து வருகின்றனர் பெண்கள்.

## கொடுமை

பெண்கள் இல்லா உலகம்
இப்படித்தான் இருந்திடுமோ
பெண்ணை மனதில் மதித்தால்
அவை மீண்டும் வந்திடுமோ

ஆணைப் படைத்த இறைவன்
துணையாக பெண்ணைப் படைத்தான்
பெண்ணைப் படைத்த இறைவன்
கூட கொடுமையையும் படைத்தான்

ஏன் இந்த அவலம்
பெண்ணுக்கே அதிகம்
உயிரையும் பறிக்கும்
பரிதாபம் தினமும்

கல்லறைக்கும் உள்ளே
பெண்ணுக்கு கஷ்டம்
அது ஏனோ

பெண் என்றும் தலைகுனிய வேண்டாம்
என்றும் தடுமாறவும் வேண்டாம்
பெண்ணுக்கு மதிப்பு
அவள் ஒழுக்கத்தில் இருக்கு

ஆண் அதிகாரமும் வேண்டாம்
உயிரைக் கொடுமை செய்ய வேண்டாம்
ஆணுக்கு மதிப்பு
என்றும் பெண்ணிடத்தில் இருக்கு.

# பார்க்கக் கூடிய படம்






குழந்தை என்னும் அற்புதம் நமது வாழ்வில் என்னென்ன அதிசயங்களை நிகழ்த்தும் என்பதைச் சில குடும்பங்கள், ஒரு பள்ளிக்கூடம், ஒரு அநாதை ஆசிரமம் ஆகியவற்றின் பின்புலத்தில் சொல்ல முயன்றிருக்கிறார் இயக்குநர் சார்லஸ்.

ஏதோ ஒரு விதத்தில் குழந்தை குறித்த ஏக்கங்களும் சிக்கல்களும் மகிழ்ச்சிகளும் கொண்டவர்கள் தாம் இந்தப் படத்தின் கதை மாந்தர்கள். குழந்தை என்னும் அம்சம் ஒவ்வொரு குடும்பத்தின் உணர்வு தளத்தில் என்னவாக உருமாறுகிறது என்பதைக் காட்சிப்படுத்தியபடி நகரும் படம். மையப் பிரச்சினையாக ஒரு பள்ளிக்கூடத்தின் நாடகத்தை முன்னிறுத்துகிறது. அந்த நாடகத்தின் மையமும் ஒரு குழந்தைதான்.

குழந்தை பிறக்கவில்லையே என்று ஏங்கும் ஆசிரியை, ஆண் குழந்தைக்காகத் தவிக்கும் ஓட்டோ ஓட்டுநர், பிறந்த குழந்தையைப் பார்க்கக்கூடத் தன் கணவன் வரவில்லையே என்று தவிக்கும் தாய், வயிற்றில் கருவையும் பொறுப்பற்ற காதலன் குறித்த வேதனையை மனதிலும் சுமக்கும் இளம் பெண், பெற்றோரின் பொறுப்பற்ற சண்டையால் பாதிக் கப்படும் சிறுவன், புத்திர சோகத்தால் தவிக்கும் இணையர், நாடகத்தில் குழந்தை இயேசுவாகத் தோன்ற உண்மைக் குழந்தையை அழைத்து வர வேண்டுமே என்று தவிக்கும் மாணவர்கள் ஆகியோரின் உணர்ச்சிகள் வலுவாகப் பதிவாகியிருக்கின்றன. இவற்றினிடையே அநாதை ஆசிரமம் ஒன்றின் அன்றாட வாழ்வும் இயல்பாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

தனித்தனியாக இருக்கும் இந்தக் கதைகளின் பொது அம்சம் குழந்தை என்றாலும் அந்தக் குழந்தை ஒரே குழந்தை அல்ல. வெவ்வேறு குழந்தைகள். எனவே இந்தக் கதைகளை இணைக்க வேறு நூல்கள் தேவைப்படுகின்றன. அந்த நூல்களை உருவாக்கிய விதத்தில் இயக்குநர் அதீதமான சுதந்திரத்தை எடுத்துக்கொண்டுள்ளார்.

பரஸ்பரம் சம்பந்தமே இல்லாத நபர்களைத் தற்செயல் நிகழ்வுகள் இணைத்து வைப்பது இயற்கைதான். ஆனால் தற்செயல் நிகழ்வுகள் இயல்புத் தன்மையை மீறிச் செல்லும்போது நம்பகத்தன்மையை இழந்துவிடுகின்றன.

வேண்டாத குழந்தை கூவத்தில் போடப்படுவது நம்பகமான நிகழ்வுதான். ஆனால் குழந்தை ஒன்றைத் தேடி அலையும் சிறுவர்கள் கண்ணில் அந்தக் குழந்தை படுவது தற்செயலின் மந்திரக் கணம். இப்படி ஒரு இடத்தில் நடந்தால் அதை விட்டுவிடலாம். இதே அதிசயம் திரும்பத் திரும்ப நிகழும்போது தற்செயல் என்பதே திரைக்கதையை ஓட்டும் உத்தியாக மாறிச் செயற்கையாக வெளிப்படுகிறது.

வயிற்றில் நிறைமாதக் குழந்தையுடன் தற்கொலை செய்துகொள்ள ஒரு பெண் முயற்சி செய்ய, ஆண் குழந்தைக்கு ஏங்கும் தம்பதியின் கண்ணில் அவள் படுவதும் அவளுக்கு ஆண் குழந்தை பிறப்பதும் தற்செயல் உத்தியின் அதீதப் பயன்பாடுதான்.

குழந்தையைக் கடத்துவது என்னும் விவரீத முடிவைச் சிறுவர்கள் எடுப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதுதான். ஆனால் பிறந்து இரண்டு மூன்று நாள்களே ஆன ஒரு குழந்தையைக் கடத்திச் செல்லும் முறையில் வேடிக்கையும் விறுவிறுப்பும் இருக்குமளவுக்கு நம்பகத் தன்மை இல்லை.

நாடகம் நடக்கும் நேரத்தில் குழந்தை காணாமற்போகும் உப நாடகமும் இதே ரகம்தான். ஜான் விஜய்யின் பாத்திரம் வலிந்து திணிக்கப்பட்டதாக உள்ளது. விவாகரத்துக்கு விண்ணப்பித்திருக்கும் இணையர் ஒன்றிணையும் காட்சியும் நாடகத்தனமாகவே இருக்கிறது. சதுரங்கப் போட்டி தொடங்கியதுமே அதன் முடிவு என்ன என்பது தெரிந்து விடுகிறது.



இந்தக் குறைகளை மீறியும் படம் பார்வையாளர்களைக் கவர்கிறது என்றால் அதற்குக் காரணம் இயக்குநர் உணர்ச்சிகளைக் கையாண்ட முறையும் நடிகர்கள் அவற்றை வெளிப்படுத்திய முறையும் தான். பெரும்பாலான காட்சிகளில் வெளிப்படும் உணர்ச்சிகள் மனதைத் தொடுகின்றன. குறிப்பாக, இலங்கைத் தமிழ் இணையரின் புத்திர சோகம். ஈழத்தைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் தனிமையின் வெறுமையில் அமர்ந்திருக்கும் காட்சி படத்தின் சட்டகத்தைத் தாண்டி விரியும் யதார்த்தச் சித்திரம். இந்தச் சித்திரம் எழுப்பும் சலனங்கள் ஆழமானவை.

கருணாஸின் பாத்திரப் படைப்பு கச்சிதம் என்றால் அவருடைய நடிப்பு அற்புதம். கருணாஸுக்குள் இருக்கும் இவ்வளவு திறமையான நடிகரை இயக்குநர் சார்லஸ் அழுத்தமாக அடையாளப்படுத்தியிருக்கிறார். இலங்கைத் தமிழ்ப் பெண்ணாக வரும் ரித்விகாவின் நடிப்பும் குறிப்பிடத்தக்கது.

தம்பி ராமய்யா, வினோதினி, கருணாஸ், ரித்விகா ஆகியோரின் தேர்வு மிகவும் பொருத்தமானது. கப்டன் சாணக்யா, யாழினி, நேஹா பாபு, ராஜேஷ் குணசேகர் ஆகிய சிறுவர்கள் நன்றாக நடித்திருக்கிறார்கள். படத்தை விறுவிறுப்பாக ஓட்டிச் செல்லவும் குழந்தைகள் பற்றிய படத்துக்கான உணர்வைப் படம் முழுவதும் ஏற்படுத்தவும் இவர்கள் பெரிதும் பயன்பட்டிருக்கிறார்கள். குழந்தைகளை அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசவிடாதது ஒரு பெரிய ஆறுதல்.

விஜய் ஆம்ஸ்ட்ராங்கின் சிறப்பான ஒளிப்பதிவு படத்தின் ஆதார பலம். வேத்சங்கர் சுகவனத்தின் இசை படத்தின் மற்றுமொரு சிறப்பு. அழகு குட்டி செல்லம் என்ற பாடல் முதல் முறை கேட்கும்போதே மயக்குகிறது. இந்தப் பாடலைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக் கொள்ளும் விதம் மனதை அள்ளுகிறது.

அழகு குட்டிச் செல்லம் குழந்தைகளை மையமாகக் கொண்ட படம். முழுக்க முழுக்கக் குழந்தைகளின் உலகை வெளிப்படுத்தும் படம் அல்ல. குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பொதுவான உலகின் சில பகுதிகளைப் படம் சித்திரிக்கிறது. நுண்ணுணர்வுடனும் கவித்துவத்துடனும் சில காட்சிகள் பதிவாகியிருக்கின்றன. தனித்தனிக் கதைகளை இணைத்த விதத்திலும் சில கதைகளை வடிவமைத்த விதத்திலும் நம்பகத்தன்மையைக் கூட்டியிருந்தால் படம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். கலாபூர்வமான சாதனையாகவும் இருந்திருக்கும்.

# பொங்கலோ பொங்கல் தொங்கலோ தொங்கல்




■ கலாபூசணம் மு.மாசிலாமணி

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பர். இந்தக் கூற்று எவ்வளவு உண்மை என்பதை நாம் எமது நாட்டில் நடந்த போர் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. போர் எமக்கு இழப்புகளைத் தந்தது போலவே ஓரளவுக்கு நன்மையையும் தந்தது என்பதும் மறுக்க முடியாது. இளைய தலைமுறையினர் பலர் அகதிகளாகத் திரைகடல் தாண்டி தஞ்சம் அடைய அந்த நாட்டு அரசுகள் அரவணைத்து தொழில் புரியும் அனுமதியையும் வழங்கி உதவின; உதவி வருகின் றன. இதனால் யாழ். குடா உட்பட நாட்டின் பல பகுதியினர் நன்மை அடைகின்றனர்.

நான் சொல்ல வரும் கதையும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் என்று எண்ணுகின்றேன். ஐயாத்துரை குடும்பத்தில் இரு மகன்மார். மூத்தவனுக்கு ஓஎல் தடையைத் தாண்ட முத்துக்குமாரசுவாமி மாஸ்ரர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. மாஸ்ரர் முயற்சிக்க, அவனுடைய தாய் தங்கம்மா புறோக்கர் இராசதுரையின் உதவியை நாடி 10 லட்சம் கட்டி சுவிஸ்க்கு அனுப்பிவிட்டா. பள்ளிக்கூடத்தில் பாட நேரத்தில் பள்ளி கொண்டாலும் விளையாட்டுப் போட்டிகளில் தடைதாண்டும் விளையாட்டில் முதலிடம் பெற்ற அனுபவம் அவனுக்கு பல நாடுகளைத் தாண்டி சுவிஸிக்குள் நுழைய உதவியது.

பின் கதவால் போனாலும் முன்கதவால் போனாலும் "போனால் போகட்டும் போடா... நீ வாடா" என சுவிஸ் அவனை அணைத்துக் கொண்டது. பத்து ஆண்டுகள் மாடாய் உழைத்தான். அதனால் தங்கம்மாவின் வீட்டு அடுப்புப் புகைந்தது. சின்னவன் படிப்பில் கெட்டிக்காரன். அண்ணன் அனுப்பும் பணத்தால் யாழ். கம்பஸில் இடம்பிடித்து கலைத்துறையில் படிக்கிறான். தங்கம்மா தன்ரை மனுசனை மதிப்பதில்லை. மூத்த மகனை அடிக்கடி புகழ்ந்து "அவன் அங்கை மாடாய் உழைச்சு அனுப்புறான். நீங்கள் இஞ்சை சும்மா இருந்து மூண்டு நேரமும் மூக்குமுட்டச் சாப்பிடுறியள்" என பேசுவா. பாவம் ஐயாத்துரையர் பொறுத்துக் கொள்வார். ஒரு நாள் சுவிஸில் இருந்து டெலிபோன் வந்தது. மூத்தவன் "அம்மா நாங்கள் தைப்பொங்கலுக்கு வருகிறோம். இந்த முறை வடிவாய் பொங்கலாம் என்று சொல்ல "தங்கம்மா தலைகால் தெரியாத புழுகத்தில் தடல்புடலாக பொங்க ஆயுத்தம்.

பொங்கலும் வந்தது மூத்தவன் ஓட்டோவில் வந்து இறங்க தங்கம்மா இளையவனுக்குச் சொன்னா "உங்கை பார் பொங்கலுக்கு கொண்ணை ஒரு வெள்ளைக்காரப் பொடியனையும் கூட்டிக்கொண்டு வாறான்" எண்டா. இளையவன் சொன்னான் "அம்மா அது பொடியன் இல்லை. ஜீன்ஸ் போட்ட பெட்டை" ஐஞ்சும் கெட்டு அறிவு கெட்ட தங்கம்மா "உது ஆர் மோனை" எனக் கேட்க, "இது என்ரை மனையாள்" என மகனும் செந்தமிழில் சொல்ல, ஐயாத்துரையர் சொன்னார் "மாடாய் உழைக்கிறவனுக்கு அடுத்த நாளும் பொங்க வேணும்."

வானொலியில் "மணமகளே மணமகளே வாவா. உன் வலது காலை எடுத்து வைத்து வாவா" எனப் பொருத்தமான பாட்டை ஒலிக்க விட்டிருந்தனர். இந்தப் பாட்டின் அர்த்தம் புரியாத பெண் "DARLING WHAT IS THE MEANING OF THIS SONG (அன்பே, இந்தப் பாட்டின் பொருள் என்ன?) எனக் கேட்க மாப்பிள்ளை சொன்னார் "BRIDE BRIDE COME COME PLACE YOUR RIGHT LEG AND COME" என்றான் அவன்.

கலாபூசணம் பகிடிப்பரமர்

# புகைப்படக் கலைஞர் புண்ணியலிங்கம்

## அறிமுகப்படுத்துகிறோம் - 03

"என்னைப் பார்த்தால் பரிதாபம்; எனக்குத்தானா சுமை மோசம்" சினிமா மெட்டில் ஒரு பாடலை வாயுள்ளே குதப்பி மெண்டு இசைத்தவாறே கமரா ஒன்றைச் சுமந்து கொண்டே..... அதோ! சைக்கிளில் செல்கிறாரே, அவர்தான் ஊரில் இன்று பிரபலமாகிக் கொண்டுவரும் புகைப்படக் கலைஞர் புண்ணியலிங்கம்.

அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த முன்னர், அவருக்கு அறிமுகம் இல்லாத பத்திரிகை ஆசிரியர்களே இல்லை என்னும் இரகசியத்தையும் கூறிவிடுகிறேன். அதெப்படி என்று நீங்கள் வாயைப் பிளப்பது தெரிகிறது; இலையான் நுழைய முன்பாக வாயை மூடுங்கள், சொல்கிறேன்.

அதெப்படியெண்டா கேட்கிறீர்கள்? அழையாத வீட்டு விருந்தாளி என்பார்களல்லவா? அதைப்போல இவரை அழைக்காமலே ஒவ்வொரு பத்திரிகைக் காரியாலயங்களின் படிக்கட்டுக்களையும் எண்ணிக்கையின்றி ஏறி இறங்கத் தயங்க மாட்டார். சாத்தியம் ஆவதைப் பற்றி கூறவும் வேண்டுமா?

பத்திரிகை நிலையங்கள் இயங்கும் நகரிலே பிடிக்கப்பட்ட, பிடிக்கப்படுகின்ற செய்திப் படங்களுக்கு நிலையங்கள் கொடுப்பனவு வழங்கமாட்டா. அப்படி என்றால் புகைப் படக் கலைஞர் பிரபல்யம் பெறுவதற்கு நிறையச் செலவு செய்ய வேண்டி இருக்கும் என்றெண்ணுகிறீர்களா? அதுகளுக்கு எல்லாம் ஒரு தந்திரோபாயத்தைக் கையாள்வார்.

பத்திரிகைகளில் தமது புகைப்படங்கள் வெளிவருவதென்றால் வானத்துக்கே துள்ளி எழும்பும் பெருவிருப்புக் கொண்டோர் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களை நாடி உங்கடை படங்களைப் பத்திரிகையில் வரவைக்கிறேன். இவ்வளவு செலவாகும் என்று வறுகுவதுடன், திருவிழாக் காலங்களில் அயலூர்கள் சென்று புகைப் படங்களைப் பிடித்துப் பத்திரிகைகளுக்குக் கொடுத்தும் பணம் பண்ணி விடுவார் அவர்.

இதைவிட வேறை சம்பாத்தியம் ஆருக்குக் கிடைக்கும்? அதிலவர் கைதேர்ந்த பெரியசுட்டி. இன்னொரு முக்கிய சங்கதி இவரைப் பற்றிச் சொல்லலாம்.

பணத்தைப் புகைப்படக் கலைஞர் அவ்விதமாகச் சம்பாதித்தாலும், அது அவருக்குப் பிரதானமல்ல. புகழ்தான் தேவை! அதற்காக மற்றவர்களிடம் சுரண்டிச் சம்பாதித்த பணத்தைத் தூசியாகப் பறக்க விடுவார்.

ஆதலால் புகைப்படக் கலைஞரைப் பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரும் தாராள மனம் படைத்தவராக்வே கருதி இருந்தனர். செலவு இல்லாமல் பத்திரிகைக்குச் செய்திப் படங்கள் கிடைப்பதுடன் தேநீர், சிகரெட், சில சமயங்களில் மதிய உணவும் கிடைக்கிறதல்லவா?

புகைப்படக் கலைஞரின் விசேட குணம் யாதெனில், வஞ்சகம் இல்லாமல் ஒரே செய்திப் படத்தை அத்தனை பத்திரிகைகளுக்கும் பிரதி அடித்துக் கொடுத்து விடுவார். அப்பப்பா, அவரது மனம் அத்தனை விசாலமானது.

புகைப்படக் கலைஞர் புண்ணியலிங்கத்தைக் காக்கா பிடிப்பவர்களும் நிறையவே இருக்கிறார்கள். யார் எனக் கேட்கிறீர்களா? அது பரம இரகசியம். ஓரிரு நாடகங்களில் நடித்து விட்டு வேறு வாய்ப்புகளே கிடைக்காத நடிக, நடிகையர் இருக்கிறார்களல்லா? அவர்கள் காக்கா பிடித்தால் அவரது கமராவுள் நுழையலாம்.

அவரது புகைப்படக் கருவியினுள் நுழைந்தவர்களின் பிம்பங்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் காட்சிகளே அலாதி. சின்னச்சின்ன புதுமுகக் கலைஞர்களிடம் இவருக்கு இருக்கும் மதிப்பை அளவிட அலகுகளே கிடையாதெனச் சொல்லி விடலாம்.

இளம் கலைஞர்களிடம் இவ்விதம் பெருமதிப்பைப் பெற்றுத் திகழும் புகைப்படக் கலைஞர், பிரபல சினிமா நட்சத்திரம் சந்திராவின் பின்னே நான்காய் வளைந்து, முதுகை முடக்கி, கரங்கள் சலாம்போட்டபடிசெல்கின்றாரே... ஆமாம் அவளது அரைத் துகிலுரிப் படமொன்றைத் தனது கருவியினுள் திணித்துக் கொள்ளவே!



என்ன எமது புகழ் பூத்த புகைப்படக் கலைஞரா அப்படிப் போகிறார் எனக் கேட்டு விடாதீர்கள். அவரென்ன... அப்பனுக்கு அப்பனான புகைப் படக்கலைஞர்களுக்கே அது பரம்பரைப் பழக்கதோசமாக இருக்க இவரென்ன பிரமாதம்?

அனேகமாக நீங்கள் இவரைக் கண்டிருப்பீர்கள். வீதிகளில் ஏதாவதொரு சிறியதோ பெரியதோ கூட்டம் கூடி நின்றால், நிச்சயம் அதில் இவரும் ஒருவராக நின்றே ஆவார். சிறிய ரகளைகளோ, விபத்துக்களோ, நாடகங்களோ, கச்சேரிகளோ எது நடந்தாலும் அங்கே நிற்பார். இப்பவெல்லாம் புறக்கணிப்பு, ஆரவாரம், பேரணி என்பவற்றுக்குக் குறைவில்லையே. அப்படி ஏதாவது நாட்டில் நடந்து விட்டால்.அவற்றைப் பிடித்துக் கொள்ள புண்ணியலிங்கமும் பிரசன்னமாகி விடுவார்.

அவரது கைகளில் கிடைத்த கமராக் கருவி போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்ததோ? குரங்கின் கையில் கிடைத்த பூமாலைதான் போங்கள்... புண்ணியலிங்கம் செய்த புண்ணியமோ? இத்தகையவரிடம் புகைப் படக்கலை இன்று எந்தளவுக்கு உயர்ந்துள்ளது என்றால் போதும். கீழைத் தேச மேலைத் தேசப் புகைப்படக் கலைஞர்களின் பெயர்களை வரிசைப் படுத்தத் தொடங்கினால் இரவுச் சாப்பாடு , தூக்கமெல்லாம் கெட்டுது பாருங்கோ... அந்தளவுக்கு தொழில் பற்று. இப்படியே உங்களுக்கு எழுதிக் கொண்டிருந்ததில் என்ரை முகத்தைக்கூடக் கவனியாமல் விட்டுவிட்டன். முகத்து மயிர் தன்பாட்டில் வளர்ந்தே போச்சுது... ஆமாம் உங்களுக்கு சலூன்காரர் சடகோபனைத் தெரியுமா? அடுத்து அவரை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன். தயாரா?

## சொற்சிலம்பம் - போட்டி இல: 402

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | ■ | 5 |
| | ■ | 6 | | | ■ | 7 | |
| 8 | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | | ■ | 17 | 18 | |
| 19 | | | ■ | 20 | ■ | 21 | |
| | ■ | 22 | | | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................

பூரணமான தபால் விலாசம்: .............................................

.......................................................................

கையொப்பம்:............................................................

### இடமிருந்து வலம்

1. கட்டுப்பாட்டில்லாத அடாவடித்தனம்.
6. ஒரு பெண்பாற் பெயர்
7. ஆறாவது ஒருமை உருபு
8. செம்பு
10. நாற்காலி
11. நாள்
12. இரத்தம்
13. முடிவு வரும்
15. மக்களுக்கு சேவை செய்தல். இவருக்கு சேவை செய்த மாதிரி
17. தானிய அளவீட்டு அலகு
19. திடீரென என்பதைக் குறிக்கும்
21. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்க்குமாறான ஏவல் சொல்.
22. பாதுகாப்புத் தருகின்றவன்

### மேலிருந்து கீழ்

1. ஒரு பிரபந்தம்
2. பெரும் பறை வகைளில் ஒன்று
3. நேரத்துடன் தொடர்புடையது
4. தீய நோக்கத்துடன் தீட்டும் திட்டம்
5. கண்ணகி இந்த நகரத்தை எரித்தாள் என்பது வரலாறு
7. விருந்தினர்
9. தேவையற்று தாமதப் படல்
10. இனிப்புச் சுவை தரும் தாவரம்
12. சிஷ்யருக்குப் பெரியவர்
13. சாப்பாடு
14. கதையில் நாயகனின் எதிரி இவன்
15. சுவர்
16. ஓர் அரிசி ரகம்
18. எல்லா
20. தோழன்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 400 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1)தாமதம் (4)நகாசு (7)கருவி (8) தகுந்த (9) சாவித்திரி (11) தன் (12)தரித்தல் (14)திகில் (16) திரு (18) ஆரம்பம் (20) சக்கரம் (22) சுப (23) மகுடம் (24) அமைதி

### மேலிருந்து கீழ்

(1)தாகசாந்தி (2)மருவி (3)தவித்தல் (4)நகு (5)காந்தல் (6)சுதன் (8) தரித்திரம் (10)திரி (13) தரும் (15) கிழக்கு (17)தம்பதி ((18) ஆரம் (19) பசுமை (20) சம (21)கட

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

### போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 400 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
அகிலா ஆனல்ட்,
இல. 61, பாரதி வீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
அ.தேவகரன்
மே/பா ந.அமுதலிங்கம்,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

**3 ஆம் பரிசு**
து.குலநாயகம்,
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
திருமதி ச.லிங்கமூர்த்தி,
அமெரிக்க மிசன் பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

**5 ஆம் பரிசு**
ஜே.ராஜாராம்,
'மிதிலை', ஆத்தியடி,
பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

சி.சத்தியேந்திரா,
இல.25, நடுத்தெருலேன்,
அரியாலை.

கா.கார்த்திகா,
இல.13, செட்டித்தெருலேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

செ.கரிஷக்சன்,
இல. 35, ஆறாம் ஒழுங்கை
மன்னார் வீதி, வேப்பங்குளம்
வவுனியா.

சொற்சிலம்பம் போட்டி இல.402 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (20.01.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.402இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 24.01.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 400 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# 2016 அரசியல் சவால்கள்

எம்.ஐ.முபாறக்

**2015** ஆம் ஆண்டு சிறுபான்மை இன மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கைமிக்க ஆண்டாக-நிம்மதியளித்த ஆண்டாக அமைந்ததோ அவ்வாறு 2016ஆம் ஆண்டும் அமையும் என நம்பப்படுகின்றது.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து மைத்திரி - ரணில் அரசால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நேய சேவைகள் இப்போது மீட்டிப் பார்க்கப்படுகின்றன. அதற்காக நாடு முழுவதும் விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றிய அரசாக - மக்கள் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வு வழங்கிய அரசாக - ஜனநாயக செயற்பாடுகளுக்கு அடிபணிந்த அரசாக - மனித உரிமைகளை மதித்த அரசாக - சிறுபான்மை இன மக்களின் கோரிக்கைகளை முடியுமானவரை நிறைவேற்றிய அரசாக இந்த மீட்டலின்போது நாம் இந்த அரசைப் பார்க்கின்றோம்.

மகிந்த அரசு தேர்தல் வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்றிடாத நிலையில், இந்த அரசு ஓரிரு மாதங்களுக்குள்ளேயே கொடுத்த வாக்குறுதிகளில் சிலவற்றை நிறைவேற்றி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டன. வாழ்க்கைச் செலவின அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன. சிறுபான்மை இன மக்கள் மஹிந்த ஆட்சியில் அனுபவித்த கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன.

## ஜனநாயகம் தழைத்தது

கடந்த ஒரு வருடத்துக்குள் இந்த அரசுக்கு எதிராக எத்தனை போராட்டங்கள் நடத்தப்பட்டதோ அத்தனை போராட்டங்களுக்கும் ஜனநாயக ரீதியில் பதில்கள் வழங்கப்பட்டன. எந்தவொரு போராட்டமும் பொலிஸாரைக் கொண்டோ இராணுவத்தைக் கொண்டோ நசுக்கப்படவில்லை. அல்லது போராட்டம் தொடங்குவதற்கு முன் தொலைபேசி அழைப்புகள் மூலம் மிரட்டல்கள் விடுத்து போராட்டங்கள் தடுக்கப்படவில்லை. அவ்வாறு போராட்டங்கள் நடத்தியவர்கள் பின்னர் பழிவாங்கப்படவில்லை. போராட்டங்களை நடத்தியவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு இணங்கியது. மொத்தத்தில் ஜனநாயகப் போராட்டங்கள் நடத்துவதற்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டது.

அதேபோல், மறுபுறம், சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கும் ஓரளவு தீர்வு வழங்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கடந்த ஒரு வருடத்துக்குள் வடக்கு-கிழக்கு தமிழர்கள் சில நன்மைகளை அடைந்தனர். அவர்களின் ஒரு சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் 25 வருடங்கள் பழைமை வாய்ந்தவை என்பதால் அவற்றுக்காக வழங்கப்பட்ட தீர்வை முக்கியமான தாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அதன் தொடராக தமிழர்களின் இன்னும் பல முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. அந்தப் பிரச்சினைகள்தான் முக்கியமானவையாகவும் அரசின் உண்மையான முகத்தைக் காட்டக் கூடியதாகவும் இருக்கும். உண்மையில் இந்த அரசு ஜனநாயக அரசுதானா - சிறுபான்மை இனமக்களை மதிக்கின்ற அரசுதானா - அல்லது ஜனநாயக அரசு போல் வேடமிடுகிறதா போன்ற கேள்விகளுக்கான பதில்கள் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க அரசு எடுக்கும் நடவடிக்கையில்தான் தங்கியுள்ளன.

அவ்வாறு அரசுக்கு சோதனைக் களமாக அமைந்திருக்கும் பிரச்சினைகள்தான் அரசியல் தீர்வும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான உள்ளகப் பொறிமுறையும்.

இந்த இரண்டு விடயங்களும் இந்த வருடங்களுக்குள் நிறைவேற்றப்படும் என அரசு உறுதியளித்துள்ளது. அரசியல் தீர்வு உள்ளிட்ட அனைத்து அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் இந்த வருடத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.


## சவால்கள்

அதேபோல், இந்த வருடத்துக்குள் - மிக விரைவில் போர்க் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் உள்ளகப் பொறி முறை உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒரு வாரத்துக்குள் அது தொடர்பான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும் என வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார். அரசியல் தீர்வு என்பது தேசிய அரசியலுடன்-இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களுடன் தொடர்புபட்ட விடயம் என்பதாலும் உள்ளகப் பொறிமுறை என்பது இலங்கைப் படையினருக்கு எதிரானது என்ற கருத்து இருப்பதாலும் இந்த இரண்டு விடயங் களையும் ஏனைய விடயங்களைப் போல் மிக இலகுவில் செய்துவிட முடியாது.



அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள மகிந்த தரப்பினருக்கு இந்த இரண்டு விடயங்களும் சிம்மசொர்பனமாகும். இந்த இரண்டு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் அவர்களின் அரசியலை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இழந்த மக்கள் செல்வாக்கை மீளப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அரசியல் தீர்வு மூலம் தமிழீழத்தை உருவாக்கப் போவதாகவும் உள்ளகப் பொறிமுறை மூலம் படையினரைக் காட்டிக் கொடுக்கப் போவதாகவும் அவர்கள் இப்போது பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளனர். சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கத் தொடங்கியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் அரசு சிக்கலை எதிர்நோக்கப்போவது நிச்சயம். மேற்படி விடயங்களுக்கு முட்டுக் கட்டைகள் போடப்படும். இந்த முட்டுக் கட்டைகள்- தடைகள் அனைத்தையும் நீக்கிவிட்டுப் பயணிப்பதுதான் மேற்படி விடயங்களில் அரசுக்கு வெற்றியைக் கொடுக்கும். இல்லாவிட்டால், அவற்றை நிறைவேற்று வதில் கால தாமதம் ஏற்படலாம்.ஆகவே,அரசியல் தீர்வு மற்றும் உள்ளகப் பொறி முறை தொடர்பில் இந்த நாட்டு மக்களுக்கு விளக்கம் கொடுப்பதற்கு தனியான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்றது.



இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமக்களுக்கும் இது தொடர்பில் விளக்கம் சென்றடைய வேண்டும். அதற்கு ஏற்ப பொறி முறை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறானதோர் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏற்பாடு இல்லாவிட்டால், பேரினவாதிகள் மேற்படி இரண்டு விடயங்களையும் குழப்பி அரசுக்குப் பெரும் தலை இடியைக் கொடுத்துவிடுவர் என்ற உண்மையை உணர்ந்து இந்த அரசு செயற்பட வேண்டும்.

> அரசியல் தீர்வு என்பது தேசிய அரசியலுடன்-இந்த நாட்டின் பெரும்பான்மை இன மக்களுடன் தொடர்புபட்ட விடயம் என்பதாலும் உள்ளகப் பொறிமுறை என்பது இலங்கைப் படையினருக்கு எதிரானது என்ற கருத்து இருப்பதாலும் இந்த இரண்டு விடயங்களையும் ஏனைய விடயங்களைப் போல் மிக இலகுவில் செய்துவிட முடியாது. அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள மகிந்த தரப்பினருக்கு இந்த இரண்டு விடயங்களும் சிம்மசொர்பனமாகும். இந்த இரண்டு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் அவர்களின் அரசியலை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இழந்த மக்கள் செல்வாக்கை மீளப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# முகத்துக்கு அழகூட்டும் பேஸ்பேக்



ஆடையகற்றிய பால், சிறிய துண்டு பப்பாளிப்பழம், ஓட்ஸை மாவாக்கிய ஓட்ஸ் பவுடர் ஆகிய மூன்றையும் குழைத்து முகத்தில் பூசி ஒரு மணிநேரம் கழித்து, இந்தக் கலவை முகத்தில் படிந்து ஒரு இறுக்கத்தைக் கொடுக்கும். அதன் பின்னால், முகத்தை குளிர்ந்த நீரில் கழுவுங்கள். அடுத்தாற்போல ஒரு தேக்கரண்டி தயிருடன் அரைத்து தேக்கரண்டி எலுமிச்சை சாறும் கலந்து முகத்தில் பூசி அது காய்ந்ததும் கழுவி விடலாம்.

மேலும், கடலை மாவில் ஒரு தேக்கரண்டி ரோஸ் வோட்டரும் ஒரு தேக்கரண்டி தேனும் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவிய பின்பு 20 நிமிடங்கள் கழித்து அதைக் கழுவிவிடலாம். உளுந்தை நன்றாக அரைத்து அத்துடன் சம அளவு பால் மற்றும் தேன் கலந்து பசை போலாக்கி முகத்தில் தடவுவதும், சிறந்த பேஸ்பேக் முறையே.



# சர்க்கரை வள்ளிக்கிழங்கு பான்கேக்

## தேவையானவை:

மைதா மா – 2 கப்
சீனி–1 கப்
முட்டையின் வெள்ளை கரு – 2
கிழங்கு (வேக வைத்தது) – 2
வெனிலா எசென்ஸ் – 1 கரண்டி
பால் – 1 கப்
எண்ணெய் – தேவைக்கு.

## செய்முறை:

கிழங்கைப் பாலுடன் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் மைதா மா, முட்டைக்கரு, எசென்ஸ், சீனி மற்றும் அரைத்த கிழங்கைச் சேர்த்து நன்கு கலக்கவும். தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் ஊற்றவும். பின்பு தோசைக்கல்லில் எண்ணெய் விட்டு பான்கேக் போல் சுட்டு எடுக்கவும்.

# பித்த வெடிப்பை போக்க....

குதிகால் வெடிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் வறட்சி மற்றும் சுத்தமின்மைதான். பாதத்துக்கு அவ்வப்போது முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு கொடுக்கா விட்டால் குதிகாலில் வெடிப்புகள் ஏற்பட ஆரம்பித்து, அது அழகை கெடுப்பதோடு, கடுமையான வேதனையையும் தரும்.

இந்த குதிகால் வெடிப்பைப் போக்க எத்தனை கிறீம்கள் வந்தாலும், அவற்றால் முழுமையான தீர்வைப் பெற முடியாது. ஆனால், இயற்கை வழிகளைப் பின்பற்றினால் குதிகால் வெடிப்பைப் போக்குவதோடு, குதிகாலை அழகாகவும் பராமரிக்கலாம்.

குண்டு மஞ்சள் உடலில் பூசுவதற்கு உகந்தது அல்ல. ஏனெனில் குண்டு மஞ்சள் தோலை கடினமாக்கி விடும். ஆனால் பித்த வெடிப்புக்கு குண்டு மஞ்சள் மிகவும் நல்லது. ஒரு சிட்டிகை மஞ்சள் பொடியுடன் ஒரு தேக்கரண்டி கடுகைச் சேர்த்து சிறிதளவு தண்ணீர் விட்டு அரைத்து பாத வெடிப்பு மீது பற்று போடுங்கள். இப்படியே தினமும் செய்து வந்தால் வலியும் இருக்காது. பித்த வெடிப்பு மறைந்தே போகும்.

கிளிசரின் மற்றும் ரோஸ் வோட்டரைச் சரிசமமாக எடுத்துக் கொண்டு, அதில் சிறிது எலுமிச்சைசாற்றை ஊற்றி கலந்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சைசாறு மற்றும் உப்புச் சேர்த்து கலந்து, அந்த நீரில் 15–20 நிமிடம் பாதங்களை ஊற வைத்து, பின் மெருகேற்ற உதவும் கல் கொண்டு பாதங்களைத் தேய்த்து கழுவி, உலர வைத்து, இறுதியில் அந்த கிளிசரின் கலவையை பாதங்களில் தடவி வர வேண்டும். இப்படி, அன்றாடம் இரவில் படுக்கும் முன் செய்து வந்தால், குதிகால் வெடிப்புகள் மறையும்.

குதிகால் வெடிப்பு அதிகப்படியான வறட்சியினால் வருவதாகும். ஆகவே அன்றாடம் இரவில் படுக்கும் முன், ஒலிவ் ஓயில், பாதாம் எண்ணெய், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் கொண்டு பாதங்களை மசாஜ் செய்து இரவு முழுவதும் ஊற வைத்து வர வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், பாதங்கள் மென்மையாக இருக்கும்.


வேப்பிலையை அரைத்து பேஸ்ட் செய்து, அதில் சிறிது மஞ்சள் தூள் சேர்த்து கலந்து, பாதங்களில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். எலுமிச்சை சாறு இறந்த செல்களை போக்க பெரிதும் உதவியாக இருக்கும். அத்தகைய எலுமிச்சை சாற்றுடன் பப்பாளியை மசித்து சேர்த்து நன்கு கலந்து, பாதங்களில்தடவி15–20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இதனால் பாதங்கள் மென்மையாக, வெடிப்புகளின்றி இருக்கும்.



# மூக்கில் கருமையா?

- தொடர்ச்சியாக கண்ணாடியை அணிபவர்களுக்கு, மூக்கின் மேல் தழும்புகள் போன்று கறுப்பாக காணப்படும். இத்தகைய தழும்புகள் ஏற்படுவதற்கு காரணம் கனமான கண்ணாடி மற்றும் மூக்கை அழுத்தும் படியாக நீண்ட நேரம் கண்ணாடி அணிவது தான். இது முகத்தில் ஒருவிதமான அசிங்கமான தோற்றத்தைக் கொடுக்கும்.
- கண்ணாடி அணிவதால் ஏற்படும் தழும்புகளை போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை பார்க்கலாம்.
- தினமும் முகத்தை பேஸ் வோஷ் பயன்படுத்தி கழுவி, மாய்ஸ்சுரைசரை தடவ வேண்டும். இவ்வாறு தினமும் 3 முறை செய்து வந்தால், அத்தகைய கறுப்பான தழும்புகள் படிப்படியாக மறைவதைக் காணலாம்.
- உருளைக்கிழங்கைத் தழும்புள்ள இடத்தில் தடவி 10 நிமிடங்கள் மசாஜ் செய்து வந்தால், கண்ணாடியால் ஏற்படும் தழும்புகளை மறையும். இவ்வாறு வாரம் 4 நாள்கள் செய்ய வேண்டும்.
- எலுமிச்சைசாறும் கருமையான தழும்புகளைப் போக்க வல்லது. எலுமிச்சைச் சாற்றைப் பஞ்சில் நனைத்து, தழும்புகள் உள்ள இடத்தில் தடவி மசாஜ் செய்து, 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். அதன் பின்னர் மாய்ஸ்சுரைசரை தடவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் கருமை நிறம் மறையும்.

# மர்ம சமிக்ஞைகளின் தேடல்



■ என். ராமதுரை

அண்டவெளியிலிருந்து வித்தியாசமான சமிக்ஞைகள் வருகின்றனவா என்ற தேடலில் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருந்த போது, இந்த ஆண்டு மார்ச் மாதம் திடீரென்று கிடைத்த வித்தியாசமான சமிக்ஞைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அவை 134 விநாடிகள் நீடித்தன.
இந்த சிக்னல்கள் சமிக்ஞைகள் அண்டவெளியில் இருக்கின்ற ஏதோ ஒரு கிரகத்திலிருந்து வேற்றுலகவாசிகளால் அனுப்பப்பட்டவையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால், அவர்களது கருத்தை உறுதிப்படுத்த ஆதாரம் ஏதுமில்லை.

### பெரிய தொலைநோக்கி

அமெரிக்காவுக்குத் தென்கிழக்கே போர்ட்டோ ரிக்கோ தீவில் இருக்கும் அரசிபோ, ரேடியோ டெலஸ்கோப் தொலைநோக்கி மூலம் இந்த சமிக்ஞைகள் கிடைத்தன. இந்த தொலைநோக்கி உலகிலேயே மிகப் பெரிய வானலை தொலைநோக்கி ஆகும். இதன் டிஷ் ஆண்டெனாவின் குறுக்களவு 305 மீற்றர். இங்கு நிலத்தில் இயற்கையாக அமைந்த குழிவானது கிண்ணம்போல வடிவமைக்கப்பட்டு இந்தக் கருவி நிறுவப்பட்டது.
அண்டவெளியில் எங்கேனும் ஒரு கிரகத்திலிருந்து வேற்றுலகவாசிகள் சமிக்ஞைகளை அனுப்பினால் அவற்றைக் கண்டுபிடிக்க இந்த தொலைநோக்கி அவ்வப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.
அமெரிக்காவில் கலிபோர்னியாவில் பெர்க்லி என்னுமிடத்தில் உள்ள பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அரசிபோ தொலைநோக்கி மூலம் வானை ஆராய்ந்துகொண்டிருந்தபோது, மார்ச் 19ஆம் திகதி பிற்பகல் திடீரென இந்த சமிக்ஞைகள் கிடைத்தன. இவை எண்களும் எழுத்துகளும் கலந்த வடிவில் இருந்தன.

### வெர்த்திமரின் கூற்று

ஆனால், இந்த சமிக்ஞைகள் எதைத் தெரிவிக்கின்றன என்று புரிந்துகொள்ள இயலவில்லை. "இவை நிச்சயம் பூமியில் உள்ள ஏதோ ஒரு இடத்திலிருந்து வந்தவையல்ல. எங்கோ உள்ள வேற்றுலகவாசிகளிடமிருந்து வந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. அத்துடன் நமக்காகவே அனுப்பப்பட்டதாக நான் கருதுகிறேன்" என்று விஞ்ஞானிகள் குழுவின் தலைவரான டான் வெர்த்திமர் கூறினார்.
அண்டவெளியில் சமிக்ஞைகளைத் தேட ஆரம்பித்ததிலிருந்து கடந்த பல ஆண்டுகளில் இதுவே மிக நீண்ட, மிகத் தெளிவான சமிக்ஞைகளாகும் என்றும் அவர் சொன்னார். அந்தச் சமிக்ஞைகளைக் கவனித்தால் அவை நாம் பயன்படுத்துகின்ற மோர்ஸ் சங்கேத முறை மாதிரியில் வேற்றுலகவாசிகள் பயன்படுத்துகின்ற சமிக்ஞை முறை போன்று தோன்றுகிறது என்றும் வெர்த்திமர் கூறினார்.
இந்த சமிக்ஞைகள் சூரிய மண்டலத்துக்கு அப்பாலிருந்து வந்தவை என்பதில் சந்தேகமே இல்லை. எனினும், மிகச் சிறிது நேரமே நீடித்த இந்த சமிக்ஞைகள் வானில் குறிப்பாக எந்த இடத்திலிருந்து வந்தன என்பது தெரியவில்லை. இதை ஆராய்ந்து கண்டுபிடிக்கப் பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் ஆகலாம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

### முதல்முறை அல்ல

அண்டவெளியிலிருந்து வித்தியாசமான சமிக்ஞைகள் கிடைப்பது இது முதல்தடவையல்ல. வேற்றுலகவாசிகள் அனுப்பியதாக இருக்கலாம் என்று சந்தேகப்படும்படியான வகையில் கடந்த பல ஆண்டுகளில் 400க்கும் மேற்பட்ட தடவைகள் சமிக்ஞைகள் கிடைத்துள்ளன.

ஆனால், அவை வேற்றுலகவாசிகளிடமிருந்து வந்தவைதான் என்று உறுதிப்படுத்த முடியவில்லை.
இதற்கு முன்னர் 1977ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி கிடைத்த சமிக்ஞைகளும் புதிராக இருந்தன. அவற்றுக்கு விஞ்ஞானிகள் 'வாவ் சிக்னல்' என்று பெயரிட்டனர். ஓகையோ மாநில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ஜெர்ரி ஆர். ஈஹ்மான் அண்டவெளியில் சமிக்ஞைகளைத் தேடும் சேட்டி திட்டத்தின் கீழ் அந்தப் பல்கலைக்கழகத்தின் பெரும் காது ரேடியோ தொலைநோக்கியில் பணியாற்றிக்கொண்டிருக்கும்போது விசித்திரமான சமிக்ஞைகளைக் கண்டுபிடித்தார். அந்த சமிக்ஞைகள் 72 விநாடி நேரம் நீடித்தன.
இந்த விடயம் விஞ்ஞானிகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பத்திரிகைகளிலும் இது பெரிய செய்தியாக வெளியாகியது. சமிக்ஞைகள் வானில் எந்த இடத்திலிருந்து வந்திருக்கலாம் என்று ஆராய்ந்தபோது, தனு ராசியில் உள்ள ஒரு நட்சத்திரக் கொத்து அருகே உள்ள இடத்திலிருந்து வந்திருக்கலாம் என்று தோன்றியது.


### வாவ் சிக்னல்கள்

சமிக்ஞைகள் வருகின்றனவா என்று வானலை தொலைநோக்கிமூலம் ஆராயும் விஞ்ஞானிகள், காதில் மணிக்கணக்கில் கேட்பான் கருவியை மாட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பதில்லை. அண்டவெளியிலிருந்து வருகிற எல்லா வகையான சமிக்ஞைகள் தாமாக கணினியில் பதிவாகும். அடுத்து, அவற்றின் பிரின்ட் அவுட்டுகள் கிடைக்கும். விஞ்ஞானிகள் அவற்றை ஆராயும்போது வித்தியாசமான சமிக்ஞைகள் பதிவாகியுள்ளனவா என்று கவனிப்பர். குறிப்பிட்ட ஒரு பிரின்ட் அவுட்டில் வித்தியாசமான சிக்னல்கள் இருப்பதைக் கண்டு விஞ்ஞானி ஈஹ்மான் அவற்றை வட்டமிட்டு அருகே வாவ் என்று எழுதினார். எனவேதான், இந்த சிக்னல்களுக்கு வாவ் சிக்னல்கள் என்று பெயர் வந்தது. அண்டவெளியிலிருந்து வரும் வித்தியாசமான சிக்னல்கள் அதே பாணியில் திரும்பத் திரும்ப வருமேயானால், அவை அனேகமாக வேற்றுலகவாசிகள் அனுப்பியவை என்று கருதலாம்.
வாவ் சமிக்ஞை மாதிரி மறுபடி வருகிறதா என்று அறிய 1987 மற்றும் 1989ஆம் ஆண்டுகளிலும் பின்னர் 1995 மற்றும் 1996ஆம் ஆண்டுகளிலும் மொத்தம் சுமார் 50 தடவை வானில் அதே பகுதி ஆராயப்பட்டது. ஆனால், முன்னர் கிடைத்த மாதிரியான சமிக்ஞைகள் எதுவும் கிடைக்கவில்லை. பின்னர் 2012ஆம் ஆண்டில் அரசிபோ வானிலை தொலைநோக்கி மூலம் வானில் அதே பகுதியை நோக்கி பூமியிலிருந்து சிக்னல்கள் அனுப்பப்பட்டன.

ரேடியோ தொலைநோக்கிகள் பிரதானமாக அண்டவெளியிலிருந்து சமிக்ஞைகளைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டவை. எனினும், இவற்றில் சிலவற்றில் வானை நோக்கி சமிக்ஞைகளை அனுப்புவதற்கான வசதிகளும் உண்டு. அவ்வித வசதி அரசிபோவில் உண்டு.
நாம் பல்வேறு காரியங்களுக்கும் பயன்படுத்துகின்ற கருவிகளும் சமிக்ஞைகளை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த சமிக்ஞைகள் அண்டவெளி சமிக்ஞைகளைத் தேடும் பணியில் குறுக்கிட்டுக் குழப்பக்கூடாது என்பதற்காகவே வானிலை தொலைநோக்கிகள் கூடியவரை மனித நடமாட்டம் இல்லாத பகுதிகளில் நிறுவப்படுகின்றன. அத்துடன் வழக்கமான சமிக்ஞைகளை வடிகட்டும் வசதியும் இவற்றில் உண்டு.

### அமெரிக்க - ரஷ்ய போட்டி

வேற்றுலகவாசிகள் சமிக்ஞைகளை அனுப்புகிறார்களா என்று அமெரிக்காவில் மட்டும்தான் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருப்பதாகக் கூற முடியாது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா - சோவியத் ஒன்றியம் (இப்போதைய ரஷ்யா எனலாம்) இடையே கடும் முரண்பாடு நிலவிவந்தது. குறிப்பாக, விண்வெளித் துறையில் போட்டா போட்டி நிலவிவந்தது. அமெரிக்கர்கள் முந்திக்கொண்டு புதிதாக எதையாவது கண்டுபிடித்து விடுவார்களோ என்ற கவலையில் ரஷ்யர்களும் விண்வெளியிலிருந்து வித்தியாசமான சமிக்ஞைகள் வருகின்றனவா என்று ஆராய்வதில் ஈடுபட்டனர்.
ரஷ்யர்கள் குறிப்பாக, சூரியன் போன்ற நட்சத்திரங்கள் இருக்கும் திசையை நோக்கி வானொலி தொலைநோக்கி ஆண்டெனாக்களைத் திருப்பி ஆராய்ந்தனர். சூரியன் போன்ற நட்சத்திரமே பூமி போன்ற கிரகத்தைப் பெற்றிருக்க அதிக வாய்ப்பு கொண்டது என்பதே அதற்குக் காரணம்.
இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் இந்தத் தேடலில் ஈடுபட்டனர். சேட்டி அமைப்பின் கீழ் பீனிக்ஸ் என்ற பெயரில் 1995 முதல் 2004ஆம் ஆண்டு வரை நீண்டதொரு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது இங்கிலாந்தில் ஜோட்ரல் பாங்க் வான் ஆய்வுக்கூடத்தின் வானிலை தொலைநோக்கி, அமெரிக்காவின் கிரீன் பார்க் வானிலை தொலைநோக்கி, ஆஸ்திரேலியாவில் உள்ள வானிலை தொலைநோக்கி, ஆகியவை ஒருங்கிணைந்து செயற்பட்டன.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இந்த வாரம் 10.01.2016 முதல் 16.01.2016 வரை உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், சந்திரன், ராகு நன்மை தருவர். பிறர் நலனைப் பாதுகாக்க உதவி செய்வீர்கள். வாகன வகையில் பராமரிப்புச் செலவு உண்டாகும். பிள்ளை கள், உங்கள் வழி காட்டுதலைப் பின்பற்றி நடப்பர். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. பணக்கடன் செலுத்துவீர்கள். வெளியூர் பயணத்தால் நன்மை பெறுவீர்கள். மனைவியின் செயல், குடும்ப முன்னேற்றத்துக்குத் துணை நிற்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிவர். எதிர்பார்த்த சலுகைப் பயன் பெறுவர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் படிப்பில் நல்ல தரத்தேர்ச்சி பெறுவர். புதியவர்களின் நட்பு கிடைக்கப் பெறுவர். சிவன் வழிபாடு, சகல வளமும் தரும்.

## இடபம்

குரு செவ்வாய், புதன், கேது தாராள நற்பயன் தருவர். பேசுவதில் நிதானம் தேவை. விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். உடன் பிறந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள், உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்வர். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் சொல்லுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிகளை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்த்து, படிப்பில் தேர்ச்சி பெறுவர். முருகன் வழிபாடு, தைரியத்தை வளர்க்கும்.

## மிதுனம்

சனீஸ்வரர் சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். நிதானத்தைக் கடைபிடித்தால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். பிள்ளைகள் ஆர்வமுடன் பணியில் ஈடுபடுவர். அதிக நிபந்தனையுடன் எவரிடமும் கடன் பெற வேண்டாம். மனைவி வழி சார்ந்த உறவினர்கள், பாசமுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் சட்டத்தை மதித்து நடப்பது நல்லது.

பணியாளர்கள், பணியிடத்தில் தேவையற்ற விவாதத்தில் ஈடுபடுவது கூடாது. பெண்கள் சிக்கனமாகச் செலவழித்து சேமிக்க முயல்வர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும். வைரவர் வழிபாடு, சங்கடத்தைத் தீர்க்கும்.

## கடகம்

ராகு, சுக்கிரன், புதன் நற்பலன் தருவர். கடந்த கால சிரமம் குறையும். பணவரவு அதிகம் பெற, தேவையான முயற்சியில் ஈடுபடுவீர்கள். தம்பி, தங்கையரால் உதவி உண்டு. குடும்பத்தினரின் செயல் பெருமையைத் தேடித் தரும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெறுவர். எதிரி தொந்தரவு பெருமளவில் குறையும். கடந்த கால அனுபவங்களை வாழ்வின் பாடமாக கருதுவீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்பால் இலாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்குப் பாதுகாப்பு நடைமுறையில் கவனம் தேவை. பெண்கள் அடுத் தவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக்கூடாது. தட்சிணாமூர்த்தி வழிபாடு, மங்கள வாழ்வைத் தரும்.

## சிங்கம்

செவ்வாய் குரு சுக்கிரனால் நன்மை உண்டாகும். சிறு பணியிலும் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். உறவினர்களால் நன்மையும், புகழும் வந்து சேரும். தம்பி, தங்கை உங்கள் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். வாகனப் பயணத்தால், இனிய அனுபவம் ஏற்படும். புத்திரரின் அறிவுத்திறன் கண்டு சந்தோசம் காண்பீர்கள். உடல்நலம் சிறக்க, சத்தான உணவு உண்பது நல்லது. பகைவரால் உருவான கெடு செயல் பலமிழக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் ஆதாயப் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் தாராளமாக செலவழித்து, சந்தோச வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கவனமுடன் படிப்பது அவசியம். துர்க்கை வழிபாடு, துன்பத்தைப் போக்கும்.

## கன்னி

புதன், சனி, சுக்கிரனால் நன்மை உண்டு. சமுதாயத்தில் கௌரவம்; மிக்கவராகச் செயற்படுவீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான செயல் இனி தடையின்றி நிறைவேறும். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் தேவை. பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்துக்குப் பெருமை சேர்க்கும். அரச வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் விற்பனை அதிகரிப்பால் வருமானம் உயரும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். மாணவர்கள் நன்கு படித்து சிறந்த தேர்ச்சி அடைவர். மீனாட்சி வழிபாடு, செல்வ வளத்தைத் தரும்.

## துலாம்

சுக்கிரன், கேது, சந்திரன் நன்மை தருவர். பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். வாகன பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தாராள பணவசதி அமையும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள்.

மனைவி குடும்பத்தில் ஒற்றுமையைப் பாதுகாத்திடுவார். தொழிலில் உற்பத்தி சிறந்து இலாபம் அதிகரிக்கும்.

பணியாளர்களுக்கு புதிய வேலை வாய்ப்பும், எதிர்பார்த்த சலுகையும் கிடைக்கும். பெண்கள், உறவினர் வீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். ஐயப்பனை வழிபாட்டரல் வெற்றியளிக்கும்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், ராகு அளப்பரிய நன்மை தருவர். மற்றவர்களிடம் சுய பெருமை பேச வேண்டாம். சகோதரர்களின் செயற்பாடு உற்சாகம் அளிக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் செயற்றிறனில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். மனைவி சொல்லும் ஆலோசனை குடும்ப நலன் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடைகளை மதிநுட்பத்தால் சரி செய்வீர்கள். பணியாளர்கள், விரைந்து செயற்பட்டு பணியிலக்கை நிறைவேற்றுவர். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர். பசு வழிபாடு, சகல வளமும் அளிக்கும்.

## தனுசு

சந்திரன், செவ்வாய், சுக்கிரன் நற்பலன் தருவர். மனதில் உருவான திட்டம் செயற்படுத்த புதிய வாய்ப்பு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். வாகன பயன்பாடு திருப்திகர அளவில் இருக்கும். புத்திரர்களின் அறிவுத்திறன் மேம்படும். பூர்வ புண்ணியத்தால் நன்மை அடைவீர்கள். பணக்கடன் அடைப்பீர்கள். மனைவி, குடும்ப நலனில் அக்கறை கொள்வார். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அரச வகையில் ஆதாயம் அடைவீர்கள். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் எதிர்காலம் கருதி ஆர்வமாகப் படிப்பர். அம்பிகை வழிபாடு, நன்மையை அளிக்கும்.

## மகரம்

குரு, சுக்கிரன், சனி, கேதுவால் நன்மை அதிகரிக்கும். புதியவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். பேச்சிலும் நிதானம் அவசியம். உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். வீடு வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். புத்திரர்கள் பெற்றோரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். நண்பரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிர்ஷ்டகரமாக வருமானம் அதிகரிக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் சாகச விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடாது. சனீஸ்வரர் வழிபாடு, சங்கடத்தைத் தீர்க்கும்.

## கும்பம்

சூரியன், புதனால் நன்மை கிடைக்கும். நம்பிக்கைக்குரிய மனிதராகச் செயற்படுவீர்கள். அன்றாடப் பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். குடும்பத் தேவை தாராள பணச் செலவில் பூர்த்தியாகும். வீடு, வாகனத்தில் தேவையான மாற்றத்தைச் செய்வீர்கள். புத்திரர்களின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். பூர்வ சொத்தின் மூலம் வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் அன்பு மகிழ்ச்சியைத் தரும். தொழில் சார்ந்த இடையூறு விலகும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் சேமிப்பில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர். பெருமாள் வழிபாடு, செல்வ வளத்தைத் தரும்.

## மீனம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் அளப்பரிய நற்பலன் தருவர். கடினமான பணியையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். கடந்த கால உழைப்புக்கான நன்மை வந்து சேரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகளின் செயற்பாட்டைக் கண்டிக்கும் சூழ்நிலை உருவாகலாம். உணவு விடயத்தில் கட்டுப்பாடு தேவைப்படும். பணச்செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது நல்லது. இளமைக் கால நண்பரை சந்திக்க வாய்ப்பு உண்டாகும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் புதியவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். விநாயகர் வழிபாடு, வினைகளைத் தீர்க்கும்.



# மறைநீர்

## நீரின்றி அமையாது உலகு

மறைநீரை பார்க்க முடியாது. உணர மட்டுமே முடியும். நீரின்றி அமையாது உலகு என்பது சங்க காலம். மறைநீரின்றி அமையாது என்பதுதான் நவீன காலம்.

வெளியே எங்கு போனாலும் தண்ணீர்போத்தலும்கையுமாக அலைகிறோம். அலுவலகங்கள், வீடுகள் தோறும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரையே வாங்கி குடிக்கிறோம். அதற்கெனத் தனியாகப் மாதாந்தம் பணம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. பணம் கிடக்கட்டும். அது இன்று வரும், நாளை போகும். ஆனால், தண்ணீர்? உலகின் நீர்வளத்தில் 97 சதவீதம் கடல் நீர். எஞ்சிய 3 சதவீதத்தில் 68.7 சதவீதம் பனிக் கட்டி.

30.1 சதவீதம் பயன்படுத்தவே முடியாத கடின நீர் 0.3 சதவீதம் மட்டுமே. ஆறு, ஏரி, குளம் மற்றும் பயன்படுத்தக்கூடிய நிலத்தடி நீராக இருக்கிறது. இதுவேதான் நீரியல் சுழற்சியாக மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட மறுபயன்பாடு (Reuse) செய்துகொண்டிருக்கிறோம். இதனால் கிடைக்கும் நீரின் அளவு குறையுமே தவிர அதிகரிக்காது. இதைத் தான் நாம் உட்பட உலகின் அத்தனை உயிரினமும் பகிர்ந்து கொண்டாக வேண்டும். ஆனால், நாம் குடிக்கும் ஒரு லீற்றர் தண்ணீரை சுத்திகரிக்க 4 முதல் 5 லீற்றர் வரை தண்ணீர் வீணடிக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அதன் பெயர் மறைநீர் (Virtual water).

### மறைநீர் என்றால் என்ன?

நம் கண்ணுக்குத் தெரியாத நீர் ஒன்று மறைந்திருக்கிறது. அதுதான் மறைநீர். மறைநீர் என்பது ஒரு பொருளாதாரம். மறைநீர் என்பது ஒரு தத்துவம். காற்றைப் போன்றது அது. கடவுளைப் போன்றது அது. தூணிலும் இருக்கிறது. துரும்பிலும் இருக்கிறது மறைநீர்.

மறைநீரை பார்க்க முடியாது. உணர மட்டுமே முடியும். நீரின்றி அமையாது உலகு என்பது சங்க காலம். மறைநீரின்றி அமை யாது என்பதுதான் நவீன காலம். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளுக்கும் உள்ளேயும் மறைந்திருக்கிறது மறைநீர். இதோ நீங்கள் படிக்கும் இந்த காகிதத் துக்குள் மறைந்திருக்கிறது மறைநீர். கணினித் திரைக்குள் புதைந்திருக்கிறது மறைநீர்.

ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியையும் பணத்தைக்கொண்டு மதிப்பிடுவதைப் போல நீர் வளத்தை கொண்டு மதிப்பிடும் பொருளாதாரம்தான் மறைநீர். இதைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஜோன் ஆண்டனி ஆலன். இந்தக் கண்டுபிடிப்புக்காக ஸ்டாக்ஹோம் வோட்டர் -2008 விருது பெற்றவர். ஒரு மெற்றிக் தொன் கோதுமை 1,600 கியூபிக் மீற்றர் தண்ணீருக்கு சமம் என்கிறது மறைநீர் தத்துவம். எப்படி? கோதுமையை விளைவிக்க நீர் தேவை. ஆனால், கோதுமை விளைந்தவுடன் அந்த நீர் இருக்காது. எங்கே போனது அது? கோதுமைக்காக செலவிடப்பட்ட நீர் கோதுமைக்குள்தானே மறைந்திருக்க வேண்டும். இதுவே மறைநீர்.

### ஒரு ஜட்டியின் விலை ரூ. 27,000

இந்திய நூற்பாலைகளில் ஆண்டுக்கு 36 லட்சம் டன் பனியனுக்கான ஓசைரி நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 7.20 லட்சம் தொன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெறும் 250 கிராம் பருத்தி உற்பத்திக் கான மறைநீரின் தேவை 2,495 லீற்றர். அப்படி எனில் 7.20 தொன் ஏற்றுமதிக்கு எவ்வளவு மறைநீர் தேவை? இந்தியாவின் மொத்த புடைவை ஏற்றுமதியில் 20 சத வீதம் திருப்பூரில் இருந்து செய்யப்படு கிறது. இதனால், ஆண்டுக்கு ரூ.18,000 கோடி அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்கிறார்கள் பெருமையாக.

திருப்பூரின் நீர் பற்றாக்குறை ஆண்டுக்கு 22 மில்லியன் கனமீற்றர். ஆனால், ஒரு ஜட்டியைத் தயாரிக்க தேவையான மறைநீர் 2,700 லீற்றர். தமிழகத்தில் அரசு விற்பனை செய்யும் அம்மா தண்ணீர் ஒரு லீற்றர் விலையே ரூ.10. அப்படி என்றால் ஒரு ஜட்டிக்காக நாம் கொடுக்கும் விலை ரூ. 27,000. அக்கிரமம் இல்லையா இது.

| மறைநீர் தேவை | |
|---|---|
| (ஒரு கிலோவுக்கு) | (லீற்றர்) |
| ஆட்டுக்கறி | 5521 |
| மாட்டுக்கறி | 15,415 |
| கோழிக்கறி | 4,325 |
| பன்றிக் கறி | 5,988 |
| பால் (250 மில்லி) | 255 |
| பால் பவுடர் | 4,745 |
| வெண்ணெய் | 5,553 |
| நெய் | 3,178 |
| தேநீர் (250 மில்லி) | 27 |
| காபி (125 மில்லி) | 132 |
| பீர் (250 மில்லி) | 74 லீற்றர் |
| ஒயின் (125மில்லி) | 109 லீற்றர் |
| பிரெட் | 1608 |
| பீட்சா ஒன்று | 1,259 |
| அரிசி | 2,497 |
| கரும்பு | 1,782 |
| உருளைக்கிழங்கு | 287 |
| அப்பிள் | 822 |
| வாழை | 790 |
| ஒரேஞ்சு | 560 |
| மாம்பழம் | 1,800 |
| பேரீச்சை | 2,277 |
| நிலக்கடலை | 2,782 |
| பூண்டு | 353 |
| முட்டைக்கோஸ் | 237 |
| தக்காளி | 214 |

இந்தியாவில் முட்டை உற்பத்தியில் மகாராஷ்டிரத்துக்கு அடுத்து நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறது தமிழ் நாட்டைச் சேர்ந்த நாமக்கல் மாவட்டம். அங்கு ஒரு நாளைக்கு மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில் தினசரி 70 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிடைக்கும் அன்னியச் செலாவணி ஆண்டுக்கு 4.80 கோடி டொலர்கள். 60 கிராம் கொண்ட ஒரு முட்டையை உற்பத்தி செய்ய 196 லீற்றர் மறைநீர் தேவை. 18 ரூபாய் முட்டை 196 லீற்றர் தண்ணீரின் விலைக்குச் சமம் என்பது எந்த ஊர் நியாயம்? இது நாமக்கல் நிலவரம்.

ஒரு லீற்றர் குளிர்பானம் உற்பத்தி செய்ய தேவையான மறைநீர் 56 லீற்றர். ஒரு ஏ-4 அளவு கொண்ட காகிதத்தை உற்பத்தி செய்ய தேவையான மறைநீர் 10 லீற்றர். இப்படிப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்!

### புத்திசாலி நாடுகள்!

நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுக்க வேண்டும் என்கிறது மறைநீர் பொருளாதாரம். சீனா, இஸ்ரேல் மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன. சீனாவின் பிரதான உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கு 5,988 லீற்றர் மறைநீர் தேவை. இதனால், பன்றி இறைச்சி ஏற்றுமதிக்கு சீனாவில் அனுமதி இல்லை. ஆனால், தாராளமாக இறக்குமதி செய்துகொள்ளலாம். ஒரு கிலோ ஒரேஞ்சுக்கான மறைநீர் தேவை 560 லீற்றர். இஸ்ரேலில் ஒரேஞ்சு ஏற்றுமதி செய்ய முடியாது. இந்த நாடுகள் ஒவ்வொரு பொருளுக்குமான மறைநீர் தேவையைக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுத்துள்ளன.

சவூதி அரேபியா 90களின் தொடக்கத்தில் அன்னியச் செலாவணியை ஈட்ட ஏராளமான கோதுமையை ஏற்றுமதி செய்தது. இதனால், 10 ஆண்டுகளின் சவூதி 6 பில்லியன் கனமீற்றர் நீர் பற்றாக்குறை கொண்ட நாடாகிவிட்டது. விழித்துக் கொண்ட அந்த நாடு இப்போது கோதுமையை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது.

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் எதற்காக மென்பொருள் நிறுவனங்களை இந்தியா, இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் வைத்து நம்மை கூலிக்கு மாரடிக்க வைக்கின்றன? இங்கே கூலி குறைவு என்பது மட்டுமில்லை. இங்கு ஒரு நபரைக் கூலிக்கு அமர்த்திக் கொள்வதன் மூலம் அந்த நாடுகள் சேமித்துக்கொள்ளும் மறைநீரின் அளவு நாளொன்றுக்கு 7,500 லீற்றர். இப்படி நம் நாட்டின் மறை நீரைச் சுரண்டுவதால் தான் அந்த நாடுகளில் ஒரு நபரின் தினசரி மறை நீர் நுகர்வு 4,000 லீற்றராக இருக்கிறது. இங்கு ஒரு நபருக்கு 1,400 லீற்றர் மறை நீருக்கே திண்டாட்டமாக இருக்கிறது.

### தண்ணீருக்கு இல்லையா விலை?

ஒரு பொருளின் விலை என்பது அதன் எல்லாச் செலவுகளையும் உள்ளடக்கியது தானே? அப்படி எனில், பெரும் நிறுவனங்கள் எல்லாம் தண்ணீருக்கு மட்டும் ஏன் அதன் விலையைச் செலவுக் கணக்கில் சேர்ப்பது இல்லை. ஏனெனில், நம்மிடம் இருந்து இலவசமாகத் தண்ணீரைச் சுரண்டி நமக்கே கொள்ளை விலையில் பொருள்களை விற்கின்றன. இப்படி எல்லாம் கணக்கு பார்த்தால் நாட்டின் வளர்ச்சி என்னாவது என்கிற கேள்விகள் எழாமல் இல்லை. வரைமுறையின்றி வளர்வதின் பெயர் வளர்ச்சி அல்ல; அது வீக்கம். மறை நீருக்கு மதிப்பு கொடுத்திருந்தால் உலகின் பணக்காரர்களின் பட்டியலில் எங்கள் விவசாயிக்கு நிச்சயம் ஓர் இடம் இருந்திருக்கும்.

நிறைவாக ஒன்று... நீர் அடித்து நீர் விலகுவதில்லை. நீர் அடித்து நாமும் விலகுவதில்லை. நீரும் நாமும் தாயும் பிள்ளைகளும் தானே. தாயை காப்போம் வாருங்கள்!

# சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்



ஈழமக்கள் இருப்புக்காக
எருவாய் போனவர்கள்
தேச மனிதர் வாழ்வுக்காக
தீயாய் எரிந்தவர்கள்
மறவர்கள் பிறந்த நிலத்தில்
மகத்துவம் புரிந்தவர்கள்
புல்லர் சதி அறுக்க
மண்ணில் புதைந்தவர்கள்
புனிதமாகித் தொடர்ந்து
விதையாய் ஆனவர்கள்
பூமிப் பந்தில் - பெரும்
புரட்சி செய்தவர்கள்

ஈழத்தின் காவலர்கள்
இதயவறை தெய்வங்கள்
விடம் வேங்கைகள்
வடம் பிடித்த வல்லுநர்கள்
புகழ்நாடாப் பொக்கிஷங்கள்
பூவுலகின் இரத்தினங்கள்
நான்கெழுத்து நாயகர்கள்
நானிலத்து நீதிமான்கள்
கார்த்திகை இருபத்து ஏழின்
கதாபாத்திரங்கள்
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்
செம்மலர்களே துயிலுங்கள்!

# வடம் பிடித்து வழி சமைப்போம்!

கூரைகளில் ஏறவில்லை
குழப்பங்கள் செய்யவில்லை
அடைபட்ட சிறையிலிருந்து
அகிம்சை வழி நின்று
அவர் தம் வாழ்விற்காய்
அரசியல் கைதிகள் படும்துயர்
ஆயிரம்..... ஆயிரம்

நல்லிணக்கம் சமாதானம்
நாள்தோறும் நாளேடுகளில்
நீதி கேட்டுப் போராடும்
நாதியற்ற கைதிகளின்
நிஜமான விடுதலைதான்
எப்போ?

தேசிய அரசின்
தேர்வாளர்களும்
கூட்டரசின் கனவான்களும்
தேச நலன் பேசுகிறார்
கூண்டுக்குள் இருந்து
தேகத்தை உருக்கி
தாகத்தைத் துறந்து
வாழ்வுரிமை கேட்டோரின்
வலிகள் தெரியவில்லையா?
வார்த்தைகள்
புரியவில்லையா?

சமூக விடுதலைக்காய்
செறிவான குரல் உயர்த்தி
வெஞ்சிறையில் வேகுகின்ற
விடலைகள் வாழ்வில்
வசந்தங்கள் வீசட்டும்
வடம் பிடித்து வழி
சமைப்போம்
வாரீர் ... வாரீர் ... வாரீர்....



விவேகானந்தனூர் சதீஸ்

மேகங்கள் மோதிக்கொண்ட
பெருவெள்ளம் அது!
சில வற்றியும், தொலைந்தும் விட்டவை
பல குளத்தையே பற்றிவிட்டன

வாய்க்கால்களும் வாய்வறண்டு போக
வயற்காட்டு வரம்புகள் இன்னும்
வானத்தையே பார்த்தபடி
பச்சைப் பயிர்கள் அன்று
என்ன பாவம் செய்ததுவோ!
பட்டினி கிடந்தே பாழாய் போகின்றன

இன்னும் தண்ணீர் திறந்ததாய் இல்லை!
அழுது வடித்தே பாய்கிறது கண்ணீர்
வாய்க்கால் நீர்களாய்!
என்றேனும் ஒரு நாள் கண்ணீர்கள் கூடி
பெரும்படைக் குளத்தையே உடைக்கும்

– நெடுந்தீவு பா.யுகந்தன்

# விடுவியுங்கள்

இலட்சியக் கனவோடு
தாயக நினைவோடு
சமராடி விழிமூடி
தாய் மண்ணில் விதையாகி
எம் நெஞ்சத்தில் நிலையாகிப் போன
எம் இதய தெய்வங்களே.....
இன்று......
உம் முன்னே கூனிக் குறுகி
குற்றவாளிகளாய் நிற்கின்றோம்
நாமிங்கு
உம் தியாகத்திற்குப் பதிலாய்
எதைத் தந்தோம்....?
உம் கனவது நனவாக
ஏது செய்தோம்....?
உங்கள் தியாகம் .... உங்கள் வலி....
உங்கள் வேதனை.....
உங்கள் இலட்சியம்....
எல்லாமே வீண்தானா....?
ஓர் நாள் விடியுமென்று
ஒவ்வொரு நாளும் நினைத்திருந்தோம்
எல்லாமே முடிந்து போகுமென்று
ஒரு நாளும் நினைத்ததில்லை.
தேசத்திற்காய் தேகத்தைத் தந்தோரே....
உலவி சிரித்து உயிரற்று வீழ்ந்தோரே....
உயிரை எறிந்த தற்கொடை சீலரே....
எரிந்தோரே எரித்தோரே....
தீயில் குளித்தோரே....
வீசும் காற்றோடு கடலோடு கலந்தோரே....
இன்று....
உமக்கு ஈகச் சுடரேற்றக்கூட
வழியற்று நாதியற்றுப் போனோம்
நினைத்துப் பார்க்கையில்
வலிக்கிறது நெஞ்சம்
இருந்தும்.....
நிதமும் எம் இதயத்தில்
ஏற்றுகின்றோம் தீபம்
எம் இதய தெய்வங்களுக்கு
உம் ஈகத்தை உம் தியாகத்தை
சொல்லி வளர்க்கின்றோம் எம் மழலைகட்கு
வெறும் கதையாக அல்ல...
பெரும் வேட்கை சுமந்த வரலாறாய்....
என்றோ ஓர் நாள் நிஜமாகும் என்ற
நம்பிக்கையில்....

– சுஜா

## உம் வேட்கை சுமந்த வரலாற்றை சொல்லி வளர்க்கின்றோம் எம் மழலைகட்கு.......





# நல்லாட்சியால் தமிழருக்கு கிடைத்ததுதான் என்ன?

அதிரன்


தமிழர்களின் தயவில் மைத்திரி ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆகி விட்டது.

மைத்திரி தமிழர்களின் முதுகில் குத்தி விட்டார் என்றெல்லாம் யாரும் சொல்லிவிடக் கூடாது. முன்னர் சிங்களத் தலைவர்கள் அத்தனைப் பேரும் இத் தனைக் காலமாக எதைச் செய்தார்களோ அதைத் தான் செய்திருக்கிறார் இவரும். உண்மையில் மைத்திரி ஒரு யதார்த்தவாதி. கிடைத்த பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் மகிந்த கோஷ்டியைக் காப்பாற்றியாகவேண்டும் என்கிற யதார்த்தத்தை அறிந்து அதற்கேற்ப செயற்படுகிறார்.

தமிழர்களால் தான் ஜனாதிபதிப் பதவி கிடைத்தது என்றாலும் அந்தப் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள சிங்கள இனத்துக்கு ஒத்தூதியே ஆகவேண்டும். இந்தச் சிங்கள அரசியலை நன்கு அறிந்தே உள்ளார் மைத்திரி. இதற்காக அவர் கூச்சப்படவுமில்லை. மின்சார நாற்காலியிலிருந்து மகிந்தவை நான்தான் காப்பாற்றினேன் என்று பிரதமர் ரணில் பெருமிதம் பொங்கச் சொன்னபோது கூனிக்குறுகவுமில்லை. மகிந்தவை வேறெந்தக் குற்றச்சாட்டின் பேரிலும் மைத்திரி விசாரிக்கலாம். தமிழினப்படுகொலை தொடர்பாகத்தான் விசாரிக்க முடியாது. நீண்ட நெடுங்காலமாகப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தமிழர்களைக் கொன்று குவிப்பவர்களைத் தான் தேச பக்தர்களாகக் கருதுகிறார்கள். ஒன்றரை லட்சம் தமிழரைக் கொன்று குவித்ததற்காக மகிந்தவை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தினால் பௌத்த சிங்கள இனம் அதை ஆகப்பெரிய தேசத் துரோகமாகக் கருதும்.

இந்த ஓராண்டுப் பூர்த்தி விழாவில் விருந்தாளியாக அழைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் பேரனும் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவருமான கோபாலகிருஷ்ண காந்தி சிங்கள அரசின் முகத் திரையைக் கொழும்பில் வைத்துக் கிழித்திருக்கிறார். தமிழருக்குச் சிங்களத் தலைமைகள் இழைத்த கொடூரங்கள், போரின்போது இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் அவர் வெளிப்படையாகவே விமர்சித்துள்ளார்.

இந்த ஓராண்டு பூர்த்தி விழா நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்தது. அதில் சிறப்புரையாற்றிய கோபால கிருஷ்ண காந்தி, “அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்தமை போரின் கொடிய தன்மையை வெளிப்படுத்தியது. வேலுப்பிள்ளை பிரபாகரனின் குழந்தை என்ற காரணத்துக்காகக் கொடியமுறையில் பாலச்சந்திரன் என்ற குழந்தையைக் கொன்றமை உலகை உறைய வைத்த கொடூரமாகும்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறித்து கருத்துக்களை வெளியிடுவதைக் குற்றமாக நாம் கருதவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொடிய போரை ஒழித்ததில் வரலாறாகின்றார் என்பதில் சந்தேகமும் இல்லை.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் குழந்தை என்ற காரணத்துக்காகக் கொடியமுறையில் அந்த குழந்தையைக் கொன்றதன் மூலம் அந்த குழந்தை பயங்கரமான முறையில் இந்த உலகத்தை விட்டுச் சென்றுள்ளது. இதன்மூலம், சமாதானம் அகன்று சென்றது. துப்பாக்கிகள் மௌனமாகின. அதேநேரம் சமாதானப் பேச்சுக்களின் குரல்களும் மௌனமாகின.

சிங்கள இனவாதத்தையும் தமிழ் இனவாதத்தையும் நாம் எதிர்க்கின்றோம். மலையக மக்கள் உட்பட்ட அனைத்து சமூகத்தவர்களுக்கும் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படவேண்டும்” என்று தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவர் மற்றொன்றையும் குறிப்பிடத் த்வறவில்லை.

“தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டார். அவரின் குறிக்கோளும் வரலாற்றில் இடம்பெற்று விட்டது.

> **“சிங்கள இனவாதத்தையும் தமிழ் இனவாதத்தையும் நாம் எதிர்க்கின்றோம். மலையக மக்கள் உட்பட்ட அனைத்து சமூகத்தவர்களுக்கும் நம்பிக்கை உறுதிப்படுத்தப் படவேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.”**

ஆனால், அந்த குறிக்கோள் தற்போது மறைந்துள்ளதே தவிர மீண்டும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. பிரிவினைவாதம் தற்போதைய நிகழ்ச்சி நிரலில் இருந்து வெளியேறியுள்ளபோதிலும் அது நிரந்தரமாக வெளியேறவில்லை” என்றும் கோபாலகிருஷ்ணகாந்தி சிங்களத் தலைவர்கள் முன்பாக உண்மை நிலையை அவிழ்த்து விட்டார்.

அவரது இந்த உரை சிங்கள அரச ஆட்சியாளர்களின் மனநிலையைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதுடன் தமிழருக்கு மறுக்கப்படும் நீதியையும் புட்டு வைத்துள்ளது. அத்துடன் இந்த உரையால் தெற்கில் பெரும் சர்ச்சையும் கிளம்பியுள்ளது. கோபாலகிருஷ்ண காந்தி உரையாற்றி முடித்த சிறிது நேரத்திலேயே அவரது உரைக்கு எதிராக முகநூலில் கடும்போக்கான கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

தமிழினப்படுகொலையில் ஈடுபட்ட சிங்கள அரசைக் கோபாலகிருஷ்ண காந்தி தனது உரையில் கடுமையாகச் சாடியுள்ளார். அத்துடன் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் படுகொலையையும் மிகமோசமானது - ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர் வர்ணித்திருந்தார்.

யார் தான் என்ன சொன்னாலும் அதனைச் செய்தவர்கள் மீது மைத்திரி கைவைக்க முடியாது. அடுத்த நொடியே பௌத்த சிங்களப் பேரினவாதப் பூதம் மைத்திரியை விழுங்கி ஏப்பம் விட்டு விடும்.

ரணிலின் துணையோடு மைத்திரியை ஆட்சியில் அமர்த்தியதில் அமெரிக்கா முதலான மேற்கு நாடுகளின் பங்களிப்பு அதிகம். இந்தியாவின் கையும் அதில் நிச்சயமாக இருந்திருக்கும். சர்வதேச விசாரணை நடக்காமல் இலங்கையை இலங்கையே விசாரித்துக் கொண்டால் ஒட்டுமொத்தக் குற்றவாளிகளும் தப்பித்து விடுவார்கள் என்பது இவர்கள் அத்தனைப் பேருக்கும் நன்கு தெரியும்.

சர்வதேசத்தின் இந்த நிலைப்பாடுதான் மகிந்தவை விசாரணைக் கூண்டில் ஏற விடாமலும் மைத்திரியை ஆட்சிக் கட்டிலிலிருந்து இறங்க விடாமலும் காப்பாற்றுகிறது. உண்மையில் மைத்திரியின் ஓராண்டுச் சாதனை போர்க்குற்றவாளிகளைத் தண்டனையில் இருந்து பாதுகாத்தமை மட்டுமே.

இந்த ஓராண்டில் அரசு மீது விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள் எதனையும் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை மைத்திரி.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நீதிபதிகள் பங்கெடுக்கும் சிறப்பு நீதிமன்றத்தை அமைக்கச் சொல்கிறது ஐ.நா மனித உரிமைகள் சபை. இலங்கையும் சேர்ந்தே அந்தத் தீர்மானத்தை ஜெனிவாவில் நிறைவேற்றியது. ஜெனிவாவிலிருந்து கொழும்புக்கு வந்ததும் சிறப்பு நீதிமன்றம் என்கிற பேச்சுக்கே இடமில்லை என்று கரணமடித்தது. கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விடுகிறது. சிறப்பு நீதிமன்றம் பற்றியெல்லாம் அவசரப்பட்டு முடிவெடுக்க முடியாது என்று மைத்திரியும் சேர்ந்து அடம் பிடிக்கிறார்.

தமிழர் வாக்குகளால் தான் ஜனாதிபதியாகியதை மறந்துள்ள மைத்திரி இன்று நல்லாட்சி என்று எதற்கு அர்த்தம் கற்பிக்க முற்படுகின்றார். அரசியல் கைதிகள் விடுவிப்பில் சொன்னது எதுவும் நடக்கவில்லை. அவர்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றார்கள். காணிகள் விடுவிப்பும் முற்றாக முடியவில்லை. படைக்குறைப்பும் நடக்கவில்லை. இதுதான் ஓராண்டு நல்லாட்சியின் இலட்சணமோ?

# இந்திய அணி சிக்குமா? சிதறடிக்குமா?

■ பிரகாஸ்

## வேகத்தால் வியூகம் வகுத்துள்ள ஆஸி.




“சுழலை விடவும் வேகத்தில் அதிக நம்பிக்கை வைக்கும் ஆஸ்திரேலியா. இந்தியாவை வீழ்த்தவும் வேகத்தையே அதிகம் நம்பிக் களமிறங்குறது.”

ஒரு அணியை வீழ்த்துவதற்கு துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று மூன்று துறைகளையும்தேர்ந்தெடுத்து செயற்பட்ட காலம் மாற்றம்பெற்று வார்த்தை மோதல், ஆடுகளத்தை பக்கச்சார்பாக மாற்றியமைத்தல் ஆகிய இரண்டையும் புதிதாக சேர்த்துக் கொண்டுள்ளன உலக அணிகள். இந்த திட்டங்கள் அனைத்து அணிகளாலும் பின்பற்றப்படுகின்றன என்றபோதிலும், இங்கிலாந்தும், ஆஸ்திரேலியாவும் வார்த்தை மோதலையும், தமக்குச் சார்பான ஆடுகளங்களையும் அமைத்து வீழ்த்துவதில் வல்லவர்கள். இத்தகைய ஓர் பெரும் சாவாலை சந்திக்க கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டுவிட்டது இந்திய அணி. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரும் மூன்று ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரும் நாளை மறுதினம் ஆஸ்திரேலியாவில் ஆரம்பமாகிறது. முதலாவதாக ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. சுழலை விடவும் வேகத்தில் அதிக நம்பிக்கை வைக்கும் ஆஸ்திரேலியா, இந்தியாவை வீழ்த்தவும் வேகத்தையே அதிகம் நம்பிக் களமிறங்குகிறது. குறித்த தொடருக்காக அமைக்கப்படவுள்ள ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கலாம் என்றே எண்ணப்படுகிறது. உத்தியோகபூர்வமான அறிக்கைகளோ கருத்துக்களோ இன்னமும் வெளியிடப்படவில்லை. ஆனால் ஆஸ்திரேலியாவின் அணித்தெரிவில் இருந்தே ஆடுகளம் எப்படி அமையப்போகிறது என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆஸ்திரேலிய அணியில் ஓர் சுழற்பந்து வீச்சாளர்கூட இடம்பெறவில்லை. காயம் காரணமாக ஸ்ராக் விலகியிருந்த நிலையில் லையனை அணியில் கொண்டுவந்து சுழலுக்கும் சாதகமாக அணி கட்டமைக்கப்படும் என்ற எதிர்வுகூறல்கள் எல்லாம் பொய்த்துப்போய் விட்டன. ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற பகுதிநேரப் பந்துவீச்சாளரான மக்ஸ்வெல் ஒருவர் மட்டுமே சுழலை வீசக்கூடியவர். ஆனால் இவரை வைத்து ஆஸ்திரேலியா சுழலில் நாட்டம் காட்டுகிறது என்று கணித்துவிட முடியாது. ஏனெனில் ஓர் ஆட்டத்தில் நான்கு முதல் ஐந்து பந்துப் பரிமாற்றங்களை வீசும் ஒருவர்தான் மக்ஸ்வெல்.

இத்தகைய ஆடுகளங்களில் இந்தியாவால் ஆஸ்திரேலியாவை சமாளித்துவிட முடியுமா? எனக் கேள்வியெழுப்பினால் பதில் இந்திய ரசிகர்களுக்கு சாதகமாக அமையாது. இதற்கு காரணம் இந்தியாவிடம் வேகப்பந்துடன் சார்ந்த சகலதுறை வீரர்கள் இல்லாதமையே. ஆனால் ஆஸ்திரேலியாவிடம் வேகப்பந்து வீச்சுடன் சார்ந்து செயற்படக்கூடிய பல்க்னெர் போன்ற சகலதுறை வீரர்கள் உள்ளனர். இந்த விடயத்தில் அஸ்வின், ஜடேயா இருவரதும் பந்துப் பரிமாற்றங்கள் கேள்விக்குறியாகின்றன. இதனால் யாதேவ், புவனேஸ் குமார், சமி ஆகிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களையும் இந்தியா களமிறக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த மூவரும் தமது 10 பந்துப் பரிமாற்றங்களையும் நிறைவுசெய்தாலும் 20 பந்துப் பரிமாற்றங்கள் எஞ்சியிருக்கும். மொத்தத்தில் ஆஸ்திரேலியா 50 பந்துப் பரிமாற்றங்களில் காட்டப்போகும் பெறுபேற்றை இந்தியா 30 பந்துப் பரிமாற்றங்களில் காட்ட வேண்டிய கட்டாயமுள்ளது. ஜடேயாவை விடுவித்து வேகப்பந்து வீச்சுடன் சகலதுறைகளிலும் அசத்தக்கூடிய இர்பான் பதானை அணியில் கொண்டு வந்திருந்தால் இந்தியா இன்னும் பலம்பெற்றிருக்கும் என்பது நிதர்சனம்.

# இந்த வருடமும் செரீனாவா?



ரென்னிஸ் உலகில் கடந்த வருடம் இருவரால் ஏக ஆதிக்கம் செலுத்தப்பட்டது. ஆண்கள் பிரிவில் ஜோகோவிக், பெண்கள் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் இருவருமே அவ்வாறு கடுமையாக தனித்து ஆதிக்கம் செலுத்தியவர்களாவர். ஜோகோவிக்கைவிட செரீனாவின் வெற்றிகளை தனித்து குறிப்பிடப்பட வேண்டிய அவசியம் உள்ளது. ஏனெனில் ரென்னிஸ் உலகமே கண்டிராத அளவுக்கு கடுமையான வெற்றிகளைக் குவித்திருந்தார் செரீனா.

ஒருவருடத்தில் பல்வேறு ரென்னிஸ் தொடர்கள் மாறிமாறி வருகின்ற போதிலும், அவற்றில் ஐந்து மட்டுமே சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களாக அமைந்திருக்கும். ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர், விம்பிள்டன், அமெரிக்கன் ரென்னிஸ் தொடர், பிரான்ஸ் ரென்னிஸ் தொடர், கனடா ரென்னிஸ் தொடர் என்பனவே அவை. இவற்றில் நான்கைக் கைப்பற்றி அசத்தியிருந்தார் செரீனா. அமெரிக்க ரென்னிஸ் தொடரை மட்டுமே அவரால் கைப்பற்ற முடியவில்லை. இதைக் கைப்பற்றியவர் பென்னட்டா.



செரீனாவின் வயதைக் கருத்தில்கொண்ட சிலர் கடந்த வருடம் அவர் தனது ஓய்வை அறிவிப்பார் என்று எதிர்வுகூறினர். ஆனால் இளம் வீராங்கனைகளால் முடியாததை, ஏன் இதுவரை காலமும் ரென்னிஸ் உலகம் கண்ட வீராங்கனைகளால் முடியாததை சாதித்து இரண்டாம் இடத்தில் உள்ள வீராங்கனையை விட 5ஆயிரம் புள்ளி கள் வித்தியாசத்தில் முதலிடத்தில் தொடர்கிறார். இதனால் கடந்த ஆண்டின் சிறந்த வீராங்கனையாக மட்டுமல்ல வீரருக்கு உரிய விருதும் செரீனாவுக்கு கொடுக்கப்பட்டது. விளையாட்டு உலகில் இத்தகைய கௌரவத்தை பெறும் இரண்டாவது வீராங்கனை செரீனா.

இத்தகைய பெறுபேறுகளையும் கௌரவங்களையும் பார்க்கின்ற பொழுது செரீனாவின் திறனில் இப்போதைக்கு வீழ்ச்சி ஏற்படும் என்பது சாத்தியமில்லை. ஆனால் அடிக்கடி ஏற்படும் காயங்களே அவர் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் காயத்தால் விலகியிருந்த செரீனா, இந்த வருடத்திலும் இன்னமும் மீளவில்லை. காயம் குணமடைந்து ஆட்டங்களுக்கு திரும்பினால் செரீனாவின் வெற்றிகள் உறுதி. ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஏழு நாள்களே உள்ள நிலையில் காயத்தில் இருந்து மீளுவாரா, மீழமாட்டாரா என்பதே தற்போதுள்ள கேள்வி.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 70 | 60 | 120 | 60 | 60 | 40 | 70 |
| கத்தரி | 140 | 120 | 120–160 | 120 | 100–120 | 120 | 100 | 130 |
| கரட் | 200 | 220 | 200–300 | 180 | 260–280 | 300 | 180 | 230 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 50 | 30 | 30 |
| பயிற்றை | 200 | 130 | 180 | 200 | 120 | 160 | 130 | 150 |
| பாகல் | 180 | 200 | 160–200 | 140 | 140 | – | 130 | 250 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 90 | 80 | 80 | 70 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 90 | 100 | 65 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 120 | 150 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40 | 60 | 40 | 40 |
| தக்காளி | 80 | 100 | 60 | 80 | 60 | 100 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 60 | 50 | 40 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 30–40 | 50 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 40 | 20 | 30 | 10 | 12 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 300 | 260 | 300 | 400 | 230 | 500 |
| புடோல் | 80 | 100 | 60 | 100 | 90 | 120 | 40 | 100 |
| கோவா | 120 | 120 | 140 | 180 | 120 | 80 | 90 | 100 |
| வெண்டி | 200 | 120 | 100–140 | 100 | 160 | 120 | 80 | 130 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 280 | 240 | 160 | 200 | 150 |
| லீக்ஸ் | 150 | – | 120 | 240 | 120 | 140 | 130 | 120 |
| தேங்காய் | 50 | 48 | 50 | 50–60 | 60 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80. | 80 | 70 | 70 | 80 | 52 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 | 90 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 320 | 300 | 400 | 250 | 350 |
| இராசவள்ளி | 100 | 120 | 140 | 140 | 160 | 160 | 100 | 100 |

# அறைக்குள் அழகுச் செடிகள்!



மேலைநாடுகளில் உள்ளது போல வீடு மற்றும் அலுவலகங்களுக்குள் செடிகளை வளர்ப்பதே இப்போது நாகரிகமா்க மாறி வருகிறது. இது வீடு மற்றும் அலுவலகங்களில் இயற்கைச் சூழலை உருவாக்குவதோடு அழகும் சேர்க்கிறது. அறைகளிலுள்ள கரிம வாயுவை எடுத்துக் கொண்டு நிறைய பிராண வாயுவை வெளிவிடுகிறது.

**பல நிறம் கொண்ட டைபன் பாக்கியா!**
இந்த அழகுச் செடி வீட்டுக்குள் வைக்கும் பிரபலமான தாவரம். வித்தன்மை கொண்டது. இதன் சாறு வாய்ப் பகுதியில் படும்போது உணர்வின்றி மரத்துப் போய்விடும். அதனால் இதனை டம்ப் கேன் என்றும் அழைப்பர். பல வித நிறங்கள் கொண்ட வகைகள் இருப்பதால் வளர்ப்பவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. சிறு குழந்தைகள் இருக்கும் வீட்டில் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டிய தாவரம் இது.

**பளபள ஜாமியா!**
பராமரிப்பு அதிகம் தேவையில்லை. வளர்க்கும் மண் நல்ல காற்றோட்டமுள்ள தாகவும் ஈரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையுடன் இருந்தால் நல்ல பளபளப்புடன் அதிக ஆண்டுகள் இருக்கும். தென்னைநார் கழிவுகள் உபயோகிப்பது நன்மை அளிக்கும். நீர் அதிகம் இருந்தால் அடிப்பகுதி அழுகிவிடும். அதனால், நீர் ஊற்றுவதில் கவனம் தேவை. மெதுவாக வளரும் தன்மை யுள்ள காரணத்தால் உற்பத்தி சற்று கடினம். விலையும் சற்று அதிகம். அடிப்பகுதி கிழங்கிலிருந்து புதிய நாற்றுக்களை உருவாக்கலாம். பூக்களும் தோன்றும் என்றாலும், அவை அதிகம் கவனம் பெறுவதில்லை.

**கண்ணைக் கவரும் மெக்சிகன் பிரெட் புரூட்!**
"ஸ்விஸ் சீஸ்" அல்லது "ஹரிக்கேன் பிளாண்ட்" என்றும் அழைக்கப்படும் இந்தத் தாவரம் கொடி வகையைச் சேர்ந்தது. வீட்டுக்குள் வைப்பதற்கு மிகவும் ஏற்றது. இலைகள் சற்று கடினமாக கரும்பச்சை நிறத்துடன் பளபளப்பாகக் காணப்படும். இலைகளின் ஓரங்களிலிருந்து உள்நோக்கி வெட்டி விட்டால்போல இருக்கும். அதனிடையே துவாரங்களும் தோன்றி பார்ப்பவர்களின் கவனத்தை எளிதாகக் கவரும். ஆரம்பத்தில் தோன்றிய இலைகள் 2 ஆண்டுகள் வரை கூட இருக்கும். நன்கு பராமரித்தால் 20 ஆண்டுகள் வரை கூட வைத்துக் கொள்ளலாம்..



# இது புதுசு





## வண்ணத் தோடுகள்

நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்ட தோடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலை நாட்டு வடிவமைப்பையும், வட இந்தியக் கலப்பையும் உள்ளடக்கிய விதத்தில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளது. மிகவும் நேர்த்தியான, அழகான இந்த வகைத் தோடுகள் 1,250 முதல் 3,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

# கடலுணவுகளின் நேற்றைய விலை விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 600 | 800 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 300 | 500 | 400 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 700 | 600 | 700 | - |
| பாரை | 450 | 500 | 600 | 500 | 700 | 600 | 450 |
| சுறா | 300 | 600 | 600 | 800 | 600 | 1000 | - |
| சீலா | 250 | 500 | 500 | 500 | 450 | 600 | 400 |
| விளை | 500 | 500 | 300 | 550 | 500 | - | 400 |
| முரல் | 250 | 350 | 400 | 400 | 400 | 500 | - |
| கும்பிளா | 300 | 300 | 400 | 500 | 400 | 500 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | - | - | 450 | - | - |
| ஓரா | 300 | 350 | .300 | 300 | 300 | 400 | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 200 | - |
| நகரை | 150 | 300 | - | - | 300 | 250 | 300 |
| ஆடை | 130 | 200 | 100 | 200 | 200 | 200 | - |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 300 | 400 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 350 | 350 | 300 | - |
| மதனம் | 250 | 300 | 220 | 300 | 250 | 400 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 70 | - |
| பாலை | 100 | 250 | 300 | 300 | 400 | 500 | - |
| வாழை | 150 | 150 | - | 300 | 300 | 300 | 250 |

## நாளை

மார்கழி -26
திங்கட்கிழமை 11.01.2016
திதி: துதியை பி.இ.06.14
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப.10.43
ராகுகாலம்: 08.03-09.33 வரை
சுபநேரம்: 12.33- 02.03 வரை
கெர்ப்போட்ட முடிவு

# நெய் பாயசம்

**தேவையானவை:**

அரிசி – 1 கப்,
வெல்லத்தூள் – இரண்டரைக் கப்
நெய் – 4 கரண்டி
ஏலக்காய்த்தூள் – ஒரு சிட்டிகை
பொடியாக நறுக்கிய தேங்காய் – 1 பிடி

**செய்முறை**

சட்டியில் 1 கரண்டி நெய் விட்டு நறுக்கிய தேங்காயைச் சிவக்க வறுக்கவும். ஆரிசியைக் கழுவி சமையல் எரிவாயுவில் 3 கப் தண்ணீர் விட்டு வேக வைத்து இறக்கவும். வெல்லத்தில் கால் கப் தண்ணீர் விட்டுகரைத்துக் கொள் ளவும். அதை வடிகட்டி பாகுபதம் வந்தவுடன் வெந்த சாதத்தைப் போட்டுக் குழைக்கவும். நன்றாக குழைந்ததும் 3 கரண்டி நெய் விட்டு மிதமான தீயில் நன்றாகக் கிளறவும். அதில் வதக்கிய தேங்காயையும், ஏலக்காய்த்தூளையும் சேர்த்து நன்றாகக் கிளறி, எல்லாம் சேர்ந்துப் பாயசப் பதத்தில் வரும்போது இறக்கிவைக்கவும். சுவையான நெய் பாயசம் தயார்.

## சமைப்போம் வாங்க



# அருந்ததிராய் ஸ்ரைலில் மதுமிதா



கிஷோர், வசுந்தரா, அசோக், மதுமிதா, வின் சென்ட் நடிக்கும் படம், "புத்தன் இயேசு காந்தி". ப்ளசிங் என்டர்டெயினர்ஸ் சார்பில் பிரபாதீஷ் சாமுவேல், கபிலன் சிவபாதம் இணைந்து தயாரிக்கும் இந்தப் படத்தில், கிஷோர், தூக்குத் தண்டனைக் கைதியாக நடிக் கிறார். வசுந்தராவும், அசோக்கும் பத்திரிகை யாளர்களாக நடிக்கின் றனர். மதுமிதா சமூக அவலங்களுக்கு எதிராகப் போராடுபவராக நடிக்கிறார்.

இந்தப் பாத்திரத்துக்காக மதுமிதா புக்கர் பரிசு பெற்ற அருந்ததி ராயை, ரோல் மொடலாக ஏற்று அவரின் நடை, உடை பாவனை களைப் பின்பற்றி நடித்துள்ளார். இதற் காக அருந்ததிராய் பங்கேற்ற வீடி யோவைப் பார்த்து அந்தப் பாத் திரத்துக்குத் தன்னை தயார் படுத்தி உள்ளார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உங்களின் திறமை கண்டு, சிலர் பொறா மைப்படுவர். தொழிலில் குறுக்கிடும் தடை நீங்கும். இலாபம் கூடும். அரசியல்வாதிகள் மக் கள் சேவையில் ஈடுபடுவர். மாண வர்கள், பாது காப்புக் குறைவான இடத்துக்குச் செல்லக் கூடாது.

**இடபம்:** அன்றாடப் பணி எளிதாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில், மாறுபட்ட சூழ்நிலையை சரி செய்வீர்கள். இலாபம் சுமார். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். மனைவியின் பேச்சு ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** குடும்பச் சூழ்நிலை அனுகூலமாக அமையும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். உபரியாக வருமானம் கிடைக்கும். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** செயலில் பொறுமை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். சுபச் செய்தி வந்து சேரும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**சிங்கம்:** செயல்களில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கன்னி:** பொறுமையுடன் செயல்படுவது நன்மையளிக்கும். தொழில், வியாபார வளர்ச் சிக்காக, புதிய உத்திகளைப் பின்பற்றுவீர்கள். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் பெறுவர். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படு வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், சாதனை படைப்பீர்கள். இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** அவசரப்பணியால் அன்றாடப் பணி தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**தனுசு:** புதிய முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபார அபிவிருத்தியால், இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை கொள்வீர்கள். பெண்கள் ஆடம்பர மாக செலவழிப்பர்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவருடன் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். பெண்கள் யாரிடமும் பொருள் இரவல் வாங்கக் கூடாது.

**கும்பம்:** சுறுசுறுப்பாகப் பணிபுரிவீர்கள். நண் பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியா பாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பணக்கடன் பெரும்பகுதி அடைபடும். மாண வர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** வெற்றிக்கான இரகசியத்தைப் பிறரிடம் சொல்லக் கூடாது. தொழில், வியாபாரத்தில், விடா முயற்சியால் இலாபம் கூடும். தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். பெண்கள் தாய் வீட்டினரின் அன்பைப் பெறுவர்.










பேஸ் புக்கில் பிடித்தவை...

# தந்தைக்குப் பாடம்

அன்று விடுமுறை நாள். விடுமுறை நாள் என்றாலே வீட்டில் அவப்போது செல்லச் சண்டைகள் நடக்கும். குடும்பம் என்று இருந்தால் சண்டைகள் நடப்பது சகஜம் தானே. இன்று அந்தச் செல்லச் சண்டை நடந்தது மகளுக்கும் தாய்க்கும் நடுவே.

யாரின் தந்தை அதிக பாசக்காரர் என்ற சண்டை தான் தாய்க்கும், மகளுக்கும் நடுவே நடந்தது.

நான் எதைக் கேட்டாலும் வாங்கித் தருவார் எனது தந்தை என்றாள் தாய்.

நான் கேட்காமலேயே அனைத்தையும் வாங்கித்தருவார் எனது தந்தை என்றாள் மகள்.

என்னைத் தங்கத் தட்டில் தாங்கியவர் எனது தந்தை என்றாள் தாய்.

என்னைத் தனது நெஞ்சில் போட்டுத் தாங்கியவர் என்றாள் மகள்.

செல்லச் சண்டை தொடர்ந்து கொண்டே இருந்தது.

எனது தந்தை தான் பாசக்காரர் என்னை அடிக்கவே மாட்டார் என்றாள் தாய்.

இல்லை இல்லை... எனது தந்தை தான் பாசக்காரர் மற்றவர்கள் என்னை அதட்டக் கூட விடமாட்டார்.

எனது தந்தை உங்களை அடிப்பது தெரிந்து மௌனமாக இருக்கிறாரே எனது தாத்தா..

அப்போ எனது தந்தை தானே பாசக்காரர் என்றாள் மகள் விளையாட்டாக.

இதை கேட்டுக்கொண்டிருந்த தந்தைக்கு தூக்கிவாரிப் போட்டது.

தான் தனது மகளை நேசிப்பது போல் தானே தனது மனைவியையும் அவரின் தந்தை நேசித்திருப்பார் என்று உணர்ந்தார்.

மகளின் செல்லச் சண்டை தந்தைக்கு பாடம் புகட்டியது...



படித்ததில் பிடித்தது

**இளவேனில்**

துரோகத்திற்குப் பிறகு துளியளவும் குற்ற உணர்வே இல்லாமல் அவர்களால் சிரிக்க முடிகிறதென்றால் நம்மால் ஏன் மீண்டு வாழ முடியாது?

**ஸ்வீட் ★ ராஸ்கல் ★ ஷக்தி** @Sakthivel_

நம்மில் பலரும் சின்னச் சின்னப் பலவீனங்களை இறுகப் பற்றிக் கொண்டு, வாழ்க்கை என்கிற கண்ணாடியை அவ்வப்போது நாமே உடைத்துவிடுகிறோம்...

**Vivekh actor** @Actor_Vivek · Dec 31

அமைதி, வளம், உடல்நலம், தன் நம்பிக்கை, உழைப்பு, வெற்றி, பணிவு, பரிவு-இவைகளோடு நடைபோடுங்கள் நண்பர்களே! HAPPY 2016



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 7 | 6 | | 1 | | |
| | | | | 8 | | | | |
| | | 6 | | | | | 7 | 2 |
| | | 9 | | | | 2 | 4 | |
| | 1 | | | | | 5 | | 3 |
| | | 4 | | | | | | |
| | | 2 | | | 7 | | | |
| | | 7 | 8 | 1 | | | 9 | |
| 3 | | | | | 5 | 7 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 8 | 9 | 3 | 6 | 1 | 7 | 5 |
| 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 8 | 4 | 3 |
| 5 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 | 9 | 2 |
| 9 | 8 | 4 | 3 | 1 | 2 | 7 | 5 | 6 |
| 6 | 5 | 2 | 7 | 8 | 9 | 4 | 3 | 1 |
| 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 | 2 | 8 |
| 1 | 4 | 3 | 2 | 7 | 8 | 5 | 6 | 9 |
| 2 | 7 | 9 | 1 | 6 | 5 | 3 | 8 | 4 |
| 8 | 6 | 5 | 4 | 9 | 3 | 2 | 1 | 7 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை கதிரவேலு

(கோட்டைச்சீமா முத்துமாரி அம்மன் ஆலய தர்மகர்த்தா)



கெருடாவில் தெற்கு, தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கதிரவேலு 09.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கரவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் பாசமிகு கணவரும், இரத்தினசாமி, மங்கையற்கரசி, கனகாம்பிகை, கௌசலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கரவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு கந்தப்பு, இலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், இரத்தினராசா (கனடா), அகிலன் (கனடா), கம்ஷா (கனடா),காமினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுசிந்தா (கனடா), ரஜனி(கனடா), வசிகரன் (கனடா), ஜெபநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சானுஜா, ரேவிகா, அக்ஷயன், சுருதிகா, விபூஷா, கிசானி, நாவினி, சஜீனா, தேஜஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோவிலடி,
கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 021 300 7860, 077 051 4578


# நல்லாட்சி உதயமான நாளில் கறுப்புக் கொடிப் போராட்டம்

கொழும்பு, ஜன. 10

நல்லாட்சி அரசின் ஒருவருடப் பூர்த்தியையொட்டி நாடு முழுவதிலும் நேற்று முன்தினம் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கோட்டையான பொலனறுவை மாவட்டத்தில் சிங்கக்கொடி ஏற்றப்பட்டு அரசை ஆதரித்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கோட்டையான அம்பாந்தோட்டையில் நல்லாட்சி அரசுக்கு எதிராகக் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

ஜனவரி முதல் வாரத்தில் (1 முதல் 8 வரை) மைத்திரி - ரணில் அரசுக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டத்துக்கு மகிந்த ஆதரவு அணியிலுள்ள உதய கம்மன்பிலவின் புதிய ஹெல உறுமய கட்சி அறைகூவல் விடுத்திருந்தது. அரசின் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவிப்பதற்காகவே இவ்வாறு கறுப்புக் கொடிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுப்பதாக அக்கட்சி அறிவிப்பு விடுத்திருந்தது.

இந்த விடயம் கடந்த ஒரு வாரமாக தெற்கு அரசியல் களத்தில்பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது பற்றி ஆளும், எதிரணி உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துக்களை முன்வைத்துவந்தனர்.

இந்நிலையிலேயே, மகிந்தவின் கோட்டையான அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரியின் கோட்டையான பொலனறுவை மாவட்டத்தில் நல்லாட்சி வேண்டி நேற்று முன் தினம் மத வழிபாடுகள் இடம்பெற்றதுடன், சிங்கக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (த-சி)

# ராஜபக்சாக்களை அரசியலில் இருந்து ஓரம்கட்ட முடியாது

## இப்படிக் கூறுகின்றார் பஸில்

கொழும்பு, ஜன. 10

ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, சிறிலங்காசுதந்திரக்கட்சிக்கோ ராஜபக்சாக்களை அரசியலில் இருந்து ஓரம்கட்ட முடியாது என்று மகிந்த ராஜபக்ச அரசில் அமைச்சர் பதவி வகித்த பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



தற்போதைய அரசியல் நிலை, ராஜபக்ச ஆட்சி கவிழ்ந்து ஒரு வருடம் ஆகியுள்ளமை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ராஜபக்சாக்களை அரசியலில் இருந்து மக்களினால் மாத்திரமே ஒதுக்க முடியும். மகிந்த ராஜபக்ச என்பவர் போராடி வந்த ஒரு தலைவர். அவர் இரகசிய சூழ்ச்சிகளைச் செய்து வந்த தலைவர் அல்லர் என்றும் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச ஆட்சி முடிவுக்கு வந்து ஒருவருடம் பூர்த்தியாகும் நிலையில் நாட்டின் நிலை குறித்து தாம் கவலையடைவதாகவும் அவர் கூறியுள்ளார். ராஜபக்ச ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபாலசிறிசேனவை ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவுசெய்தது சரியா, தவறா என்பதை இவ்வருடத்தில் மக்கள் நினைத்துப் பார்ப்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவின் தோல்விக்குத் தானே காரணம் என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள பஸில் ராஜபக்ச, அன்று அரசில் இருந்த சில குறைபாடுகளும், சர்வதேச நாடுகள் சிலவற்றின் அழுத்தமுமே இந்தத் தோல்விக்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (த-சி)


## திருமதி செல்லம்மா கணேசபிள்ளை



மயிலிட்டி வடக்கு, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், கல்வயல், சாவகச்சேரி மற்றும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கணேசபிள்ளை 09.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கணேசபிள்ளையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, இளையதம்பி, கணபதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை மற்றும் நடராஜா, இளையபிள்ளை ஆகியோரின் சகோதரியும், சுவேந்திரன் (சுரேன்), கஜேந்திரன் (RDA), காலஞ்சென்ற குகேந்திரன் மற்றும் தமிழினி (ஆசிரியர்- சைவத்தமிழ் வித்தியாலயம்), நரேந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், அனுசூயா, இந்துமதி (பிரதேச செயலகம்- கரவெட்டி), நாகேஸ்வரி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், சங்கவி, எந்திரன், மதுசன், சர்னுஜா, பானுஜன், அம்ஷஜா, அர்ச்சகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(67531)(11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.


தொடர்பு:- 077 160 7635, 077 424 2319



## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சோமசுந்தரம்

மண்ணில்
14 . 08 . 1933



விண்ணில்
08 . 01 . 2016

யாழ்.சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா பூந்தோட்டத்தைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சோமசுந்தரம் (08.01.2016) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் பைரவப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் பாரதிதாசன்(லண்டன்), புவனேஸ்வரி (இந்தியா), பகீரதன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயா ரும் சுமதி (லண்டன்), தவராசசிங்கம்(இந்தியா), மதிவதனி(ஆசிரியை - வ/மகாறம்பைக்குளம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் பத்மசாயினி (வ.இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), கேசிகன்(வ/தமிழ்மத்திய மகாவித்தியாலயம்), துலக்சனா(இந்தியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.01.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
பகீரதன்(மகன்)
வவுனியா.


# புதிய அரசமைப்பினால் நாட்டுக்கு பாதிப்பில்லை

## சொல்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஜன. 10

நாட்டின் ஐக்கியத்தை பாதிக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட உள்ளதாக மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் பொய்யானவை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



பத்தரமுல்லவில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதான காரியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனவாத அடிப்படையில் ஒரு சிலர் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். நாடாளுமன்றில் புதிய அரசியல் சாசன அமைப்போ திருத்தங்களோ நாளை (இன்று) சமர்ப்பிக்கப்படாது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில் நாடாளுமன்றின் அனைத்து உறுப்பினர்களும் அரசியல் அமைப்பு பேரவையின் உறுப்பினர்களாகும் யோசனையே முன்வைக்கப்படவுள்ளது. தற்போதைய அரசமைப்பில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமாயின் இந்தக் குழுவினர் பரிந்துரைகளை முன்வைக்க முடியும்.

தேர்தல் முறைமை மாற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து நாட்டின் அரசியலமைப்பு மாற்றம் செய்யப்பட வேண்டுமென சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (த-5)

**கார்கள் விற்பனைக்குண்டு**

தொடர்பு: 072 773 3322
072 784 8040

இந்தியன். AMBASSIDER DIESEL CLASSIC, 15
எண்ணிக்கை கொண்ட கார்கள் விற்பனைக்குண்டு மிகக்
குறைந்த விலையில்

**S.P.S AUTO MOBILES (PVT) LTD**
251/18 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு -10.

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்

அதிகளவு சீனிப்பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.

**Sugar kills, consume with care**

அனுசரணை: கிருபா லேணர்ஸ்(தலைமையகம்)
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 077 722 5292

## உங்கள் வீடுகளின்

**குளியலறை மற்றும் குளியலறை சாதனங்கள் கொமட், சலவை இயந்திரம் ஆகியவற்றில் கல்சியம் படிவடைந்து தொல்லை தருகின்றதா?**

**இவற்றுக்கு நிரந்தர உறுதியான தீர்வுகளுக்கு**

A member of the IDOL family
**UV Water Solution**
water science technologies
Right solution for water issues

தொடர்புகளுக்கு 0775092737
277 கச்சேரி நல்லூர் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

## மாதாந்த இசையரங்கம்

யாழ்ப்பாணம், ஜன.10
இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் மாதாந்த இசையரங்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

(த-ஐ)

**வீடு விற்பனைக்கு**

33/3, அரியாலை முதலியார் ஒழுங்கையில் 2 பரப்புக் காணிக்குள் 7 அறைகள் .2 இணைந்த குளியலறைகள் சமையலறை. பெரிய விறாந்தையுடன் கூடிய சகல வசதிகளுடன் மாடி வீடு விற்பனைக்குண்டு வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு:
021 221 6002



# WE ARE LOOKING FOR AN OFFICER INCHARGE
FOR OUR EDLOCATE OFFICE IN JAFFNA

**The ideal candidate must be;**

- Under 35 years old, Female
- A university graduate
- Excellent communication skills in English & Tamil
- Good computer skills
- To handle overseas university placements

We follow a 5 day working week, provide excellent working conditions, a good remuneration package including bonus and profit share payments. Those with student counseling experience could be given preference.

If you are interested to join a good stable company looking after staff well send a comprehensive up to date CV by email **palitha@busiopps.com** immediately.

**Colombo:** 79/5, Horton Place,
Colombo 7.
T: 011 - 5 219 129 | 5 235 148

16 years of excellence
edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

## இதோ ஓர் அரிய வாய்ப்பு!

வீட்டில் இருந்தவாறே பகுதிநேரத்தில் மேலதிக வருமானம் உழைக்க இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். மற்றும் அழகுக்கலை பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.

மேலதிக தகவல்களுக்கு-077 748 1592 (சி/20574) (11.15)

## இயந்திரமோ ஒன்று! வேலையோ பல !!

**3D** ஹீட் பிறஸ் மெசின்

விசேட விலைக்கழிவுடன்

கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!




Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication..
போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது




பிரின்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு
மக்,பிளேற்,ரிங் போத்தல்,ஸ்ரோன்ஸ்,ரீ சேர்ட்,டைல் போன்றவற்றில் பிறின்ற் செய்யக்கூடியது

**077 201 5330**
**077 385 0089**

**WINRICH INTERNATIONAL(PVT)LTD**
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

max adz

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கட்டுமான நிறுவனத்திற்கு கீழ்குறிப்பிடப்படும் வேலையாள்கள் தேவை.

- ✱ தொழில்நுட்ப உத்தியோகத்தர் (3 வருடமுன் அனுபவம்)
- ✱ தொழில்நுட்ப உதவியாளர்
- ✱ அலுவலக உதவியாளர் (பெண் -கணக்கேடுகளை கையாளுவதில் 3 வருட அனுபவம்)
- ✱ கனரக வாகன ஓட்டுநர் (டிப்பர், உழவு இயந்திரம் செலுத்துவதில் 2 வருட முன் அனுபவம்)

தொடர்புகளுக்கு:
NO.54, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7875, 0776672837



உ
சிவமயம்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
### ஆஸ்தானநாதஸ்வரக்கலைஞர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு நித்திய மங்கலவாத்தியம் இசைப்பதற்கு ஏற்ற நாதஸ்வரக் கலைஞர் ஒருவரை நியமிப் பதற்கான விண்ணப்பம் இத்தால் கோரப்படுகின்றது. பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்

01. ஆசாரசீலராக சீரிய ஒழுக்கக்கட்டுப்பாடுடையவராக இருத்தல் வேண்டும்.
02. கோயில் வளாகத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
03. 45 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
04. சம்பளம் நேரடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் பூரணப்படுத்திய விண்ணப்பத்தை 2016.01.25 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக ''ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு'' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

பொ. அன்பரசன்
செயலாளர்
அறங்காவலர் சபை

(சி.28630)
(13.15)

# நெல்லியடி சரவணா ரெக்ஸ்

## தைப்பொங்கலை முன்னிட்டு

### விஷேட சிறப்புத் தள்ளுபடியுடன் மலிவு விற்பனை

புத்தம் புதிய நவீன டிசைன் ஸ்கேட் & பிளவுஸ்

| | |
|---|---|
| கொட்டன் சாறி | 490/= |
| சில்க் சாறி | 690/= |
| சல்வார் துணி | 790/= - 1500/= |
| சல்வார் | 2800/= - 4900/= |
| சாரம் | 500/= |
| இரு கலர் சாறி (சில்க்) | 2400/= - 5900/= |
| மொடல் சேட் | 990/= - 1400/= |
| ரவுசர் | 1400/= - 2500/= |
| கவுண் | 500/= |
| ரொப் | 690/= - 990/= |

மணமக்களுக்குரிய திருமண பட்டுப் புடைவைகள், பட்டு வேட்டி சால்வைகள் மற்றும் ஏனைய பொருள்களுக்கு 15% விலைக்கழிவு.





வாடிக்கையாளர்கள், அன்பர்கள் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

171, பிரதான வீதி, நெல்லியடி, (சம்பத் வங்கி அருகில்) கரவெட்டி.

தொ.பேசி: 021 226 2992

---

வவுனியா நகரில்

கல்வியுலகின் புதிய சகாப்தம்

# EDI
## Educational Development Institute

கணிதன் மயில்வாகனம் அதுகைம புரான்ஸ்போர் சந்தி பண்டாரிகுளம் T.P : 076 - 8078451

### A/L - 2018 கணித விஞ்ஞானப் பிரிவு

| பௌதிகவியல் | இரசாயனவியல் | உயிரியல் | இணைகணிதம் |
|---|---|---|---|
| திரு.A.இந்திரலிங்கம் (Msc), திரு.எஸ்.தவபாலன் (Bsc) | திரு.A.S.பரந்தாமன் (Bsc) | 25 வருட கால அனுபவமுள்ள ஆசிரியர் | திரு.N.சதீஸ் (Bsc) |

மட்டுப்படுத்தப்பட்ட 20 மாணவர்களைக் கொண்ட ஒரு பிரிவு மாத்திரமே இவ்வாண்டு நடைபெறும் ஆரம்பம் 10.01.2016 - காலை 9.00

### A/L - 2018 தொழில்நுட்பப் பிரிவு

| SFT BST | IT |
|---|---|
| திரு.எஸ்.தவபாலன்(Bsc) | திரு.பாலகலைஞன்(Bsc) |

(கணனி மூலமாக செய்முறை வகுப்புக்களின் விபரணத்துடன்

தொழில்நுட்பப் பிரிவு 2016, 2017 மீட்டலுடன் கூடிய வினா விடை வகுப்புக்கள் ஆரம்பம் 10.01.2016 - மாலை 3.00

### A/L - 2018 கலைப்பிரிவு -01

| இந்து நாகரீகம் | தமிழ் | புவியியல் | வரலாறு |
|---|---|---|---|
| திரு.சிவகஜன் (MA) | பண்டிதர் வீ.பிரதீபன் | திரு.S.T.சிவா(BA) | திரு.P.கெங்கன்(BA) |

### A/L - 2018 கலைப்பிரிவு -02

| இந்து நாகரீகம் | தமிழ் | புவியியல் |
|---|---|---|
| திரு.M.ரதிக்குமார் SplTrd (His) | திரு.A. ரஞ்சன் MA,M(Phil) | திரு.V.R.ஜெயந்தன் SplTrd(Geo) |

### A/L - 2018 வர்த்தகப்பிரிவு

| வணிகக்கல்வி | கணக்கீடு | பொருளியல் |
|---|---|---|
| திரு.P.றெஜி | திரு.S.சிவகுமார், திரு.P.தர்மேந்திரா | திரு.A.சுதாகரன் |

கலைப்பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவில் ஒவ்வொரு ஆசிரியரின் வகுப்புக்களும் 15 மாணவர்களை மட்டும் கொண்ட குழு வகுப்பாக நடைபெறும். A/L 2017 , 2016 பிரிவுகளுக்கானமீட்டலுடன் கூடிய வினா விடை வகுப்புக்கள் ஆரம்பம் 12.01.16 மாலை 3.00

## EDI உயர்தரப் பிரிவின் தனித்துவம்

* இறுக்கமான கட்டுக்கோப்புடைய நிர்வாக ஒழுங்கமைப்பு.
* எந்தவொரு பிரிவிலும் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
* கணணி மூலம் செய்முறைப் பாடங்களின் விபரணம்.
* அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களின் இணைவில் பல்கலைக்கழகம் செல்வதற்கான வழிகாட்டல்.

மாணவர்களே,
உங்கள் கல்வி நிலையை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்று பல்கலைக்கழகத்திற்கு தேர்வு பெற்றிட உங்கள் பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்

M.R.Bala-Kannathasan (நிர்வாகி) T.P : 076 - 8078451

---

# IDM
Nations Campus
Since 1981

BE READY TO MAKE A DIFFERENCE WITH HIGHLY TRUSTED IDM DIPLOMAS ACCEPTED LOCALLY AND INTERNATIONALLY FOR THE PAST 30 YEARS

## Diploma in AUTOCAD

- The Auto CAD / Specifying Coordinates
- Setting up a drawing
- Drawing in 2D / Viewing Your Drawing
- Editing Your Drawing
- Organizing Drawing with Layers
- Obtaining Information from Drawings
- Creating Text
- Drawing Dimensions
- Printing and Plotting Drawing in 3D
- Customizing AutoCAD

2D 3D

HOT LINE 0774419901

- மிக குறுகிய காலம்
- இலகு தவணைக் கட்டண முறை
- வார, வார இறுதி நாள் விரிவுரைகள்
- குழு / தனியான கற்றல் முறை

Register Before 20th January

Our International Affiliations: bhat, bucks, edexcel, Charles Sturt University, Open University, BIT, bcs

IDM Nations Campus இன் யாழ் குடாநாட்டிற்கான கிளை தலைமையகத்தின்கீழ் பின்வரும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

## IDM NATIONS CAMPUS
#216, Nawalar Road, Jaffna | Tel: 021 222 9901
E-mail: jaffna@idmedu.lk | www.idmedu.lk

---

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

## LONDON METROPOLITAN COLLEGE




### IELTS
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

### IELTS LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

### APPLIED SPOKEN ENGLISH (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

### DIPLOMA IN ENGLISH
Duration: 60 hours (Week, Weekends)



### COMPUTER COURSES
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
Tel: 021 753 8395

HOTLINE : 0774765990 | 021 753 8395

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட கட்டணம் (25 தொடக்கம் 50 வீதம் வரை)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபாக்கியம் செபமாலை



பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபாக்கியம் செபமாலை 04.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - இக்னேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆரோக்கியம் - சவுரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், செபமாலையின் அன்பு மனைவியும், ராணி, றொபின், றொபட் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெறோம், செறின், கொன்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகளும், காலஞ்சென்ற அன்னமரியம்மா மற்றும் அன்னரத்தினம், அன்னமலர், காலஞ்சென்ற அன்னராசலிங்கம் மற்றும் செல்வராசா நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வில்பேட், யோசப்சகாயம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(67500)(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

ஜெறோம் (பிரான்ஸ்) - 0033 6518 15926, றொபின் (கனடா) - 0014 1626 76091,
றொபேட் (பிரான்ஸ்) - 0033 660 794 838, ஜேம்ஸ் - 077 330 3585

## கதிரவேலு முருகமூர்த்தி

(பிரபல வர்த்தகர் -தொமட்டகொட )



தோற்றம்
18 . 02 . 1955

மறைவு
08 . 01 . 2016

சுழிபுரம் வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு முருகமூர்த்தி 08.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பறுவதம் தம்பதியினரது அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் தவமலர் தம்பதியரின் மருமகனும், கௌரியின் அன்புக் கணவரும், சிவகரன், கிரிதரன், முரளிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகபூசணி, செல்வராணி, கிருஸ்ணமூர்த்தி (கொழும்பு), சாந்தி, புஷ்பகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சிறிரஞ்சன் (ராசன்),சிறிகமலன் (சுவிஸ்),காமினி (சுவிஸ்),சிறிஉதயகுமார் (கண்ணன்), தலையசிங்கம் (சந்திரன் - சுவிஸ்),இராஜநாயகம், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் பிறேமலதா, சண்முகராசா, காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(67523)(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 021 320 5839

## முள்ளிவாய்க்காலில் நினைவு முற்றம் அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை

### ஆராய முதலாவது கூட்டம் 12 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன. 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் அமைக்கும் நடவடிக்கை வடக்கு மாகாண சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நியமிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குழுவுக்கான முதலாவது கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி பேரவைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரனினால், மாகாண சபையில் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் அமைக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் பின்னர் கடந்த வருட இறுதியில் முதலமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக 9 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழு எதிர்வரும் 12 ஆம் திகதி பேரவைச் செயலகத்தில் தமது முதலாவது கலந்துரையாடலை நடத்தவுள்ளது. இந்த வருடம் மே மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர்நினைவுமுற்றத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நிதி அறவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5-10)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகம்(பேபி) நாகராசா(சொக்கன்)



யாழ். மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வவுனியா கிழவி குளம், பாலமோட்டை ஓமந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம்(பேபி) நாகராசா (சொக்கன்) 08.01.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி சின்னத்தம்பி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சரவணபவானந்தன் (சின்னானந்தம்) , சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் நாகராசாவின் அன்பு மனைவியும் சத்தியசீலன்(கனடா), சத்தியமோகன், சத்திய நாதன்(குட்டி) காலஞ்சென்றவர் களான சத்திய ரூபன், சத்திய மூர்த்தி, சத்தியகுமார் மற்றும் சத்தியவதனா ஆகியோரின் அன்புத் தாயாரும் அனித்தாவின் (கனடா) அன்பு மாமியாரும் அக்ஷயா, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் கிழவிகுளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலமோட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 545 9764, 077 039 2969

## மரணஅறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தசாமி

(ATTORNEY - at LAW, J.P.U.M)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம்; யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தசாமி(சட்டத்தரணியும் பதில் நீதிவானும் - சாவகச்சேரி) நேற்று முன்தினம் (08.01.2016) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - ஜெகசோதி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மினிதேவியின் அன்புக் கணவரும் மனோன்மணியின் அன்புச் சகோதரனும் பரமநாதனின் அன்பு மைத்துனரும் நளினி(மாவட்ட நீதிபதி - அக்கரைப்பற்று), ஜானகி, அகிலன், சுகந்தன், விமலன், ஜமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாகரன், சிவலஷ்மன், துசித்தா ஆகியோரின் மாமனும் கவிதா, தயாளன் ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் அனுக்ஷனா, அக்ஷரன், வைஷ்ணவி, துளசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணி அளவில் அவரது கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

35/10, 5ஆம் ஒழுங்கை,
பலாலிவீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: +94 21 222 7079

# அரசமைப்பு மாற்றம் நாட்டுக்கு பேராபத்து

## மகிந்த அணியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 10

நாட்டை அபாயத்துக்குள் தள்ளும் வகையிலான திருத்தங்களைச் செய்யும் நோக்கிலேயே அரசமைப்பு மாற்றப்படவுள்ளது எனச் சுட்டிக்காட்டும் மகிந்த ஆதரவு அணி, அரசமைப்பு மாற்றம் குறித்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவித்தது.

கூட்டு எதிர்க்கட்சியின் இவ்வருடத்துக்கான முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு பொரளையில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

இந்தச்சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டு எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் கடந்த மூன்று மாத காலமாக நாங்கள் மக்களின் ஆணையை நிறைவேற்றியுள்ளோம். அரசு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு விளங்கப்படுத்துவதுடன், தெளிவுபடுத்த வேண்டுமென்று அழுத்தமாக வலியுறுத்தியுள்ளோம்.

வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்தபோதே அது தொடர்பில் அழுத்தம் கொடுத்து மக்களுக்கு எதிரானவைகளை நீக்கியுள்ளோம். நல்லாட்சி என்ற நாமத்துடன், ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகள் அரங்கேற்றப்படுகின்றன. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துமாறு தெரிவித்தோம். அதனைக் காலதாமதப் படுத்துவதற்கு எவ்வித காரணமும் இல்லை. அரசினுள் ஒற்றுமை இல்லாமையாலேயே தேர்தல் பிற்போடப்பட்டு வருகின்றது. 100 நாள் அரசின் எல்லை நிர்ணயம் தொடர்பில் கரு ஜயசூரிய அறிக்கைப்படுத்தி ஜனாதிபதியிடம் கொடுத்து வர்த்தமானியில் பிரசுரிக்க அமைச்சரவைப் பத்திரமும் தயாரிக்கப்பட்டது. தற்போது எல்லை நிர்ணயத்தில் குறைபாடு உள்ளது என்கின்றனர். யாரிடம் குறைபாடு உள்ளது என நன்கு விளங்குகிறது. மீண்டும் ஒரு எல்லை நிர்ணயக் குழுவை அமைத்துவிட்டு தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும்.

நாட்டில் காணப்படும் 300 உள்ளூராட்சிச் சபைகள் மக்கள் பிரதிநிதிகளற்றநிலையில்காணப்படுகின்றன. மக்கள் சேவை வீழ்த்தப்பட்டுள்ளது. தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் அரசி னுள் முரண்பாடு காணப்படுகின்றது. 20ஆவது திருத்தம் நாளை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் நாங்கள் ஆதரவாக வாக்களிக்கத் தயார். தேர்தல் ஆணையாளர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக் கமைய மார்ச் மாதம் 31ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தவேண்டும். எந்தவொரு அரசியல்வாதிக்கும் அடிபணிய தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை என 19ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பில் யோசனைகள் முன்வைக்க கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது. அரசமைப்பு மாற்றப்படுவது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி கூடி ஆராயவுள்ளது. அரசமைப்பை மாற்றும்போது மூன்று விடயங்கள் முக்கியமாக ஆராயப்படும். நிறைவேற்று அதிகாரமுறைமையை நீக்குதல், விருப்பு வாக்கு முறைமையை நீக்குதல், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஆகிய மூன்று விடயங்கள் தீவிரமாக ஆராயப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குதல் தொடர்பில் 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அவ்வாறு சட்டங்கள் கொண்டுவரப்படும்போது அவை நீதிமன்றங்களுக்குச் செல்வது வழக்கம். 19ஆவது திருத்தம் தொடர்பில் நீதி மன்றம் தெரிவித்தது. இவ்வாறான சட்டங்கள் கொண்டுவரப்படும்போது மக்கள் அபிப்பிராயத்துக்கு விடவேண்டுமெனத் திட்டவட்டமாகத் தெரிவித்தது. ஆனால், அவ்வாறு அரசு செயற்படவில்லை.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளிடப்பட்டது. ஆனால், தற்போது மீண்டும் வேறு ஏதோ நடைபெறுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் முறைமையை மாற்ற வேண்டாம் என அழுத்தம் கொடுக்கின்றது. ஜே.வி.பியும் புதிய தேர்தல் முறைமை வேண்டாம் என்கின்றது. நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறும் நிலை காணப்பட்டு அதனை நிறைவேற்றாது நாட்டை பாதாளத்துக்குள் தள்ளும் ஒரு முயற்சியே மேற்கொள் எப்பட்டு வருகின்றது-என்றார்.

(த-சி)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.10

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முன்பள்ளி கல்விச்சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்துக்குப் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதை பூர்த்தி செய்தவராக இருப்பதுடன், க.பொ.த சாதாரணதரத்தில் இருதடவைக்குமேற்படாத அமர்வில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி அடைந்திருப்பது அவசியம் என யாழ்.பிராந்திய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவத்தைப் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ் பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல் கண்டி வீதி கிளிநொச்சியில் அமைந் துள்ள கற்கை நிலையத்திலும், ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைதீவு கற்கை நிலையத்திலும் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-ரி4)

### ஈர விழிகளுடன் ஈராண்டில்...



அமரர்
ஜயம்பிள்ளை
கற்பகவரன்

மண்ணில்
1965.01.20
விண்ணில்
2014.01.02

எமக்கு வரம் என கிடைத்த வரனே
உங்களைப் பிரிந்து ஈராண்டுகள் போனது
எமக்கு இரு ஜென்மங்கள் ஆனதுபோல்...
நற்பண்பும் நல்ல குணமும் கொண்ட
நல்மனிதராய் திகழ்ந்தீரே இத் தரணியில்
இன்னும் சிலகாலமெனினும்
வாழ்ந்திருக்கலாமே எம்முடன்!
மீண்டும் எப்போது காண்போம் உங்களை?

உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் இறைவனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி- செல்வமலர்
பிள்ளைகள் -
சாய்சரன், சாத்வீகன்
(ஜேர்மனி)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கமலேஸ்வரி
தணிகாசலம்
(லோகேஸ், சின்ராசா)

மலர்வு
1940.02.15

உதிர்வு
2015.12.11

கூடி வாழ்ந்தவர் நீர் எம்மோடு - ஓடிச் சென்று நாள்கள் உருண்டாலும்
அழியாது உம் நினைவு - எம் நெஞ்சத்தை விட்டு....
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மாரியப்புலம்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

பெறாமகள்
செல்வராசா சுசிலாதேவி
(சுசி - செல்வம்)

(67467) (14,15)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

11.12.2015 அன்று இறைபதமடைந்த

**அமரர் தம்பித்துரை அன்னபூரணம்**

அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை



வள்ளுவன் வகுத்த
வாழ்வியலுக்கேற்ப
மண்ணில் மனிதராய்
வாழ்வதே வாழ்வென
எம்மவர்க்கெல்லாம்
வழிகாட்டி ஒளி தந்த
எமது அன்புத் தெய்வத்துக்கு
எமது இதய அஞ்சலிகள்

மண்ணில்
10.03.1926

விண்ணில்
11.12.2015

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

பத்திரகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நடராசா இந்திரகுமார்**

(ஓய்வுநிலை முகாமையாளர் இலங்கைவங்கி -அச்சுவேலி)

திதி: பிரதமை 10.01.2016

மலர்வு
1950.08.13

உதிர்வு
2014.12.22

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே வாழ்ந்து பாசமழை பொழிந்தாய்
இன்பமுடன் இனிய மொழிபேசி
வங்கியாளனாகி மக்களை வாழ வழிப்படுத்தினாய்!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்

நீங்கா நினைவுகளுடன்....

கதிரிப்பாய் ,அச்சுவேலி
குடும்பத்தினர்.

## தேவை

விநியோக சேவை நடாத்தும் நிறுவனமொன்றிற்கு
**கனரக வாகன சாரதி**
தேவை.

வயது 30க்கு குறைவாக 3 வருட அனுபவம். யாழ்ப்பாணம், வவுனியாவில் வசிப்பவராகவும் சிங்களம் கதைப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

சம்பளம் **24,000/=**

அழையுங்கள்.
**0773 911 922 , 0774 921 377**

---

**வேலைவாய்ப்பு** தொடர்பு: 077 839 2107

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ற் ரோறன்ஸ் இற்கு சுத்திகரிப்பாளர் வரவேற்பாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

---

**வேலைக்கு ஆள்கள் தேவை**

01. காசாளர்
02. ரீமேக்கர்
03. ரொட்டி, ரைஸ் போடுபவர்
04. உணவு பரிமாறுபவர்
05. சமையல் உதவியாளர்
06. பார்சல் கட்டுபவர்.

**ஹோட்டல் றொலெக்ஸ்**
**340. ஆஸ்பத்திரி வீதி.**
**யாழ்ப்பாணம்.**
T.P: 077 161 5694


# இலங்கையின் தூதுவரை சந்தித்த ஹியூகோ ஸ்வைர்

லண்டன், ஜன. 10



இலங்கையில் தற்போது ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் தொடர்பாக பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்திற்கான இராஜாங்க அமைச்சர் ஹியூகோ ஸ்வைருக்கும் பிரிட்டனுக்கான பதில் இலங்கைத் தூதுவர் சுகீஸ்வர குணரத்னவுக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் இன்னமும் செய்யவேண்டியிருப்பவை குறித்து ஸ்வைர் கலந்துரையாடினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (தி)


## விநியோகஸ்தர்கள் தேவை

உலகளாவியரீதியில் முதல் தர பற்றறிகளை விநியோகிக்கும் எம் நிறுவனத்திற்கு நாடு பூராகவும் விநியோகஸ்தர்கள் தேவை.
வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கவர்ச்சிகரமான தரகு (Commission) வழங்கப்படும்.
விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும்.

- வங்கி உத்தரவாதம் காட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- களஞ்சியசாலை வசதியை கொண்டிருத்தல் வேண்டும்.
- விநியோகத்திற்கான போக்குவரத்து வசதியுடையவராக இருத்தல் வேண்டும்.
- இத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு
071 68 56 254 / 071 68 56 240

---

**வகுப்புக்கள் வாடகைக்கு** தொடர்பு: 077 738 2108

யாழ் நகரில் மையப் பகுதியில் Group Classes நடத்துவதற்கான பாதுகாப்பானது சகல வசதிகளுடன் கூடிய இடவசதி உண்டு.

---

**சேவைகள்** தொடர்பு: 077 375 3791 011 313 3945

திருமதி குமரகுரு ஞானேஸ்வரி, ஜே.பி. (அகில இலங்கை), ஆகிய நான் பழைய அலுவலகத்தில் இருந்து பிரிந்து தற்பொழுது அதே 3ஆவது மாடியில் இல. S-68 இல் தனியாக இயங்கி வருகிறேன். எனக்கு வேறு கிளை அலுவலகங்கள் கிடையாது. அத்துடன் இங்கு சகல தூதரங்களினதும் விசா விண்ணப்பப்படிவங்களும், "ONLINE" வேலைகளும் செய்து தரப்படும்.
(c 28046) (14,15)

Email: gnaneswaryk@gmail.com


# ஓய்வு வயதெல்லை 65 ஆக அதிகரிக்கும்

அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்க ராஜித முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 10

அரச அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவிருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அரச அதிகாரிகள் 60 வயதில் ஓய்வு பெறுவதற்குத் தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பாணந்துறை ஸ்ரீ சுமங்கள ஆண்கள் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேம்பிரிஜ் போன்ற பல்கலைக் கழகங்களில் 85 வயதிலும் அறிவை வழங்கக்கூடிய பேராசிரியர்கள் காணப்படுவதாகவும், அறிவைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய சரியான வயதில் இலங்கை அரச சேவையாளர்கள் ஓய்வு பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த நடைமுறை நிறுத்தப்பட்டு அரச சேவையாளர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதி எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)


## புற்று நோய் (Cancer), எயிட்ஸ் நோய்க்கு மூலிகை மருத்துவம்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், ஆரம்பநிலையில் உள்ளவர்கள் மற்றும் மிகவும் முற்றிய நிலையில் பல மருத்துவர்களை சந்தித்தும் குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்டவர்களும் எங்களுடைய மூலிகை மருத்துவத்தின் மூலம் நல்லகுணம் பெற்று வருகின்றார்கள்.

மேலும் தொடர்புகளுக்கு
செல்: 0091 9842457673, 0091 9600336009

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

---

**Majestic** Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30
விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk


## குமார் குணரட்ணத்தின் விளக்கமறியல் நீடிப்பு

முன்னிலை சோசலிஸக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் குமார் குணரட்ணத்தின் விளக்கமறியல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேகாலை நீதிவான் நீதிமன்றம் இதற்கான உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளது.

குடிவரவுச் சட்டத்தின் கீழ் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட குமார் குணரட்ணத்தின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு வருகின்றது. (தி)


**காணி விற்பனைக்கு** 077 181 1638

யாழ்ப்பாணம், அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் A9 வீதியில் 3½ பரப்புக்காணி விற்பனைக்கு. அரியாலை நாவலடி முன்பிருந்த இராணுவ முகாமுக்கு முன்பதாக 22½ பரப்பு வயல் விற்பனைக்கு. (சீ/28351) (1,15,16)

---

**வேலையாள்கள் தேவை** 077 778 8105

யாழ்.நகரிலுள்ள பிரபல உயர்தர சைவ உணவகத்துக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.
*பரிமாறுபவர்கள் (Waiters)
*யூஸ் மேக்கர் (Juice Maker)
*சுத்திகரிப்பாளர்கள் (Cleaners)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


### லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி 2016 ஆம் ஆண்டிற்கான ஆயுள்வேத டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

**தகைமைகள்**

- **வயதெல்லை**

31.12.2015 அன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 30 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**கல்வித்தகைமை**

க.பொ.த(சா.த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த(உ.த) (கலை, வர்த்தகம், உயிரியல், கணிதம்) பரீட்சையில் 02 பாடங்களிலாவது சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியராக இருந்தால் அனுமதியில் முன்னுரிமை வழங்கப்படும். (க.பொ.த (சா.த) சித்தியுடன் மட்டுப்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்கப்படும்)

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அல்லது லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் நேரடியாகப் பெற்ற விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி 20.01.2015 இற்கு முன்னர் " பதிவாளர் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி சுன்னாகம் "என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2016ஆயுள்வேத டிப்ளோமா கற்கை நெறி விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதிவாளர் / அதிபர்**
**லங்காசித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, சுன்னாகம்.**

தலைவர்,
வட இலங்கை சுதேச மருத்துவ சபை.


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



சிவஸ்ரீ யோ.சுபாஸ்கரக்குருக்கள் - வைதேகி தம்பதிகளின் தவப்புதல்வி
**செல்வி லக்ஷ்விகா**
இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை 2ஆவது பிறந்தநாளை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா ஆகியோர் அத்தியடிப்பிள்ளையார், பள்ளம்புலம் முருகன், நீர்வேலி காளியம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

யோகேஸ்வர சுபாஸ்கரகுருக்கள்
ஸ்ரீமதி.வைதேகி } தம்பதிகள்
433, நாவலர்வீதி,
ஆனைப்பந்தி வீதி, யாழ்ப்பாணம்.
077 722 2551

---

## வேலைவாய்ப்பு

* வாகன ஓட்டுநர் (சாரதி)
* காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் (ஓய்வுபெற்ற அரச ஊழியர்களும் விண்ணப்பிக்கலாம்)
* விற்பனை பிரதிநிதிகள் (Sales Representative) தேவை.-

கொழும்பில் இயங்கிவரும் எமது நிறுவனத்தின் சுவீட்ஸ் வகைகள், ஸ்பைசஸ் போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்கு, யாழ்ப்பாணம், தென்மராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு Sales Rep தேவை.
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
(Walk in Interview)
(ஞாயிறு- திங்கள்)

Parameshwari Rest In
Kopay Road,
Maruthanar Madam (வலயக்கல்விப் பணியகத்துக்கு முன்)
Sales Manager - 076 852 4004
N.S.Y.Distributors (pvt)Ltd
18,Sangabo Mawathe
Borupana Road, Ratmalana.
011 262 2955, 011 262 2956, 075 410 5230

# இடர் காவு கொண்ட சமூக உளம்

**மருத்துவர் யமுனாநந்தா**

(இடர்காவு கொண்ட சமூக உளம் என்ற தலைப்பில் கடந்த வாரம் பிரசுரமான கட்டுரையில் இடரினால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு வட்டம் குறித்துப் பார்த்தோம். அதன் தொடர்ச்சி கீழே பிரசுரமாகிறது.)

**மீள்வதில் செய்ய வேண்டியவை**

1. உண்மையான தகவல்களைப் பெறல். வதந்திகளை நம்பக்கூடாது.
2. எஞ்சிய குடும்ப அங்கத்தவருடன் வாழ்தல்.
3. ஒரே இடத்தைச் சேர்ந்தவர்களை ஒன்றாக்குக.
4. வழமையான நடவடிக்கைகளுக்கு விரைவில் செல்ல வேண்டும்.
5. உணர்வுகளையும் அனுபவங்களையும் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் பகிரவும். இதனால் அவை அகலும்.
6. புனர் நிர்மாண வேலைகளில் ஈடுபடவும்
7. மதுபானம் பாவித்தல், புகைத்தல் தவிர்க்க வேண்டும்.
8. 8 மணிநேர நித்திரை
9. உணவு
10. மனதைத் தளரச் செய்தல், விளையாட்டுக்கள், பாட்டுக்கள் மூலம்.
11. முழுமையாக செயற்பட சிலகாலம் எடுக்கும் எனக்கூறல்.

இதன்போது உடனடி மீட்பு முயற்சி, அவசர சிகிச்சைகள், உடனடி புனர்வாழ்வு என்பவற்றுக்கு மேலாக நீண்டகால நோக்கில் நோய்த்தொற்றல் தடுப்பு, அல்லூட்டம் இன்மை, உளத்தாக்கத்தில் இருந்து மீளல் என்பன பற்றிக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இந்தப் பெரிய நெருக்கீட்டின் உளத்தாக்கம் பற்றி நோக்கும்போது, இதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களிலும், பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணியில் ஈடுபட்டவர்களிலும் அதிக தாக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. உடனடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் அவர்களுக்கு நிம்மதி அளித்தாலும் இவர்கள் மீளவும் தங்கள் வாழ விடங்களுக்குச் செல்லும்போது, தனிமை பிரிவுத்துயர் என்பவற்றை உணர்வர். எனவே, இதனைத் தவிர்க்க, சமூகக்கூட்டு உறவாடல் என்பன முக்கியம். அவர்களது மனதை இயக்க பல சுயதொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுடன் நன்றாகக் கதைப்பதால் அவர்கள் மனம் ஆறுதல் அடையும். இதன்போது ஆலோசனைகளும் வழங்கலாம். பாதிக்கப்பட்ட ஒருவர், பாதிக்கப்பட்ட மற்றையவருக்கு ஆலோசனை வழங்கும்போது, வாழ்க்கையில் கூடுதல் நம்பிக்கை ஏற்படும். மற்றவர் கூறுவதைச் செவிமடுத்தல் வேண்டும். கருத்துக்களை ஒன்றுதிரட்டல் வேண்டும். காணப்படும் பல பிரச்சினைகளில் முக்கிய பிரச்சினைகளை மையப்படுத்தல் வேண்டும். இலக்கை நிர்ணயித்து முதலில் இலகுவானதைச் செய்தல் வேண்டும்.

உரையாடும்போது துணைநாடியின் உள்ளார்ந்த உணர்வை அதாவது, துணைநாடி சொல்ல நினைக்கும் அல்லது சொல்லும் விடயங்களை உணர்ந்ததாக வெளிப்படுத்தல் வேண்டும். அதற்குத் துணைநாடியின் உடல், உள ரீதியான செய்தியை அவதானித்தல் வேண்டும். பிரதான செய்தியைக் கூறல் வேண்டும். உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும். பதில் கூறவேண்டும். இதன்போது, பதில் கூறாது இருத்தல், தொடர்பற்ற வினாக்கள், அர்த்தமற்ற சொற்பயன்பாடு, புரிந்து கொண்டதாகப் பாசாங்கு செய்தல் என்பவை தவிர்க்கப்படல் வேண்டும்.

துணைநாடியில் காணப்படும் பாதகமான உணர்வுகளைச் சாதகமான உணர்வுகளாக மாற்ற வேண்டும். கோப உணர்வை தணித்து, சாந்த நிலையை ஏற்படுத்தி சந்தோச நிலைக்கு மாற்ற வேண்டும்.

குற்ற உணர்வு காணப்படின், அதனை நீக்க வேண்டும். அச்ச உணர்வு காணப்படின், அறிவு சார்ந்த ரீதியில் விளக்கி



அச்ச உணர்வை நீக்க வேண்டும். விரக்தி நிலை காணப்படின் சாந்த நிலைக்கு மாற்ற வேண்டும். ஆத்திர உணர்வு மேலிட்டால், அதனைச் சாந்தப்படுத்த வேண்டும். சோர்வு, ஏக்கநிலை காணப்படின், சாந்தப்படுத்தி துன்பத்துக்கு ஊடாக வாழப் பழக்கல் வேண்டும். ஏக்கம், வெறுமை உணர்வு காணப்படின் சாந்தப்படுத்தி நிறைவு நிலைக்கு மாற்றல் வேண்டும்.

பாதகமான உணர்வுகளை சாதகமான உணர்வுகளாக மாற்ற, முதலில் ஆழ்ந்த சுவாசப் பயிற்சியும், பின்னர் சாதகமான மாதிரிகளைக் கூறுதல். காட்டுவதால் சாதகமான உணர்வுக்கு மாற்றலாம்.

நெருக்கீட்டினாலும் அதன் பின் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினை, பாதுகாப்பின்மை, ஆதரவு இன்மை போன்றவற்றாலும் மனதில் ஏற்படும் மாற்றங்களாக சினம், ஸ்திரமற்ற நிலை, கவலை, மனதை ஒரு நிலைப்படுத்தலில், கடினம் என்பன இருக்கும். உடலில் ஏற்படும் மாற்றங்களாக களைப்பு, தசை இறுக்கம், நோ, பசியின்மை, நித்திரையின்மை என்பன இருக்கும். நடத்தையில் ஏற்படும் மாற்றமாக மதுப்பாவனை அதிகரிப்புக் காணப்படும்.

இவற்றைத் தவிர்க்க உளவளத்துணை, உடற்பயிற்சி, ஆழ்ந்த சுவாசப்பயிற்சி என்பவை உதவும். இதனைக் கிராம மட்டத்தில் கலாசார ரீதியாக அமைத்தல் நன்று. மண் சரிவு நெருக்கீட்டால், பதகளிப்பு நோய் மிகப்பொதுவாக ஏற்படும். இதன்போது உளவியல் ரீதியாகப் பொதுவாக ஏற் படும்போது உளவியல் ரீதியாகப் பயம், பதற்றம், ஏக்கம், கவலை, மனஇறுக்கம், ஆறுதலின்மை, நித்திரை இன்மை என்பன காணப்படும். உடற்றொழிலியல் மாற்றமாக வாய் உலர்தல், உணவு விழுங்குவதில் கஷ்டம், இதயப் படபடப்பு, அதிக தடவை சிறுநீர் கழித்தல், ஆழமற்ற விரைவான சுவாசம் என்பவை காணப்படும்.

இதற்குச் சிகிச்சையாக அறிவூட்டல், இறை நம்பிக்கை அதாவது ஒவ்வொருவரும் எந்த மதத்தைச் சார்ந்தவர்களோ அந்த மதத்தில் உள்ள இறை நம்பிக்கையை வலுவூட்ட வேண்டும். ஆழ்ந்த சுவாசப் பயிற்சி, உடற்பயிற்சி என்பனவும் பதகளிப்பைக் குறைக்கும். எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு சுய தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். தையல் செய்தல், பிராணிகள் வளர்த்தல் போன்றவை ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

அடுத்து, மனச்சோர்வு காணப்படலாம். இதன்போது வேலையில் நாட்டமின்மை, விரக்தி, தற்கொலை எண்ணம், தம்மைப் பற்றிக் கரிசனைக் குறைவு என்பவை காணப்படும். இவர்களுக்கு அறிவுரைகள் கூறப்படல் வேண்டும். உடற்பயிற்சி அல்லது வேலையில் ஈடுபட வைத்தல் வேண்டும்.

நெருக்கீட்டால் மெய்ப்பாட்டு நோய் ஏற்படக் கூடும். இதன்போது உளவியல் காரணங்களால் உடல் நோய் அறிகுறிகள் காணப்படும். இதன்போது உடலமைப்பே நோய் நிலையாகக் கூறுவர். உடலின் பல பகுதிகளில் நோ, படபடப்பு, தலையிடி, பலவீனம் என அறிகுறிகளைக் கூறுவர். இவர்களுக்கும் உளவியல் தாக்கங்களை ஆராய்ந்து அமைதியடையும் வழிகளைக் கற்பிக்க வேண்டும்.

சொந்தங்களை இழந்தவர்களில் கழிவிரக்கம் காணப்படும். இதன்போது முதலில் இழப்பை ஏற்றுக் கொள்ள மறுப்பு, நம்பாமை, விறைத்த நிலை என்பவை சில நாள்களுக்கு இருக்கும். பின்னர் சில கிழமை முதல் மாதம் வரை கவலைப்படல், அழுதல், பதகளிப்பு, ஆறுதலின்மை, நித்திரையின்மை, உணவில் நாட்டமின்மை, குற்ற உணர்வு, சமூகத்தில் இருந்து ஒதுங்கல் என்பன காணப்படும். அடுத்து, சில மாதங்கள் இந்த

> “துணைநாடியில் காணப்படும் பாதகமான உணர்வுகளைச் சாதகமான உணர்வுகளாக மாற்ற வேண்டும். கோப உணர்வைத் தணித்து சாந்த நிலையை ஏற்படுத்தி சந்தோச நிலைக்கு மாற்ற வேண்டும்.”

அறிகுறிகள் இல்லாதபோது இறந்தவர் பற்றிய நல்ல நினைவுகள் இருக்கும். சமூகச் செயற்பாட்டில் ஈடுபடு வர். சிலருக்கு இதில் இருந்து மீளமுடியாத நிலை ஏற்படும். அவர்களுக்கு உளவளத்துணை அவசியம்.

நெருக்கீட்டில் உணர்வுபூர்வமான மாற்றங்கள், உடல் ரீதியான மாற்றங்களுக்கு எவ்வாறு அணுகுவது என்பதும், சமூக ரீதியில் ஆதரவு அளித்தலும் தனிப்பட்ட ரீதியில் ஆற்றுப்படுத்தலும் ஆகும். அவர்களில் காணப்படும் எதிர்கொள்ளும் பொறிமுறைகளில் சாதகமான முறைகளும் காணப்படும். பாதகமான முறைகளும் காணப்படும். சாதகமான முறையான பிரச்சினைகளுக்கூடாக வாழப் பழகுதலை ஊக்குவிக்க வேண்டும். பாதகமான முறையான மதுபானம் பாவித்தல், தற்கொலை முயற்சி என்பவற்றைத் தவிர்க்க வைக்க வேண்டும். தனிமையாக வாழல், தற்கொலை முயற்சிகளைக் கூட்டும். மேலும் சமூகத்தில் ஒருவர் தற்கொலை செய்தால் அதனைப் பின்பற்றி ஏனையவரும் தற்கொலை செய்யலாம். எனவே இதனை ஆரம்பத்தில் இருந்தே தவிர்க்க முயல வேண்டும்.




இதற்கு அவர்களின் வாழ்க்கையில் பிடிப்பை ஊக்குவிக்க வேண்டும். அவர்களில் காணப்படும் கோப உணர்வு, விரக்தி குற்ற உணர்வுகளை அகற்ற வேண்டும். சமூக ஆதரவு அதிகம் தேவை. அடையாளம் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்க வேண்டும்.

இந்த நெருக்கீட்டின் பின்னர் பொதுவாக ஏற்படும் உளவியல் காப்புகளாக சம்பவங்கள் நிகழவில்லை என மறுத்தல், வேறு ஒரு பொருளில் நெருக்கீட்டை மாற்றல், இயல்பான செயல்களை செய்ய முடியாமை என்பவை காணப்படும். சில வேளைகளில் மற்றவர்களில் குற்றம் காணல், காரண காரியம் கற்பித்தல் என்பவை காணப்படும்.

இறுதியாக இந்த நெருக்கீட்டால் உளத்தாக்கத்துக்குப் பின்னான மனவடுநோய் ஏற்படலாம். இதன்போது சம்பவம் அடிக்கடி நினைவுக்கு வரும். சம்பவத்துடன் தொடர்பான இடங்களைத் தவிர்ப்பர். விறைப்பு நிலை ஏற்படும். ஆளுமை பாதிக்கப்படும். வாழ்வில் விருப்பமின்மை ஏற்படும். இவர்களுக்கு ஆற்றுப்படுத்தலும், அது சார்ந்த வழி முறைகளும் ஆக்கத்திறனை ஊக்குவித்தலும் அவசியம்.

சிறுவர்களால் ஏற்படும் உளத்தாக்கங்களை வெளிக்கொணர சித்திரம் வரைதல், விளையாட்டுக்களை ஊக்குவித்தல் என்பவை உதவும். சிறுவர்களைக் குழுக்களாக விளையாட விடுவதாலும், அவர்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளை அளிப்பதாலும் நீண்ட உளத்தாக்கத்தில் இருந்து விடுபட வைக்க முடியும். மேலும், கல்வியில் நாட்டம் குறைதல், படுக்கையில் சலம் கழித்தல், மலம் கழிப்பதில் இடர்ப்பாடுகள், அடம்பிடித்தல், குழப்படி செய் தல் என்பவை குழந்தைகளில் காணப்படின் அவர்களுக்கு விசேட கவனம் செலுத்து தல்.வேண்டும்.

சமூக உளநல மேம்பாட்டுத் திட்டங்கள் நிரந்தரமான செயன்முறை அல்ல. அவ்வப்போது ஏற்படும் செயன்முறைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும். மேலும் பாதிக்கப்பட்டவர்களின் வயது, பால், பிரதேசம், இனம், கலாசாரம் என்பவற்றுக்குப் ஏற்ப சமூக உளநலத் திட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும். மேலும் தனிநபருக்கான திட்டங்கள் என வகுத்துச் செயற்பட வேண்டும். சமூக நல மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்துவனவாக அழிவின் ஆழம், எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டு உள்ளமை, நேரடியான தாக்கம், மறைமுகமான தாக்கம், கிடைக்கப் பெறும் சமூக உதவிகள், தனிப்பட்ட இழப்புக்கள், இடருக்கு முன்பான மனநிலை என்பவை அமைகின்றன. தனிநபர் பாதிப்பால் காயங்கள், அல்லூட்டம், நோய்த்தொற்றால் உளத்தாக்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இத்தகைய பெரிய இடரின்போது ஏற்பட்ட அசாதாரண சூழலில் உடல் ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்படுவது சாதாரணமாகும். எனவே, இதன் பொறிமுறையை விளக்குவதாலும், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என அறிவதாலும் அவற்றில் இருந்து விடுபட முடியும். சிறப்பான சமூக உளவளத்துணை கோர இடரையும், இன்பமான வடுவாக மாற்ற உதவும் என்றால் மிகை இல்லை. (உதாரணமாக விபத்தில் அகாலமாகச் சாவடைந்த இளைஞனுக்கு 31 ஆம் நாள் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும்போது பல ஆயிரக்கணக் கானோருக்கு விருந்து கொடுத்து, நினைவு செலுத்தும் போது துன்பவின்பமான நிகழ்வாக அமைவதுபோல்)

ஆரம்ப நிலையில் உடனடித் தேவைகளுக்கு முகம் கொடுத்தல் வேண்டும். இதன்போது பாதிக்கப்பட்டவர்களும் அவற்றுக்கு முகம் கொடுத்தல் வேண்டும். இதன்போது பாதிக்கப்பட்டவர்களும் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்வர். ஆரம்பத்தில் உற்சாகமாக பற்றோடு வேலை செய்வர்.

(தொடரும்)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# யோசவ்வாஸ் முனீந்திரருக்கு புகலிடம் கொடுத்த சில்லாலையில் யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலம்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

இலங்கையின் முதல் புனிதர் - கோவா நகர் இந்திய மண்ணின் மைந்தர் யோசவ்வாஸ் அடிகளாரை பாதுகாத்த சின்ன உறோம் என அழைக்கப்படும் சில்லாலையில் யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலம் அமைக்கப்படவுள்ளது. யோசவ்வாஸ் அடிகளாரின் திருவிழா ஜனவரி 16ஆம் திகதி 2016இல் கொண்டாடப்படும் நிலையில் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது இக்கட்டுரைக்கான தகவல்கள் சில்லாலை மண்ணின் மைந்தனும் நிரந்தர மறை ஆசிரியருமான எஸ்.ஏ.நாதரினால் சில்லாலை மண்ணின் மைந்தர் ம.இக்னேசியஸ்தனம் அவர்களின் பங்களிப்பில் 2007 ஆம் ஆண்டு வெளியிட்ட - சில்லாலை கதிரைச்செல்வியின் பொன்விழா சிறப்பு வெளியீடு (1957 - 2007) - என்ற நூலில் இருந்தும் சில்லாலைப் பங்குத்தந்தை எமில்போல் அடிகளார் மற்றும் முன்னாள் பங்குத்தந்தை எஸ். செபநேசன் அடிகளார் வழங்கிய நேரடித் தகவலில் இருந்தும் பெறப்பட்டன.

**சின்ன உறோம் என அழைக்கப்படும் சில்லாலை**

சின்ன உறோம் என அழைக்கப்படும் சில்லாலைப் பங்கில் அமைந்துள்ள கதிரைமாதா ஆலயம் இலங்கையில் உள்ள ஒரேயொரு ஆலயமாகும். இந்தப் பெயரில் இலங்கையில் வேறெங்கும் ஆலயங்கள் இல்லை. 400 ஆண்டுகால விசுவாச வாழ்வு வாழ்ந்த சில்லாலைக் கிராமத்தின் கதிரைமாதா ஆலயப் பங்கு மக்கள் - கதிரைச்செல்வியே எம் ஊர் இன்பத்தாய் நீயே உம்மையே நம்பி இன்னிலம் வாழும் உம் மக்கள் பாராயோ சீரிய கதிரைச்செல்வியே - என்று நம்பிக்கையோடு தினமும் பாடி சாட்சிய வாழ்வு வாழ்ந்து சரித்திரத்தில் இடம் பிடித்துள்ளார்கள். யோசவ்வாஸ் அடிகளார் தமது பணிக்காலத்தில் (1687 - 1711) மூன்று ஆண்டுகள் தமது இருப்பிடத்தை சில்லாலையில் அமைத்துக்கொண்டார் எனச்சரித்திரச் சான்றுகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே தமது கிறிஸ்தவ முன்மாதிரியான வாழ்வால் சின்ன உறோம் எனப்புகழ் பெற்றிருந்த இவ்வூர் மக்கள் யோசவ்வாஸ் முனீந்திரருக்கு புகலிடம் கொடுத்து பாதுகாத்து பராமரித்தமையால் இன்றும் வ ரலாற்றில் பேசப்படுகிறார்கள். இவர்களின் இந்தப் பணிக்கு கௌரவம் கொடுப்பது போல் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் யாழ். மறைமாவட்ட யாத்திரைத்தலம் சில்லாலையில் அமைக்கப்படுவது பற்றிய செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது பற்றி சில்லாலைப் பங்குத்தந்தை எமில்போல் அடிகளாரிடம் கேட்டபோது இது உண்மையிலேயே மகிழ்ச்சியான செய்தி. ஜனவரி மாதம் 10ஆம் திகதி ஒரு விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டி புனித யோசவ்வாஸ் அடிகளாரின் யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலத்தை சில்லாலையில் எந்த இடத்தில் அமைக்கலாம் என முடிவு செய்யவுள்ளோம் என்றார். ஏற்கனவே கொட்டடியில் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்த யோசவ்வாஸ் அடிகளாரின் யாத்திரைத்தலம் காணி உரிமைதொடர்பாக கைவிடப்படவேண்டிய நிலை ஏற்பட்டமையால் யாழ். மறைமாவட்டத்தில் யோசவ்வாஸ் அடிகளாருக்கு புதிய யாத்திரைத்தலம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. சின்ன உறோம் என அழைக் கப்படும் சில்லாலைப்பதியில் புனித

> யாழ்ப்பாணத்தில் பணியாற்றியபோது யோசவ்வாஸ் முனீந்திரர் என அழைக்கப்பட்ட இவர் இலங்கை முழுவதிலும் பணியாற்றி இலங்கையின் அப்போஸ்தலர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

யோசவ்வாஸ் அடிகளாருக்கு சிறந்த யாத்திரைத்தலம் அமைக்கப்படவும் அதன் வழி அவரின் புதுமைகளை எல்லோரும் பெற்று இன் புற்றிருக்கவும் இறைஆசீர் வேண்டுவோம்.

**சில்லாலையில் யோசவ்வாஸ் அடிகளார்**

1687 ஆம் ஆண்டு யோசவ்வாஸ் அடிகளார் சில்லாலைக்கு வரும் போது கொலறா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். மூப்பனாரின் மனைவி அடிகளாரின் வருத்தத்தில் அவரைப் பராமரித்தார். குணமடைந்த பின் யோசவ்வாஸ் அடிகளார் ஆரோக்கிய மாதா என சில்லாலை கதிரைமா தாவைப் புகழ்ந்ததோடு அவரை மருந்து மாதா எனவும் அழைத்தார். யோசவ்வாஸ் அடிகளாரை வருத்தத்தில் பாதுகாத்து பராமரித்தமையால் சில்லாலை வைத்தியம் புகழ்பெற்று விளங்கியது என ஊர் மக்கள் நம்புகின்றனர். எல்லோரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம் - என்று கூறப்படுகின்ற வைத்தியம் சில்லாலை கதிரை மாதாவின் அருள் ஆசியே என்று கூறப்படுகின்றது. மூதாதையரான காயர் பிரான்சிஸ்பிள்ளை வேத விதிகளை மதிக்காது, ஞாயிறு திருப்பலி செல்லாது, வீட்டை ஓலையால் மேய்ந்து கொண்டிருந்த போது வீட்டு வேலையை விட்டு பூசைக்கு வருமாறு யோசவ்வாஸ் அடிகளார் ஆள் அனுப்பியும் அவர் செவிசாய்க்காமையால் காயர் வீடு தீப்பற்றி எரியட்டும் என்று யோசவ்வாஸ் அடிகளார் கூற வீடு தீப்பற்றி எரிந்தது. தன் குற்றத்தையும் தண்டனை யையும் உணர்ந்த காயர் ஓடிச்சென்று யோசவ்வாஸ் அடிகளாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினார். யோசவ்வாஸ் அடிகளார் அவரை மன்னித்து தன்னிடமிருந்த சிலுவையைக் கழற்றி இந்தச்சிலுவை உன்னிடம் உள்ளளவும் குறைவிலாச் சோறும் புத்திர பாக்கியமும் உண்டு என வழங்கியதாக அறியவருகின்றது. சிலுவையோடு பெரிய மட்பாண்டத்தையும் ஆசீர்வதித்து இந்தக் கிராமத்தில் இறை அழைத்தல்களும் இசை ஆசீரும் என்றும் நிலைக்கும் எனக் கூறியுள்ளார் எனவும் தெரியவருகிறது.

அந்த மட்பாண்டத்திற்கு என்ன நடந்தது என்பது தெரி யாது. சில்லாலை பங்கு யோசவ்வாஸ் அடிகளின்வாழ்த்துதலுடன் யாழ். மறைமாவட்டத்திலேயே அதிக தேவ அழைத்தல்களின் விளை நிலமாக விளங்குகிறது. ஏறக்குறைய 39 குருக்களும் 43 கன்னியர்களும் இறை பணிக்கு தம்மை அர்ப்பணித்துள்ளனர்.



யோசவ்வாஸ் அடிகளாரால் 400 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட திருச்சிலுவை காயர் குடும்ப இனத்தவராகிய மடுத்திருப்பதியில் பணியாற்றும் மரியநாயகம் மனோகரி குடும்பத்தின் பாதுகாப்பில் இன்றும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யோசவ்வாஸ் அடிகளாரின் பணியை நினைவுகூரும் விதமாக அவர் நாற்சதுரக் கட்டிடம் அமைத்து பணியாற்றியதாக சொல்லப்படும் இடத்தில் (முன்னர் திருக்குடும்பக் கன்னியர்களின் மடம் அமைந்திருந்த இடம்) யோசவ்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300 ஆவது ஆண்டு நினைவாக அருளாளர் யோசஸ்வாஸ் நினைவாலயம் எஸ்.நேசநாயகம் அடிகளாரின் பணிக் காலத்தில் (2010 - 2014) யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் 16.01.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**இலங்கையில் யோசவ்வாஸ் அடிகளார்**

இந்தியா கோவாவில் பிறந்த (21ஏப்பிரல் 1651) யோசவ்வாஸ் அடிகளார்-1676 குருவாகிது 1685இல் ஒறற்றோரியன் சபையினை நிறுவி - 1686இல் யோசவ் என்கின்ற துணை யாள ருடன் இலங்கைக்குப் பயணமாகி, 1687இல் யாழ்நகரை வந்தடைந்தார். 1691இல் ஒல்லாந்தர் வடபகுதியை முழு மையாக தமது ஆதிக்கத்தில் கொண்டு வந்தமையால், கண்டிமாநகருக்கு பயணமாகி பௌத்த அரசர் 2ஆம் விமலதர்ம சூரியவினால் போர்த்துக்கேய ஒற்றர் எனக்கருதி 2 ஆண்டுகள் சிறை வாசம் அனுபவித்து, 1693இல் அதிசய மழை பெய்ய செய்த புதுமையால் விடுதலை பெற்று மறைபரப்புப் பணியாற்ற அனுமதிக் கப்பட்டார். கிறிஸ்தவமதத்தை சேராத ஆழ்ந்த பௌத்தரான 2ஆம் விமலதர்ம சூரிய அரசரிடம் பாதுகாப்பு பெற்று மறை பரப்புப் பணியாற்ற அனுமதிபெற்றமை இறைவனின் அரும் செயலே. 1705ஆம் ஆண்டு மடுப்பதியை அர்ப்பணம் செய்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய தகவலாகும். தனது 59 வருட வாழ்வை இலங்கை கண்டியில் (16 ஜனவரி 1711) முடித்துக் கொண்டார். தனது 59 வருட வாழ்வில் 35வருட குருத்துவப்பணியை புரிந்த இவர் அதில் 24 ஆண்டுகள் இலங்கை மண்ணில் பணியாற்றியுள்ளர்.

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியில் கல்வினிசம் வளர்ந்திருந்தமையால் அழிக்கப்பட்டு வந்த கத்தோலிக்கத்திற்கு உயிர் கொடுக்க பிச்சைக்கார வேடத்தில்; இலங்கை வந்து (1687) சின்ன உறோம் என அழைக்கப்பட்ட சில்லாலைக் கிராமத்தில் புகலிடம் பெற்றார். சில்லாலையைச் சுற்றி உள்ள கிராமங்களில் பணியாற்றிய பின்னர் 24 ஆண்டுகள் மாறு வேடத்தில் கால்நடையாக வன்னி, பூநகரி, மன்னார், புத்தளம் ஆகிய இடங்களில் பணி யாற்றியுள்ளார். கண்டி மாநகரில் (1692) பணியாற்றிய போது 2 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இலங்கையின் தலைமைப் போதகர்ப் பதவியை (1696) பெற்ற பின்னர் மட்டக்களப்பு தாண்டவன்வெளிப் பங்கில் ஓலைக்கொட்டில் கட்டி பலி ஒப்புக் கொடுக்கும் போது (1710) காட்டிக் கொடுக்கப்பட்டு மரத்தில் கட்டிவைத்து அடிக்கப்பட்ட பின்னர் கண்டியில் (1711) இறந்தார்.

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் பட்டம்**

அருளாளர் பட்டத்தை இலங்கை கொழும்பு மா நக ரில் (21 ஜனவரி 1995) திருத் தந்தை புனிதர் 2ஆம் அருள் சின்னப்பர் இடமிருந்தும் புனிதர் பட்டத்தை திரும்பவும் இலங்கை கொழும்பு மாநகரில் (14 ஜனவரி 2015) திருத் தந்தை பிரான்சிஸ் இடமிருந்தும் பெற்றுக் கொண்டார். புனிதர் பட்டம் பெறுவதற்குத் தேவையான இரண்டாவது புதுமை தேவை இல்லை எனப் மாக்சிமில்லியன் கொல்பேக்கு விதிவிலக்கு கொடுத்தது அதே விதத்தில் இவருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ்; அவர்கள் விதிவிலக்கு கொடுத்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். யோசவ்வாஸ் அடிகளார் இலங்கையின் முதற் புனிதராவார்.



**இலங்கையின் அப்போஸ்தலர்**

யர்ழ்ப்பாணத்தில் பணியாற்றியபோது யோசவ்வாஸ் முனீந்திரர் என அழைக்கப்பட்ட இவர் இலங்கை முழுவதிலும் பணியாற்றி இலங்கையின் அப்போஸ்தலர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். மூன்றாம் உலக நாடு ஒன்றில் ஒறற்றொறியன் துறவறசபையை நிறுவி திருச்சபையை உருவாக்கிய ஐரோப்பியரல்லாத முதல்வர் ஆவார். இவரின் ஒறற்றொறியன் துறவற சபையானது காலனித்துவ காலத்தில் ஐரோப்பியர் யாருமல்லாத முழுமையான சுதேச சபையாகும். இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணியாற்றிய இவர் திருவிவிலியத்தை தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் மொழி பெயர்த்தவர் என்பது விசேட முக்கியத்துவத்துடன் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இலங்கையின் கலாசார பண்பாட்டை மதித்து பண்பாட்டு மயமாக்கலை மேற்கொண்டு இன மொழி வேறுபாடுகளைக் கடந்து இலங்கை மக்கள் சத்தியவேத 'விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதில் கவனம் கொண்டு பணியாற்றியவர் என்பது இவரின் பணிக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். சில்லாலை கதிரைமாதா ஆலயவளாகத்தில் "யோசவ்வாஸ்" அடிகளாரின் திருச்சொரூபத்தை மறைந்த சில்லாலைப் பங்குத் தந்தையாக இருந்த ம.இ. பயஸ் அடிகளார் தமிழ்ப்பண்பாட்டு முறையில் அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சில்லாலையில் புகலிடம் பெற்று இன்று அங்கேயே யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலம் அமைத்து அருள்மழை பொழியவுள்ள புனித யோசவ்வாஸ் அடிகளார் அனைவருக்கும் அருளும் பாதுகாப்பும் வழங்குவாராக.

*கட்டுரையாள்ர் ஊடக விரிவுரையாளர்,*
*யாழ் பல்கலைக்கழகம்*

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜன.10

தெல்லிப்பழை பன்னாலை மயிலையம்பதி சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (த-ஐ)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 446
சீட்டிழுப்பு திகதி 2016.01.09
வெற்றி இலக்கங்கள்
24 43 66 71 C
ரூ. 44,519,080/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2723 திகதி: 2016-01-09
13 24 35 36 L 57
ரூ. 20,587,100/-

## ஆட்டிறைச்சிக்கடை இடமாற்றம்

திருநெல்வேலி மேல் மாடியில் இயங் கிய ஆட்டிறைச்சிக்கடை தற்போது கொக்கு வில் பிறவுண் வீதியில் (கொக் குவில் உப அலுவலகத்திற்கு அருகில்) இயங்கு கின்றது என்பதை சகல வாடிக்கையாள ருக்கும் அறியத்தருகின்றேன்.

உரிமையாளர் - ந.உ.தயகுமார்
077 085 6479

## தேவை

வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் கிளை களுக்கு விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்

1. English Teachers
Full / Part time
2. Elocution Teachers
3. Clerk

ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்

BIS British International School
email : bis.learning@gmail.com
271, Mannar Rd, Vavuniya.
Tel : 077-3830671

## Vacancies

முன்னணி கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி கிளைகளுக்கு தகுதியான விரிவுரையாளர்களை எதிர்பார்க்கின்றோம்.

English Teacher
Full time / Part time
Salary : 20000/= to 40000/=
Send Cv's within one week to Email address

BRITISH COLLEGE
585, Peradeniya Rd, Kandy.
email : britishcollegekandy@gmail.com
Tel : 0777-596148

## SPOKEN English
With Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்களாக நடைபெறுவதுடன் பகுதி நேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

Duration : 3 Months Course Fee : 13250/=
Hot Line : 0777-596148

BRITISH COLLEGE
23, Kachchari nallur Rd, Jaffna.
021-4927113, 077-8927639
103, Mannar Rd, Vavuniya.
Tel : 024-4930042, 077-0538523
39, Convent Rd, Mannar.
Tel : 023-4924124.

## காணி விற்பனைக்கு

சங்குவேலி வாதனை வீதியில் அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள் ளவும்.

077 0517 494

## வாடகைக்கு

முற்றிலும் தனியான அனெக்ஸ் நல்லூரில் வாட கைக்குண்டு. (தனியறை, குளியலறை, சமைய லறை) தளபாடங்களும் உண்டு. 2பெண்கள் வசிக் கலாம். மாதவாடகை 6500/= முற்பணமும் எதிர் பார்க்கப்படும்.

தொடர்பு:- 072 677 4495

## விற்பனைக்கு/ வாடகைக்கு 077 742 0240

இல.252, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் 7½ பரப்புக்காணியுடன் சகல வசதிகளை யும் கொண்ட பெரியவீடு நிறுவனங்களுக்கு உண்டு. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, கச்சேரி, புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு அருகில் உள்ளது.

## இலவச கணினி, ஆங்கில வகுப்புக்கள்

தரம் 10, O/L, A/L மாணவர்களுக்கானது
* Diploma Courses - MSO, DIT
* General English

பிரிவு - II

ஆரம்பம் : 15, 16, 23, 24/01/2016

IPS Thirunelveli
தொடர்பு: 076 685 2529

## விற்பனைக்கு

01) Concrete Mixer
02) கல் அறுக்கும் இயந்திரம்
03) Ramaw (Earth Compactor)
04) 3Ways Motor (5.5 HP)
05) Vibrator (Robin)
06) '9'X'9' தூண்பெட்டி
07)'12'X'12' தூண்பெட்டி
08) Air Comproser

தொடர்பு:- 077 912 4112

## விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

Harcourts Cosmatics (Pvt) Ltd கம்பனிக்கு கிளிநொச்சி மாவட்டத் திற்கான விற்பனை விநியோகஸ்தர் கள் தேவை. கிளிநொச்சி நகரப் பகுதியில் இருப்பவர்கள் விரும்பத் தக்கது.

(இமாமி அழகுசாதனப் பொருள்கள்)

தொடர்பு: 077 538 6979

## வேலை வாய்ப்பு

நிட்டம்புவ, வதுபிடிவள, சீதூவ ஆகிய தேங்காய்ப் பால்மா கம்பனிகளுக்கு அனைத்துப் பிரிவுகளுக்கும் 18-40 ஆண், பெண். கிழமை சம்பளம் Rs.10000.00 பெற்றுக் கொள்ளலாம். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

077 300 2428,077 165 7473, 072 246

நாள் சம்பளம், கிழமை சம்பளம், மாத சம்பளம், நாள் சம்பளம் Rs.1025/= கிழமை சம்பளம் Rs.10000, மாத சம்பளம் Rs.40000/= ஐஸ்கிறீம், தேங்காய்ப் பால்மா, நூடில்ஸ், சோசஜஸ், பிஸ்கட் ஆகிய தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும் உணவு, தங்குமிடம், சீருடை ஆகியவை முற்றிலும் இலவசம்.

077 300 2428, 076 533 2495, 072 223 1518

மீரிகம, படலகம பிரதேசத்தில் உள்ள பிரசித்தி பெற்ற மீன் Exporting கம்பனிக்கு அனைத்துப் பிரிவுகளுக்கும் உணவு, தங்குமிடம் இலவசம். கிழமை சம்பளம் Advance ஆக தரப்படும். மாதம் Rs.30000இற்கு மேற்பட்ட சம்பளம். வயது 18- 55. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 597 7259, 077 891 0589

பாணதுறை பிரதேசத்தில் உள்ள Paint, Plastic ஆகிய கம்பனிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு. சாப்பாடு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். மாத சம்பளம் Rs.35000 இற்கு மேல் அனைத்துப் பிரிவுகளுக்கும். வயது 18-55. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 401 7543, 075 544 6898

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கேணிக்கட்டுவீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி
நீக்கிலாப்பிள்ளை மேரிதிரேசா(செல்லம்மா)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தோற்றம் 04.06.1942 மறைவு 08.01.2016

பிரிவால் துயருறும் பேரப்பிள்ளைகள்.
கேணிக்கட்டு வீதி,பண்டத்தரிப்பு.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
ஐயாத்துரை தனபாலசிங்கம்



தோற்றம் 12.06.1941
மறைவு 11.12.2015

கடந்த 11.12.2015 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் ஐயாத்துரை தனபாலசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (10.01.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அத னைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளு மாறு அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.
077 7816940

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 22 . 07 . 1945




இறைவன் அடியில் 10 . 01 . 2008

அமரர்
மரியாம்பிள்ளை யேசுதாசன்

எம் அன்பின் ஊற்றாகி
எம் மூச்சுக் காற்றாகி
எம்முடன் நீர் வாழ்ந்தது நேற்றாகிட
எம் மனதார உம்மை நினைக்கின்றோம் இன்று

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சுப்பிரமணியம் கந்தசாமி
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சாவகச்சேரி)

எம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி, நல்வழி காட்டிய எமது மதிப்பிற்குரிய ஐயா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

வரணி இயற்றாலை, வரணி.
சி.ஏகாம்பரநாதன் குடும்பத்தினர்.

# 14000 அரச ஊழியர்கள் கடந்த ஆண்டில் ஓய்வு

கொழும்பு, ஜன.10
கடந்த 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, கடந்த ஆண்டு அரச ஊழியர்களில் சுமார் 14 ஆயிரம் பேர் கூடுதலாக ஓய்வு பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
2014 ஆண்டு ஐந்து லட்சத்து 46 ஆயிரத்து 379 பேராகக் காணப்பட்ட ஓய்வுதியம் பெறுவோர் எண்ணிக்கை கடந்த வருடத்தில் ஐந்து லட்சத்து 60 ஆயிரத்து 408 பேராக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.
வருடாந்தம் 15 ஆயிரத்துக்கும் 20 ஆயிரத்துக்கும் இடைப்பட்டோர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். இதற்காக, வருடாந்தம் 165 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. வருடாந்தம் அதிகரிக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதற்கான நிதியும் அதிகரிப்பதாகவும் அரசு குறிப்பிட்டுள்ளது.
(வ)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு பரமநாதன்

**(Retired Assistant Commissioner of Labour)**

சங்கரத்தையைச் சேர்ந்த கார்த்திகேசு பரமநாதன் 08.01.2016 வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் சங்கரத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு-நாகம்மா தம்பதியரின் அருமை மகனும், சுசீலாவின் அன்புக் கணவரும், சியாமளா (சட்டத்தரணி) பிறேமளா (மருத்துவர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், திருமதி சேனாதிராசா பாக்கியம், அருமைநாதன், பஞ்சலிங்கம், மகாலிங்கம் மற்றும் நாகலிங்கம், நவரத்தினம், திருமதி ஜெயரஞ்சிதன் செல்வலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.01.2016) மலேசியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்கரத்தை (சி/28641)(10,17) **குடும்பத்தினர்.**

### நே.யோகேஸ்வரி (மணிஅக்கா)

மலர்வு: 17.01.1944 உதிர்வு: 09.01.2016



மூளாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நே.யோகேஸ்வரி நேற்று (09.01.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் லிங்கேஸ்வரனின் (ராகுலன் பான்சி கவுஸ், யாழ்ப்பாணம்) அன்புத் தாயும், சத்தியரஞ்ஜினியின் (ஆசிரியர் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்) அன்பு மாமியும், ராகுலன், அபிலாஷ் ஆகியோரின் பேர்த்தியும், பத்மநாதன் (திருநெல்வேலி) காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூளாய் கிழக்கு, சுழிபுரம். நே.லிங்கேஸ்வரன் (மகன்) **0777 171 419**

### கிருஸ்ணபிள்ளை பிரபாகரன்

பிறப்பு 11 . 12 . 1961



இறப்பு 08 . 01 . 2016

புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் யாழ். கொழும்புத்துறையை வசிப்பிடமாக வும் கொண்ட கிருஸ்ணபிள்ளை பிரபாகரன் (08.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை பூபதி தம்பதியரின் அன்புசிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற சிவநாமம் - சறோ ஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பாஸ்கரன் (மோகன் -சுவிஸ்), காலஞ்சென்ற (சுதாகரன் -கனடா) மற்றும் மனோகரன் (கனடா), கிருஸ்ணகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோ தரரும், வாசுகி, கருணா, செல்வி, ராசாத்தி, விமலை, ரஜனி, சித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக மு.ப.10.00 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்பன்-இலங்கை (0777 661 655)
சுந்தர்லிங்கம் - இலங்கை (0094 21 2228005, 0094 777420240)
பாஸ்கரன் - சுவிஸ் (004121 647 33 16)
கரன் - லண்டன் (00441895252912)
மனோ - கனடா (00141 68044126)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



### முத்துக்குமாரசாமி சிவசுப்பிரமணியம்

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி சிவசுப்பிரமணியம் 20.12.2015 அன்று ஜேர்மனியில் காலமானார்.


அன்னார் முத்துக்குமாரசாமி தம்பதியரின் அன்பு மகனும், கமலேஸ்வரன், சிவனேஸ்வரன் (சுவிஸ்), தனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேஜா கமலேஸ்வரன் (ஆசிரியை), பாஸ்கரன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும், சிவகரனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2016) திங்கட்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவும்

தனபதி, அச்செழு, நீர்வேலி. (சி/28641)(10,17)
தகவல்: மு. கமலேஸ்வரன் (சகோதரன்)

### கந்தசாமி சிவசேகரம்



நல்லூர் கைலாயபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சீனிவாசகம் வீதி, கொட்டடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவசேகரம் நேற்று (09.01.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணபவன்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜனங்கனதேவியின் அன்புக் கணவரும், விஜி, உமா, சோதி, சங்கர், சோமா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகரன், ஸ்ரீகாந்தன், ரஞ்சன், மலர்மதி, றெசிட்டா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், கணவதிப்பிள்ளை, பாக்கியம் மற்றும் இரா சம்மா, மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2016) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு சீனிவாசகம் வீதி, கொட்டடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**58, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
பரஞ்சோதி (சோதி-மகன்). 077 585 4725


# குற்றவியல் சாட்சியாளரை பாதுகாக்க அதிகார சபை

*ஆரம்பித்து வைத்தார் மைத்திரி*

கொழும்பு, ஜன.10
குற்றவியல் சாட்சியாளர்கள் மற்றும் குற்றம்சுமத்தப்பட்ட தரப்பினரால் பாதிக்கப்பட்டோரைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை நேற்று அமைக்கப்பட்டது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த நிகழ்விற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், நீதி அமைச்சர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நீதியமைச்சின் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.
2015 ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டவரைவின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த அதிகார சபையில் தலைவர் ஒருவர் உள்ளிட்ட 5 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு முன்னர் வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்திலும் இந்த அதிகார சபை அமைப்பது தொடர்பில் கூறப்பட்டிருந்தது.
இதேவேளை, இலங்கை வரலாற்றில் இதுவரை குற்றவாளிகளை உரிமைகளைப் பாதுகாக்கும் நடைமுறை இருந்ததாகக் குறிப்பிட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, நேற்றுமுதல் குற்றவாளிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (கு-வ)

# 3 பெரிய கடல் ஆமைகள் பாசையூரில் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.10
இறைச்சிக்கு வெட்டும் நோக்கில் பாசையூர் பகுதியில் மறைத்து வைத்திருந்த மூன்று பெரும் கடல் ஆமைகளை நேற்று யாழ்ப்பாணம் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.



பாசையூர்ப் பகுதியில் இறைச்சிக்கு வெட்டத் தயார் செய்து மறைத்து வைத்திருந்த மூன்று பெரும் கடல் ஆமைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.
இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆமைகள் ஒவ்வொன்றும் தலா 40 தொடக்கம் 50 கிலோ நிறையை உடையவை எனவும், இவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.
(கு-101)

தொடர்ச்சி...

## என் மீதா

அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
பெரிய ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, கோத்தபாய ராஜபக்ச முன்னிலையானார். விசாரணை முடிவடைந்து வெளிவரும் போது, ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆணைக் குழுவுக்கு அடிக்கடி அழைக்கப்படுகின்றபோதும் மோசடி தொடர்பில் இன்னும் விசாரணை செய்யப்படவில்லை. எனவே இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. பல மணிநேரம் விசாரணை செய்யப்பட்ட எம்மிடம் ரக்னா லங்கா நிதி மோசடி தொடர்பில் எதுவும் கேட்கப்படவில்லை.
நாம் நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்படுமாகவிருந்தால் எமது சொத்துக்களைச் சோதனை செய்யமுடியும்.வங்கிக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் ஆராயமுடியும். இதனை விடுத்து நாம் மோசடியில் ஈடுபட்டமையை எவ்வாறு நிரூபிப்பர்.
நாம் சட்டத்துக்கு உட்பட்ட விதத்திலேயே வருவாயை தேடிக் கொண்டோம். ரக்னா லங்கா நிறுவனம் மூலம் அரசுக்கே அதிக நன்மை கிடைத்தது-என்றார்.
(கு-5)

## சமஷ்டியால்

காலத்துக்குப்பொருந்தக் கூடியவாறான அரசமைப்பு முறை இருக்க வேண்டுமென்பது எனது கருத்து.

டல்லி–செல்வா மற்றும் பண்டா–செல்வா ஒப்பந்தங்கள் அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் பிரபாகரன் என்ற ஒருவர் உருவாகியிருக்கமாட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இருந்ததால் தான் போரை நிறைவுக்குக் கொண்டுவர முடிந்ததாகவும், ஆகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாது செய்யப்படக் கூடாது என்றும் சிலர் கூறுகின்றார்கள்.

அவ்வாறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இருந்தால் தான் போரை நிறைவுக்குக் கொண்டு வர முடியும் என்றால் எதிர்காலத்தில் மீண்டும் போர் ஒன்று ஏற்பட வேண்டிய தேவை இருக்கின்றதா?

மேலும் ஒரு போர் ஒன்று ஏற்படாதிருப்பதற்கு நாட்டுக்கு தேவையான நடவடிக்கைகளையே நாங்கள் செய்யவேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட உள்ளமைகுறித்துவெவ்வேறான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய அரசியலமைப்பை மாற்றுகின்றபோது; பெடரல் என்றால் தெற்கில் உள்ள அடிப்படைவாதிகளுக்கு கசக்கின்றது. ஐக்கியம் என்றால் வடக்கில் உள்ள அடிப்படைவாதிகளுக்கு கசக்கின்றது. இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்குவதனால் பௌத்த மதத்துக்கும், நாட்டின்பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக மகா சங்கத்தினர் என்னிடம் கேட்டனர். ஏன் நாங்கள் கலக்கமடைய வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறானதொரு நிலமை ஏற்படப் போவதில்லை. எங்களிடம் அறிவு, திறமை, கடந்த கால அனுபவங்கள் நிறையவே இருக்கின்றன. இவற்றைக் கொண்டு நாட்டை கட்டியெழுப்புவதற்காகவும், நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்துமே செயல்படவேண்டும்.

வெளிநாட்டுச் சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவே புதிய அரசமைப்பு முறை உருவாக்கப்பட இருப்பதாகச் சிலர் கூறுகின்றார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனக்கோ பிரதமருக்கோ எந்த வெளிநாடுகளும் அழுத்தங்கள் பிரயோகிக்கவில்லை.

26 வருட காலப் போரில் வடக்கு இளைஞர்கள் போலவே தெற்கிலும் எவ்வளவோ இளைஞர்கள் உயிரிழந்தார்கள். வடக்கிலும் தெற்கிலும்உள்ளவர்களை ஒன்றிணைக்கும் முறையே எமக் குத் தேவை. அனைத்து ம க் களும் அனைத்து மதத்தினரும் ஐக்கியத்துடன் வாழ்வதற்குறிய இலங்கையைக் கட்டியெழுப்பவேண்டும்.–என்றார்.

(த–வ–5)

## சிப்பாயின்

குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து விசுமடுப் பிரதேசத்தில் புதைகுழி ஒன்றில் சடலம் ஒன்று மேற்படி காலப்பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாக அறிந்து நேற்று நீதிமன்ற அனுமதியுடன் குறித்த இடம் தோண்டப்பட்ட போதும் அங்கு எந்தவித மனித எச்சங்களும் கிடைக்கவில்லை.

இதன்போது காணாமற்போன படைச் சிப்பாயின் உறவினர்களும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துவரப் படிருந்தனர்.

(த–ரி3)

## ஹிருணிகா

வுக்குச் சொந்தமான டிபென்டர் ரக வாகனத்தில் கடந்த மாதம் இரண்டாம் வாரத்தில் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகாவின் மெய்ப்பாதுகாவலர்கள் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்காக இந்தச் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள போதும் அவரைக் கைது செய்யாமல் பொலிஸார் இழுத்தடிப்பதாக, மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். ஹிருணிகாவைக் கைது செய்வதா இல்லையா என்பது தொடர்பில் ஆலோசனை வழங்குமாறு சட்டமா அதிபர்திணைக்களத்திடம் ஆலோசனை கோரியிருந்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனையில் ஹிருணிகாவைக் கைது செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதற் கமைய நேற்றுக் காலை நாடாளு மன்ற உறுப்பினர் ஹிருணிகா கைது செய்யப்பட்டார்.

இதன் பின்னர் பொலிஸார் அவரிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டனர். அதனையடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போதுநீதிவான் அவரைப்பிணையில் செல்ல அனுமதித்தார்.

(த–5–4)

## காணாமற்

பான தகவல் வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட 2015 செயற்பாட்டுப் பெறுபேற்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 6 பதிவுகளும், பெப்ரவரி மாதத்தில் 2 பதிவுகளும், மார்ச் மாதத்தில் 03 பதிவுகளும், ஏப்ரல் மாதத்தில் 06பதிவுகளும், மே மாதத்தில் 5 பதிவுகளும், ஜூன் மாதத்தில் 5 பதிவுகளும், ஜூலை மாதத்தில் 5 பதிவுகளும், ஒக்ரோபர் மாதத்தில் 4 பதிவுகளும், நவம்பர் மாதத்தில் 8 பதிவுகளும் டிசெம்பர் மாதத்தில் 4 பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.மொத்தமாக2015ஆம் ஆண்டு 48 காணாமற்போனோரின் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. காணாமற்போனோரின் பட்டியலில் ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். இவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்து போரினால் இறந்தவர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகை மற்றும் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு காணாமற் போனோரைக் கண்டறியும் விசாரணைக்குழு மற்றும்அரசதரப்பில் கூறப்பட்டு வருகின்றது.

அவ்வாறு கூறப்பட்டபோதிலும் காணாமற்போன தமது உறவுகளை இறந்தவர்களாகக் கருத முடியாது என்பதில் உறவினர்கள் விடாப் பிடியாக இருப்பதோடு தமது உறவுகளைக் கண்டறிந்து தருமாறும் வலியுறுத்தி வருவதைப் பதிவு செய்யப்பட்டவர்களின் வீதம் காட்டுகின்றது. (த–11)

## இலங்கையைச்

வழங்க ஐ.நா. சபை தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்பின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றநிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வருடத்தில் இலங்கை பெரும் மாற்றங்களைக் கண்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தபோது நாட்டுக்குப்பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தார். தேர்தல் சரியான முறையில் நடத்துவது என்ற பாரியசுமை அவருடைய தோள்களில்சுமத்தப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் நாட்டை மறுசீரமைப்பு பாதையில் முன் கொண்டு செல்லுமாறு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர்.

நீண்டகாலச் சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்கும் அடித்தளமிடுமாறு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

19 ஆவது திருத்தச் சட்டவரைவின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டதுடன், சுயாதீன ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம், உரிமைகளைப் பாதுகாத்து, நாட்டை ஜனநாயக ரீதியாக ஆட்சி செய்வதற்கான திறமை அரசுக்கு உள்ளது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

நல்லிணக்கச் செயற்பாட்டில் முன்நகர்ந்து செல்வதற்கும், காணிகளைவிடுவித்துஅவற்றை உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும்.

கடந்த 12 மாதங்களாக இலங்கை ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் –என்றார். (த–5)

## போர்க்குற்ற

களும், சிவில் செயற்பாட்டாளர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து 40 சிவில் செயற்பாட்டாளர்களும் 11 சிவில் அமைப்புக்களும் கூட்டாக இணைந்து வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

குற்றச் செயல்களுக்கான பொறுப்புக் கூறுதல்களை உறுதி செய்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் மனித உரிமைகள் ஆகியன தொடர்பில் சில விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது.

விசேட நீதிமன்றமொன்றினை உருவாக்கி அதன் ஊடாக போர்க் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணை நடத்தப்பட முடியும். இந்தக்கட்டமைப்பில்வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களின் பங்களிப்பு இருக்க வேண்டியது அவசியமானது.

ஐ. நா மனித உரிமைகள் சபை ஆணையாளர் சயிட் அல் ஹுசெய்ன் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு குறித்து சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், அரசு வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புக் குறித்த பரிந்துரையை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

19ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். நல்லிணக்கத்தையும், நிரந்தர சமதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமாயின் இலங்கை சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாதுகாப்புத் தரப்பு மறுசீரமைப்பு, சட்டமறுசீரமைப்பு, இடம்பெயர்ந்த மக்களின் காணிப் பிரச்சினை, பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சியாளர் பாதுகாப்பு, உண்மையைக் கண்டறிதல் குறித்து தேசிய கலந்துரையாடல்கள், குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருதல், பலவந்த கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–வ)

## யாழ். வருகிறார்

மேற்கொள்ளவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் யாழ்ப்பாணத்துக்கும் வருவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய இலங்கைக் கூட்டுக் குழுக் கூட்டத்துக்கு எதிர்வரும் 5 ஆம், 6ஆம் திகதிகள் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் பங்கேற்கக் கொழும்பு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் யாழ்ப்பாணத்துக்கும் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இதன்போது, இந்தியா புனரமைத்துக்கொடுக்கும் துரையப்பா விளையாட்டரங்கை அவர் அதிகாரபூர்வமாகக் கையளிப்பார் என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை, யாழ்.துரையப்பா விளையாட்டரங்க புனரமைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த–வ)

## பிரதேச

புக் குழுத் தலைவர்களுக்கான நியமனம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, ஜனாதிபதி மைத்திரிபாலவினால்வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய ஒவ்வொரு மாவட்டச் செயலகமும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்திமுடிக்க வேண்டும் என்பதற்காக அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அந்தந்த மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் – அமைச்சர்கள் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக ஓர் நாடாளுமன்ற உறுப்பினரே நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளார். வன்னித் தேர்தல் மாவட்டத்தின் பிரதேசசெயலாளர்பிரிவுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைமைக்கு, நாடாளுமன்றத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் சகல கட்சிகளுக்கும் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ள அதே வேளை, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைமை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## படை

தடுத் து வைக்கப்பட்டுள்ள ஆறு இராணுவப் புலனாய்வு அதிகாரிகளிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படவுள்ளனர்.

இராணுவ அதிகாரிகளின் பெயர்கள், அவர்கள் எங்கிருக்கின்றனர் என்ற விவரங்களைச் சந்தேகநபர்கள் வெளியிட்டுள்ளதையடுத்து, அவர்கள் கைது செய்யப்படவுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்தி, கிரித்தல இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்ற, இராணுவ லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் பற்றிய தகவல்களும் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான முக்கியமான தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருப்பதால், விசாரணைகள் இறுதிக் கட்டத்தை நெருங்கியிருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த–5)

## ஒருங்கிணைப்புக்

மேடை அமைந்திருந்தது.

தற்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக 4 பேர் நியமிக் கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனா திராசா, நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளர் என்ற அடிப்படையில் மாவட்ட அரச அதிபரும் உள்ளார். எனவே 5 பேர் அமர்வதற்குரிய முறையில் மேடையை புதிதாக அமைக்க வேண்டிய நிலை யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதேவேளை யாழ்.மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதனால், எட்டு பேர் ஒரே தடவையில் மேடையில் அமரக் கூடியவாறு மேடையை அமைப்பதற்கும் மாவட்டச் செயலக அதிகாரிகள் யோசித்து வருவதாக அறிய முடிகின்றது. (த–5)

## அரசமைப்புப்

'நேற்றுக்காலை ஆரம்பமாகிய போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தை அரசமைப்பு பேரவையாக மாற்றும் பிரேரணையைச் சமர்ப்பித்தார். இதையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட உரையாற்றினார்.

இந்தநிலையில், நாடாளுமன்றத்தைஅரசமைப்புப்பேரவையாக மாற்றச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதால், நாளைமறுதினம் நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் வாக்கெடுப்பு நடத்தி அதனை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையில் கூட்டு எதிரணி, ஜேவிபி உள்ளிட்ட கட்சிகள் திருத்தங்களை முன்வைத்துள்ளன.

திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள சபாநாயகர் கரு ஜெயசூரிய, அவைகருத்தில்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

(த–வ)

## அணியில் மாற்றம் இல்லை அறிவித்தது தென்னாபிரிக்கா

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் எஞ்சிய இரண்டு ஆட்டங்களிலும் விளையாடவுள்ள தென்னாபிரிக்கா அணியில் எந்தவித மாற்றமும் இருக்காது என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.
இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களும் முடிந்துள்ளன. இதில் 0:1 என தென்னாபிரிக்கா பின்தங்கிய நிலையில் உள்ளது. முதலிரண்டு டெஸ்டுக்கான தென்னாபிரிக்க அணிதான் முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று மேலும் இரண்டு டெஸ்டுக்கான அந்த அணி அறிவிக்கப்பட்டது. இதில் கடந்த இரண்டு டெஸ்டில் இடம் பெற்றிருந்த வீரர்களே இடம்பிடித்துள்ளனர்.



இரண்டு ஆட்டங்களிலும் தடுமாறிய ஸ்ரியான் வான் சைலுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அம்லா தலைமைத்துவத்தில் இருந்து நீங்கியதால் வில்லியர்ஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மூன்றாவது டெஸ்ட் 14ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ம)



## இலங்கை - நியூசிலாந்து இறுதி ரி-20 வென்றால் தொடரை சமப்படுத்தலாம்

இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றால் 1:1 என்ற அடிப்படையில் தொடரை சமன்செய்யும்வாய்ப்பு இலங்கைக்கு ஏற்படும்.
முடிவடைந்த முதல் இரண்டு தொடர்களில்டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையிலும், ஒருநாள் தொடரை 3:1 என்ற அடிப்படையிலும் நியூசிலாந்து கைப்பற்றியது. நடைபெற்றுவரும் ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்திலும் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரை முழுமையாக இழக்கும் நிலைமையை இல்லாமல் செய்துள்ளது. தொடரை சமன் செய்வதே நியூசிலாந்தின் குறைந்த பெறுபேறாக இருக்கும். ஆனால் இலங்கையின் நிலைமை அவ்வாறு அல்ல. தொடரை சமன்செய்வதே இலங்கையின் அதி உயர் பெறுபேறாக உள்ளது. இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றால் தொடரை 1:1 என்று இலங்கை சமன் செய்யும். கடந்த ஆட்டத்தில் எதிர்பார்த்ததைவிட சிறந்த பெறுபேறை இலங்கை வெளிப்படுத்தியிருந்தது. இதனால் இன்றைய ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெறுவது பெரியளவில் சவால் தரும் விடயமாக அமைவதற்கில்லை. (ம)

## அரையிறுதியில் ஸ்ரீபன்ஸ்

ஏ.எஸ்.பி. கிளாசிக் ரென்னிஸ் தொடரில் இரண்டாவதாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்-அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ்.
அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ் - இங்கிலாந்தின் நவோமி பிரோடி ஆகியோர் மோதிய இந்த ஆட்டத்தில், உலகத் தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கும் ஸ்ரீபன்ஸுக்கு பிரோடி கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் முதல் செட் இழுபறியாக நீடித்துச் சென்றது. இறுதியில் ஸ்ரீபன்ஸ் 7:6 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் பிரோடியின் ஆட்டம் எடுபடவில்லை. இந்த செற்றை 6:3 என எளிதில் கைப்பற்றி 2:0 என நேர் செற்றில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார் ஸ்ரீபன்ஸ். (ம)





## மிர்சா - கிங்கிஸ் இணை இவ்வருடமும் ஆதிக்கம்

பிரிஸ்பெயின் ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது சானியா - கிங்கிஸ் இணை.
சர்வதேச ரென்னிஸ் அரங்கில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிற்சர்லாந்தின் மார்ட்டீனா கிங்கிஸ் இணை, பெண்கள் இரட்டையர் பிரிவில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் இவர்கள் கடந்த ஆண்டு ஏராளமான கிண்ணங்களைக் கைப்பற்றினார்கள். இந்த வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி மெல்பேர்ணில் ஆரம்பமாகிறது. இதற்கு வீர.வீராங்கனைகளைத் தயார்ப்படுத்தும் விதமாக பிரிஸ்பெயினில் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவின் அரையிறுதியில் கிளேபாக் - குட்ரியாவ்ட்சேவா இணையை எதிர்கொண்டது மிர்சா கிங்கிஸ் இணை. முதல் செற்றை மிர்சா கிங்கிஸ் இணை 6:3 என்ற கணக்கில் எளிதில் வென்றது. ஆனால் இரண்டாவது செற்றில் எதிர்ஜோடி நெருக்கடி கொடுத்ததால் கூடுதல் நேரம் எடுக்க வேண்டியிருந்தது. அந்த செற்றையும் 7:5 எனக் கைப்பற்றி 2:0 என நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது சானியா - கிங்கிஸ் இணை. இவர்களின் தொடர்ச்சியான 25 ஆவது இறுதி ஆட்டம் இதுவாகும். (ம)

## ஆப்கானிஸ்தான் வரலாற்றுச் சாதனை

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் முதல்முறையாக முன்னேறியுள்ளது ஆப்கானிஸ்தான் அணி. ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் அண்மையில் முடிவடைந்தது. ஆப்கானிஸ்தான் 3:2 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இந்த வெற்றியின் பின்னர் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வெளியிடும் தரப்படுத்தலில் 10ஆவது இடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு அந்த அணிக்குக் கிடைத்துள்ளது. புதிய தரப்படுத்தலில் சிம்பாப்வே 11ஆவது இடத்துக்குதள்ளப்படவுள்ளது. (ம)



## கெயிலுக்கு தடை விதிக்கவேண்டும் இயான் செப்பல் வலியுறுத்துகிறார்

பெண் நிருபரிடம் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியமைக்காக கெயிலுக்கு உலக அளவில் தடை விதிக்க வேண்டும்என்று ஆஸ்திரேலியமுன்னாள்தலைவர்இயான் செப்பல் தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலியாவில்கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் தீவுகளின் சிக்சர் மன்னன் கெயில் ரெனேகட்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். சமீபத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அவர் 15 பந்தில் 41 ஓட்டங்களை விளாசினார். அதன்பின் வீரர்களுடன் எல்லைக்கு அருகே அமர்ந்திருந்தார். அப்போது பெண் தொகுப்பாளர் ஒருவர் கெயிலுடன் நேர் காணலில் ஈடுபட்டார். அப்போது அவரிடம் சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் கெய்ல் பேசியதாக கூறப்பட்டது. இதற்கு கெய்ல் வருத்தம் தெரிவித்துக்கொண்டார். ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக அவருக்கு 10 ஆயிரம் டொலர்கள் அபாராதம் விதிக்கப்பட்டது. மேலும், இந்த தொடரில் எஞ்சிய ஆட்டங்களில் பங்கேற்காத வகையில் அவருக்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவருக்கு உலகளவில் தடை விதிக்க வேண்டும் என்றுமுன்னாள் ஆஸ்திரேலிய அணியின் ஜாம்பவான் இயான் செப்பல் வலியுறுத்தியுள்ளார்.
இதுகுறித்து இயான் செப்பல் தெரிவிக்கையில்: ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ரெனேகட்ஸ் கழகத்திடம் இனிமேல் அவரை ஒப்பந்தம் செய்யக் கூடாது என்று கூறினால் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. மேலும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் இந்த தடையை உலக அளவில் செயற்படுத்தினால் என்ன? என்று சொல்ல வேண்டும். இப்படிச்சொன்னாலும் எந்த பிரச்சினையும் இல்லை. மைதானத்தில் சிறந்த வார்த்தைகளைப் பயன் படுத்த வேண்டும். பெண் நிருபரை மது விருந்துக்கு அழைத்த ஒருவருக்கு கனவான்களின் ஆட்டமான கிரிக்கெட் சரிப்பட்டுவராது- என்றார். (ம)

## இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 10

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (ம-23)

**வித்தியா வி.கழகத் தொடர்**

முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் முள்ளியவளை விநாயகர் அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் அணியும் இரண்டாவது ஆட்டத்தில் மாமுலை டைமன் அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் அணியும் மூன்றாவது ஆட்டத்தில் குமுழமுனை ஐக்கியம் அணியை எதிர்த்து கள்ளப்பாடு உதயம் அணியும் மோதவுள்ளன. ஏனைய ஆட்டங்கள் தொடரில் வெற்றிபெறும் அணிகளைவைத்து தீர்மானிக்கப்படும். ஆட்டங்கள் யாவும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும். (ம-102)

## கொக்குவில் இந்துவை வீழ்த்தியது மத்தி.
## இன்னிங்ஸ் வெற்றியாகவும் பதிவு

யாழ்ப்பாணம், ஜன. 10

ஜெறோசனின் சதம் கை கொடுக்க கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை இன்னிங்ஸ் மற்றும் 36 ஒட்டங்களால் வெற்றிகொண்டது யாழ். மத்திய கல்லூரி அணி

இலங்கைப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கொக்குவில் இந்துவின் மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணிமுதலில்களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 73 ஒட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கீர்த்தனன் 33 ஒட்டங்களையும் சாருசன் 10 ஓட்டங்களையும் றொசான் 10 ஒட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் கிருபாகரன் 4 இலக்குகளையும் மதுசன், தசோபன் இருவரும்தலா 2 இலக்குகளையும் கௌதமன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 212 ஒட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாகஜெறோசன் 102 ஒட்டங்களையும் கோமேதரன் 84 ஒட்டங்களையும் கார்த்தீபன் 35 ஒட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் தனுசன் 6 இலக்குகளையும் சஞ்சீவன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 139 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி 112 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக சந்தோஸ் 21 ஒட்டங்களையும் தருசிகன் 15 ஓட்டங்களையும் சஞ்சீவன் 15 ஒட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரியின் சார்பில் கௌதமன் 3 இலக்குகளையும் ஸ்ரீபன்ராஜ், தசோபன், மதுசன் மூவரும் தலா இரு இலக்குகளையும் கிருபாகரன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)

## விளையாட்டு அதிகாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் புதிதாக மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுநராக கடமையாற்றிய கே.விஜிதரன் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாகவும், கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுநராகக் கடமையாற்றிய என்.முகுந்தன் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாகவும், யாழ். மாவட்ட மெய் வன்மை பயிற்றுநரும் யாழ். மாவட்ட பதில் விளையாட்டுத்துறை அதிகாரியுமாக கடமையற்றிய எம்.ஆர்.மோகனதாஸ் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பொறுப்புக்களை நாளை ஏற்கின்றனர்.

மன்னார், வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதாவது மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாகக் கடமையற்றிய பரிசுத் வவுனியா மாவட்டத்திற்கும், வவணியா மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாக கடமையற்றிய லலித் ஐயசேகர மன்னார் மாவட்டத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ம-23)



## சபரோவா விலகல்

ஆஸ்திரேலிய சர்வதேச ரென்னிஸ் தொடரில் இருந்து காயம் காரணமாக விலகுவதாக அறிவித்துள்ளார் நட்சத்திர வீராங்கனையான சபரோவா.


நடப்பு வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் இருந்து முன்னணி வீராங்கனையான சபரோவா விலகியுள்ளார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சபரோவா ஆஸ்திரேலியத் தொடரை தவறவிடுவது வருதமளிக்கிறது. செரினா, செரபோவா போன்ற முன்னணி வீராங்கனைகளுக்கு கடுமையான சவாலளிக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் தொடரில் இருந்து விலக நேரிட்டுள்ளது. இதை எதிர்பார்க்கவில்லை- என்றார். (ம)

## பட்டம் ஏற்றும் போட்டி

கரணவாய், ஜன. 10

வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் நடத்தும் பட்டம் ஏற்றும் போட்டியும் வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையின் அணைக்கட்டுத் திறப்பு விழாவும் எதிர் வரும் 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளன.

வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகத் தலைவர் பா.உதயகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)



## ஐரோப்பியக் கழகங்களின் கனவு அணியில் ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மருக்கு இடம்

ஐரோப்பியக் கழகங்களின் கனவு அணி அறிவிக்கப்பட்டள்ளது. இதில் ரொனோல்டோ, மெஸ்ஸி, நெய்மர் மூவரும் இடம்பிடித்துள்ளனர்.

ஐரோப்பிய கால்பந்து சம்மேளனம் தனது அங்கத்துவக் கழகங்களின் சிறந்த வீரர்களை வைத்து கனவுக் கழக அணி விவரத்தை வெளியிட்டுள்ளது. இதில் நட்சத்திர வீரர்களான பார்சிலோனா கழகத்தின் நெய்மர், மெஸ்ஸி; ரியல் மட்ரிட் கழகத்தின் ரொனால்டோ மூவரும் இடம்பிடித்துள்ளனர். அந்த அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் விவரம்:- மனுவல் நுஜர், டேவிட் அலாபா, ராமோஸ், ஆல்வ்ஸ், பிக்யூ, அந்ரேஸ் இனியஸ்டா, பால் போக்பா, ஜேம்ஸ், மெஸ்ஸி, நெய்மர், ரொனால்டோ (ம)



## விண்மீன் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 10

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந் தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில்நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதியது. இதில் பலாலி விண்மீன் அணி 8:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# ஆஸிக்கு எதிராக சமி விலகல்?



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இருந்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சமி, காயம் காரணமாக விலக நேரிடலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது. அங்கு ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் மூன்று ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடர்களில் விளையாட இருக்கிறது. இந்தத் தொடர்களுக்கான பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காயம் காரணமாக நீண்டகாலமாக ஓய்வில் இருந்து அணிக்குத் திரும்பிய சமி, நேற்று பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது மீண்டும் காயத்தில் சிக்கினார். காயம் பெரிதானால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர்களில் இருந்து சமி விலக நேரிடும். ஒருவேளை மொகமது சமி அணியில் இடம்பெறாமல் போனால் ஜேஸ்பிரிட் பும்ரா அணியில் சேர்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ம)

அஸ்ரன் வெளியீடு
நவாலி வீதி 021 225 5631
ஆனைக்கோட்டை 0777 531 422
எமது வெளியீட்டகத்திற்கு Type Setting தெரிந்த பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை
* வேலை பழகவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
* சம்பளம் நேரில் பேசலாம்.
T.கிருபா

# கோல்டர் வெளியே பெரேரா உள்ளே



பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரில் இருந்து மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் ஜாசன் கோல்டர் விலகியுள்ளார்.

பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரின் முதல் சீசன் பெப்ரவரி 4ஆம் திகதி தொடங்கி பெப்ரவரி 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் கிளாடியேட்டர்ஸ் அணிக்காக விளையாட மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறை வீரரான கோல்டர் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரில் விளையாட அவருக்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. இதனால் அவர் அந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அனுமதி கொடுக்காததால் அவரால் இந்தத் தொடரில் விளையாட முடியவில்லை. மேற்கிந்திய தீவுகளின் அணியை வலுப்படுத்தும் முயற்சிகள் நடந்து வருவதால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஜாசன் கோல்டர் விலகியதைத் தொடர்ந்து இலங்கை அணியின் சகலதுறை வீரரான திசர பெரேரா கிளாடியேட்டர்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார். என்றுள்ளது.

(ம)

NVQ 3 IN ICT
EXAMPOINT
Day & Weekend Classes
ICT. Education, Training & Development Centre
A/L முடித்துவிட்டீர்களா?
* பல்கலைக்கழக வாய்ப்புக்காக காத்துக்கொண்டு இருக்கின்றீர்களா?
* உங்கள் நேரத்தை பிரயோசனமாக செலவழித்து 6 மாதத்தில் ICT இல் அரசாங்க சான்றிதழை (NVQ 3) பெற்றுக் கொள்ளுங்கள்.
* பல்கலைக்கழகம் செல்லும் போதே சான்றிதழோடு செல்லுங்கள் உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்...
தொடர்புகளுக்கு
ExamPoint (Pvt) Ltd. 077 628 48 45
No. 120/6, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel : 021 221 6400 Email. info@exampoint.lk Web. www.exampoint.lk

# இந்தியா - ஆஸ்திரேலியாத் தொடர் நெருப்புடன் நெருப்பு மோதுவதாம்



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர் நெருப்புடன் நெருப்பு மோதுவது போன்று விறுவிறுப்பாக இருக்கும் என்று ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய அணி 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் 3 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் ஆட்டம் பேர்த்தில் எதிர்வரும் 12ஆம் திகதி தொடங்குகிறது. இந்தியா - ஆஸ்திரேலியா தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே ரோகித் சர்மா இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் 'இந்தியா – ஆஸ்திரேலிய தொடர் நெருப்புடன் நெருப்பு மோதுவது போன்றது. இரு அணிகளும் மோதிய வரலாற்றைப் பார்த்தால் இது தெரியும். 2014ஆம் ஆண்டு இங்கே விளையாடிய போது தொடரைக் கைப்பற்ற மிகவும் நெருங்கி வந்தோம். கடைசி வரை போராடிய நிலையிலும், தொடரைக் கைப்பற்ற முடியாமல் போனது. நாங்கள் இங்கு சிறப்பாக விளையாடி இருக்கிறோம். எதை செய்ய விரும்புகிறோமோ, அதை இந்த முறை சிறப்பாக செய்து முடிப்போம்' என்றார்.

பெற்றோர்களே !!!

வழிகாட்ட நாம் தயாராக உள்ளோம்.
உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய இந்த நிலையில் அவர்களின் எதிர்காலம் தொடர்பாக சரியான முடிவுகளை எடுக்கும் தருணம் இது.
பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு வித்திட்ட நாம் உங்கள் சிந்தனைகளை அகலப்படுத்தி ஆலோசனை வழங்க தயாராக உள்ளோம்.
20 வருட உயர் கல்விச் சேவையின் முன்னோடிகள்
உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள்.
உயர் கல்விக்கான கற்கை நெறிகள் மற்றும் அவற்றிற்கான அங்கீகாரங்கள் தொடர்பான விடயங்கள்
வெளிநாட்டு உயர்கல்விக்கான தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களின் தெரிவுகளும் அவற்றின் தரநிலை தொடர்பான ஆலோசனைகள்
எங்கள் ஆலோசகர்களை கீழ்க்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு இலவச ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும்
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி, வேலைவாய்ப்பு,தொடர்பான ஆலோசனைகளுக்கு
071 777 5 666

TASTER'S
வறுத்த சிவப்பு மற்றும் வெள்ளை அரிசிமா
பிட்டு, இடியப்ப மா


முற்றிலும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது
தயாரித்து விநியோகிப்போர்
024 205 2141
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்
SP Distributors
0214927348, 0768228529

இப் பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.